


மெய்ஞ்ஞானப் பாதையிலே

மௌலானா மௌலவி
ஜுபைர் அஹ்மது ஷுஹூதீஷாஹ் பைஜி பாகவி

காதிரிய்யா பதிப்பகம்

மெஞ்ஞானப் பாதையிலே

தொகுப்பு :

மௌலானா, மௌலவி, அப்ஜலுல் உலமா

ஜுபைர் அஹ்மது ஷுஹூதி ஷாஹ் பைஜி பாகவி

பேராசிரியர், ஜாமிஆ அரபிய்யா பைஜுல் ஹஸனாத், நாகை.

வெளியீடு :

காதிரிய்யா பதிப்பகம்

"பைதுன் நூர்"

37, ஆஜாத் நகர், சூரமங்கலம், சேலம் – 5.

Cell : 98942 90086

முதற் பதிப்பு : ஹிஜ்ரி 1430 ரஜப் பிறை 20
ஜூலை 2009

இந்நூல் கிடைக்குமிடங்கள் :

மௌலவி A.S. ஜுபைர் அஹ்மத் பாகவி
(ஷுஹுதீ ஷாஹ் பைஜீ)
பேராசிரியர், ஜாமிஆ அரபிய்யா
பைஜுல் ஹஸனாத் அரபிக் கல்லூரி,
பொரவச்சேரி, சிக்கல் (P.O.) நாகை
Cell : 98942 90089

மௌலவி, ஹாபிழ் A.S. அஸ்அத் அஹ்மத் பையாஜி
(ஷஹ்வீ ஷாஹ் பைஜீ)
முதல்வர், ஜாமிஆ இலாஹிய்யா பைஜிய்யா அரபிக் கல்லூரி,
78/52, காந்தி நகர் கிழக்கு, ஸ்ரீ நகர் காலனி,
கும்பகோணம் - 612 001.
Cell : 98943 98867

மௌலவி A.S. அபுல் ஹஸன் பாகவி பைஜீ
அரபித்துறை, கிரஸன்ட் ஸ்கூல்,
வண்டலூர், சென்னை - 48.
Cell : 98949 94481

மௌலவி A.S. முஹம்மது பாகவி பைஜீ
இமாம், மஸ்ஜிதே நூர், ஸ்ரீநகர் காலனி,
கும்பகோணம் - 612 001.
Cell : 99442 30292

பஷாரத் பப்ளிஷர்ஸ்
83, அங்கப்ப நாயக்கன் தெரு,
சென்னை - 600 001.
போன் : 044 - 2522 5028

کوئی اک کو سب ہی سمجھتا تھا کوئی سب کو سب اسے چھوڑ کر

وہی وہ ہے سب میں، یہ سب نہیں، وہ سمجھوں میں ایسا بتا گیا

''சிலரோ 'அந்த ஒரு இறைவன் தான் இந்த எல்லாமாக இருக்கிறான்' என்று விளங்கியிருந்தார்கள். (இது குப்ரான விளக்கமாகும்.)

'இன்னும் சிலரோ எல்லா வஸ்துக்களும் தனியாக இருக் கின்றன. அவன் தனியாக எங்கோ இருக்கிறான்' என்று விளங்கியிருந்தார்கள். (இது ஷிர்க்கான விளக்கமாகும்.)

ஆனால் எனதருமை ஷைகு நாயகமோ 'இந்த அனைத்து வஸ்துக்களிலும் அவன் இருந்தாலும் அவன் அவனாகவே இருக்கிறான். அவன் இந்த வஸ்துவாக மாறவில்லை' என்று கூறி அனைத்து வஸ்துக்களிலும் அவனைக் காட்டிக் கொடுத்துச் சென்றார்கள்''.

- கௌஸிஷாஹ் அக்பரி (ரஹ்)

"சிருஷ்டிகள் ஒருபோதும் அல்லாஹ் ஆக முடியாது

அல்லாஹ் ஒருபோதும் சிருஷ்டியாக முடியாது

ஆனால் அல்லாஹ் இல்லாமல் இந்த

சிருஷ்டிகள் இருக்க முடியாது".

- சர்கார் பைஜிஷாஹ் நூரி (ரலி)

நபிமார்களின் சரித்திரங்களை படியுங்கள்

- பொறுமை வரும்

ஸஹாபாக்களின் சரித்திரங்களை படியுங்கள்

- வீரம் வரும்

வலிமார்களின் சரித்திரங்களை படியுங்கள்

- பணிவு வரும்

- சர்கார் பைஜிஷாஹ் நூரி (ரலி)

أَلَآ إِنَّ أَوْلِيَآءَ اللّٰهِ لَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ ﴿٦٢﴾
اَلَّذِيْنَ اٰمَنُوْا وَكَانُوْا يَتَّقُوْنَ ﴿٦٣﴾ لَهُمُ الْبُشْرٰى فِى الْحَيٰوةِ الدُّنْيَا
وَفِى الْاٰخِرَةِ ۚ لَا تَبْدِيْلَ لِكَلِمٰتِ اللّٰهِ ۚ ذٰلِكَ هُوَ الْفَوْزُ الْعَظِيْمُ ﴿٦٤﴾

(முஃமின்களே!) அறிந்து கொள்ளுங்கள்! நிச்சயமாக அல்லாஹ்வின் நேசர்கள், அவர்களுக்கு எவ்வகை அச்சமுமில்லை; மேலும் அவர்கள் கவலையுறவு மாட்டார்கள்.

அவர்கள் நம்பிக்கை கொண்டு, (அல்லாஹ்விடம்) பயபக்தியுடன் நடந்து கொள்வார்கள்.

இன்னும், அவர்களுக்கு இவ்வுலக வாழ்விலும், மறுமையிலும் நற்செய்தியுண்டு; அல்லாஹ்வின் வார்த்தைகளில் எத்தகைய மாற்றமும் கிடையாது. இதுவே மகத்தான வெற்றியாகும்.

(அல்குர்ஆன் 10 : 62,63,64)

SEARCH ALLAH
REACH ALLAH
LOVE ALLAH
LIVE WITH ALLAH

AND SACRIFICE YOUR SELF FOR ALLAH

அல்லாஹ்வை தேடுங்கள்!
அல்லாஹ்வை அடையுங்கள்!
அல்லாஹ்வை காதலியுங்கள்!
அல்லாஹ்வோடு வாழுங்கள்!

மேலும் அல்லாஹ்வுக்காக உங்களை அர்ப்பணியுங்கள்!

- சர்கார் பைஜிஷாஹ் நூரி (ரலி)

அபூஹுரைரா (ரலி) அறிவிக்கிறார்கள் :

நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:-

"நிச்சயமாக அல்லாஹ் கூறுகிறான் : யார் என் வலி-நேசரை பகைத்துக் கொள்கிறாரோ நான் அவரின் மீது போர்ப் பிரகடனம் செய்கிறேன். என் அடியான் அவன் மீது கடமையாக்கப்பட்ட காரியங்கள் அல்லாமல் வேறு எதன் மூலமும் என்னை நெருங்க முடியாது. அதைவிட பிரியமானது என்னிடம் எதுவும் இல்லை. (அதாவது அல்லாஹ் கடமையாக்கிய காரியங்கள்தான் அல்லாஹ்வுக்கு உவப்பானவை. அதை நிறைவேற்றுவதன் மூலமே அடியான் அல்லாஹ்வை நெருங்க முடியும்.)

மேலும் நபிலான காரியங்கள் மூலமாக அடியான் என்னை நெருங்கிக் கொண்டே இருப்பான். இறுதியில் நான் அவன் மீது அன்பு கொண்டு விடுவேன். நான் யாரின் மீது அன்பு கொள்வேனோ அவன் கேட்கும் காதாகவும், அவன் பார்க்கும் கண்ணாகவும், அவன் பிடிக்கும் கையாகவும், அவன் நடக்கும் காலாகவும் நான் ஆகிவிடுவேன். அவன் என்னிடம் கேட்டால் நிச்சயமாக அவனுக்குக் கொடுப்பேன். அவன் என்னிடம் பாதுகாப்புக் கேட்டால் பாதுகாப்பேன்.

(நூல் : புகாரி)

முன்னுரை

அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்)

நஹ்மதுஹூ வநுஸல்லி அலா ரஸூலிஹில் கரீம்.

இமாமுல் அஃழம் அபூஹனீபா (ரஹ்) அவர்களிடம் உங்கள் வயது என்ன? என்று ஒருவர் கேட்க, அவர்கள் 'இரண்டு வயது' என்றார்களாம். 'என்ன? இந்த முதிய வயதில் இரண்டு வயது என்கிறீர்களே?' என்ற போது, 'இமாம் ஜஃபர் சாதிக் (ரஹ்) அவர்களிடம் இரண்டு வருடம் பழகினேன், அதை மட்டுமே நான் வாழ்ந்த வருடங்களாக கருதுகிறேன்' என்று பதில் கூறினார்களாம் அவர்கள்.

ஹஜ்ரத் இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்களோ

لَوْلَا مُجَالَسَةُ الاَبْرَارِ وَمُنَاجَاتُ الاَسْحَارِ

لَمَا اَحْبَبْتُ الْمَعِيْشَةَ فِي هٰذَا الدَّارِ

"நல்லடியார்களின் தொடர்பும், நள்ளிரவில் இறைவனிடம் இரகசியம் பேசுதலும் இல்லையென்றால் இவ்வுலகில் நான் வாழ்வதையே விரும்பி இருக்க மாட்டேன்'' என்றனர்.

இந்த இரண்டு இமாம்களின் கூற்றையும் மற்றவர்கள் நம்புகிறார்களோ இல்லையோ ஆனால் எனது உயிரினும் மேலான ஷைகு நாயகம் ஷம்சுல் ஆரிபீன், பத்ருஸ் ஸாலிகீன் சர்கார் பைஜி ஷாஹ் நூரி கிப்லா (ரலி) அவர்களோடு பழகியவர்கள் அந்த நாட்களைத்தான் தனது வாழ்நாள் என எண்ணுகிறார்கள். அந்த நினைவுகள் மட்டும் இல்லையென்றால் இன்னும் தன் வாழ்வு கசப்பாகவே இருக்கும் என்று கண்ணீருடன் கூறுகிறார்கள்.

ஒவ்வொரு சீடர்களும் தான் ஷைகு நாயகத்திடம் பார்த்தவைகளை புத்தகமாக எழுத முடியும். எவ்வளவு எழுதினாலும் முடிந்து விடாத திறந்த புத்தகமாகவே ஷைகு நாயகத்தின் வாழ்க்கை அமைந்திருந்தது.

1989-ல் சர்காரிடம் பைஅத் பெற்றபின் ஏறத்தாழ 14 வருடங்கள் சர்காரிடம் நான் கற்றவை, பெற்றவைகளில் மற்றவர்களுக்கும் படிப்பினை தரும் செய்திகளை தொகுத்து இதில் தந்துள்ளேன். சர்காரிடம் ஆரம்பத்தில் இருந்து பழகி வரும் எத்தனையோ கலீபாக்கள், முரீதுகள், குடும்பத்தினர் களிடம் இன்னும் எவ்வளவோ செய்திகள் புதைந்துள்ளன. அதை அவர்கள் வெளிக் கொண்டுவர இந்நூல் ஒரு தூண்டுகோலாக இருக்க வேண்டும் என்பதே அடியேனின் ஆசை.

அல்லாஹ் இந்த சிறு முயற்சியை கபூல் செய்து இதன் மூலம் உலக மக்கள் அனைவருக்கும் கியாமத் வரை பலன் தருவானாக! என்னை மன்னிப்பதற்கும் அல்லாஹ் இதை வஸீலாவாக ஏற்றுக் கொள்வானாக! ஆமீன்.

எத்தனையோ கலீபாக்கள், முரீதுகள் சர்கார் பைஜி நாயகத்திடம் தாங்கள் கண்டவை, கேட்டவைகளை சொல் கிறார்கள் அதை எழுத்தில் கொண்டு வந்தால் உலகம் முழுவதும் பயனடையும் அல்லது நமக்கு எழுதி அனுப்பினால் அவற்றையும் தொகுத்து அடுத்த பாகமாக வெளியிடலாம். அல்லாஹ் தௌபீக் செய்வானாக!

இப்படிக்கு

சகே பார்காஹே பைதுன் நூர்

ஜுபைர் அஹமத் ஷுஹூதீஷாஹ் பைஜி

அல்லாமா அல் ஆரிபுபில்லாஹ் மௌலவி

A.B.F. அப்துல்லாஹ் பைஜானுல்லாஹ் ஷாஹ் பைஜி

அவர்கள் வழங்கிய

வாழ்த்துரை

"முன்னோர்களின் சரித்திரங்கள் பின்னோர்களுக்கு படிப்பினைகள்" என்று கூறுவார்கள். பைஜி நாயகத்தின் ஒவ்வொரு அசைவிலும் மக்களுக்கு ஆயிரம் படிப்பினைகள் இருந்தன. இருலோக ரட்சகர் (ஸல்) அவர்களை காணக் கொடுத்து வைக்காத கண்களுக்கு அல்லாஹ் பைஜி நாயகத்தை காட்டினான் என்று ஆனந்தம் கொண்டாடுகிறோம். நபிகளின் நற்பழக்கங் களையும், ஸஹாபாக்களின் சரித்திரங்களையும், வலிமார்களின் வாழ்க்கையையும் பைஜி நாயகத்திடம்தான் நாங்கள் கண்டோம். பைஜி நாயகத்தின் காதல் முரீத் மௌலானா ஷுஹதீ ஷாஹ் பைஜி அவர்கள் தொகுத்த இந்நூலை நான் பல முறை படித்தேன். கண்களில் கண்ணீர் சிந்தினேன். இதில் ஏறத்தாழ எல்லா செய்திகளையும் சர்கார் சொல்ல பல முறை என் காதுகளால் கேட்டிருக்கிறேன்.

எனவே, அதை படிக்கும் போது மிகவும் பரவசம் ஏற்படுகிறது. அல்லாஹ் இதைத் தொகுத்த ஹஜ்ரத் அவர்களுக்கு அதிகமான நற்கூலி வழங்குவானாக! ஆமீன்.

இப்படிக்கு

A.B.F. அப்துல்லாஹ்

பைஜானுல்லாஹ்ஷாஹ் பைஜி

அல்லாமா அல் ஆரிபுபில்லாஹ் மௌலவி

A.B.F. ரஹ்மதுல்லாஹ் இர்பானுல்லாஹ்

ஷாஹ் பைஜி பையாஜி அவர்கள் வழங்கிய

அணிந்துரை

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا اتَّقُوا اللَّهَ وَكُونُوا مَعَ الصَّادِقِينَ ۝

''ஈமான் கொண்டவர்களே! நீங்கள் அல்லாஹ்வை தக்வா செய்யுங்கள். இன்னும் அல்லாஹ்வின் நல்லடியார்களோடு இருங்கள்'' என அல்லாஹ் கூறுகிறான்.

ஒருவன் ஈமானிலும், தக்வாவிலும் உச்சத்தை அடைந்து விட்டாலும் அவனுக்கு நல்லடியார்களின் தொடர்பு தேவை என்பதை இவ்வசனம் வலியுறுத்துகிறது. காரணம் வலிமார்களின் தொடர்பினால்தான் ஈமானும், தக்வாவும் பூர்த்தியாகிறது. அவைகளில் இன்பம் தெரிகிறது. ஈமானின் நிறைவு தக்வாவில் இருக்கிறது. தக்வாவின் நிறைவு 'சுஹ்பத்' எனப்படும் வலிமார்களின் தொடர்பில் இருக்கிறது.

அல்லாஹ்வின் கடமைகள் (حُقُوقُ اللهِ) மட்டுமின்றி அடியானின் கடமைகளையும் (حُقُوقُ الْعِبَادِ) நாம் ஷைகுமார்களிடம்தான் கற்க வேண்டியுள்ளது. குடும்பத்தார்களிடம் பழகுவது எப்படி? நண்பர்களிடம் நடந்து கொள்வது எப்படி? உறவினர்களை ஆதரிப்பது எப்படி? ஆசிரியரிடம் காட்டும் மரியாதை என்ன? தன் மாணவர்களிடம் எப்படி அன்பு செலுத்துவது? என்பது போன்ற ஒவ்வொரு அம்சங்களையும் பைஜி நாயகத்தின் வாழ்க்கையில் நாம் கற்றுக் கொள்ளலாம்.

அவர்களின் வாழ்வின் ஒரு சில பக்கங்களை நம் கண்முன் நிறுத்திய எனது பிரியமுள்ள ஹஜ்ரத் ஷுஹூதீஷாஹ் பைஜி அவர்களுக்கு அல்லாஹ் நற்கூலி வழங்குவானாக! இந்நூலை எல்லோருக்கும் பலன் தரும் பொக்கிஷமாக ஆக்கி அருள்வானாக!

இப்படிக்கு

A.B.F. ரஹ்மதுல்லாஹ்

இர்பானுல்லாஹ்ஷாஹ் பைஜி

அல்லாமா அல் ஆரிபுபில்லாஹ் மௌலவி

A.B.F. நூருல்லாஹ் நூரானீ ஷாஹ் பைஜி பையாஜி

அவர்கள் மனமுவந்து வழங்கிய

மதிப்புரை

ஒருவன் ஒரு ஆசிரியரின் கீழ் பயிற்சி பெறாமல் எக்கலையையும் கற்றுத் தேற முடியாது. வெறும் புத்தகங்களை படித்து சமையல்காரனாக முடியாது. இதயத்தைப் பற்றி புத்தகங்களை படித்து இதய அறுவை சிகிச்சை செய்ய முடியாது. நீச்சல் கற்றுக் கொள்வது எப்படி? என்ற புத்தகத்தை படித்து விட்டு கடலில் குதிக்க முடியாது. ஒரு வக்கீலோ, இன்ஜினியரோ, வியாபாரியோ, விளையாட்டு வீரரோ அனைவருமே அனுபவசாலியிடம் பயிற்சி பெற்ற பின்னரே தமது துறையில் ஜொலிக்கிறார்கள். இறை ஞானமும் அவ்வாறுதான். அது ஆயிரம் ஏடுகளை படித்தாலும் வராது. ஒரு ஷைகுடைய தஃலீம், தல்கீன், இல்காஃ மற்றும் ஞானப் பயிற்சியின் மூலம்தான் அடைய முடியும். மஃரிபா என்பது கயிற்றில் நடப்பது போல, சற்று பிசகினாலும் குப்ரு, ஷிர்கு, இல்ஹாது எனும் பாதாளங்களில் விழ நேரிடும்.

وَمَنْ يُّضْلِلْ فَلَنْ تَجِدَ لَهٗ وَلِيًّا مُّرْشِدًا ۝

"அல்லாஹ் யாரை வழிகேட்டில் விட்டுவிட நாடி விட்டானோ அவர்களுக்கு நேர்வழி காட்டும் இறை நேசரை நீங்கள் பெற்றுக் கொள்ள மாட்டீர்கள்'' என்று அல்லாஹ் கூறுகிறான். அல்லாஹ் நம்மை பாதுகாப்பானாக!

நமது ஷைகு தில் நவாஸ் பைஜிஷாஹ் நூரி (ரலி) அவர்களின் அன்புச் சீடர் மௌலானா ஷுஹைபுத்தீஷாஹ் பைஜியின் இந்த சேவை பாராட்டுதலுக்குரியது. இன்னும் அடுத்தடுத்து இதன் தொடர் வெளிவர அல்லாஹ் தௌபீக் செய்வானாக! இதன் மூலம் அல்லாஹ் மக்களுக்கு இறை ஞானத்தில் ஆர்வத்தை ஏற்படுத்துவானாக! ஆமீன்.

இப்படிக்கு

A.B.F. நூருல்லாஹ் நூரானீஷாஹ் பைஜி

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்

பைஜீ நாயகத்தின் ஷைகுமார்கள் வாழ்க்கைக் குறிப்பு

அல்லாஹ்வின் அருமைத் தூதர் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கொண்டு வந்த இந்த புனித தீனைப் பாதுகாக்க அல்லாஹ் உலகெங்கும் தன் நேசர்களை அனுப்பிக் கொண்டே இருக்கிறான். குர்ஆனுடைய ஓதும் முறையை ஏழு காரிகள் மூலமாகவும், ஃபிக்ஹ் சட்ட திட்டங்களை நான்கு இமாம்கள் மூலமாகவும், ஹதீஸ்களை ஸிஹாஹ் சித்தாவின் ஆசிரியர்களான ஆறு இமாம்கள் மற்றும் முஹத்திஸ்கள் மூலமாகவும் அல்லாஹ் இன்று வரை பாதுகாத்து வருகிறான்.

அதுபோல் அண்ணலாரின் புனித இதயத்தில் பொதிந்திருந்த இறை ஞானத்தை அலி (ரலி) அவர்களைக் கொண்டும், அவர்களின் மாணவர் ஹஸன் பசரீ (ரலி) அவர்களைக் கொண்டும் வெளிப் படுத்திய அல்லாஹ் வரிசையாக நூற்றுக்கணக்கான வலிமார்களைக் கொண்டு இதுவரை பாதுகாத்து வருகிறான். கற்பிக்கும் முறை களைப் பொறுத்து இந்த இறை ஞானத்தொடர் காதிரிய்யா, சிஷ்திய்யா, சுஹ்ரவர்திய்யா, நக்ஷபந்திய்யா என்று பல வகை களாகப் பிரிந்து நிற்கின்றன. அவற்றுள் குறிப்பாக சைய்யிதினா குத்புல் அக்தாப் முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி அவர்களின் காதிரிய்யா சில்சிலாவும், காஜா முயீனுத்தீன் சிஷ்தி அஜ்மீரி (ரலி) அவர்களின் சிஷ்திய்யா சில்சிலாவும் மிகவும் பிரபலமானவை.

ஹஜ்ரத் காஜா முயீனுத்தீன் சிஷ்தி அஜ்மீரி (ரஹ்) அவர்கள் மூலம் ஹிஜ்ரி 7 ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் பரவிய சிஷ்திய்யா சில்சிலா பின்னர் அவர்களின் ஞான வாரிசான குத்புத்தீன் பக்தியார் காகீ (ரஹ்) அவர்கள் மூலமும் அவர்களின் வாரிசான காஜா பரீதுத்தீன் கஞ்சேஷக்கர் (ரஹ்) அவர்கள் மூலமும் நன்கு வேரூன்றியது. பரீது நாயகத்தின் பிரபல கலீபாக்களான நிஜாமுத்தீன் மஹ்பூப் இலாஹி (ரஹ்) காஜா அலாவுத்தீன் கல்யரீ சாபிரீ (ரஹ்) இருவரும் இந்த

இறை ஞானத்தை மக்களுக்கு எடுத்தோதி நேர்வழிப்படுத்தி னார்கள். இவ்விருவரின் பெயர் கொண்டு நிஜாமிய்யா என்று ஒரு தொடரும் சாபிரிய்யா என்று ஒரு தொடரும் வளர்ந்து வந்தன. நிஜாமிய்யாவில் பூத்த பூக்களான நசீருத்தீன் சிராஹ் தஹ்லவீ (ரஹ்), காஜா பந்தே நவாஜ் கேசூ தராஜீ (ரஹ்) ஆகியோர் மிகவும் பிரபலமான இறைநேசர்களாவார்கள்.

குல்பர்காவில் அடங்கியுள்ள காஜா சையத் முஹம்மத் பந்தே நவாஜ் கேசூ தராஜ் (ரஹ்) அவர்கள் 'ஜவாமிவுல் கலிம்' முதலிய பல நூற்களை எழுதியுள்ளார்கள். அவை அனைத்தும் தீனுடைய உலமாக்களால் ஒப்புக் கொள்ளப்பட்ட நூற்களாகத் திகழ்ந்து வருகின்றன.

பின்னர் இதே தொடரில் தோன்றிய ஷாஹ் கமால் (ரஹ்) அவர் கள் 'மக்ஜனுல் இர்பான்', 'கலிமாத்தே கமாலிய்யா' போன்ற ஞான நூற்களை எழுதியுள்ளார்கள். அவர்களின் கலீபா ஹஜ்ரத் சையத் அலாவுத்தீன் (ரஹ்) அவர்கள் ஆவார்கள். இவர்களின் அருமைத் திருமகனார் ஹஜ்ரத் சையத் புர்ஹானுத்தீன் ஹக்கானீ ஹக்நுமா (ரஹ்) அவர்கள் தங்கள் தந்தையின் ஞான வாரிசாகவும், ஷாஹ் கமால் (ரஹ்) அவர்களின் மருமகனாகவும் இருந்தார்கள்.

இவர்களின் பிரதான கலீபாவான ஹஜ்ரத் மஹ்மூதுல்லாஹ் ஷாஹ் (ரஹ்) அவர்கள் மூலம் தான் சிஷ்திய்யா சில்சிலா ஹைதராபாத்தில் வளர ஆரம்பித்தது. ஹஜ்ரத் மஹ்மூதுல் லாஹ் ஷாஹ் (ரஹ்) அவர்கள் மிகச் சிறந்த ஆலிமாக இருந்தார்கள். பதினான்கு ஷைகுமார்களிடம் ஊழியம் செய்து அருள் பெற்றிருந் தார்கள். பதினான்காவதாக ஹஜ்ரத் புர்ஹானுத்தீன் (ரஹ்) அவர் களிடம் வந்து ஊழியம் புரிந்து பைஅத்தும் கிலாபத்தும் பெற்றார் கள். நீங்கள் ஹைதராபாத் சென்று தவ்ஹீதைப் பரப்புங்கள் என்று அவர்களின் ஷைகு உத்தரவிட்டதன் பேரில் ஹைதராபாத் நகர் வந்து அங்கு ஈமானின் ஜோதியை வளர்த்துக் கொண்டிருந்தார்கள். ஹிஜ்ரி 1311 துல்ஹஜ் பிறை 7ல் உலகைப் பிரிந்த இவர்களின்

புனித மண்ணறை ஹைதராபாத்தில் அப்ஜல் கன்ஜ் எனுமிடத்தில் உஸ்மானிய்யா தவா கானாவுக்குப் பின்புறம் அமைந்துள்ளது.

இவர்களின் பேரப்பிள்ளை முரீது ஒருவர் இவர்களின் மண்ணறை மீது மணி மண்டபம் எழுப்ப நாடியபோது அவர் கனவில் தோன்றி 'மாடீ மிலே கோ மட்டீ மே ஹீ ரஹ்னே தோ' - 'இந்த தாழ்ந்த அடியானை மண்ணிலேயே இருக்க விட்டு விடுங்கள்' என்று கூறினார்கள். எனவே இன்று வரை இவர் களின் புனித மண்ணறை நீல வானத்தைப் பார்த்ததாகவே காட்சியளிக்கிறது. என்னே அவர்களின் பணிவு! ஹஜ்ரத் அவர்கள் சிஷ்தி, காதிரீ, நக்ஷபந்தீ, சுஹ்ரவர்தீ, தபகாத்தீ முதலிய பல சில்சிலாக்களை தங்களில் ஒன்று சேர்த்திருந் தார்கள். இவர்களின் கலீபாக்களில் 'மச்லீ வாலே' என்று அழைக்கப்படும் சையத் கமாலுல்லாஹ் ஷாஹ் அவர்கள் முக்கியமானவர்கள்.

கமாலுல்லாஹ் ஷாஹ் மச்லீ வாலே (ரஹ்)

இவர்களின் திருப்பெயர் முஹம்மத் ஜமாலுத்தீன் என்பதாகும். கமாலுல்லாஹ்ஷாஹ் என்பது பட்டப் பெயராகும். இவர்கள் சிகந்தராபாத்தில் ஒரு மீன் கருவாட்டுக் கடையும், தானியக் கடை யும் வைத்திருந்தார்கள். எனவே இவர்களை மச்லீ வாலே என்று அழைத்து வந்தனர். இவர்கள் அரபி, உர்து, பார்சி மூன்று மொழிகளிலும் நன்கு திறமை பெற்றிருந்தார்கள். ஒரு சில கவிதைகளும் எழுதியிருக்கிறார்கள். அதிகமாக சூபியாக்களுடன் தொடர்பு கொண்டவர்களாக இருந்தார்கள்.

ஒரு நாள் இவர்கள் தங்கள் கடையை சாத்தி விட்டு வந்து கொண்டிருந்தார்கள். எதிரே ஷாஹ்ஜீ என்று மக்களால் அன்புடன் அழைக்கப்படும் ஹஜ்ரத் சையத் சுல்தான் மஹ்மூதுல்லாஹ் ஷாஹ் அவர்கள் அந்தக் கடை வழியாக 'ஹூ ஹக்' என்று கூறியவண்ணம் சென்று கொண்டிருந்தார்கள். இவர்களைக் கண்டவுடன் அருகிலே அழைத்து கையைப் பிடித்து அங்கேயே பைஅத் கொடுத்து,

پاک کر شرک جلی سے تن کمال
اور خفی اخفی سے اپنا جاں و من

“கமாலே! ஷிர்க்கே ஜலீ எனும் வெளிப்படையான இணை வைத்தலை விட்டும் உன் உடலைப் பரிசுத்தப்படுத்துவாயாக! இன்னும் ஷிர்க்கே கபீ - அக்பா் எனும் மறைவான இன்னும் மிக மறைவான இணை வைத்தலை விட்டும் உள்ளத்தையும் ரூஹை யும் பரிசுத்தப்படுத்துவாயாக!” என்று கூறினார்கள். பின்னர் ‘ஹூ ஹக்’ என்று கூறிய வண்ணம் அங்கிருந்து சென்று விட்டார்கள்.

அந்த வினாடியிலிருந்து ஹஜ்ரத் அவர்களின் நிலை மாறி விட்டது. ‘ஷாஹ்ஜீ’ அவர்களின் சபைக்குத் தொடந்து சென்று கொண்டிருந்தார்கள். ஹஜ்ரத் அவர்களுக்கு ஞானப் பயிற்சி அளித்து ‘கமாலுல்லாஹ்ஷாஹ்’ என்று பட்டப் பெயரையும் அளித்து மகிழ்ந் தார்கள் ஷாஹ்ஜீ (ரஹ்) அவர்கள்.

அதற்குப் பின் இவர்களின் புகழ் பரவ ஆரம்பித்தது. நாடெங்கி லும் இருந்து பெரும் பெரும் உலமாக்களும், சூபியாக்களும், இறைக் காதலர்களும் அவர்களைத் தேடி வர ஆரம்பித்தார்கள். பெரும் பெரும் செல்வந்தர்களும், அரசு உயர்பதவியில் இருந்தவர்களும் தங்கள் செல்வத்தையும், பதவியையும் மறந்து ஹஜ்ரத் அவர்களின் காலடியில் அமர்ந்து ஞானத்தேன் அருந்தினார்கள். நவாப் மஹ்தியார் ஜங்க், நவாப் சயீத் ஜங்க், ஹைதராபாத் ஜாமியா நிஜாமிய்யா பல்கலை கழகத்தின் ஸ்தாபகர் மவ்லானா அன்வாருல்லாஹ் கான், மவ்லானா பரகாத் அஹ்மத் டோங்கி, மவ்லானா மளாஹிர் அஹ்ஸன் கீலானி, மவ்லானா ஷாஹ் அப்துல் கதீர் ஹஸ்ரத் இன்னும் எண்ணற்ற பெரும் பெரும் தீனுடைய உலமாக்களும் இவர்களின் மாணவர்களாக விளங்கினார்கள்.

ஹஜ்ரத் அவர்கள் மிகவும் கராமத் விளங்கப் பெற்றவர்களாக இருந்தார்கள். இவர்கள் தெருவில் மீன் விற்றுக் கொண்டு செல்லும்போது இவர்களின் தலைக்கும் மீன் கூடைக்கும் ஒரு ஜான் இடைவெளி இருக்குமாம்.

ஒரு நாள் ஒருவர் ஒரு பெரிய பாத்திரத்தில் சர்க்கரை எடுத்துக் கொண்டு சென்று கொண்டிருந்தார். 'அது என்ன?' என்று ஹஜ்ரத் அவர்கள் கேட்டார்கள். அவரோ விளையாட்டாக 'மண் அள்ளிச் செல்கிறேன்' என்றார். 'அப்படியே ஆகட்டும்!' என்று ஹஜ்ரத் அவர்கள் கூறினார்கள். என்ன ஆச்சரியம்! அவர் தனது இடத்திற்குச் சென்று பாத்திரத்தை இறக்கிப் பார்த்தார். முழுவதும் மண்ணாகவே இருந்தது. அப்போதுதான் இவர்களின் சிறப்பை விளங்கிய அவர் ஓடோடி வந்து மன்னிப்புக் கேட்டு அழுதார். உடனே ஹஜ்ரத் அவர்கள் அதில் என்ன இருந்தது? என்று கேட்டார்கள். 'சர்க்கரை' என்றார் அவர். 'சரி அப்படியே ஆகட்டும்!' என்றார்கள். அந்த மண் முழுவதும் மீண்டும் சர்க்கரை ஆகிவிட்டது.

ஒரு நாள் இவர்கள் கருவாட்டை எடை போட்டு விற்பனை செய்தபோது, வாங்க வந்த மனிதர் 'இந்த கருவாடு நன்றாக இல்லையே' என்று கூறினார். அதற்கு இவர்கள் 'ஏன்! இதற்கு என்ன?' என்று கூறி அதைத் தூக்கி போட்டபோது அது உயிர் பெற்று துள்ளி விழுந்தது.

இவர்கள் ஞானப் பயிற்சிகளையும் கடுமையாகச் செய்து வந்தார்கள். வெளியில் சென்று வரும்போது காட்டில் இருக்கும் பல வகைப்பட்ட மரங்களின் இலைகளை எல்லாம் பறித்து வருவார்கள். வந்து வீட்டில் அமர்ந்து ஒவ்வொரு இலையாகக் கையில் எடுத்து 'ஹக் ஜாஹிர் பசூரத்தே ஷை' - 'இந்த தோற்றத்திலும் ஹக்குடைய உஜூதுதான் காட்சியளிக்கிறது' என்று ஒவ்வொன்றாக ரசித்துக் கொண்டிருப்பார்கள். நாடெங்கிலும் தவ்ஹீதின் ஞானத்தையும், திருக் கலிமாவின் அஸ்ரார்களையும் மணம் பரப்பிய ஷைகுனா ஹஜ்ரத் கிப்லா அவர்கள் ஹிஜ்ரி 1351 ரபீவுல் ஆகிர் பிறை 29 (கி.பி. 1932 டிசம்பர் 8 ஆம் நாள்) வியாழக்கிழமை அன்று தங்கள் இக வாழ்வை முடித்துக் கொண்டு ரபீகுல் அஃலாவின் பக்கம் பயணம் சென்றனர். இவர்களின் புனித அடக்கஸ்தலம் ஹைதராபாத் தில் காசீ கோடா எனும் இடத்தில் அமைந்துள்ளது. இன்றளவும்

மக்கள் அவர்களின் தர்பாருக்குச் சென்று நல்லாசி பெற்று வருகிறார்கள். இவர்களின் பல கலீபாக்களில் பிரதானமானவர்களாக கௌஸீ ஷாஹ் சாஹிப் அவர்கள் திகழ்ந்தார்கள்.

கன்ஜுல் இர்பான் ஹஜ்ரத் கௌஸீஷாஹ் அக்பரீ (ரஹ்)

ஹிஜ்ரி 1311 துல்ஹஜ் 16, கி.பி. 1893 ஜூலை 1 சனிக் கிழமை ஹைதராபாத் பேகம் பஜார் மஹல்லாவில் பிறந்த ஹஜ்ரத் அவர் களுக்கு பெற்றோர் கௌஸ் அலி என்று பெயரிட்டு மகிழ்ந்தனர்.

இவர்களின் தகப்பனார் ஹஜ்ரத் கரீமுல்லஹ்ஷாஹ் நக்ஷபந்தீ அவர்கள் நக்ஷபந்தீ சில்சிலாவின் ஷைகாக விளங்கினார்கள். தந்தையின் மூலமே மார்க்கக் கல்விகள் அனைத்திலும் தேர்ச்சி பெற்ற ஹஜ்ரத் அவர்கள் இளமையிலேயே இறைக் காதல் மிக்கவர் களாக விளங்கினர்.

தகப்பனார் ஹிஜ்ரி 1331 ஜமாதுல் அவ்வல் பிறை 7ல் மறைந் தார்கள். அதன்பின் இவர்கள் மச்லீ வாலே ஷாஹ் என்றழைக்கப் பட்ட ஹஜ்ரத் கமாலுல்லாஹ் ஷாஹ் அவர்களிடம் பைஅத்துப் பெற்றார்கள். இறை ஞானங்களைக் கசடறக் கற்றுத் தெளிந்த ஹஜ்ரத் அவர்களுக்கு கிலாபத் வழங்கி 'கௌஸீ ஷாஹ்' என்ற பெயரையும் வழங்கினார்கள் அவர்களின் ஷைகு அவர்கள்.

அரபி, பார்சி, உர்து ஆகிய மூன்று மொழிகளிலும் பெரும் புலமை பெற்றிருந்த ஹஜ்ரத் அவர்கள் மூன்று மொழிகளிலும் ஏராளமான கவிதைகள் எழுதியுள்ளார்கள். தாங்கள் இறைவன் மேல் கொண்ட அளவற்ற காதலை அப்படியே கவிதையாக வடித்துள்ளார் கள். இவர்களின் கவிதைத் தொகுப்பான ''தைய்யிபாத்தே கௌஸி'' எனும் நூல் இறை ஞானப் பொக்கிஷமாக இன்று வரை விளங்கி வருகிறது.

கௌஸி ஷாஹ் (ரஹ்) அவர்களுக்கு ஷைகுல் அக்பர் முஹ்யித் தீன் இப்னு அரபி (ரஹ்) அவர்கள் ஆன்மீக முறையில் திருக்காட்சி தந்து கிலாபத்தும் வழங்கி தங்களின் ஞானங்களை வெளிப்படுத்து

வதற்கு அனுமதியும் கொடுத்தார்கள். எனவே இவர்கள் மூலமாக உவைஸிய்யா முறையில் அக்பரிய்யா சில்சிலாவும் தொடர்ந்தது.

ஒரு முறை இவர்கள் உடல் நலம் குன்றியிருந்தபோது ரசூல் (ஸல்) அவர்கள் கனவில் தோன்றி 'பூரண நலம் பெறுவீர்கள்!' என்று நற்செய்தி கூறிச் சென்றார்கள். அவ்வாறே நலம் பெற்று எழுந்து தீன் சேவை செய்து வந்தனர்.

ஹஜ்ரத் அவர்கள் எழுதிய நூருன்னூர் எனும் நூல் மிகவும் புகழ் வாய்ந்தது. குறிப்பாக 'ஜப்ர் வ கத்ர்' மஸ்அலாவை இதில் நன்கு விளக்கியுள்ளார்கள். இந்நூலை இந்தியா மற்றும் பாகிஸ்தானைச் சேர்ந்த பிரபல உலமாக்கள் எல்லாம் புகழ்ந்து எழுதினார்கள். குறிப்பாக நூற்றுக்கணக்கான கிதாப்களின் ஆசிரியராக இருந்த மௌலானா அஷ்ரப் அலி தானவி (ரஹ்) அவர்கள் இந்நூலைப் பற்றி எழுதும்போது ''நூருன்னூர்' கிதாபிலே எந்த அளவு விளக்கமாக ஜப்ர், கத்ர் மஸ்அலாவை விளக்கியுள்ளார்களோ அப்படி வேறு கிதாப்களில் காண்பது அரிது! இந்த மஸ்அலா என்னை தடுமாற வைத்து விட்டது. இது விஷயத்தில் நான் எனது வழிமுறையை அல்லாஹ் மூடலாக்கிய விஷயத்தை நீங்களும் மூடலாக்குங்கள் என்று வைத்திருந்தேன். இந்நூல் அதை அழகிய முறையில் விளக்கி யுள்ளது'' என்று கூறியுள்ளார்கள்.

இது தவிர 'மக்ஸதே பைஅத்', கன்ஜே மக்தூம், மஇய்யத்தே இலாஹிய்யா, பலாஹே முஸ்லிம் போன்ற நூற்களும் தைய்யிபாத்தே கௌஸி என்ற கவிதைத் தொகுப்பும் இவர்களது ஆக்கங்களாகும்.

ஹிஜ்ரி 1373 ஷவ்வால் பிறை 4ல் (கி.பி. 1954 ஜூன் 6) ஞாயிற்றுக்கிழமை இன்னுலகை நீத்த ஷைகு அவர்களின் புனித மண்ணறை ஹைதராபாத்தில் உள்ள பேகம் பஜாரில் மஸ்ஜிதே கரீமுல்லாஹ் ஷாஹ்வில் உள்ளது. இவர்களின் மகனார் ஸஹ்வீ ஷாஹ் என்பவர்களும் பிற்காலத்தில் தரீக்கத் சம்பந்தமான நிறைய நூல்கள் எழுதியுள்ளார்கள்.

ஹஜ்ரத் அவர்களுக்கு ஏறத்தாழ 30க்கும் மேற்பட்ட கலீபாக்கள் இந்தியா முழுவதும் இருந்தார்கள். அவர்களுள் சைய்யத் நூரி ஷாஹ் கிபுலா அவர்கள் மிகவும் புகழ் பெற்று விளங்கினார்கள்.

நூருல் மஷாயிக் ஹஜ்ரத் சையத் நூரீ ஷாஹ் கிப்லா (ரஹ்)

தங்கள் பெயருக்கு ஏற்ற வண்ணம் உலகெங்கும் பேரொளியை வீசிய சர்கார் நூரி நாயகத்தின் இயற்பெயர் அஹ்மத் முஹ்யித்தீன் என்பதாகும். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் குல வழியில் குத்புல் அக்தாப் முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி (ரலி) அவர்களின் பேரப்பிள்ளையாக ஹிஜ்ரி 1322 துல்கஅதா 28ல் ஹஜ்ரத் அவர்கள் உலகில் உதித்தார்கள். ஹஜ்ரத் அவர்களின் தந்தைப் பெயர் 'சையத் கௌஸுத்தீன்' என்பதாகும்.

தங்கள் இளம் வயதிலேயே ஷைகு கௌஸீ ஷாஹ் சர்காரிடம் பைஅத் பெற்று அவர்களின் பணிவிடையிலேயே பல்லாண்டுகள் கழித்தார்கள். ஷைகு அவர்கள் கிலாபத் கொடுத்து 'நூரீ ஷாஹ்' எனும் பெயரையும் கொடுத்தார்கள்.

கேட்பவர்களை எல்லாம் தன் வசப்படுத்தும் மிக அற்புதமான பேச்சாற்றலை அல்லாஹ் அவர்களுக்கு கொடுத்திருந்தான். ஷைகு கௌஸீ ஷாஹ் அவர்கள் தன் முரீது நூரீஷாஹ் அவர்களை சில இடங்களுக்கு அழைத்துச் செல்வார்கள். அங்கே தன் முரீதைப் பேசச் செய்து அவர்களின் பேச்சை ஷைகும் கேட்டு ரசித்துப் பாராட்டுவார்கள்.

பிற்காலத்தில் நூரி நாயகத்தின் புகழ் உலகெங்கும் பரவியது. குறிப்பாக தமிழகம், கேரளா எங்கும் அவர்களின் பெயரை அறியாத வர்கள் யாரும் இல்லை எனும் அளவுக்கு அவர்களின் முரீதுகள் எங்கும் இருந்தனர். எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாமல் ஓய்வின்றி ஊர் ஊராக பயணம் செய்து இறை ஞானங்களை போதித்து வந்தார்கள். தங்கள் கலீபாக்களைப் பார்த்து 'நான் சிரமம் பாராது ஊர் ஊராக சுற்றியதால் அல்லாஹ் உங்களுக்கு இறை ஞானத்தை வழங்கியுள்ளான். இல்லை என்றால் தமிழகம் இருண்டு கிடந்திருக் கும். நீங்களும் சிரமம் பாராது ஊர் ஊராகச் செல்லுங்கள். ''ஆரிப் தேங்கிக் கிடக்கும் குளம் போன்றவர் அல்ல! ஊர் ஊராகச் சென்று மக்கள் தாகம் தீர்க்கும் நதி போன்றவர்'' என்று கூறுவார்கள்.

ஆரம்பத்தில் குடிசை வீட்டில் வறுமையில் வாடியபோது சேவை செய்தது போலவே முதுமையில் பெரும் வசதி வாய்ப்புகள் வந்த போதும் இரவு பகலாக சலிப்படையாமல் இறை ஞானத்தை போதித்து வந்தார்கள். 'தர்ஜுமான்' என்ற உர்து மாத இதழும் நடத்தினார்கள். அஸ்ராரே லாயிலாஹ இல்லல் லாஹ், தப்சீரே நூரி (சூரா பாத்திஹா), அஹமிய்யத்தே தரீகத், அஸ்ராரே இலாஹி, ஜுஹூரே முஹம்மத் (ஸல்) ஆகிய பல நூற்கள் எழுதியுள்ளார்கள்.

கேரளாவில் ஜாமியா அரபிய்யா நூரிய்யா என்ற அரபிக் கலா சாலையைத் தோற்றுவித்தார்கள். ஹைதராபாத்தில் ஜாமியா இலாஹிய்யா நூரிய்யா எனும் அரபிக் கல்லூரியும், நூரி இண்டஸ்டிரீஸ், நூரிய்யா ஜூனியர் காலேஜ், அரபிக் ஓரியண்டல் ஹைஸ்கூல் போன்ற பல கல்வி நிறுவனங்களைத் துவக்கினார்கள்.

ஹைதராபாத்தில் பண்டல்குடாவில் மஸ்ஜிதும், மத்ரஸா கட்டிடங்களும், கான்காஹ்வும் கட்டினார்கள். ஹஜ்ரத் அவர்களுக்கு 4 ஆண் மக்களும், 7 பெண் மக்களும் வாரிசுகளாவர். எனினும் தனது அனைத்து சொத்துக்களையும் மத்ரஸாவுக்கு வக்பு செய்து விட்டார்கள்.

ஹிஜ்ரி 1411 ரபீவுல் ஆகிர் 14 சனிக்கிழமை உலகைப் பிரிந்த ஹஜ்ரத் அவர்களின் மண்ணறை ஹைதராபாத்தில் உள்ளது. ஹஜ்ரத் அவர்களுக்கு தமிழகம், கேரளா மற்றும் பல இடங்களில் நூற்றுக்கணக்கான கலீபாக்கள் உள்ளனர். தமிழகத்தில் குறிப்பாக ஹஜ்ரத் ஜுஹூரீ ஷாஹ் கிப்லா, ஹஜ்ரத் ஆமிர் கலீமீ ஷாஹ் கிப்லா, ஹஜ்ரத் பைஜீ ஷாஹ் கிப்லா, ஹஜ்ரத் ஜமாலீ ஷாஹ் கிப்லா ஆகியோர் பிரபலமானவர்கள்.

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

தொழுகை முடிந்ததும் எல்லோரும் சுப்ஹானல்லாஹ், அல்ஹம்துலில்லாஹ் என்று விரல்களால் எண்ணி தஸ்பீஹ் ஓதிக் கொண்டிருந்தார்கள். ஒரு மாணவர் மட்டும் தஸ்பீஹ் ஓதாமல் ஃபஅல - ஃபஅலா - ஃபஅலூ என்று விரல்களால் எண்ணிக் கொண்டிருக்கிறார். அருகிலிருந்த மாணவர்களெல்லாம் அவரை ஆச்சரியமாகப் பார்க்கிறார்கள். அவரோ யாரையும் ஏறிட்டும் பாராமல் அன்று ஆசிரியர் நடத்திய பாடத்தை திரும்பத் திரும்ப விரல்களால் எண்ணி பாடமிட்டுக் கொண்டிருக்கிறார். அடுத்த நாள் தங்கள் ஆசிரியரிடம் அந்த மாணவரைப் பற்றி மற்ற மாணவர்கள் குறைபட்டுக் கொண்டார்கள். ஆசிரியர் கூறினார்: ‘‘அவர் ஒருவர் தான் உண்மையில் ஓத வந்தவர். அல்லாஹ்வுக்காக மார்க்கத்தை கற்க வந்தவர் அவர் மட்டுமே. அவரின் எதிர்காலம் பிரகாசமாக இருக்கும்.’’ விளையும் பயிர் முளையிலேயே தெரியும் என்பது போல அந்த ஆசிரியர் அடையாளம் காட்டிய அந்த மாணவர்தான் பிற்காலத்தில் உலகு போற்றும் இறைஞானியாக விளங்கினார்கள்.

ஆம்! ஷம்சுல் ஆரிபீன் - பத்ருல் ஆஷிகீன் - சிராஜுஸ் ஸாலிஹீன் - மிஸ்பாஹுல் முகர்ரபீன் - ஷைகுல் அரபி வல் அஜம் - பைஜி ஷாஹ் நூரி சிஷ்தி காதிரி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள்தான் அந்த மாணவர்! தமிழ் நாட்டில் தஞ்சை மாவட்டம் திருப்பந்துருத்தி என்ற சிற்றூரில் 1926 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 26ம் தேதி அப்துர் ரஹீம் - காத்தூன் பீவி எனும் பெற்றோர்களின் அருள் மைந்தனாக உலகில் உதித்த அவர்களுக்கு அப்துல் பஷீர் எனும் அழகு திருநாமம் சூட்டி மகிழ்ந்தனர் பெற்றோர்கள். உலகத்திற்கே நற்செய்தி கூறுபவர் என்பதை முன்னறிவிப்புச் செய்வது போல் அந்தப் பெயர் அமைந்தது. இளமையிலேயே இவர்களின் முகத்தில் தெய்வீக்கலை பூத்துக் குலுங்கியது.

இவர்களின் பதிமூன்றாவது வயதில் திருச்சியில் பயின்ற போது முஹம்மத் சுலைமான் பாகவி என்ற ஒரு ஆசிரியர் இவர்களுக்கு எப்போதும் பெரும் மரியாதை செய்பவராக இருந்தார்கள். இவர்களை வழியில் கண்டால் தான் செல்லும் வாகனத்திலிருந்து இறங்கிக் கொள்வார். உட்கார்ந்து இருந்தால் எழுந்து நின்று கொள்வார். சக ஆசிரியர் அவரிடம் ''என்ன ஒரு சின்னப் பையனுக்கு இந்த அளவு மரியாதை செய்கிறீர்கள்'' என்று கேட்ட போது, ''அவரின் முகத்தில் இறைநேசர்களின் சுடர் வீசுகிறது. அவர் தனது காலத்தில் குதுபாக, இறைநேசர்களின் தலைவராக விளங்குவார்'' என்று பதிலளித்தார்கள் அந்த ஆசிரியப் பெருந்தகை.

அந்த ஆசிரியர் கணித்தது நூற்றுக்கு நூறு உண்மையாகி யது. லட்சோப லட்ச இதங்களில் இறைஞானத்தையும், இறை அன்பையும் ஊட்டிக் கொண்டு தங்கள் காலத்தில் இறைநேசச் செல்வர்களின் தலைவராக வாழ்ந்து வந்தார்கள்.

ஆரம்பகாலத்தில் ரயில்வேயில் RMS தபால் துறையில் வேலை செய்தார்கள். தப்லீக் ஜமாஅத்திலும் ஈடுபட்டார்கள். பிறகு சுல்தானுல் முபஸ்ஸிரீன் உமர் ஆமீர் கலீமீ ஷாஹ் நூரி அவர்களின் தொடர்பு ஏற்பட்டது. அவர்களின் பயான்கள் எங்கு நடந்தாலும் சென்று கேட்பார்கள். அவர்களின் சொல்லில் பெரும் ஈர்ப்பு சக்தியிருப்பதை உணர்ந்தார்கள். அப்போது தான் தென்னிந்தியாவின் ஞான சூரியன் உலகின் மூலை முடுக்கெல்லாம் மணம் வீசிய தௌஹீதின் தோட்டம் சைய்யிதுனா வ சைய்யிதுஸ் ஸாலிஹீன் - இமாமுல் ஆரிபீன் நூரி ஷாஹ் கிப்லா கத்தஸல்லாஹு சிர்ரஹு அவர்கள் சந்திக்கும் பெரும் பாக்கியம் கிடைத்தது. அது தான் இவர்கள் வாழ்வின் திருப்பு முனையாக அமைந்தது.

அவர்களின் முதல் பார்வையிலேயே அவர்களின் தாஸனாகி விட்டார்கள். நூரி நாயகம் அவர்கள் இவர்களைப் பார்த்தவுடனேயே اللہ کے ولی RMS میں؟ அல்லாஹ்வின் வலி RMS ல் இருப்பதா? என்று கேட்டார்கள். மெஞ்ஞானிகளிடம் லௌஹுல் மஹ்பூல் எனும் விதிப்பலகை எப்போது மறைந்திருந்தது.

நூரி நாயகம் அவர்களிடம் பைஅத் பெற்று அவர்களிடம் அவர்களின் ஞானப் பயிற்சியின் மூலம் இறை நெருக்கத்தை

அடையலானார்கள். சர்கார் கிப்லா அவர்கள் பைஅத் வாங்கிய புதிதில் அவர்களை طریقت کا دولہا இறைபாதையின் புது மாப்பிள்ளை என்று தான் நூரி நாயகம் அழைப்பார்கள். அந்த அளவு ஆர்வத்துடனும் உற்சாகத்துடனும் ஞானப்பயிற்சியை மேற்கொண்டார்கள். சதாவும் இறை சிந்தனையிலேயே உலவினார்கள். புது மாப்பிள்ளை மனைவியின் சிந்தனையிலேயே சுற்றுவது போல இறைவனின் சிந்தனையிலேயே இவர்கள் சுற்றினார்கள்.

சர்கார் அவர்களே தங்கள் ஆரம்ப காலப் பயிற்சிகளைப் பற்றிக் கூறுகிறார்கள். ''என் ஷைகு நாயகம் அவர்கள் நடக்கும் போது ஒவ்வொரு கால் எடுத்து வைக்கும் போதும் ''அல்லாஹு அல்லாஹ்'' என்று கூறும்படி பயிற்சியளித்தார்கள். நான் வீட்டி லிருந்து பையும் பணமும் எடுத்துக் கொண்டு காய்கறி வாங்கி வர மார்கெட்டுக்குச் செல்வேன். வழியில் நடையில் ''அல்லாஹு அல்லாஹ்'' என்று கூறும் பயிற்சியில் ஈடுபடுவேன். இறை சிந்தனையில் என்னை மறந்து மார்கெட் கடைகள் எல்லா வற்றையும் தாண்டி ஊரின் கடைசிக்கு வந்து விடுவேன். பிறகு சுய நினைவு வந்ததும்.''அடடா இவ்வளவு தூரம் வந்து விட்டோமே மார்கெட் செல்ல வேண்டுமே'' என்று திரும்பி நடப்பேன். மீண்டும் ''அல்லாஹு அல்லாஹ்'' சொல்ல ஆரம்பிப்பேன். கடைசியில் பார்த்தால் வெறும் பையுடன் வீட்டு வாசலில் வந்து நிற்பேன். இவ்வாறு பல தடவை நடந்திருக் கிறது.''

''நிஸ்பத் - குவ்வத்துடைய பாடம் நடத்தி அதில் பயிற்சி செய்யும்படி எனது ஷைகு நாயகம் உத்தரவிட்டார்கள். ஒவ்வொரு செயலிலும் சிருஷ்டிகளின் சம்பந்தத்தை தரிபடுத்திய வண்ணம் ஹக்குடைய குவ்வத்தை கவனிக்க வேண்டும் என்று கூறினார்கள். நான் அதை பயிற்சி செய்வதற்காக ஒரு ஓரத்தில் ஏதோ ஒரு கல்லில் அமர்ந்து கொள்வேன். அங்கு கடந்து போகும் மனிதர்கள், ஆடு, மாடுகள் ஒவ்வொன்றின் பாதத்தை மட்டும் பார்த்து நிஸ்பத் இதனுடையது குவ்வத் ஹக்குடையது என்று கூறிக் கொண் டிருப்பேன். அன்னியப் பெண்களை பார்க்கக் கூடாது என்பதற்காக பாதங்களுக்கு மேல் பார்வையை உயர்த்தாமல் காலையில் இருந்து மாலை வரை பயிற்சியில் ஈடுபடுவேன். இவ்வாறு பல நாட்கள் இருந்துள்ளேன்.''

சார்கார் அவர்களைப் பற்றி தாதா சர்கார் கூறும் போது, ''பைஜி ஷாஹ்வைப் போன்ற முரீதுகள் 800 வருடத்திற்கு முன்பு இருந்தார்கள்'' என்று கூறுவார்கள்.

தாங்கள் பைஅத் வாங்கிய புதிதில் நடந்த ஒரு சம்பவத்தை சர்கார் அவர்களே கூறுகிறார்கள். ''நான் பைஅத் வாங்கி சரியாக 6 வருடம் ஆகியிருந்தது. என்னுடைய ஷைகு நாயகம் சைய்யிதீ வமுர்ஷிதீ வமௌலாயீ நூரி நாயகம் அவர்கள் ஹைதராபாத்தி லிருந்து சென்னைக்கு வந்திருந்தார்கள். ''டப்பே வாலா ஜப்பார் பாய்'' என்ற முரீதின் வீட்டிலே தங்கியிருந்தார்கள். அப்போது ஒருமுறை அவர்கள் முரீதுகளுக்கு தஃலீம் செய்து கொண்டிருந்தார்கள். நான் பின்னால் அமர்ந்து கேட்டுக் கொண்டிருந்தேன். என் மனதில் ஏதேதோ சிந்தனைகள் ஓடியது. நாமும் தரீகத்தில் முன்னேற முடியுமா? பாயஜீத் (ரஹ்) - ஜுனைத் (ரஹ்) - ஷிப்லீ (ரஹ்) போன்ற மகான்கள் அடைந்த உயர் அந்தஸ்துகளை அடைய முடியுமா? என்று சிந்தித்துக் கொண்டிருந்தேன். என் மனதில் ஓடும் எண்ணங்களை கஷ்பு எனும் ஞானப் பார்வையால் விளங்கிக் கொண்ட என் ஷைகு நாயகம் அவர்கள் என்னை அருகில் வரும்படி அழைத்தார்கள். நான் பயத்துடன் அருகில் சென்று கைகட்டி நின்றேன். ஷைகு நாயகம் அவர்கள் வீட்டுக் காரர் ஜப்பார் பாயை அழைத்து அருகில் இருந்த வெண்கலத்தால் செய்யப்பட்ட உயரமான படிக்கத்தை (உகால் தான்) சுட்டிக் காட்டி இது பளபளப்பாக இருக்கிறதே எப்படி? என்று கேட்டார்கள். அதற்கு அவர் ''தாங்கள் என் வீட்டுக்கு வருகிறீர் கள் என்ற தபாலைக் கண்டவுடன் வீட்டை சுத்தம் செய்ய ஆரம்பித்தேன். இந்தப் படிக்கம் பரணில் கிடந்தது. எடுத்துப் பார்த்தேன். அழுக்கும் தூசியும் படிந்து கன்னங்கரேல் என்று இருந்தது. கழுவி சுத்தம் செய்தேன். ஆனாலும் நிறம் மாற வில்லை. சிலர் புளியைப் போட்டுத் தேய்க்கச் சொன்னார்கள். கொஞ்சம் வெளுத்தது. சிலர் சாம்பலும் செங்கல்லும் போட்டுத் தேய்க்கச் சொன்னார்கள். அப்போதும் முழுமையாக வெளுக்க வில்லை. சிலர் கஞ்சியில் ஊற வைத்து கழுவச் சொன்னார்கள். இவ்வாறு எல்லோர் சொன்னதையும் ஒவ்வொன்றாகச் செய்து கடைசியில் ''மெட்டல் பாலீஸ்'' தடவிய பின் தான் இப்போது இருக்கும் பளபளப்பு கிடைத்தது'' என்று கூறினார். அப்போது என்

பக்கம் திரும்பிய என் ஷைகுனா அவர்கள் "கேட்டீர்களா?" தான் கருப்பாக இருக்கிறோமே, சுத்தமாக வேண்டுமே, பளபளப்பாக வேண்டுமே என்று இந்தப் படிக்கம் கவலைப் படவில்லை. அந்தக் கவலை வீட்டுக்காருக்குதான் இருந்தது. அதே போல் உன்னைப் பற்றி நீர் ஏன் கவலைப்பட வேண்டும்? அல்லாஹ் உங்களை தன் விருப்பப்படி முன்னேற்றுவான்.

گر تجھے بننا ہو غوثی کچھ نہ بن معلوم بن
وہ بنائے جب تو پھر تو جان بن جانانہ بن (غوثی شاہ)

"கௌஸியே! நீ எதுவும் ஆக வேண்டும் என்று ஆசைப்பட்டால் எதுவுமாக ஆகாதே! வெறும் மஃலூமாக ஆகிவிடு. அவனாக உன்னை எப்போது உருவாக்குவானோ அப்போது நீ உயிராகவும் உயிர் நேசனாகவும் ஆகிவிடு!" என்று கூறினார்கள்.

நூரி நாயகம் அவர்கள் சர்கார் மீது விசேஷமான அன்புடைய வர்களாக இருந்தார்கள். இவர்களும் தங்கள் ஷைகின் மீது அளவு கடந்த அன்பும் பாசமும் மரியாதையும் கொண்டிருந்தார்கள்.

அல்லாஹ் என்னிடத்தில் மஹ்ஷரிலே "நீங்கள் உலகிலே இவ்வளவு காலம் என்னதான் செய்தீர்கள்? என்று கேட்டால் நான் கலீமீ ஷாஹ், பைஜிஷாஹ் இருவரையும் முன்னால் நிறுத்தி விடுவேன் என்று நூரி நாயகம் ஒருமுறை கூறினார்கள்.

சர்கார் அவர்கள் ஆரம்பத்தில் மிகுந்த ஏழ்மை நிலையில் இருந்த போது ஹைதராபாத் சென்று தங்கள் ஷைகைச் சந்திக்கத் துடித்தாலும் கையில் பணமில்லாததால் செல்லாமல் இருப்பார்கள். நூரி நாயக மவர்கள் வரச் சொல்லி தபால் எழுதுவார்கள். சர்கார் அவர்கள் யாரிடமும் கடன் வாங்கிக் கொண்டு சென்றால் போக்குவரத்துக் கான செலவை நூரி நாயகமே கொடுத்து விடுவார்கள். உங்களைப் பார்க்க வேண்டும் என்று விருப்பமாக உள்ளது. நீங்கள் சென்று விட்டாலும் உங்கள் நினைவாகவே உள்ளது. என்னிடமும் இங்கு தங்கும் வசதி இருந்தால் நான் இங்கேயே தங்க வைத்துக் கொள்வேன் என்று கூறுவார்கள்.

சர்கார் அவர்களுக்கு நூரி நாயகம் அவர்கள் சென்னையில் வைத்து கிலாபத் கொடுத்தார்கள். அப்போது நூரி நாயகம் அவர்கள் தேம்பித் தேம்பி நெடுநேரம் அழுததாக சர்கார் அவர்கள் கூறினார்கள். சர்கார் அவர்கள் கூறுவார்கள். "என்னுடைய ஷைகு நாயகம் அவர்கள் அதிகம் அழுது இரண்டு முறை பார்த்துள்ளேன். ஒருமுறை எனக்கு கிலாபத் கொடுத்த போது அழுதது. இன்னொரு முறை நெல்லிக்குப்பத்தில் ஆற்றங்கரையில் தஃலீம் செய்து கொண்டிருந்த போது நரகத்தைப் பற்றி பேச்சு வந்தது. உடனே நூரி நாயகம் அவர்கள் அழுது விட்டார் கள். நிறுத்தாமல் தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்தார்கள்.

இன்னொரு சம்பவத்தையும் சர்கார் அவர்கள் கூறினார்கள். "ஒருமுறை நான் நரகத்தை நினைத்து அழுது கொண்டிருந்தேன். நூரி நாயகம் அவர்கள் தங்கள் கஷ்பு ஞானத்தால் அதை உணர்ந்து கொண்டு என்னை அருகில் அழைத்து "பைஜி ஷாஹ்! நரகத்தை நினைத்து அழுகிறீர்களா? என்னுடைய நம்பிக்கை என்னவென்றால் அல்லாஹ் என்னுடன் இருக்கிறான் என்ற உணர்வு ஒரு வினாடி இருந்தால் கூட அவரை நரகம் தீண்டாது" என்று கூறினார்கள். (அவ்லியாக்கள் இறையச்சம், இறை ஆதரவு இரண்டிலும் நிறைந் திருந்தார்கள். அதற்கு இந்த சம்பவங்கள் உதாரணங்களாகும்.) சர்கார் அவர்கள் அடிக்கடி கூறுவார்கள். என் ஷைகு நாயகம் சொன்ன அந்த வார்த்தையை நம்பித்தான் நான் மனம் ஆறுதல் அடைகிறேன்.

இன்னொரு முறை நூரி நாயகம் "பைஜிஷாஹ் தான் மட்டும் சொர்க்கம் செல்ல ஆசைப்படக்கூடாது. மற்றவர்களையும் அழைத்துச் செல்ல பாடுபடுங்கள்" என்று கூறினார்கள்.

மற்றொரு முறை "பைஜிஷாஹ் சிலர் அமல்களைக் கொண்டு சொர்க்கத்தை நிரப்ப முயல்கிறார்கள். நீங்கள் கலிமாவைச் சொல்லிக் கொடுத்து, சொல்லிக் கொடுத்து சொர்க்கத்தை நிரப்புங்கள்" என்று கூறினார்கள்.

சர்கார் அவர்கள் "நான் எங்கும் ஸனது - பட்டம் வாங்கவில்லை. எனது ஷைகு நாயகம் அவர்கள் எனக்குக் கொடுத்த ஸனதுகளைத் தான் நான் உயர்வாகக் கருதுகிறேன்" என்று கூறினார்கள்.

தங்கள் மூச்சிலும் பேச்சிலும் அல்லாஹ்வையே அன்றி இன் னொன்றை நினைக்காத சர்கார் பைஜி நாயகம் ஒருமுறை கூறினார்கள்.

''நான் சிறுவயதில் திருச்சியில் இருந்தேன். அப்போது ஒரு விழா நடந்தது. பார்க்கச் சென்றேன். ஒரு ஆள் தன் உடல் முழுவதும் ஹார்ட்டின் பீடி என்று எழுதப்பட்ட அட்டைகளை தொங்க விட்டிருந்தான். கையில் பீடிக்கட்டுகள் ''சுவைத்துப் பாருங்கள் ஹார்ட்டின் பீடி'' என்பது போன்று உரக்க சப்தமிட்டுக் கொண்டிருந் தான். நான் அருகில் சென்று, ''ஏங்க பாய் உங்கள் உடல் முழுவதும் பீடி மயமாகவே இருக்கிறதே! நாள் முழுவதும் இப்படி விளம்பரம் செய்கிறீர்களே! தங்களுக்கு என்ன கிடைக்கிறது?'' என்று கேட்டேன். அவர் ''கம்பெனியில் எனக்கு ஒரு நாளைக்கு ஆறு அணா கொடுப்பார் கள்'' என்று கூறினார். நான் யோசித்தேன். ''பீடியை இரவு பகலாக மக்களுக்கு அறிமுகம் செய்து வைத்தால் கம்பெனியில் ஆறு அணா கொடுக்கிறார்கள். நாம் அல்லாஹ்வைப் பற்றி மக்களுக்கு அறிமுகம் செய்து வைத்தால் அல்லாஹ் நம்மை சும்மாவா விட்டு விடுவான்?'' இந்த எண்ணம் ஏற்பட்ட போது நான் ஒரு சபதம் செய்து கொன்டேன். நான் வாழ்ந்தால் அல்லாஹ்வுக்காக வாழ்வது. தீனுக்காகவே என் வாழ்நாளை கழிப்பது என்று சத்தியம் செய்து கொண்டேன்.

சர்கார் நாயகம் அன்று செய்த சத்தியப்படியே 50 ஆண்டு களுக்கும் மேலாக ஆயிரக் கணக்கான இதயங்களில் இறை சிந்தனையை இறைக் காதலை உண்டாக்கினார்கள். அந்த சேவை இன்னும் அவர்களின் சீடர்கள் மூலம் தொடர்ந்து கொண்டுள்ளது. இன்ஷா அல்லாஹ் கியாமத் நாள்வரை தொடர்ந்து கொண்டிருக்கும்.

சர்கார் அவர்களுக்கு முதலில் அவர்களது சின்னம்மா மகளைத் தான் திருமணம் செய்ய நிச்சயிக்கப்பட்டது. திருமணத்திற்கு முன் பெண்ணின் சகோதரர்கள் சர்காரிடம் வந்து பவ்வியமாக, ''மச்சான்! இந்த மாதிரி தங்கச்சி ஆசைப்படுகிறது. தாங்கள் கட்டாயம் அதை ஏற்பீர்கள் என்று எண்ணுகிறோம். தாங்கள் தாடி வைத்துள்ளீர்கள். திருமணத்துக்காக வேண்டியாவது அதை எடுத்து விட்டு அழகாக ஷேவிங் செய்து கொள்ள வேண்டும்'' என்று கூறினார்கள்.

சர்கார் அவர்கள் சிரித்துக் கொண்டே, ''ஆஹா! சந்தோஷமாகச் செய்யலாம். ஆனால் எனக்கும் ஒரு ஆசை. அதைப் போய் தங்கள் சகோதரியிடம் கூறுங்கள். அதாவது திருமணத்தின் போது பெண் அழகாக தலையை மொட்டையடித்திருக்க வேண்டும் என்று நான்

ஆசைப்படுகிறேன்'' என்றார்கள். இதைக் கேட்டவுடன் அவர்கள் கோபத்தால் சட்டைக் கைகளை மேலே உயர்த்தினார்கள். சர்காரும் ''உன் சகோதரியை நிகாஹ் செய்வதற்காக என் ரசூலுடைய சுன்னத்தை விடச் சொல்கிறாயா?'' என்று கேட்ட வண்ணம் தங்கள் சட்டைக் கைகளை மேலே உயர்த்த ஆஜானுபாகுவான சர்காரின் தோற்றத்தைக் கண்டு அவர்கள் பின்வாங்கி விட்டனர். திருமணம் நின்று விட்டது.

பின்னர் வேறு இடத்தில் திருமணம் ஆனது. அவர்களும் சர்காருக்கு சொந்தம் தான். ஒரு குழந்தை பிறந்த பின் ஜன்னி வந்து அவர்கள் இறந்து விட அவர்களின் தோழியாக இருந்த இன்னொரு பெண்ணை சர்காருக்கு திருமணம் செய்து வைத்தனர்.

தங்கள் முதல் மனைவியைப் பற்றிக் கூறும் போது சர்கார் கூறினார்கள். ''அவர்கள் நல்ல குணமுடையவர்களாக இருந்தார். ஆனால் தொழுகும் பழக்கம் இல்லை. சர்கார் பலமுறை கூறியும் தொழவில்லை. எனவே சர்கார் ஒருமுறை ''இன்னும் ஒரு மாதத் திற்குள் நீங்கள் தொழவில்லையானால் உங்களை உங்கள் வீட்டுக்கு அனுப்பி விடுவேன் அதுவரை உங்களோடு சேர்ந்தும் படுக்க மாட்டேன்'' என்று கூறிவிட்டார்கள். தினமும் அறைக்கு வெளியே தான் படுத்துக் கொண்டார்கள். ஆனாலும் அவர்கள் தொழாமல் வைராக்கியமாக இருந்தார்கள். கடைசி நாள் சர்கார் இஷா தொழுது விட்டு மஸ்ஜிதில் நெற்றியை தரையில் வைத்து, ''யாஅல்லாஹ்! அடியார்களின் உள்ளங்கள் உனது இரு விரல்களுக்கு இடையில் இருக்கிறது. என் துணைவியை என் கண்களுக்கு குளிச்சியாக்கிவிடு இறைவா!'' என்று துஆச் செய்து கண்ணீர் வடித்தார்கள். வீட்டுக்குத் திரும்பினார்கள். என்ன ஆச்சரியம்! இல்லத் துணைவியார் தொழுது கொண்டிருந்தார்கள். அவர்கள் அன்று ஆரம்பித்த தொழுகையை தங்கள் மௌத் வரை விடவில்லை.

இரண்டாவது பீராணியம்மாவைப் பற்றி சர்கார் கூறும் போது, அவர்களின் திருமணத்திற்கு முன்பே அல்லாஹ் எனக்கு அவர்களை கனவில் காட்டினான். முதல் மனைவி இறந்து விட்ட செய்தி கேட்டு இரயிலில் ஊர் திரும்பும் போது கனவில் அல்லாஹ் ஒரு பெண்ணைக் காட்டினான். திருமணத்திற்குப் பின் பார்த்த போது கனவில் கண்டது இவர்கள்தான் என்று விளங்கியது.

முதல் மனைவியின் தோழியாக இருந்த இவர்கள் முதல் மனைவி உடல்நிலை சரியில்லாத போது கூட இருந்து கவனித்துக் கொண்டார்கள். அவர்கள் குழந்தையை விட்டு விட்டு மரண மடைந்த போது உறவினர்கள் அந்தக் குழந்தையைப் பார்த்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக தோழியையே திருமணம் பேசி முடித்து விட்டார்கள். அப்போது அவர்களுக்கு வயது 11 தான். முதல் திருமணத்திற்கு செலவு 70 ரூபாய். இரண்டாவது திருமணத்திற்கு 30 ரூபாய். சர்கார் அவர்கள் கூறுவார்கள். ''ஆக 100 ரூபாயில் இரண்டு திருமணம் செய்த சிங்கம் நான்.''

பீராணியம்மாவின் பொறுமையும் சர்காருக்காக அவர்கள் செய்த தியாகமும் அளப்பரியதாகும். பசியிலும் பட்டினியிலும் சர்காரோடு ஒத்துழைத்து வாழ்ந்தார்கள். ''என்னிடம் அது வேண்டும் இது வேண்டும் என்று அவர்கள் ஒருபோதும் கேட்டதில்லை. ஒரு பொட்டு நகை கூட இன்றுவரை நான் அவர்களுக்கு வாங்கித் தந்ததில்லை. அந்த சீதேவியின் துஆ தான் அல்லாஹ் என்னை சந்தோஷமாக வாழ வைத்துள்ளான்'' என்று சர்கார் அவர்கள் கூறுவார்கள்.

ஒருமுறை சர்கார் அவர்கள் ரசூல் (ஸல்) அவர்கள் மனைவி மார்களுக்கு வீட்டு வேலைகளில் உதவியாக இருந்ததைப் பற்றி பேச்சு வந்த போது கூறினார்கள். ''எனக்கும் அந்த பாக்கியத்தை அல்லாஹ் கொடுத்தான் ஆரம்பத்தில் பீராணியம்மா மிகவும் சிறு வயதாக இருந்தார்கள். அத்துடன் குழந்தைகளும் வரிசையாக பெற்று வளர்க்கும் பொறுப்பும் இருந்தது. அவர்களுடைய துணிமணிகள் என்னுடைய மற்றும் குழந்தைகளின் துணிமணிகளை எடுத்துக் கொண்டு இரவில் ஊர் அடங்கிய பின் குளத்திற்குச் சென்று நான் துவைத்து விட்டு வருவேன்.''

பிற்காலத்தில் சார்காரிடம் தஃலீம் பெறுவதற்காக இறை காதலர்கள் தேடி வந்த காலங்களில் பீராணியம்மா சற்றும் முகம் சுளிப்பின்றி ஒவ்வொரு நேரமும் அனைவருக்கும் தங்கள் கைகளாலேயே உணவு சமைப்பார்கள். விருந்தாளிகள் உண வருந்திய பின் தான் வீட்டில் உள்ளவர்கள் உணவருந்துவார்கள். தங்கள் முதுமையிலும் கூட கால்கள் வீங்கி நடக்கவே சிரமம் ஏற்பட்ட காலங்களில் கூட விருந்தாளிகளுக்கு உணவு சமைக்கும் பொறுப்பை

தாங்களே செய்வார்கள். சர்கார் அவர்களோ தாங்களே கொண்டு வந்து கொண்டு வந்து பரிமாறுவார்கள். தங்களின் மாணவர்களுக்கும் தாங்களே சேவை செய்து அதில் மகிழ்வுறும் பெருந்தன்மை மிக்கவர் களாக சர்கார் அவர்கள் விளங்கி வந்தார்கள்.

ஒருமுறை பீராணியம்மா அவர்களுக்கு உடல்நலம் குன்றிய போது சர்கார் கிபுலா அவர்கள் ''யாஅல்லாஹ்! தங்கள் கைகளால் பல ஆயிரம் இறைகாதலர்களுக்கு உணவு சமைத்த கை இறைவா! அவர்களுக்கு நீ சுகமளிப்பாயாக!'' என்று துஆச் செய்தார்கள்.

சர்கார் அவர்களுக்கு முதல் பீராணியம்மா மூலம் ஒரு குழந்தை பிறந்தது. குழந்தைப் பருவத்திலேயே மரணமடைந்து விட்டது. இரண்டாவது பீராணியம்மாவுக்கு 10 குழந்தைகள் பிறந்தன. அதில் 5 குழந்தைகள் சிறு வயதிலேயே மரண மடைந்து விட்டன.

சோதனைகள் மூலம் தான் மனம் வலிமைப்படுகிறது. மனிதன் உயரிய அந்தஸ்துகளை அடைகிறான் என்பதனால் அல்லாஹு தஆலாவின் நாட்டப்படி சார்காரின் பிள்ளைகள் அடுத்தடுத்து மரணமடைந்த போதும் சர்கார் அவர்கள் இறைவனைப் பொருந்தியவர் களாக இருந்தார்கள். ''என் கைகளால் ஆறு குழந்தைகளை மண்ணில் வைத்திருக்கிறேன்'' என்று கூறுவார்கள்.

மீதி உள்ள 5 பிள்ளைகளும் மாணிக்கங்களாக, இறை காதலர் களாக, இறை காதலர்களுக்கு சேவை செய்தவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

மூத்தமகள் ''ஹலீமா'' அவர்கள் லால்பேட்டையிலே திரு மணமாகி சர்காருடனே இருந்து சேவை செய்து வந்தார்கள். பிறகு நான்கு ஆண் பிள்ளைகள்.

1. மௌலவி அல்ஹாஜ் பைஜானுல்லாஹ் ஷாஹ் அப்துல்லா சஜ்ஜாதா
2. மௌலவி அல்ஹாஜ் இர்பானுல்லாஹ் ஷாஹ் ரஹ்மத்துல்லாஹ் சஜ்ஜாதா
3. மௌலவி அல்ஹாஜ் நூரானீ ஷாஹ் நூருல்லாஹ் சஜ்ஜாதா
4. மௌலானா மஸ்தானீ ஷாஹ் உபைதுல்லாஹ் சஜ்ஜாதா

இவர்கள் நால்வரும் சர்காருடைய இறைஞான சேவையை தொடர்ந்து செய்து கொண்டுள்ளார்கள். அல்லாஹ் அவர்கள் அனைவருக்கும் நற்கூலி வழங்குவானாக!

சர்கார் தங்கள் தாயாரை மிகவும் நேசிக்கக் கூடியவர்களாக இருந்தார்கள். தாயாரின் இறுதிக்காலம் வரை தன்னுடனேயே வைத்திருந்து அவர்களுக்கு மிகவும் கண்ணும் கருத்துமாக பணிவிடை செய்து வந்தார்கள். சர்காரின் மடியிலேயே தான் தாயாரின் உயிர் பிரிந்தது. அல்லாஹ் எனக்கு எதுவெல்லாம் நிஃமத்துகள் செய்தானோ அவை யாவும் தாயாரின் துஆவில் தான் கொடுத்தான் என்று சர்கார் அடிக்கடி கூறுவார்கள்.

சர்காருக்கு 4 சகோதரர்களுக்கும் 3 சகோதரிகளும் இருந்தார்கள். தகப்பனாரின் மரணத்திற்குப்பின் 3 சகோதரிகளையும் தங்கள் பொறுப்பிலேயே சர்கார் திருமணம் செய்து வைத்து கவனித்து வந்தார்கள்..

சர்கார் கொஞ்சம்கூட ஓய்வின்றி இரவு பகலாக பல ஊர்களுக்கும், வெளிநாடுகளுக்கும் சென்று இறைக்காதலர்களுக்கு ஞானப்பாடங் களை கற்றுக் கொடுத்தார்கள். இரவில் இரண்டு மணி மூன்று மணிவரை தஃலீம்கள் நடைபெறும். தொடர்ந்து ஐந்து மணிநேரம் ஆறுமணி நேரம் வரை பேசுவார்கள். பிறகு சிறிது நேர ஓய்வுக்குப் பின் மீண்டும் பலமணி நேரங்கள் பேசுவார்கள்.

பஜ்ருக்குப் பின் உட்கார்ந்தால் இடையில் உணவு நேரங் கள், தொழுகை நேரங்கள் தவிர மீதி நேரங்களில் ஞான போதனைகள் செய்து கொண்டே இருப்பார்கள். பகலெல்லாம் பேசி இரவு வெகு நேரம் வரை பேசிக் கொண்டே இருப்பார்கள்.

பிற்காலங்களில் பகல் நேர தஃலீம்களைக் குறைத்துக் கொண்டார்கள். இரவு மஃரிபுக்குப் பின் வெளியில் வந்து தஃலீம் செய்ய ஆரம்பித்தால் இரவு 2 மணிக்குத் தான் எழுந்து செல்வார்கள். "நான் Night Queen இரவு ராணி" என்று நகைச்சுவையுடன் குறிப்பிடுவார்கள்.

தங்கள் ஷைகுடைய உத்தரவுப்படி லால்பேட்டையில் கான்காஹ் கட்டிய பின் 1988 முதல் ரமலானில் சில்லா ஏற்பாடு செய்தார்கள். பல ஊர்களில் இருந்தும் முரீதுகள் ரமலானில் அங்கு வந்து தங்கி சர்காரிடம் தஃலீம் பெற்று செல்வார்கள். இஷா தராவீஹுக்குப் பின் ஆரம்பித்தால் சஹர் வரை தஃலீம் செய்வார்கள். 27 நாட்களும்

இவ்வாறே நடக்கும். பஜ்ருக்குப் பின் தான் முரீதுகளுக்கு ஓய்வு கொடுப்பார்கள்.

வருடங்கள் செல்லச் செல்ல முரீதுகள் எண்ணிக்கை அதிகரிக்கவே ரமலானில் சில்லா வரும் முரீதுகளும் அதிகமாயினர். பிறை ஆரம்பத்தில் எண்பது நூறு பேர் இருப்பார்கள். பிறகு எண்ணிக்கை அதிகரித்து லைலத்துல் கத்ர் இரவு அன்று ஏறத் தாழ 700-800 முரீதுகள் வரை தஃலீமுக்கு வருவார்கள். அவர்கள் அனைவருக்கும் ஒவ்வொரு நாளும் ஸஹருக்கும், இஃப்தாருக்கும் விஷேசமாக ஏற்பாடு செய்வார்கள்.

ரமளான் ஷரீபில் இரவிலும் பகலிலும் ஒரு வினாடி கூட வீணாக்காமல் இறை சிந்தனையிலேயே கழிப்பதற்கு பயிற்சி அளிப்பார்கள்.

2003ம் வருடம் மே மாதம் (ஹிஜ்ரி 1424 ரபீவுல் அவ்வல் மாதம்) சர்காருக்கு உடல்நிலை பாதிக்கப்பட்டது. சென்னை மலர் ஹாஸ்பிடலிலும், பின்னர் அப்பல்லோ ஹாஸ்பிடலிலும் சிகிச்சை அளிக்கப்பட்டது. பின்னர் மந்தைவெளியில் உள்ள சர்கார் அவர்களின் இல்லத்தில் வைத்து தொடர்ந்து சிகிச்சை செய்யப்பட்டது.

கி.பி. 2005ம் ஆண்டு ஆகஸ்ட் 26ம் நாள் ஹிஜ்ரி 1426 ரஜப் பிறை 20 வெள்ளிக்கிழமை ஜும்ஆவுக்குப்பின் 3 1/2 மணிக்கு இவ்வுலகின் இருள் நீக்க வந்த பேரொளி தன் நேசனுடன் கலந்தது! அடுத்தநாள் சனிக்கிழமை அஸருக்குப் பின் ஜனாஜா தொழுகை நடைபெற்றது. சர்கார் தங்கள் வாழ்நாளெல்லாம் இறைஞான உபதேசம் செய்து வந்த லால்பேட்டை கான்காஹ்வின் நடுப்பகுதியில் எஜமானின் முபாரக்கான உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

அல்லாஹ் அவர்களின் சேவையை கியாமத் வரை தொடரச் செய்வானாக! ஆமீன்!

அல்லாஹ்வின் முன் நிற்கிறேன்

ரிவாயத் :

ஒருமுறை சர்கார் கூறினார்கள். ''நான் பைஅத் வாங்குவதற்கு முன்பு மதராஸில் குடியிருந்த சமயம் ஒருமுறை மஸ்ஜிதில் ஒரு முஸாபர் வயதான பெரியவரைப் பார்த்தேன். உணவு உண்ணுவதற்காக வீட்டிற்குக் கூட்டிச் சென்றேன். சாப்பிட்ட பின் எழுந்து செல்லும் போது கைகட்டி மரியாதையுடன் என் முன் நின்று பேசினார். எனக்கோ கோபம் வந்து விட்டது. ''ஒரு நேரம் சோறு போட்டவுடன் இப்படிக் கைகட்டி அல்லாஹ் முன் நிற்பது போல் என் முன் நிற்கிறீர்களே'' என்று சத்தம் போட்டேன். அவரோ நிதானமாக, ''நான் அல்லாஹ்வின் முன் தான் நிற்கிறேன் தம்பி, உன் முன் அல்ல'' என்றார். எனக்கோ கோபம் அதிகமாகி விட்டது. ''கொஞ்சம் விட்டால் என்னையே அல்லாஹ் என்று சொல்லி விடுவீர் போல் தெரிகிறதே!'' என்று பேசி அவரை அனுப்பி வைத்து விட்டேன். கொஞ்ச நாளுக்குப் பின் பைஅத் வாங்கி இறைஞானப் பாடங்களைப் பெற்ற பின் தான் அவர் சொன்னதுடைய அர்த்தம் என்ன என்று தெரிந்தது. பின்னர் அவரைத் தேடிப் பார்த்தேன். அவர் எங்கும் கிடைக்கவில்லை'' என்று கூறினார்கள்.

அதாவது ஒவ்வொரு சிருஷ்டியுடனும் அல்லாஹ் இருக்கிறான். அந்த சிருஷ்டிகளின் தோற்றத்தில் அல்லாஹ்வுடைய உஜூதை கவனிக்க வேண்டும். இதையே முஷாஹதா என்று தரீக்கத்தில் குறிப்பிடுவார்கள். அந்தப் பெரியவர் அந்த நிலையைத் தான் குறிப்பிட்டுள்ளார்.

அங்கிருக்கும் இறைவன்

ரிவாயத் :

ஒருமுறை சர்கார் கிபுலா அவர்கள் கூறினார்கள். நான் நூரி நாயகத்திடம் பைஅத் செய்வதற்கு முன் நக்ஷ பந்திய்யா தரீக்காவில் ஒரு ஷைகிடம் பைஅத் செய்திருந்தேன். அவர்களும் பெரிய மகானாக

இருந்தார்கள். நான் ஒருமுறை சிங்கப்பூர் செல்வதற்காக விசா எடுத்துக் கொண்டு அவர்களிடம் சென்று துஆச் செய்யக் கூறி நின்றேன். அப்போது அவர்கள், ''அல்ஹம்து லில்லாஹ்! சந்தோஷமாகவே போய் வருங்கள். அங்கிருக்கும் அல்லாஹ்வுக்கு என் ஸலாம் கூறுங்கள்'' என்று கூறினார். எனக்கோ ஒன்றும் விளங்கவில்லை. ''என்ன இது? அங்கு வேறு அல்லாஹ்; இங்கு வேறு அல்லாஹ்வா? எல்லாம் ஒரு அல்லாஹ் தானே. இவர்கள் ஏன் இப்படிச் சொல்கிறார்கள்? என்று தெரிய வில்லையே'' என்று மனதில் நினைத்துக் கொண்டு ''ஷைகு அவர்களே! இங்கிருக்கும் அல்லாஹ் தானே அங்கும் இருக்கிறான்'' என்று கேட்டேன். அதற்கு அவர்கள் ''அப்படியானால் அவன் இங்கே வைத்து ரிஜ்க் தரமாட்டானா? பின் எதற்கு சிங்கப்பூர் செல்கிறீர்கள்?'' என்று கேட்டார்கள். அதோடு வெளிநாடு செல்லும் ஆசையை விட்டுவிட்டேன்'' என்று கூறினார்கள்.

(அதாவது வெளிநாடு செல்வது தவறு இல்லை. ஆனால் இங்கு அவர்களைக் கொண்டு பெரிய தீனுடைய வேலை நடைபெற இருக்கிறது என்பதை கஷ்பின் மூலம் அறிந்து கொண்ட ஷைகு அவர்கள் அவ்வாறு தடுத்திருக்கிறார்கள். ஷைகின் உத்தரவுக்குக் கட்டுப்பட்டு நடந்ததன் பரக்கத்துதான் பின்னாளில் அவர்களுக்கு அல்லாஹ் பெருவாழ்வைக் கொடுத்தான்.)

விளையும் பயிர்

ரிவாயத் :

ஒருமுறை சர்கார் கிபுலா அவர்கள் கூறினார்கள். ''நான் சிறு வயதில் திருச்சி யதீம்கானாவில் படித்துக் கொண்டிருந்தேன். அப்போது பள்ளிக்கூடத்திற்கும் நாங்கள் தங்கியிருந்த இடத்திற்கும் ஏறத்தாழ ஒரு கிலோ மீட்டர் இடைவெளி இருந்தது. பள்ளி விட்டதும் பையை எடுத்துக் கொண்டு நடந்து வருவோம். என்னுடைய உஸ்தாது முஹம்மது சுலைமான் பாகவி அவர்கள் சைக்கிளில் வருவார்கள். எப்போதாவது அவர்கள் சைக்கிளில் வரும்போது நான் முன்னால் நடந்து செல்வதைப் பார்க்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டால் உடனே சைக்கிளில் இருந்து இறங்கி நடந்து வர ஆரம்பித்து

விடுவார்கள். சக ஆசிரியர்கள் அவர் களிடம் ஏன் இப்படி ஒரு சின்னப் பையனுக்கு இவ்வளவு மரியாதை செய்கிறீர்கள்? என்று கேட்பார்கள். அதற்கு ''அந்தச் சிறுவருடைய முகத்தில் நூர் பிரகாசிக்கிறது. எதிர்காலத்தில் அவர் ஜமானாவுடைய குதுபாக விளங்குவார்'' என்று கூறுவார்கள். இதைக் கூறிவிட்டு சர்கார் அவர்கள் பணிவுடன் கூறுவார்கள். ''எனக்கு இன்றுவரையும் குத்புக்கு தேயா தோயா என்று கூட தெரியாது. நான் அந்த வார்த்தைக்குத் தகுதியுடையவன் அல்ல. ஆனால் முகத்தைப் பார்த்து குறிப்பை அறிந்து மரியாதை செய்த அந்த உஸ்தாது எவ்வளவு பெரிய வலீயாக இருப்பார் என்று நினைத்துப் பார்க்கிறேன்.''

ரிவாயத் :

சர்கார் அவர்கள் கூறினார்கள். ''நான் சிறுவயதில் அம்மாவுக்கு எல்லா வீட்டு வேலையும் செய்து கொடுப்பேன். அம்மா என்னிடம், ''நீதான் எனக்கு பொம்பளைப் பிள்ளை'' என்று கூறுவார்கள். நான் அதை நிஜம் என்றே நினைத்துக் கொண்டேன். சிறுவர்கள் யாரும் என்னிடம், ''நீ பொம்பளைப் பிள்ளை இல்லை. ஆம்பிளைப் பிள்ளை'' என்று கூறினால் ''போங்கப்பா உங்களுக்கு நிறைய தெரியுமா? என் அம்மாவுக்கு நிறைய தெரியுமா? அவர்களே என்னை பொம்பளைப் பிள்ளை என்று கூறுகிறார்கள். அப்படியானால் நான் பொம்பளைப் பிள்ளை தான்'' என்று கூறுவேன்.''

அபுல் பயான்

ரிவாயத் :

சர்கார் அவர்கள் ஆரம்பத்தில் தப்லீகில் 19 வருடங்கள் கடும் உழைப்புச் செய்துள்ளார்கள். தமிழகத்தில் சர்கார் கால் வைக்காத ஊர்களே இல்லை எனலாம். ''பஷீர் மௌலானா'' என்ற பெயரை அறியாதவர்களே இல்லை என்ற அளவுக்கு அவர்கள் பிரசங்கங்கள் தமிழகமெங்கும் எதிரோலித்தது. சர்கார் அவர்களின் பேச்சில் நெருப்புப் பொறி பறப்பதைப் போல் ஆணித்தரமாகப் பேசுவார்கள். அவர்கள் பேசுகிறார்கள் என்றால் மக்கள் தூரதூரமான இடங்களில்

இருந்தெல்லாம் வந்து பயான் கேட்டுச் செல்வார்கள். பெரிய பெரிய உலமாக்கள் எல்லாம் கலந்து கொள்ளும் மாநாடுகளின் வால்போஸ்டர்களில் கூட ''விழாவில் பஷீர் மௌலானா மற்றும் பல உலமாக்கள் பேசுவார்கள்'' என்று அச்சிடப்பட்டிருக்கும். அவர்களின் பெயர் இருந்தால் கூட்டம் அலைமோதும். சில சமயங்களில் மக்கள் ''பஷீர் மௌலானா எப்போது பேசுவார்கள்? அவர்களைப் பேசச் சொல்லுங்கள்'' என்று நச்சரித்ததன் காரணமாக கூட்ட ஏற்பாட்டாளர் கள் சங்கடப்படும்படியும் நடந்திருக்கிறது.

ரிவாயத் :

லால்பேட்டை மன்பவுல் அன்வார் மத்ரஸாவின் நாஜிர் அல்லாமா ஜியாவுத்தீன் அமானீ ஹஜ்ரத் கிபுலா அவர்கள் தான் சர்காருக்கு அபுல் பயான் ''சொற்பொழிவின் தந்தை'' என்று பெயர் வைத்தார்கள். இதுபற்றி சர்கார் அவர்களே ஒரு முறை கூறிப்பிடும் போது சொன்னார் கள். ''அமானீ ஹஜ்ரத் கிபுலாவிடம் சிலர் கேட்டார்கள்.எத்தனையோ பெரிய பெரிய உலமாக்கள் வாயிஜ்கள் இருக்கிறார்கள். அவர்களை எல்லாம் விட்டு விட்டு பஷீர் மௌலானாவுக்கு ''அபுல் பயான்'' என்ற பெயர் கொடுத்தது ஏன்?'' அதற்கு அமானீ ஹஜ்ரத் கிபுலா அவர்கள் கூறினார்கள். ''அவர் நான்கு பேருக்கு மத்தியில் அமர்ந்து ஏதோ ஒன்றின் சம்பந்தமாக அப்படியே பேச ஆரம்பித்தால் அதுவே ஒரு அற்புதமான பயானாக ஆகிவிடுகிறது. எந்தக் குறிப்பும் எடுக்காமல் அப்படியே அவர் பேசும் பேச்சின் ஒவ்வொரு கருத்தும் மிகவும் ஆழ்ந்த க்ருத்தாக இருக்கின்றன. அவை ஒவ்வொன்றையும் நாம் தனி பயானாக பல நாட்கள் பேசலாம் போல் இருக்கிறது. அதனால் தான் அபுல் பயான் என்று பெயர் வைத்தேன்'' என்றார்கள்.

நேரம் ஒரு அருட்கொடை

ரிவாயத் :

சர்கார் கூறினார்கள். ''நான்கு பேர்களைக் கண்டால் 'நஹ்மதுஹூ அநுஸல்லி அலா' என்று ஆரம்பித்து விட வேண்டும். மக்கள் கூடும் இடத்தை கனீமத்தாக விளங்க வேண்டும். நேரத்தை வீணடிக்க விடக்

கூடாது. பெருமானார் (ஸல்) அவர்கள் தெரு முச்சந்திகளிலும் சந்தைகளிலும் நின்று பேசினார்கள். என்னுடைய எஜமான் சர்கார் நூரி நாயகம் ஒவ்வொரு வருடமும் நாகூர் உரூசுக்கு வருவார்கள். அவர்கள் சொல்லுவார்கள். ''நான் இந்த உரூசை வேடிக்கை பார்க்க வரவில்லை. இவ்வளவு பெரிய கூட்டத்தை நாம் கூட்டுவதாக இருந்தால் எவ்வளவு செலவு செய்ய வேண்டி ஏற்படும். நாகூர் எஜமானின் பெயரால் அவர்களாகவே கூடுகிறார்கள். இந்த நேரத்தில் அல்லாஹ்வைப் பற்றி அவர்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டும் என்று தான் வருகிறேன்'' என்றார்கள்.''

ரிவாயத் :

சர்கார் அவர்கள் وقت کو غنیمت سمجھو என்று அடிக்கடி கூறுவார்கள். வீட்டிலிருந்து வெளியே வந்தவுடன் அமர்ந்திருக்கும் முரீதுகளிடம் இதுவரை என்ன செய்து கொண்டிருந்தீர்கள்? என்று கேட்பார்கள். தஃலீம் முதாகிரா நடைபெற்றது என்று தெரிந்தால் மிகவும் மகிழ்ச்சி அடைவார்கள். சும்மாதான் இருந்தார்கள் என்று தெரிந்தால் வருத்தம் தெரிவிப்பார்கள். தன்னுடைய கலீபாக்கள் யாரையும் சர்கார் பயான் செய்யக் கூறினால் அவர்கள் நீண்ட முன்னுரை ஆற்றினால் சர்கார் அவர்கள் கூறுவார்கள். ''கிடைக்கும் நேரமோ மிகவும் குறுகிய நேரம். ஹம்து ஸலவாத்திற்கே இவ்வளவு நேரம் ஆக்கி விட்டீர்களே! சுருக்கமாக நஹ்மதுஹு வநுஸல்லி அலா ரசூலிஹில் கரீம் என்று பயானை விஷயத்தை ஆரம்பித்து விட வேண்டியது தானே'' என்பார்கள். சில நேரங்களில் பேசுபவர் ஆரம்பிக்கும் போது ''ஸல்லூ அலன்னபீ'' என்று கூறினால் மக்கள் மூன்று முறை ஸலவாத்து கூறுகிறார்கள். ஒருமுறை சர்கார் கூறினார்கள். ''நபி (ஸல்) அவர்களின் மீது ஸலவாத்து கூறுவது மிகவும் சிறப்பானது தான். தனிமையில் எவ்வளவு வேண்டுமானாலும் ஓதலாம். ஆனால் நேரமோ இப்போது மிகவும் கொஞ்சமாக இருக்கிறது. இங்கே ஸல்லூ அலன்னபீ என்று கூறியவுடன் அவர் (மூன்று முறை) என்று கூறவில்லை. எனவே ஒரு முறை சொன்னால் போதும். சுருக்கமான நேரத்தில் விஷயத்தை விளங்க வைக்க வேண்டும்'' என்று கூறினார்கள்.

சொற்பொழிவு பற்றி

ரிவாயத் :

சர்கார் தங்கள் கலீபாக்கள் யாரையும் பேசச் சொல்லி அவர்கள் எழுந்து நின்று பேச்சு சரியாக வராமல் தடுமாறினால் சர்கார் கூறுவார்கள். ''பேச்சு வந்தால் பேசுங்கள். நீங்களாக வரட்டுத் தனமாக இழுத்துக் கொண்டிருக்கக் கூடாது. தஜல்லி ஆகும் போது அதைத் தடுக்கவும் கூடாது'' என்பார்கள்.

ரிவாயத் :

சர்கார் அவர்கள் பெரும்பாலும் எழுந்து நின்று பேசுவதைத் தான் விரும்புவார்கள். ஒருமுறை கூறினார்கள். ''ரசூல் (ஸல்) அவர்களை அல்லாஹ் கூறும் போது وَتَرَكُوْكَ قَآئِمًا ط நீங்கள் நின்று பயான் செய்யும் நிலையில் உங்களை விட்டு விட்டு சென்று விட்டார்கள் என்று கூறுகிறான். எனவே நின்று பேசுவதே ஏற்றமானது'' என்றார்கள்.

ரிவாயத் :

சர்கார் கூறினார்கள். ''ஒருமுறை நானும் ஜுஹூரி ஷாஹ் கிப்லா அவர்களும் சென்னை பெரியமேடு மஸ்ஜிதில் பயான் செய்வதாற்காகச் சென்றோம். ஜும்ஆ தொழுகை முடிந்தவுடன் என்னுடைய பயான் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. ஜும்ஆவுக்கு மிகப்பெரும் கூட்டம் வந்திருந்தது. ஜும்ஆ முடிந்தவுடன் கூட்டம் வேகமாகக் களைய ஆரம்பித்தது. மிகுதம் பேர் சென்று விட்டார்கள். நான் பயான் செய்ய ஆரம்பித்து ஹம்து ஸலாத்து சொல்லி நிற்கிறேன். ஒரு வார்த்தை கூட வாயில் இருந்து வெளி வரவில்லை. ஜனங்கள் எல்லோரும் என் முகத்தையே பார்க்கிறார்கள். எனக்கோ வியர்த்து வியர்த்து கொட்டுகிறது. எனினும் பேச்சு வரவில்லை. எனக்கு ஒன்றுமே வரவில்லை என்று கூறிவிட்டு முடித்துக் கொண்டு வந்து விட்டேன். அப்போது ஜுஹூரி ஷாஹ் கிப்லா அவர்கள் கூறினார்கள். ''என்னுடைய ஷைகு நூரி நாயகம் கூறிய செய்தி ஒன்றை இன்று நான் உண்மையில் உணர்ந்து கொண்டேன். நூரி நாயகம் கூறுவார்கள். ''ஆரிப் என்பவர் ரேடியோ

மாதிரி. ஸ்டேஷனில் என்ன ஒளிபரப்பாகிறதோ அதையே சொல்லும். தானாக எதையும் சொல்லாது. அங்கிருந்து எதுவும் ஒளிபரப்பவில்லை எனில் இதுவும் சொல்லாது. ஆனால் ஆலிம்கள் டேப்ரிகார்டர் மாதிரி. எது பதிவாகி உள்ளதோ அதையே சொல்லும். புதிதாக எதையும் சொல்லாது. திரும்பத் திரும்ப போட்டாலும் பதிவானதையே சொல்லிக் கொண்டிருக்கும்'' என்று நூரி நாயகம் கூறியதை இன்று அப்படியே கண்கூடாகப் பார்த்தேன்.

ரிவாயத் :

சர்கார் கூறினார்கள். ''பேச ஆரம்பிக்கும் முன் யாஅல்லாஹ்! இந்த மக்களுக்கு எது பிரயோஜனம் தருமோ அத்தகு செய்திகளை என் நாவின் மூலம் வெளியாக்குவாயாக! என்று துஆச் செய்து விட்டுப் பேச வேண்டும். அப்போது அல்லாஹுதஆலா அவர்களுக்குத் தகுந்த செய்திகளை வெளியாக்குவான்.

ரிவாயத் :

சர்கார் கலீபாக்களைப் பேசச் சொன்னால் ஆரம்பிக்கும் முன் சில நேரங்களில் இவ்வாறு கூறுவார்கள். ''நீங்கள் மைக்காக ஆகி விடுங்கள். அல்லாஹ் தான் கலீம். கலாம் அவனுக்கே சொந்தமானது. நமது அசல் தன்மை ஊமை. ஒரு ஊமையும் பேசக்கூடியவனும் மேடைக்குச் சென்றால் ஊமை தான் ஒதுங்கிக் கொண்டு பேச்சாளனைப் பேச வைப்பது தான் மரியாதை. அதுபோல் நீங்கள் ஒதுங்கிக் கொள்ளுங்கள். அவனைப் பேசச் செய்யுங்கள்.''

ரிவாயத் :

சர்கார் கூறினார்கள். ''குதுபு நாயகம் கூறினார்கள்

لاَ كَلاَمَ حَتّٰى تَرَى اللهَ عَزَّ وَجَلَّ

அல்லாஹ்வைப் பார்க்காதவரை உனக்கு பயான் செய்ய அனுமதியில்லை. இந்த அத்தனை பேரில் இருந்தும் அவன் ஒருவன் தான் என் பயானைக் கேட்கிறான் என்ற உணர்வுடன் பேச வேண்டும். لاکھ میں وہ ایک ہے முன்னால் லட்சம் பேர் இருந்தாலும் அவன் ஒருவன் தான் கேட்கிறான். முன்னால் ஒருத்தர் இருந்தாலும் அவன் ஒருவன் தான் கேட்கிறான்.

ஒரு சூபி இருந்தார்கள். ஒருநாள் பெரும் கூட்டத்தில் உரையாற்றினார்கள். கூட்டம் முடிந்தது. ஒருவர் ஓடோடி வந்தார். ''எஜமானே உங்கள் பயான் என்று தெரியாமல் போய் விட்டது. கேள்விப்பட்டு ஓடி வந்தேன். அதற்குள் பயான் முடிந்து விட்டதே'' என்று சொல்லி அழுதார். எஜமான் அவருக்காக மீண்டும் பயானை அதே போல் கொஞ்சம் கூட சுருக்காமல் மீண்டும் செய்து முடித்தார்கள். ஜனங்கள் கேட்டபோது சொன்னார்கள். அந்த லட்சம் பேரிலும் நான் ஒருவனைத்தான் பார்த் தேன். இந்த ஒருவரிலும் அந்த ஒருவனைத்தான் பார்த்தேன்'' என்று கூறினார்கள்.

முஸ்லிம் லீக் மாநாட்டில்

ரிவாயத் :

காயிதே மில்லத் (ரஹ்) அவர்கள் சர்கார் கிப்லா அவர்கள் மீது மிகுந்த அன்பும் மரியாதையும் வைத்திருந்தார்கள். லால்பேட்டையில் முஸ்லிம் லீக்கின் மாநிலம் தழுவிய மாநாடு நடைபெற்ற போது மிகப்பெரும் மாநாட்டுப் பந்தல் போடப்பட்டிருந்தது. பத்தாயிரத் துக்கும் அதிகமான மக்கள் கலந்து கொண்டனர். அதில் சர்கார் நாயகம் உரை நிகழ்த்திய போது ''நாம் உண்மை முஃமின்களாக இருந்தால் நாம் தான் மிகவும் உயர்ந்தவர்கள்'' என்று அல்லாஹ் வாக்குறுதி யளிக்கிறான்.

وَاَنْتُمُ الْاَعْلَوْنَ اِنْ كُنْتُمْ مُّؤْمِنِيْنَ ۝

ஆனால் நாம் இஸ்லாத்தின் உயர்வுகளை - கடமைகளை நாமே மதிக்காமல் இருக்கிறோம். மாநாட்டுத் திடலில் பத்தாயிரம் மக்கள் இருக்கிறோம். ஆனால் தொழுகை நேரத்தில் சப்பில் நூறு, இருநூறு பேர்கள் மட்டுமே இருக்கிறார்கள். நமது மார்க்கத்தை நாமே கைவிட்டு விட்டோம். اس گھر کو آگ لگی اس گھر کے چراغ سے அரசாங்கம் நம்மை தொழுக் கூடாது என்று சட்டம் போட்டதா? மஸ்ஜிதுக்கு செல்லக் கூடாது. நோன்பு வைக்கக் கூடாது. ஹஜ் செய்யக் கூடாது என்று சட்டம் போட்டதா? தாடி வைக்கக் கூடாது என்று தடுத்ததா? அரசாங்கம் நாம் இஸ்லாமிய ஒழுக்கங்களை கடைபிடிப்பதை தடுக்கவில்லை. ஆனால் நாம் தான் அதை விட்டு விடுகிறோம்.

இந்த வீட்டிற்கு நெருப்பு பற்றியது இந்த வீட்டின் விளக்கினால் தான்.

இவ்வாறு சர்கார் மிகவும் ஆணித்தரமாகப் பேசிக் கொண்டிருந்த போது மேடையில் இருந்த இரண்டு பேர் ''தப்லீக் மாநாட்டில் பேச வேண்டியதை எல்லாம் அரசியல் மேடையில் பேசறாங்கப்பா'' என்று குசு குசுவென்று பேசிக் கொண்டார்கள். இது சர்கார் காதிலும் விழுந்து விட்டது. சர்கார் அப்படியே திரும்பி அந்த இரண்டு பேரையும் பார்த்தார்கள். அவ்வளவுதான். சர்காரின் தோற்றம் கம்பீரமாக ஆஜானுபாகுவாக இருக்கும். அவர்களின் இளமையில் ஒவ்வொரு கையும் தொடையளவு மொத்தமாக இருக்கும். ஆறடி உயரமும் கனத்த சரீரமும் கம்பீரமாக தாடியும் தலைப்பாகையும் இறைஞானம் தவழும் கண்களும் அவ்விருவரையும் அதிர்ச்சியடையச் செய்தன. அப்படியே பின்னால் நகர நினைத்த அவர்கள் இரண்டு பேருமே உட்கார்ந்திருந்த நாற்காலியுடன் பின்னால் சாய்ந்து விழுந்து விட்டார்கள். ஆனால் மேடையில் இருந்த காயிதே மில்லத் முஹம்மத் இஸ்மாயில் (ரஹ்) அவர்கள் மட்டும் சர்காருக்கு ஊக்கம் கொடுத்தவர் களாக, اور بولو! اچھا بولو! ''இன்னும் சொல்லுங்கள். நன்றாகச் சொல்லுங் கள்'' என்று கூறிக் கொண்டே இருந்தார்கள்.'' இந்த சம்பவத்தை நினைவுகூரும் போதெல்லாம் சர்கார் கிப்லா அவர்கள் ''மார்க்கத்தில் மிகவும் பற்றுடன் இருந்ததால் தான் தமிழ்நாட்டில் மட்டுமல்ல இந்திய அளவிலும் அல்லாஹு தஆலா காயிதே மில்லத் அவர்களுக்கு கண்ணியம் கொடுத்திருந்தான். அவர்கள் தீனை மதிக்கக்கூடியவர் களாக இருந்தார்கள்'' என்று கூறுவார்கள்.

இந்த சம்பவத்தையும் சர்கார் கூறினார்கள். ''முஸ்லிம்களுக்கும் தேசப்பற்றும் மண்ணின் நேசமும் கிடையாது'' என்று பார்லிமென்டில் ஒரு M.P. பேசிய போது எழுந்து நின்ற காயிதே மில்லத் ''உங்களுக்குத் தான் கிடையாது. நீங்கள் செத்தால் பிணத்தை எரித்து வங்கக்கடலில் கரைத்து விடுகிறீர்கள். நாங்களோ வாழ்ந்தாலும் இங்குதான்; செத்தாலும் இங்குதான் என்று உடலை இந்த மண்ணில்தான் அடக்கம் செய்கிறோம்'' என்று கூறினார். 540 M.P.களும் எழுந்து நின்று கைதட்டிப் பாராட்டினார்கள்.

அபாய சங்கு

ரிவாயத் :

சர்காரின் இளமைக்காலப் பேச்சுக்கள் வீராவேசமாக நெருப்புப் பறக்கும் பேச்சுக்களாக இருக்கும். எந்தத் தவறையும் யாருக்கும் பயப்படாமல் கண்டித்துப் பேசுவார்கள். அதனால் சர்காருக்கு ''அபாயச் சங்கு'' என்று ஒரு பட்டப் பெயரும் கூறியதுண்டு.

ரிவாயத் :

ஒருமுறை தஞ்சாவூரில் பெரிய கூட்டம் ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. சர்காருக்கு முன்னால் பேசியவர் டார்பிடோ ''ஏவுகணைப் பேச்சாளர்'' என்று அறிமுகம் செய்து வைக்கப்பட்டார். அவர் எழுந்து உலமாக்களை தரக்குறைவாக கேலியாக கிண்டலாகப் பேசிவிட்டு அமர்ந்தார். அடுத்து சர்காரைப் பேச அழைக்கும் போது எப்படி அழைப்பது என்று அறிவிப்பாளர் சர்காரிடம் கேட்டபோது சர்கார், ''அணுகுண்டு பஷீர் மௌலானா'' என்று கூறுங்கள். அதுவும் ஹிரோஷமா நாகசாகியில் போட்டார்களே அந்த அணுகுண்டு என்று சொல்லுங்கள் என்று கூறினார்கள். அவரும் அவ்வாறே அறிவித்தார். சர்கார் அன்று பேசியது உண்மையில் அணுகுண்டு வெடிப்பாகவே அமைந்தது. உலமாக்களின் உயர்வையும் அவர்களை கண்ணியப் படுத்த வேண்டிய அவசியத்தையும் அவர்களை உதாசீனம் செய்தால் ஏற்படும் தண்டனைகளையும் தெள்ளத் தெளிவாக உரையாற்றி னார்கள். அதோடு அந்தப் பேச்சாளர் திருந்தி தௌபா செய்து விட்டார். பின்னொரு காலத்தில் அந்தப் பேச்சாளர் ''பஷீர் மௌலானா அவர்கள் என் ஈமானையே காப்பாற்றி விட்டார்கள். என்னை அழிவில் இருந்து காப்பாற்றி விட்டார்கள்'' என்று நன்றியுடன் நினைவுகூர்ந்தார்.

பண்பாளருக்கு உதாரணம்

ரிவாயத் :

கீழக்கரையில் ஒரு கல்லூரி நிறைவு விழா நடைபெற்றது. அச்சமயம் சர்கார் அந்த ஊரில் இருந்ததால் எதிர்பாராத விதமாக கல்லூரியின் தாளாளர் வந்து ''தாங்களும் சிறிது நேரம் உரையாற்ற

வேண்டும்'' என்று வற்புறுத்தி அழைத்து வந்து விட்டார். விழாவில் சிறப்புப் பேச்சாளராக அழைக்கப்பட்டிருந்த பேச்சாளருக்கு இது பிடிக்கவில்லை. அவர் சர்கார் பேசி முடித்த பின் நாம் மேடைக்குச் செல்லலாம் என்று இருந்து விட்டார். உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் சர்காரின் பேச்சுக்கு அங்கிருந்த மாணவர்கள் அனைவரும் அடிமையாகிப் போனார்கள்.

Search Allah, Reach Allah, Love Allah, Live with Allah, Sacrifice your self for Allah, Un less you search you could not reach, Un less you reach you could not love, Un less you love you could not live with hime, Un less you live with hime, You could not sacrifice your self for Allah என்ற தலைப்பில் சர்கார் ஆற்றிய உரையில் எல்லோரும் இறைக்காதலில் மூழ்கி விட்டார்கள். பயான் முடிந்த பின் உடல் நிலை சரியில்லாததால் சென்று வருவதாக கூறி சர்கார் கிளம்பிய போது மாணவர் அனைவரும் சர்காரைப் பின் தொடர்ந்து செல்ல ஆரம்பித்து விட்டார்கள். அடுத்து பேச வந்த பேச்சாளருக்கோ அதிர்ச்சி. அவர் பேச ஆரம்பித்தவுடன் கூறினார். ''நான் எத்தனையோ பிரமாண்டமான கூட்டங்களில் பேசி இருக் கிறேன். என் வாழ்நாளில் முதன்முறையாக காலி சேர்களைப் பார்த்து பேச நேர்ந்தது இன்றுதான்'' என்றார். காரில் ஏறிவிட்ட சர்கார் அவர்களுக்கு இந்த வார்த்தை காதில் விழுந்ததும் உடனடியாக காரை விட்டு இறங்கி வந்து மேடையில் அமர்ந்து கொண்டார்கள். சர்கார் மீண்டும் பேசு வார்கள் என்ற எண்ணத்தில் எல்லா மாணவர்களும் வந்து மீண்டும் அமர்ந்து கொண்டார்கள். பேச்சாளர் பேசி முடிக்கும் வரை சர்கார் பொறுமையாக கவனமுடன் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தார்கள். இறுதியில் அவர் சொன்னார். ''நான் அவர்களின் பேச்சை அலட்சியம் செய்து மேடைக்கு வராமல் இருந்தேன். அவர்களோ என் பேச்சை கண்ணியப்படுத்த வேண்டும் என்பதற்காக தன் உடல்நிலையையும் பாராமல் இவ்வளவு நேரம் அமர்ந்திருந்தார்கள். இப்படிப்பட்ட ஒரு பண்பாளரை என் வாழ்நாளில் நான் கண்டதேயில்லை.''

சிங்கப்பூரிலே

ரிவாயத் :

சர்கார் நாயகம் 1965ல் சிங்கப்பூர் சென்றிருந்த போது அங்கு ஒரு மஸ்ஜிதில் பயான் செய்தார்கள். முஸ்லிம்கள் நடத்தும் சூப்பர்

மார்கெட்டிலும் டின்களில் அடைக்கப்பட்ட பன்றிக் கறியை விற்பது குறித்து கடுமையாக சாடிப் பேசினார்கள். எல்லாப் பொருட்களும் ஹலால் தானே. இந்த ஒரு பொருள் மட்டும் ஹராமாக இருந்தால் என்ன?'' என்று நினைக்கிறார்கள்.

ஒரு மனைவி கணவனிடம், வருடக்கணக்காக உங்களோடு தானே படுக்கிறேன். இன்று ஒருநாள் மட்டும் எதிர் வீட்டுக்காரனோடு படுத்துக் கொள்கிறேன் என்று கூறினால் எந்த ரோஷமுள்ள புருஷனாவது அதைப் பொறுத்துக் கொள்வானா?'' என்று கேட்டார்கள்.

பயான் முடித்து ஒரு ஓட்டலுக்கு சாப்பிடச் சென்றபோது வேறு டேபிளில் இருந்த இருவர் பேசிக் கொண்டனர். ''நம்மிடம் பிச்சை வாங்க வந்த ஆலிம்சாக்கள் நம்மையே எதிர்க்கிறார்களே'' என்ற ரீதியில் பேசிக் கொண்டனர். இது சர்கார் காதிலும் விழுந்தது. அடுத்த நாள் சர்கார் பயான் மிகவும் காரசாரமாக இருந்தது. நேற்று பேசிக் கொண்ட அந்த இரண்டு பேரும் பயானில் முன்னாடி உட்கார்ந் திருந்தார்கள். சர்கார் பேசினார்கள். ''என்னை பிச்சை வாங்க வந்தவன் என்பதாக சிலர் நினைக்கிறார்கள். இங்கு வந்த இத்தனை நாட்களில் நான் யார் கடைவாசலிலும் எதுவும் கேட்டு ஏறியுள்ளேனா? அல்லது யார் வீட்டிற்காவது சென்று எதுவும் கோரிக்கை வைத்துள்ளேனா? யாரிடத்திலாவது ஏதாவது கேட்டேன் என்று யாராவது சொல்லுங்கள் பார்க்கலாம். அப்படி நான் யார் வாசலுக்காவது வந்து எதையாவது கேட்டதாக நிரூபித்து விட்டால் நான் இனிமேல் பயான் பேசுவதையே நிறுத்திக் கொள்கிறேன். மாறாக உங்களில் எத்தனை பிச்சைக் காரர்கள் இருக்கிறார்கள் என்பதை நிரூபிக்க என்னால் முடியும். வருடம் ஒருமுறை சொத்தில் 2½ சதவீதம் ஜகாத் கொடுக்க வேண்டும். அந்தப் பணம் ஏழைகளுக்கும், பிச்சைக்காரர்களுக்கும் சொந்தமானது. அதை முறைப்படி கொடுக்காமல் அமுக்கி வைத்திருக்கிறார்களே அவர்கள் எல்லாம் யார்? பிச்சைக்காரர் களிடத்தில் பிச்சை எடுத்தவர்கள் அல்லவா? பிச்சைக்காரர்களிடம் பிச்சை எடுத்த பிச்சைக்காரப் பயல்களுக்கு என்னைப் பிச்சைக்காரன் என்று கூற என்ன தைரியம்?

இவ்வாறு அவர்கள் கூறிய ஒரு ''பிச்சைக்காரன்'' வார்த்தைக்கு நூறு பிச்சைக்காரன் பட்டத்தை சர்கார் கொடுத்தார்கள்.

ஒற்றுமை

ரிவாயத் :

1950 களின் ஆரம்பத்தில் லால்பேட்டையில் ஊர் மக்கள் இரண்டு கோஷ்டிகளாகப் பிரிந்து பெரும் மோதல்கள் நடந்து கொண்டிருந்தன. அப்போது மத்ரஸா மன்பவுல் அன்வாரில் நாஜிராக இருந்த அல்லாமா அமானீ ஹஜ்ரத் கிப்லா அவர்களும் மற்றும் பலரும் எவ்வளவு முயற்சி செய்தும் மக்களை ஒன்று சேர்க்க முடியவில்லை. அமானி ஹஜ்ரத் அவர்கள் தான் சர்காரை பயான் செய்ய வரும்படி அழைத்தார்கள். சர்கார் அங்கே ஒரே ஒரு நாள் பயான் செய்தார்கள். மக்களெல்லாம் அழுது தௌபா செய்து ஒருவருக்கொருவர் முஸாபஹா செய்து பகை மறந்து ஒன்றானார்கள். இது கண்டு மகிழ்ந்த அமானீ ஹஜ்ரத் கிப்லா தாங்கள் இங்கேயே இருந்து மேலும் பல பயான்கள் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். ஒவ்வொரு தெருவிலும் மூன்று மூன்று நாட்கள் பயான் நடைபெற்றது. ஊரே திரண்டு வந்து சர்கார் பயானைக் கேட்டு பயன் அடைந்தார்கள். அமானீ ஹஜ்ரத் கிப்லா அவர்கள் மதரஸாவிலேயே ரூம் கொடுத்து சர்காரை தங்க வைத்துக் கொண்டார்கள். சர்கார் பயான் மக்கள் அனைவருக்கும் மிகவும் பயனுள்ளதாக இருப் பதைக் கண்ட அமானீ ஹஜ்ரத் அவர்கள் ''நீங்கள் எங்கள் மதரஸாவில் ஸஃபீராக இருந்து சுற்றுவட்டாரம் எங்கும் சென்று பயான் செய்து வரவேண்டும். அதற்காக மாதச் சம்பளம் கொடுத்து உங்களை மதரஸாவில் சேர்த்துக் கொள்கிறோம்'' என்று கேட்டுக் கொண்டார்கள். அவர்களின் விருப்பத்தை மறுக்க மனமின்றி சர்காரும் அவ்வாறே பொறுப்பேற்றுக் கொண்டார்கள்.

அதன் பின் பட்டிதொட்டியெல்லாம் சர்காருடைய பயான் எதிரோலிக்க ஆரம்பித்தது. ஒவ்வொரு ஊர்களிலும் மூன்று நாள் பத்து நாள் என்று நாள் கணக்கில் சர்காருடைய பயான் ஏற்பாடு செய்யப்பட்டது. ஒரு ஊரில் பயான் என்றால் அங்கு சுற்றி உள்ளவர்கள் எல்லாம் மாட்டு வண்டிகளில் வந்து பயானில் கலந்து கொள்வார்கள். இவ்வாறு சர்காரின் சேவை பல்லாயிரம் மக்களை

அல்லாஹ்வின் பக்கம் திருப்பிக் கொண்டிருந்தது. அவர்களின் எளிமையான பாஷை, அழகான உதாரணங்கள், முன்னோர்களின் சரித்திரங்கள், குர்ஆன் ஹதீஸுடைய விளக் கங்கள், ஒரு விஷயத்தை விளக்கும் போது அந்த பாத்திரமாகவே மாறி விட்டது போல் விளக்கு வது இவையாவும் மக்களை பெரிதும் கவர்ந்தன. அனைத்துக்கும் மேலாக அவர்களின் இக்லாஸான எண்ணம், மக்களிடம் கூலியை எதிர்பாராமல் அல்லாஹ்வுக்காக சேவை செய்வது, மக்களுக்கு தீனை எத்தி வைக்க வேண்டிய கவலை இவைகள் தான் அவர்கள் பேச்சினை உயிருள்ள பேச்சாக ஆக்கியது.

ஹிஜ்ரத்

ரிவாயத் :

பின்னர் சர்கார் நாயகம் சென்னையில் இருந்து குடும்பத் துடன் லால்பேட்டையில் வந்து தங்கிக் கொண்டார்கள். அது பற்றி சர்கார் குறிப்பிடும்போது, اَلْمُهَاجِرُ فِيْ سَبِيْلِ اللهِ "நானும் அல்லாஹ்வின் பாதை யில் ஹிஜ்ரத் செய்தவன் தான். அல்லாஹ்வுக்காக லால்பேட்டைக்கு ஹிஜ்ரத் செய்து வந்தேன். இரண்டு விஷயங்களை இங்கு நான் பார்த்தேன். ஒன்று பெண்கள் அனைவரும் தலை முதல் கால் வரை முழுமையாக பர்தா அணிந்தவர்களாக மிகவும் பேணுதலாக இருந்தார்கள். இன்னொன்று காலையில் குர்ஆன் ஓத குழந்தைகள் குர்ஆன் எடுத்துச் செல்லும் போது சாலையின் இரு பக்கமும் டீக்கடையில் அமர்ந்திருப்பவர்கள் கூட எழுந்து நின்று அந்தக் குர்ஆனுக்கு மரியாதை செலுத்துவார்கள். இந்த இரண்டு காட்சியும் என் மனதைக் கவர்ந்தது. அதனால் தான் இந்த ஊருக்கு வந்தேன்" என்று கூறினார்கள்.

ரிவாயத் :

சர்காரை லால்பேட்டைவாசிகள் மிகவும் கொண்டாடினார் கள். ஒரு பெரியவர் கூறினார். "முன்பெல்லாம் ஒவ்வொரு பெரு நாட்களிலும் சர்கார்தான் பயான் செய்வார்கள். திரும்பி வரும் போது அழுகாத கண்களே இருக்காது. அப்படி உள்ளங்களை உலுக்கக்

கூடியதாக அவர்கள் பயான் இருக்கும்.'' இன்னொருவர் கூறினார். ''சர்கார் என்ன சொல்கிறார்களோ அதை அப்படியே மக்கள் செய்வார் கள். ஒருமுறை கிராப்பு வைப்பது, முடியை கூடுதல் குறைவாக வெட்டுவது, அசிங்கமான ஹேர் ஸ்டைல் இவைகள் எல்லாம் கூடாது. இவைகளுக்குப் பகரமாக மொட்டை அடித்துக் கொள்வது நல்லது'' என்று பேசினார்கள். அவ்வளவு தான் மக்கள் கூட்டம் கூட்டமாக ஸலூன்களில் குவிய ஆரம்பித்தனர். ஊரே எங்கு பார்த்தாலும் மொட்டை மயமாகக் காட்சியளித்தது. பெரியவர்கள் முதல் சிறியவர் கள் வரை எங்கும் மொட்டை, மொட்டை, மொட்டை. '' இவ்வாறு எஜமானின் பேச்சு மக்களின் உள்ளங்களை அடிமையாக்கியது.

அழைப்புப் பணி

ரிவாயத் :

சர்கார் நாயகம் கூறினார்கள். ''ஒருமுறை சிதம்பரம் அருகே ஒரு ஊருக்கு பயானுக்குச் சென்றிருந்தேன். அவ்வூர் மக்கள் விவசாயிகள் பகலெல்லாம் வேலை செய்து விட்டு இரவில் தியேட்டருக்கு படம் பார்க்கச் சென்று விடுவார்கள். இங்கு மூன்று நாள் இரவில் பயான் நடந்தது. பயான் நடந்த மூன்று நாட்களும் யாரும் தியேட்டர் பக்கம் செல்லவில்லை. ஆட்கள் சேராததால் அவன் மூன்று நாட்களாக படமே ஓட்டவில்லை. மூன்று நாள் பயான் முடிந்ததும் ஊர் தலைவர் வந்து சொன்னார். ''என்ன ஹஜ்ரத் உங்க பயான் எல்லாம் நல்லா தான் இருந்தது. ஆனால் எப்பவும் வர்ர ஆட்கள் தவிர பள்ளிவாசல்ல தொழுகைக்கு ஒரு ஆள் கூட அதிகமாக வரவில்லையே'' என்று வருத்தப்பட்டார். நான் இந்தச் செய்தியை அமானீ ஹஜ்ரத் கிப்லா விடம் கூறினேன். அவர்கள் கூறினார்கள். ''ஆமாம் சாப்! உங்கள் மூன்று நாள் பயானில் எல்லோரும் அவ்லியாக்கள் ஆகிவிட வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்களா? அந்த மூன்று நாட்கள் யாரும் தியேட்டருக்குச் செல்லவில்லை என்பதே பெரிய விஷயம் அல்லவா?'' என்றார்கள்.

ரிவாயத் :

சர்கார் அவர்கள் கூறுவார்கள். ''நாம் அல்லாஹ்வுக்காக பயான் செய்ய வேண்டும். எத்தனை பேர் திருந்தினார்கள்? எத்தனை பேர் மாறினார்கள்? என்பது பற்றி நமக்குக் கவலை இல்லை. நூஹ் (அலை)

அவர்கள் 950 வரும் சேவை செய்து 80 பேர்கள் தான் முஸ்லிமானார்கள். அதனால் அவர்களின் அந்தஸ்து சற்றும் குறையவில்லை.''

ரிவாயத் :

மக்களிடம் காசோ, பணமோ, புகழோ, பாராட்டோ அல்லது வேறு எதுவும் எதிர்பார்த்து பேசக் கூடாது. அந்த பேச்சுக்கு மக்களிடம் மரியாதையும் பலனும் இருக்காது. எனவே தான் நபிமார்கள் அனைவரும் மக்களிடம் சென்று பேச ஆரம்பிக்கும் முன் முதலில்

وَمَآ اَسْـَٔلُكُمْ عَلَيْهِ مِنْ اَجْرٍ اِنْ اَجْرِىَ اِلَّا عَلٰى رَبِّ الْعٰلَمِيْنَ ○

''இதற்காக நான் உங்களிடம் கூலி எதுவும் கேட்கவில்லை. என் கூலி அல்லாஹ்விடம் அன்றி வேறில்லை'' என்று கூறி விடுவார்கள். யாசீன் சூராவிலும்,

وَجَآءَ مِنْ اَقْصَا الْمَدِيْنَةِ رَجُلٌ يَّسْعٰى قَالَ يٰقَوْمِ اتَّبِعُوا الْمُرْسَلِيْنَ ۝٢٠

اتَّبِعُوْا مَنْ لَّا يَسْـَٔلُكُمْ اَجْرًا وَّهُمْ مُّهْتَدُوْنَ ۝٢١

நபிமார்கள் உண்மையானவர்கள் தான் என்பதற்கு ஆதாரமாக ''அவர்கள் உங்களிடம் கூலி எதுவும் கேட்கவில்லை'' என்று தான் ஒரு மனிதர் மக்களிடம் சொன்னார் என்று அல்லாஹ் கூறுகிறான்.

ரிவாயத் :

நான் (ஷுஹூதீ ஷாஹ் பைஜி) சர்காரிடம் கேட்டேன். ''ஒரு இடத்தில் பயானுக்குச் செல்கிறோம். நாம் கேட்காமல் அவர்களாகக் கொடுத்தால் வாங்கலாமா?'' சர்கார் கூறினார்கள். ''நாமாகக் கேட்காமல் அவர்களாகவே கொடுத்தால் ஏற்றுக் கொள்வதில் தவறு இல்லை'' என்றார்கள். ஆனால் சர்கார் கிபுலாவோ மஸ்ஜித், மதரஸாக்களில் பயானுக்கு அழைத்தால் பணம் வாங்கமாட்டார்கள். வற்புறுத்தி யாரும் கொடுத்தால் வாங்கி அதை மஸ்ஜிதுக்கு நன்கொடை என்று கொடுத்து விடுவார்கள்.

ரிவாயத் :

''பயானுக்கு முன் இன்ன விஷயங்களைப் பேச வேண்டும் என்று ஒரு பேப்பரில் குறித்துக் கொள்வதில் தவறில்லை'' என்று சர்கார் ஒருமுறை கூறியுள்ளார்கள்.

ரிவாயத் :

முஸ்லிம் லீக் தலைவர்களில் ஒருவரான லால்பேட்டை தளபதி ஷபீகுர்ரஹ்மான் ஹஜ்ரத் அவர்கள் 2002 ரமலான் மாதம் உம்ரா சென்று வந்து சர்காரைப் பார்க்க வந்தார்கள். அவர்களை கண்ணியப் படுத்தி உபசரித்து சற்று நேரம் பேசும்படி சர்கார் கேட்டுக் கொண்டார் கள். அவர்கள் பேசினார்கள். "நான் சர்காரின் துஆவில் தான் 22 ஹஜ் மற்றும் எத்தனையோ உம்ராக்களும் செய்துள்ளேன். எங்கள் ஊரில் ஒரு பழக்கம் இருந்தது. சிறுவர்கள் முதன் முதலாக ரமலான் நோன்பு வைத்தால் அவர்களை யாராவது பெரியவர்களிடம் அழைத்துச் சென்று துஆச் செய்து அவர்கள் எடுத்துத் தரும் பண்டத்தில் நோன்பு திறக்க வைப்பார்கள். அவ்வாறு என் தந்தை என்னை சர்காரிடம் அழைத்து வந்தார்கள். அவர்கள் தந்த பண்டத்தில் தான் நான் நோன்பு திறந்தேன். அந்த துஆ தான் கஃபத்துல்லாஹ்வில் நோன்பு வைக்கும் பாக்கியத்தைத் தந்தது. சர்காரின் பயான் ஊரில் எங்காவது நடக்கிறது என்றால் சிறுவர்கள் பலர் ஒன்று சேர்ந்து கையில் ஊதுவர்த்திக் கட்டு களை பற்ற வைத்துக் கொண்டு தகரக் குழாயை கையில் பிடித்துக் கொண்டு அதில் சப்தமிட்டு அறிவிப்புச் செய்து கொண்டே செல் வோம். அவ்வாறு நானும் சென்றிருக்கின்றேன்." 'இன்று மெட்ராஸ் பஷீர் மௌலானா அவர்கள் இந்தத் தெருவில் உரையாற்றுகிறார்கள்' என்று அந்தக் குழாயில் சப்தமாகச் சொல்லிக் கொண்டு தெருத் தெருவாகச் செல்வேன். அந்த பரக்கத்து தான் இன்று அல்லாஹ் என்னை நாடுநாடாக அழைத்துச் செல்கிறான்" என்று பேசினார்கள்.

இறை ஞானப்பாடம்

ரிவாயத் :

சர்கார் ஆரம்பக் காலங்களில் லால்பேட்டையில் பயானுக்கு வந்த காலங்களில் மதரஸாவில் தான் தங்குவார்கள். அப்போது தான் ஜமாலீ ஷாஹ் கிப்லா (ஆயங்குடி அப்துஸ் ஸலாம் ஹஜ்ரத்) ரபீகீ ஷாஹ் நூரி (லால்பேட்டை அப்துல் அஜீஜ் ஹஜ்ரத்) ஆகியோர் சர்காருடன் அறிமுகமானார்கள். இவ்விருவரும் மத்ரஸாவில் மாணவர்களாக ஓதிக் கொண்டிருந்தார்கள். ஜமாலீ ஷாஹ் கிப்லா கூறுவார்கள். "சர்கார் அவர்கள் வந்தால் எங்கள் ரூமில் தான் தங்குவார்கள். இரவிலும் வெகு

நேரம் வரை எங்களுக்கு தஃலீம் செய்வார்கள். எங்கள் உஸ்தாது மார்கள் யாரும் சொல்லித்தராத இறைஞானப் பாடங்களை கேட்டுப் பெரும் மகிழ்ச்சியும், ஆச்சரியமும் அடைந்தோம். பின்பு சர்கார் கிப்லா தான் எங்களை நூரி நாயகத்திடம் அழைத்துச் சென்று பைஅத் பெறச் செய்தார்கள். நூரி நாயகத்திடம் பைஅத் செய்திருந்த போதும் அவர்கள் பாஷை உர்துவாக இருந்ததாலும், அவர்கள் தமிழ்நாட்டுக்கு வருடம் ஓரிரு முறை தான் வரக் கூடியவர்களாக இருந்ததாலும் எனக்கு சில்சிலாவின் பாடங்களை ஆரம்பம் முதல் கடைசி வரை பைஜி சர்கார் கிப்லா தான் இரவு பகலாக தஃலீம் செய்தார்கள். அது மட்டுமின்றி ஷைகிடம் நடக்க வேண்டிய ஆதாபுகளையும் நான் சர்காரிடம் தான் கற்றுக் கொண்டேன்.''

ரிவாயத் :

சர்கார் ஆரம்பத்தில் தப்லீகில் இருந்த காலங்களைக் குறிப் பிடும் போது ''அப்போது எனது ஒருகையில் ''பஹஷ்தீ ஜேவர்''ம் மறுகையில் ''இஸ்லாஹுர் ருசூம்''ம் இருக்கும். பைஅத் வாங்கிய புதிதில் என் ஷைகு நாயகம் ''இதோ வஹ்ஹாபி வருகிறார்! அவரைத் தனியே உட்கார வையுங்கள்'' என்று மெல்லிய புன்னகையுடன் கூறுவார்கள்.

<u>குர்ஆனில் ஆராய்ச்சி</u>

ரிவாயத் :

சர்கார் பயான் தஃலீமுக்காக பல ஊர்களுக்கும் சென்றுள் ளார்கள். ஒருமுறை கூறினார்கள். ''நான் திருவண்ணாமலைக் குச் சென்று பயான் செய்த போது அந்த ஊர் பள்ளிவாசல் இமாம் என்னிடம் வந்தார். ''ஹஜ்ரத்! பல உலமாக்களிடம் கேட்டு விட்டேன். விடை கிடைக்கவில்லை. உங்களை மாதிரி தரீக்கா தொடர்புடைய உலமாக்களைத்தான் தேடிக் கொண்டிருந்தேன். என்னிடம் வந்து ஒரு ஆள் இப்படிக் கேட்டான். அதாவது, ''குர்ஆனில் இப்படி அறிவுக்குப் பொருந்தாத செய்தி வரலாமா? என்று கேட்டான்.

إِنَّا عَرَضْنَا الْأَمَانَةَ عَلَى السَّمٰوٰتِ وَالْأَرْضِ وَالْجِبَالِ

"நாம் அமானத்தை வானங்கள் பூமி மலைகளிடத்திலே கொடுத்து ஏற்றுக் கொள்ளும்படி கேட்டோம்" என்று குர்ஆனில் வருகிறது. வானம் பூமி மலை இவை யாவும் غَيْرَ ذِى رُوْحٌ உயிரற்றவை" ஆயிற்றே. அவைகளிடம் ஒரு பொருளைக் கொடுத்து ஏற்றுக்கொள் என்று கூறுவது இந்தச் சுவற்றைப் பார்த்து "இது உனக்கு வேண்டுமா?" என்று கேட்பது போலல்லவா இருக்கிறது. இது அறிவுக்குச் சற்றும் பொருத்தமில்லையே!" என்று கேட்டான். என்னால் அதற்கு எந்த பதிலும் கூறமுடியவில்லை. தாங்கள் தான் பதில் சொல்ல வேண்டும் என்று அந்த ஹஜ்ரத் கேட்டார்.

சர்கார் கிப்லா விளங்கிக் கொண்டார்கள். இந்த சந்தேகம் உண்மையில் ஹஜ்ரத் அவர்களுக்குத் தான் ஏற்பட்டுள்ளது. யாரோ கேட்டதாகக் கூறுகிறார்கள். சற்று காட்டமான பதிலைத் தான் கூற வேண்டும். ஏனெனில் மொத்த வயதுக்கும் இனி எப்போதும் இது போன்ற சந்தேகங்கள் வரக் கூடாது என்று நினைத்த சர்கார் நாயகம் கூறினார்கள். "ஏங்க ஹஜ்ரத் குர்ஆனில் சந்தேகப்பட்ட அவனை எப்படி நீங்கள் சும்மா விட்டீர்கள். அவனை ஆற்காட் ஜூட்டாவில் அடித்திருக்க வேண்டாமா?" என்று கேட்டதும் ஹஜ்ரத்துக்கு பெரும் அதிர்ச்சி. சர்கார் தொடர்ந்தார்கள். "அதற்குத் தான் அடுத்த ஆயத்திலேயே பதில் வருகிறதே!

فَأَبَيْنَ أَنْ يَحْمِلْنَهَا وَأَشْفَقْنَ مِنْهَا

"அதை கேட்டு அவைகள் பயந்தன! ஏற்க மாட்டோம் என்று மறுத்து விட்டன" என்று வருகிறதே. "உயிரற்றது" எப்படி பயப்படும்? எப்படி மறுக்கும்? இதிலிருந்தே அவைகள் உயிருள்ளவை என்று தெரியவில்லையா?" என்று கேட்டார்கள். "(ரூஹே இன்சானீ, ரூஹே ஹயவானீ, ரூஹே நபாதி, ரூஹே ஜமாதீ என்று பலவகை ரூஹ்கள் இருக்கின்றன. ரூஹ் இல்லாதவை எதுவும் இல்லை) இவ்வகையான சர்காரின் விளக்கங்களைக் கேட்டு ஹஜ்ரத் அவர்கள் மனம் தெளிவடைந்து அல்லாஹ்விடம் தௌபா செய்ததுடன் சர்காருக்கு நன்றியும் செலுத்தினார்கள்.

அல்லாஹ் எங்கே?

ரிவாயத் :

உடனுக்குடன் அந்த இடத்திற்கு தகுந்தாற் போல் பதில் அளிக்கும் மிகப்பெரும் ஆற்றலை சர்கார் கிப்லா அவர்களுக்கு அல்லாஹ் வழங்கியிருந்தான். அவ்வாறான நிகழ்ச்சிகள் எத்தனையோ உள்ளன. ஆடுதுறைக்கு அருகில் ஆவணியாபுரத்தில் சர்கார் ஒருமுறை பயான் செய்தார்கள். அந்த ஊர் இமாம் சாஹிப் அவர்கள் சர்காரிடம் வந்து, ''எல்லா சிருஷ்டிகளிலும் அல்லாஹ் இருப்பதாக தாங்கள் எப்படிச் சொல்லலாம்?'' என்றார். ''ஏன் சொல்லக் கூடாது?'' என்று கேட்க, ''சிருஷ்டிகள் ஹாதிஸ் (புதிதாக உண்டானவை) ஆயிற்றே. அல்லாஹ்வோ கதீம் (எப்போதும் இருப்பவன்) ஆக இருக்கிறானே. ஹாதிஸில் எப்படி கதீம் இருக்க முடியும்?'' என்றார். ''அப்போது உங்கள் கருத்துப்படி அல்லாஹ்வே இல்லை என்கிறீர்களா?'' என்றனர். ''அஸ்தஃபிருல்லாஹ் நான் அப்படி எப்போது சொன்னேன்? இங்கு சிருஷ்டிகளுடன் இல்லை என்று தான் சொன்னேன். பின் எங்கு தான் இருக்கிறான்.'' ''அதுதான் குர்ஆனிலேயே சொல்கிறானே

اَلرَّحْمٰنُ عَلَى الْعَرْشِ اسْتَوٰى ۝

அவன் அர்ஷில் தான் இருக்கிறான். அர்ஷ் மக்லூக்கா இல்லையா? மக்லூக் (படைக்கப்பட்டது) தான். மக்லூக் எல்லாம் ஹாதிஸ் தானே!'' ''ஆமாம்'' ''அப்படியென்றால் அர்ஷும் ஹாதிஸ் தானே. உங்கள் கருத்துப்படி ஹாதிஸில் கதீம் இருக்க முடியாது. ஆகவே அர்ஷிலும் அல்லாஹ் இருக்க முடியாதே'' இப்போது தான் யோசிக்க ஆரம்பித்தார் அந்த ஹஜ்ரத். சர்கார் கிப்லா தொடர்ந்தார்கள். ''சொர்க்கத்தில் அல்லாஹ்வின் தரிசனம் லிகாஃ இருக்கிறது என்று குர்ஆனிலும் ஹதீஸிலும் வருகிறது அல்லவா?'' ''ஆம் வருகிறது'' ''சொர்க்கம் மக்லூக் ஹாதிஸ் தானே. உங்கள் கருத்துப்படி அல்லாஹ் அங்கு வரக் கூடாது. எங்கள் கருத்துப்படி வரலாம். நாங்கள் அவனை தரிசிப்போம். நீங்கள் ஹூருல் ஈன்களோடும், தேனாறு, பாலாறு இவைகளில் மூழ்கிக் கொண்டும் இருக்க வேண்டியது தான்'' என்றார்கள். ஹஜ்ரத் அவர்களுக்கு அப்போது விளங்கியது. உடனே தௌபா செய்து சர்காரிடம் பைஅத்தும் வாங்கி அவர்களின் சீடராகி விட்டார்கள்.

ஈமான் ரிப்பேர்

சர்கார் ஒருமுறை கமுதிக்கு பயானுக்குச் சென்றிருந்தார்கள். பள்ளிவாசலில் சர்காரைக் கண்டதும் அங்கிருந்த ஊர்ப் பெரியவர்களில் ஒருவர் கேலியாக ''என்ன ஹஜ்ரத் எதுவும் கிதாபு விற்பனையா? இல்லை ஊதுபத்தி அத்தரா?'' என்று கேட்டார். சர்கார் உடனே ''குடை ரிப்பேர், பூட்டு ரிப்பேர் கேள்விப்பட்டிருப்பீர்களே?'' ''ஆமாம்!'' ''அதுபோல் நான் ஈமான் ரிப்பேர்'' என்றார்கள். அடக்க ஒடுக்கமாக பணிவுடன் எழுந்து நின்ற பெரியவர் ''அது என்னங்க ஹஜ்ரத் ஈமான் ரிப்பேர்?'' என்றார். ''இரவு பயானில் கேளுங்கள்'' என்றார்கள்.

இறையடியார்

ரிவாயத் :

முன்பெல்லாம் கமுதிக்கு சர்கார் அடிக்கடி செல்வார்கள். சர்கார் பயானைக் கேட்ட ஒரு டாக்டர் (அவர் பெயர் திருநாவுக்கரசு) சர்கார் அந்த ஊருக்கு வந்தாலே காரையும் டிரைவரையும் அனுப்பி பெட்ரோலையும் போட்டுக் கொடுத்து எங்கு பயானுக்கு சென்றாலும் இதில் தான் செல்ல வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். சர்கார் ஒருமுறை தொண்டை வலிக்காக அவரிடம் சிகிச்சை பெறச் சென்றார் கள். மிகுந்த மரியாதையுடன் வரவேற்றார். கடைசியில் சர்கார் பீஸ் கொடுக்க முயன்ற போது மிகவும் வருத்தப்பட்டுக் கொண்டார். ''சர்கார் நான் தங்களிடமா பீஸ் வாங்குவேன். ''சிவனுக்குச் செய்வதை சிவன் அடியாருக்கு செய்'' என்பது எனது கொள்கை. உங்களை நான் கடவுள் வடிவமாகவே பார்க்கிறேன். உங்களுக்கு சேவை செய்யும் பாக்கியம் எனக்குக் கிடைக்க வேண்டுமே!'' என்றார். அவர் பள்ளிவாசலுக்கு வந்து சர்கார் பயான் கேட்க ஆசைப்பட்ட போது சர்கார் மஸ்ஜிதுக் குள்ளேயே வர அனுமதி கொடுத்தார்கள்.

நபிவழிப் பேச்சு

ரிவாயத் :

ஒருமுறை சர்கார் மஜ்லிஸில் அடிமையை (ஷுஹூதி ஷாஹ் ஹைஜி) பேச வைத்தார்கள். இரண்டு கையையும் ஆட்டி ஆட்டி

வீராவேசமாகப் பேசினேன். எஜமான் கூறினார்கள். இப்படித்தான் ரசூல் (ஸல்) அவர்கள் கூறினார்களா? இப்படித்தான் அவர்கள் பேசினார் களா?

وَقُلْ لَّهُمْ فِيْٓ اَنْفُسِهِمْ قَوْلًاۢ بَلِيْغًا ۝

'அவர்கள் உள்ளத்தில் சென்று தொடும்படி பேச வேண்டும்' என்று அல்லாஹ் கூறுகிறான். ரசூலுல்லாஹி (ஸல்) அவர்கள் பேசினால் எத்தனை வார்த்தைகள் என்று யாரும் எண்ண நினைத்தால் எண்ணி விடலாம். அந்த அளவு நிறுத்தி நிதானமாகப் பேசுவார்கள். ஒரு விஷயத்தை முழுமையாக விளங்க வைக்கப் பாடுபட வேண்டும். பெருமானார் (ஸல்) அவர் கள் ஒரே விஷயத்தை மடக்கி மடக்கி கூறுவார்கள். இப்படி இரண்டு கரங்களையும் நீட்டி சண்டைக்கு நிற்பது போல பேசுவது தேவையற்றது. அவசியம் ஏற்பட்டால் ஒரு கையால் இஷாரா சைக்கினை செய்யலாம்'' என்று கூறினார்கள்.

ரிவாயத் :

ஒருமுறை ஒரு முரீது பேசிய போது சர்கார் நாயகம், ''தங்கள் பேச்சை நான் மிகவும் ரசித்தேன். ஆனால் பல பேருக்கு அது விளங்காதே என்று கவலை அடைந்தேன். விஷயங்களை சம்பவங் களை பாதி பாதியாகக் கூறுகிறீர்கள். உங்கள் பேச்சை பலமுறை இதற்கு முன் கேட்டவர்களுக்கு அல்லது அந்த சம்பவத்தை ஏற்கனவே அறிந்தவர்களுக்கு வேண்டுமானால் அது விளங்கும். எத்தனை முறை சொன்னாலும் புதிதாகச் சொல்வது போல் சொல்ல வேண்டும். தங்கள் ஸ்பீடு எப்படி இருக்கிறது என்றால் டிரெய்ன் போகும் போது ''சிக்கு புக்கு'' என்று மெதுவாகப் புறப்படும். (சர்கார் கைகளை ஆட்டிக் காண பித்தார்கள்) பின்னர் வேகமெடுத்தால் ''சிக்புக் சிக்புக் சிக்புக்'' என்று பறக்கும். அது போல் தாங்கள் ஹைஸ்பீடில் பேசுகிறீர்கள். தங்களை பாலோ செய்து எங்களால் வரமுடியவில்லை.

கைர் அது உங்கள் இக்திஜா! அதை மாற்ற முடியாது. வேகத்தைக் குறைத்தால் உங்களுக்கு பேச்சு வராது'' என்று கூறினார்கள்.

ரிவாயத் :

சர்கார் தங்கள் சபைகளிலே தங்கள் கலீபாக்களையும், முரீதுகளையும் பேச வைப்பார்கள். ''ஒவ்வொரு பூவிலும் ஒவ்வொரு வாசம். ஒருவர் பேசியது போல் அடுத்தவர் பேச முடியாது'' என்பார்கள். ''சில நேரங்களில் சில முரீதுகள் பேசுகின்ற பேச்சுக் கள் என்னிலே ஹாலை உண்டாக்குகிறது. அவர்கள் ஹக்கிலே துஆச் செய்கிறேன்'' என்பார்கள்.

ரிவாயத் :

சர்கார் நாயகம் கூறினார்கள் لاَ كَلاَمَ حَتّٰى تَرَى اللهَ عَزَّ وَجَلّ சபையோர்களில் இருந்து நம் பேச்சைக் கேட்பது அல்லாஹ் தான் என்று உணராத வரை நீ உபதேசம் செய்யாதே என்று குதுபு நாயகம் கூறியுள்ளார்கள். குதுபு நாயகம் தங்கள் உரையின் துவக்கத்திலே

لاَ اِلٰهَ غَيْرَهُ وَلاَ مُسَخِّرَ غَيْرَهُ وَلاَ مُسَلِّطَ غَيْرَهُ وَلاَ مُعِزَّ غَيْرَهُ وَلاَ مُذِلَّ غَيْرَهُ
وَلاَ مُعْطِيْ غَيْرَهُ وَلاَ مَانِعَ غَيْرَهُ وَلاَ نَافِعَ غَيْرَهُ وَلاَ ضَارَّ غَيْرَهُ

''அல்லாஹ்வைத் தவிர நம் தேவைகளை நிறைவேற்றுபவன் எவனும் இல்லை. வசப்படுத்தித் தருபவனும் சாட்டி விடுபவனும் அவனையன்றி வேறு யாருமில்லை. கண்ணியம் தருபவனும் கேவலம் தருபவனும் அவனையன்றி யாருமில்லை. தருபவனும் தடுப்பவனும் அவனன்றி ஒருவனும் இல்லை. நன்மை தீமை தருபவனும் அவனன்றி யாருமில்லை'' என்று கூறுவார்கள். வஸ்துக்களை நன்மை தீமை தருவதாக எண்ணுபவன் மார்க்கத்தை முழுமையாக எத்தி வைக்க முடியாது என்று கூறினார்கள்.

தரீகத் மாநாடு

ரிவாயத் :

சர்கார் நாயகம் தங்கள் ஷைகு நூரி நாயகத்தின் மீது பெரும் பக்தியும் அன்பும் வைத்திருந்தார்கள். நூரி நாயகம் 27 முறை லால்பேட்டை ஷரீபுக்கு வந்திருக்கிறார்கள். பல தடவைகள் நாகூர் உரூசுக்கும், பொரவச்சேரி மதரஸா பைஜுல் ஹஸனாத் பட்டமளிப்பு

விழாக்களுக்கும் வந்திருக்கிறார்கள். நூரி நாயகத்தின் நிகழ்ச்சிகளுக்கு ஆயிரக்கணக்கில் முரீதுகள் வந்து கலந்து கொள்வார்கள். அவர்கள் அனைவருக்கும் உணவு மற்றும் வசதிகளை சர்கார்தான் செய்வார்கள். எந்நேரமும் லங்கர் நடந்து கொண்டே இருக்கும். பத்து நாட்கள் வரை வருகிற அனைத்து முரீதுகளுக்கும் சர்கார் உணவு ஏற்பாடுகளைச் செய்வார்கள். ஒருமுறை ஒரு முரீது நூரி நாயகத்திடம் ''பைஜி ஷாஹ் இவ்வளவு ஏற்பாடுகளையும் செய்வது ஆச்சரியமாக உள்ளது'' என்று கூறிய போது ''அவருடைய கை அல்லாஹ்வுடைய ஜோப்பில் இருக்கிறது'' என்று நூரி நாயகம் பதில் கூறினார்கள்.

ரிவாயத் :

1976 ம் ஆண்டு நூரி நாயகத்தின் தலைமையில் நாகூர் ஷரீபில் மூன்று நாட்கள் மாபெரும் தரீக்கத் மாநாடு நடை பெற்றது. அதற்குரிய ஏற்பாட்டை பைஜி நாயகமே நின்று செய்தார்கள். எல்லா பேப்பர்களிலும் அந்த மாநாட்டில் விளம்பரம் கொடுக்கப்பட்டது. தரீகத் சம்பந்தமாக எந்த சந்தேகங்கள் வந்தாலும் கேட்கலாம் என்று விளம்பரம் செய்யப்பட்டது. அந்த மாநாட்டை நிறுத்துவதற்காக கோர்ட் வரை சில எதிர்ப்பாளர்கள் சென்ற போதும் கடைசியில் மிக பிரமாண்டமான முறையில் மிகச் சிறப்பாக மாநாடு நடைபெற்றது.

ரிவாயத் :

அந்த மாநாட்டில் ஆமீர் கலீமி ஷாஹ் சர்கார் கிப்லா அவர்கள் மிகவும் உணர்ச்சிகரமாக உரையாற்றினார்கள். ஒரு கட்டத்தில் தன்னிலை மறந்த நிலையில் ''நீங்கள் காதிர் வலியாக இருக்கிறீர்கள். எதையும் செய்யும் குத்ரத்தை அல்லாஹ் உங்களுக்கு வழங்கி யிருக்கிறான். நீங்கள் இப்போது இங்கு வந்து காட்சி தரவேண்டும்'' என்று மிக உணர்ச்சிகரமாக திரும்பத் திரும்பக் கூறினார்கள். அருகில் ஒரு வீட்டில் பெண்களுக்கு பைஅத் கொடுத்துக் கொண்டிருந்த தாதா சர்கார் உடனே மேடைக்கு வந்து அவர்களை அழைத்து அமர வைத் தார்கள். கையில் ஒரு காலி அத்தர் பாட்டிலைக் கொடுத்து இதை நிரப்புங்கள் என்று கூறி அவர்களின் கவனத்தைத் திருப்பினார்கள்.

ரிவாயத் :

தாதா சர்காரின் தலைமையில் தரீகத் மாநாடு நாகூரில் நடந்து கொண்டிருந்த அதே நேரத்தில் கூத்தாநல்லூரில் சில எதிர்ப்பாளர்களும் சில உலமாக்களும் சேர்ந்து "ஷரீஅத் மாநாடு" என்ற பெயரில் மாநாடு நடத்தினார்கள்.

ரிவாயத் :

அந்த மாநாட்டில் தாதா சர்கார் நூரி நாயகம் உரையாற்றிய போது

ایہا العلماء السوء کان سے شملہ ہٹا کر سنو

"தீய உலமாக்களே! காதுகளிலிருந்து தலைப்பாகையை அகற்றி விட்டுக் கேளுங்கள். நீங்கள் நான் சொல்வது ஹக் தான் என்று நன்றாகத் தெரிந்தும் எதிர்க்கிறீர்கள். இதற்கு தண்டனையாக அல்லாஹ் ஒரு காலத்தைக் கொண்டு வருவான். அப்போது நீங்கள் எல்லோரும் சேர்ந்து ஹக்கை சொல்வீர்கள். மக்கள் கேட்க மாட்டார்கள். உங்களில் யார் ஹக்கை ஏற்றுக் கொண்ட உலமாயே ரப்பானிய்யீன்களாக இருக்கிறீர்களோ அவர்களின் பாதணிகளை நான் தலையில் சுமக்கிறேன்" என்று பேசினார்கள். அவர்களின் பேச்சு தமிழகமெங்கும் பிரபல்யமடைந்தது. சில உலமாக்கள் தலை தாழ்த்தி ஏற்றுக் கொண்டார்கள். சிலர் கடுமையாக எதிர்த்தார்கள். அதற்குப் பின் தாதா சர்கார் முன்னறிவிப்பு செய்தது போலவே அல்லாஹ் தமிழ்நாட்டில் வஹ்ஹாபிகளின் ஆதிக்கத்தை அதிகமாக்கினான். மூலை முடுக்கெல்லாம் அவர்கள் வேரூன்றினர். அப்போது உலமாக்கள் ஹக்கை கூறினார்கள். ஆனால் கேலியும் கிண்டலும் கிடைத்தது. மக்கள் அதை ஏற்கவில்லை.

சூபியாக்களும், உலமாக்களும்

ரிவாயத் :

ஷைகு பைஜி நாயகம் கூறுவார்கள். "இந்த உலமாக்களைப் பற்றி சூபிய்யாக்கள் நன்கு தெரிந்து வைத்திருக்கிறார்கள். இமாம் கஜ்ஜாலி (ரஹ்) அவர்கள் மக்களை கண்டித்த காலமெல்லாம் லட்சக் கணக்கான உலமாக்கள் ஆதரவு தெரிவித்தார்கள். ஒரு நாள் அவர்கள் சாட்டையை இந்தப்பக்கம் திருப்பிய போது ایہا العلماء السوء நீதமற்ற

உலகாசை பிடித்த தீய உலமாக்களே என்று பயான் ஆரம்பித்த போது எல்லா உலமாக்களும் எதிரிகளாகி விட்டனர். இஹ்யாவை நெருப்பிட்டுக் கொழுத்தினார்கள்.

எல்லா காலத்திலேயும் சூபிய்யாக்களுக்கு சில உலமாக்கள் எதிர்ப்பு காட்டியே வந்தனர். குதுபு நாயகம் (ரலி), காஜா நாயகம் (ரலி), ஜுனைதுல் பக்தாதி (ரலி), ஹஸன் பஸரீ (ரலி) போன்ற பெரும் பெரும் சூபிய்யாக்களே எதிர்ப்புக்கு ஆளானார்கள். ஆனால் அந்த அந்த காலங்களில் வாழ்ந்த முன்சிபான உலமாக்கள் உலமாயே ரப்பானிய்யீன்கள் சூபிய்யாக்களை மிகவும் மதித்தார்கள். நான்கு இமாம்களும், முபஸ்ஸிரீன்கள், முஹத்திஸீன்கள் எல்லோரும் சூபிய்யாக்களைக் கொண்டாடினர்கள்.

وَكَذٰلِكَ جَعَلْنَا لِكُلِّ نَبِيٍّ عَدُوًّا مِّنَ الْمُجْرِمِيْنَ ؕ

"இவ்வாறே ஒவ்வொரு நபிக்கும் பாவிகளில் இருந்தும் எதிரிகளை நாம் ஆக்கினோம்" என்று அல்லாஹ் கூறுகிறான்.

ஸஹாபாக்கள்

ரிவாயத் :

நாகூரில் தரீகத் கான்பிரன்ஸ் நடந்த போது தாதா சர்கார் நூரி நாயகம் அவர்களுக்கு ஒருநாள் கொந்தையில் உணவு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தாதா சர்காருடன் பைஜி நாயகம், ஆமிர் கலீமி ஷாஹ் கிப்லா மற்றும் பல கலீபாக்களும் முரீதுகளும் சென்றிருந் தார்கள். சாப்பிட அமர்ந்த போது நீளமான உணவு விரிப்பிலே விதவிதமான உணவுகள் வைக்கப்பட்டிருந்தன. பைஜி நாயகம் கூறினார்கள். மீனிலே பலவகை, பறவைகளின் இறைச்சி, மீனும் தேங்காய்பாலும் சேர்த்து செய்த கறி வகை இவ்வாறு பலவகைகள் நிரப்பி வைக்கப்பட்டிருந்தன. அதைப் பார்த்தவுடன் தாதா சர்கார் அழ ஆரம்பித்து விட்டார்கள். தேம்பித் தேம்பி ரொம்ப நேரம் அழுதார்கள். ஷைகு அழுவதைப் பார்த்த முரீதுகளுக்கும் அழுகை வந்து விட்டது. ஆனால் யாருக்கும் காரணத்தைக் கேட்கத் துணிவில்லை. வீட்டுக் காரரோ நாம் ஏதும் மரியாதைக் குறைவு செய்து விட்டோமோ என்று கவலைப்பட ஆரம்பித்தார். அப்போது நூரி நாயகம் சொன்னார்கள்.

وہ تھے صحابہ پتے کھاتے تھے مینگنیاں ڈالتے تھے
ہم جیسے کمینوں کو اللہ ایسا کھلاتا ہے

"ஸஹாபாக்கள் கருவ இலையைத் தின்று கொண்டு ஆடுகளைப் போல் புழுக்கைகள் போடுவார்கள். தீனுக்காகப் போராடினார்கள். நம்மைப் போன்ற அற்பமானவர்களுக்கு அல்லாஹ் இவ்வாறு உணவளிக்கிறான். காரணம் இவ்வாறெல்லாம் இல்லாவிட்டால் நாம் தீனுடைய சேவையை சுத்தமாக நிறுத்தி விடுவோம்" என்று கூறினார்கள்.

காதலரின் கண்ணீர்

ரிவாயத் :

பல சம்பவங்களில் தாதா சர்காரை நினைவுகூரும் போது சர்காரின் கண்களில் நீர் ததும்பி விடும். ஒருமுறை ஒரு பாடகர் சர்கார் முன் பாடல் படித்துக் கொண்டிருந்த போது "நூரியின் தாசரே" என்று பாடினார். சர்கார் அவர்கள் "என்னை நூரியின் தாசர் என்று கூறுகிறார்" என்று கூறி அழ ஆரம்பித்து விட்டார்கள். தாடியெல்லாம் நனைந்து ஜிப்பாவும் நனைய ஆரம்பித்து விட்டது. அந்த அளவு அன்று அழுதார்கள்.

ரிவாயத் :

ஒவ்வொரு வாரமும் வியாழக்கிழமை சர்கார் அவர்கள் வீட்டிலே பைத்துன்னூரிலே திக்ர் மஜ்லிஸ் நடக்கும். திக்ர் மஃரிபுக்குப் பின் ஆரம்பித்து இஷா பாங்கு வரை நடைபெறும். ஆரம்பத்தில் லாயிலாஹ இல்லல்லாஹ் என்று கூற ஆரம்பிக்கும் போது சர்கார் அழ ஆரம்பித்து விடுவார்கள். கடைசி வரை அழுது கொண்டு தான் இருப்பார்கள். முஹம்மத் (ஸல்) திக்ர் செய்யும் போது கண்ணீர் மழையாகக் கொட்டும். துஆவுக்குப் பின் கண்களைத் துடைத்துக் கொள்வார்கள். ஒருநாள் கூறினார்கள். மிஸ்கீன் திக்ரின் போது அழுவதைத் தாங்கள் பார்த்திருக்கிறீர்கள். ஏன் தெரியுமா? இந்தப்பாவியையும் உன்னை திக்ர் செய்ய வைத்தாயே எஜமானே என்று நினைத்து அழுகிறேன் என்றார்கள்.

கொடி பறக்கும் வாழ்வு

ரிவாயத் :

தாதா சர்காரை லால்பேட்டை வரும்படி சர்கார் அழைப்பு விடுத்த போது தாதா சர்கார் கூறினார்கள். "நான் தங்கள் ஊருக்கு வந்தால் ஒன்று உங்கள் வீட்டில் கொடி பறக்கும். அல்லது ஊரை விட்டே ஒதுக்கி வைக்கப்படுவீர்கள்" என்று கூறினார்கள். அதே போல் சர்கார் ஊரை விட்டும் ஒதுக்கி வைக்கப்பட்டார்கள். சர்கார் அந்த கடும் சோதனைகளையெல்லாம் சகித்துக் கொண்டு அங்கேயே வாழ்ந்தார்கள். பிற்காலத்தில் சர்கார் வீட்டில் கொடி பறக்கும் வாழ்க்கையை அல்லாஹ் வழங்கினான். ஊரே, உலகே வியக்கும் வண்ணம் பெரு வாழ்வை அல்லாஹ் வழங்கினான்.

நிரந்தரத் தொழுகை

ரிவாயத் :

தாதா சர்கார் பொருள் வைத்த சேரியில் தங்கியிருந்த போது சர்கார் நாயகம் நாகப்பட்டினத்தில் மரைக்காயர் மஸ்ஜிதில் ஒரு நிகழ்ச்சி ஏற்பாடு செய்திருந்தார்கள். தாதா சர்கார் செல்லுமிடங்களில் முன் கூட்டியே சென்று ஏற்பாடு செய்து தாதா சர்கார் வரும் போது அவர்களை நின்று வரவேற்று அழைத்துச் செல்வது நமது ஷைகு நாயகத்தின் பழக்கம். ஆனால் யாரோ சிலர் சொன்ன தவறான தகவலினால் சர்கார் வேறு இடத்தில் சென்று காத்திருந்தார்கள். அந்த நேரத்திலே தாதா சர்கார் பள்ளிவாசலுக்கு வந்ததால் அங்கே ஒரு சிலர் மட்டும் இருந்தார்கள். தாதா சர்கார் காரில் ஏறி பொரவச்சேரிக்கே சென்று விட்டார்கள். அதன் பின் அங்கு வந்த பைஜி நாயகம் தாதா சர்கார் வந்து சென்றதை அறிந்தவுடன் அப்படியே மயக்கம் ஆகி விழுந்து விட்டார்கள். ஷைகு தன் மீது அதிருப்தி அடைந்திருப்பார்களோ என்ற அச்சம் அவர்களை மயக்கமடையச் செய்தது. உடனடியாக டாக்டரை அழைத்து வரப்பட்டு சிகிச்சை செய்யப்பட்டது. செய்தியை அறிந்த தாதா சர்கார் பைஜி நாயகத்தை அழைத்து வரும்படி கூறினார்கள். சர்கார் வந்தவுடன் தாதா சர்கார் "உங்களை

மன்னித்து விட்டேன். உங்கள் உடல்நிலையை கவனித்துக் கொள் ளுங்கள். சென்று தூங்குங்கள்'' என்று கூறினார்கள். ''நான் இன்னும் இஷா தொழுகவில்லை. தொழுதுவிட்டு தூங்கட்டுமா?'' என்று சர்கார் கேட்டதற்கு,

تم تو ہمیشہ نماز میں ہی ہو اب جا کر سو جاؤ

நீங்கள் எப்போதும் தொழுகையில் தான் இருக்கிறீர்கள். இப்போது சென்று ஓய்வெடுங்கள்'' என்று கூறினார்கள்.

الَّذِيْنَ هُمْ عَلٰى صَلَاتِهِمْ دَآئِمُوْنَ ○

என்ற ஆயத்தில் வரும் دائمی صلاۃ நிலையை அல்லாஹ் உங்களுக்கு வழங்கியுள்ளான் என்று கூறினார்கள். (அதற்காக இஷா தொழுகத் தேவையில்லை என்று பொருளல்ல. உடல்நிலையை கவனித்து ஓய்வு கொள்ளும்படி கூறினார்கள். காலை 4 மணிக்குக் கூட எழுந்து இஷா தொழுது கொள்ளலாம். B.P. அதிகமாகி நின்றால், உட்கார்ந்தால் மயக்கம் வரும் நிலையில் உள்ளவர்கள் தொழுகையை களா செய்யவும் அனுமதி உண்டு.)

உலக ஆசை

ரிவாயத் :

ஒருமுறை நாகூர் ஷரீபில் தாதா சர்கார் தங்கள் கலீபாக்கள் சஜ்ஜாதாக்கள், முரீதுகளுக்கு மத்தியில் வைத்துக் கூறினார்கள்.

فیضی شاہ جب سے مرید ہوا مجھ سے دنیا نہیں مانگا
زبان سے نہ قلم سے نہ دل سے اس واسطے اللہ ان کو صاحب حال بنا دیا۔

''பைஜி ஷாஹ் என்னிடம் பைஅத் வாங்கிய நாளில் இருந்து துன்யாவைக் கேட்டதே இல்லை. நாவாலும் கேட்டதில்லை, எழுதியும் கேட்டதில்லை. மனதாலும் கேட்டதில்லை. எனவே அல்லாஹ் அவர்களை ஸாஹிபே ஹாலாக ஆக்கி விட்டான்'' என்று கூறினார்கள்.

கண்டிப்பு

ரிவாயத் :

தாதா சர்கார் பைஜி நாயகத்தின் மீது பெரிதும் அன்பு செலுத்து வார்கள். சில நேரங்களில் கண்டிக்கவும் செய்வார்கள். ஏனெனில் ஷைகுடைய வேலை முரீதுகளை தர்பியத் செய்வதாகும். அவர்களை எங்கே திருத்த வேண்டுமோ அங்கே திருத்தி வழிகாட்டுவதுதான் அன்பின் வெளிப்பாடு ஆகும்.

ஒருமுறை நாகூர் ஷரீபில் தாதா சார்கார் தங்கியிருந்த போது பைஜி நாயகத்திற்கு தொண்டை வலியாக இருந்தது. அதை ஷைகிடம் தெரிவித்தார்கள். "மருந்து சாப்பிடுங்கள். அல்லாஹ் ஷிபா ஆக்குவான்" என்று துஆச் செய்தார்கள். மறுநாளும் தொண்டை வலி அதிகமாக இருக்கவே சர்கார் மீண்டும் தாதா சர்காரிடம் தெரிவித்தார் கள். உடனே தாதா சர்கார்

پھرایک بار بولےتو ھذا فراق بینی وبینك ہوجاۓ گا مرید ہوگۓ خلیفہ بھی ہوگۓ
خدا کی تقدیر سے کیوں راضی نہیں ہوتے ورنہ میں تیری خلافت کوواپس کرنا پڑے گا۔

மீண்டும் ஒருமுறை கூறினால் உமக்கும் எனக்கும் பிரிவு உண்டாகி விடும். முரீதும் ஆகிவிட்டீர்கள். கலீபாவும் ஆகி விட்டீர்கள். அல்லாஹ்வின் தக்தீரைக் கொண்டு ஏன் பொருந்திக் கொள்ளவில்லை. நான் தங்கள் கிலாபத்தை வாபஸ் பெறவேண்டி ஏற்பட்டு விடும் என்று கூறினார்கள். சர்கார் திடுக்கிட்டு அழுது எஜமானின் கால்களைப் பிடித்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்கள்.

இக்திழா

ரிவாயத் :

ஒருமுறை தாதா சர்கார் கேரளா சென்றிருந்த போது நமது பைஜி நாயகமும் உடன் சென்றிருந்தார்கள். அப்போது தாதா சர்காரின் கலீபாக்கள் தங்களுக்குள் தஃலீம் முதாகரா செய்து கொண்டிருந் தார்கள். ஒரு சந்தேகம் எழுந்தது. நம்முடைய இக்திழாவில் உள்ளது தானே வெளியே வருகிறது. அதன்படி தானே எல்லாமே நடக்கிறது.

அப்படியானால் அதை நாம் பொருந்திக் கொள்ள வேண்டியது தானே என்று பேச்சு எழுந்தது. இதைப் பற்றி தாதா சர்காரிடம் கேட்க வேண்டும் என்று முடி வெடுத்தார்கள். சர்கார் பைஜி நாயகம் கூறினார்கள். எல்லொரும் சேர்ந்து எனக்கு தலைப்பாகை கட்டினார்கள். ''நீங்கள் தான் சர்காருக்கு பிரியமான செல்லப்பிள்ளை. நீங்கள் கேட்பதுதான் பொருத்தமாக இருக்கும்'' என்றெல்லாம் சொன்னார்கள். நானும் அப்பாவித்தனமாக சரி என்று கூறி விட்டேன். மஜ்லிஸில் சர்காரிடம் கேட்டேன். எல்லாமே நமது இக்திழாபடிதான் நிகழ்கிறது என்றால் அதைக் கொண்டு நாம் பெருந்திக் கொள்ள வேண்டியது தானே? என்று கேட்டேன். அவர்கள்

اچھا اچھا تمہارے خیال ویسے ہوگیا؟ ۔ اچھا تمہارے اقتضاء میں تم سانپ ڈس کر مرنا ہے یا ایک
کتا کاٹ کر مرنا ہے تو اس سے راضی ہوجائے گا کیا؟

''அப்படியா? நீங்கள் அப்படி நினைக்கிறீர்களா? சரி உங்கள் இக்திழாவில் நீங்கள் ஒரு பாம்பு கடித்து இறக்க வேண்டும் அல்லது நாய் கடித்து இறக்க வேண்டும் என்று இருக்கிறது. நீங்கள் அதைக் கொண்டு ராஜியாவீர்களா? பொருந்திக் கொள்வீர்களா?'' என்று கேட்டார்கள். அழுது கதறி சர்காருடைய கால்களைப் பிடித்துக் கொண்டேன். ஏனெனில் ஷைகுடைய வாயிலிருந்து வந்து விட்டால் அது பலித்து விடுமே என்று பயந்து விட்டேன். உடன் சர்கார் ''அல்லாஹ் உங்களைக் காப்பாற்றுவான். நீண்ட வயதையும் கொடுப்பான். இக்திழாவில் உள்ளதைக் கொண்டு நாம் ராஜியாக முடியாது. நலவான விஷயங்கள் வெளியானால் அதை வெளியாக்கிய அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்த வேண்டும். தீமை வெளியானால் நமது இக்திழாவை நினைத்து அழுது அல்லாஹ்விடம் மன்னிப்புக் கேட்க வேண்டும்'' என்று கூறினார்கள்.

மரண நினைவு

ரிவாயத் :

ஒருமுறை சர்கார் தாதா சர்காரிடம் எனக்கு மரணம் நெருங்கி விட்டதோ என்று பயமாக இருக்கிறது என்று கூறினார்கள்.

அதற்கு தாதா சர்கார்

تم دین کو کتنے سال کے لئے گتے میں لئے ہو؟ اللہ جب تک کام لیتا ہے لے گا۔

நீங்கள் தீனை எத்தனை வருடத்திற்கு குத்தகை எடுத்துள்ளீர்கள்? அல்லாஹ் எதுவரை நாடுகிறானோ உங்களைக் கொண்டு வேலை வாங்கிக் கொள்வான். எத்தனையோ பேருக்கு அழைப்பு வந்து விட்டது. நான் அல்லாஹ்விடம் துஆச் செய்து தள்ளிப் போட்டிருக்கிறேன். உங்களுக்கு இன்னும் அழைப்பே வரவில்லை என்று கூறினார்கள்.

ரிவாயத் :

ஒருமுறை பைஜி நாயகம் ''யா அல்லாஹ் உன் நபி மீது கொஞ்சம் ஸலவாத் ஓதி என் பட்டோலையை நிரப்பிக் கொள்கிறேன் அதற்காக நீ எனக்கு அவகாசம் கொடு என்று ஹயாத்தைக் கேட்டு வாங்கிக் கொண்டிருக்கிறேன்'' என்று கூறினார்கள்.

ரிவாயத் :

இன்னொரு முறை கூறும் போது ''யா அல்லாஹ் ஏழு எட்டு பேத்திகள் இருக்கிறார்கள். அவர்களுக்கு நிகாஹ் செய்து வைக்க எனக்கு தவ்பீக் செய்'' என்று கூறி ஹயாத்தைக் கேட்டுக் கொண்டிருக் கிறேன் என்று கூறினார்கள்.

ஆலிம், மஃலூம்

ரிவாயத் :

சர்கார் பைஜி நாயகம் தங்கள் பயான்களில் உபதேசங்களில் தங்கள் ஷைகு நாயகம் நூரி ஷாஹ் கிப்லா அவர்களைப் பற்றி அடிக்கடி நினைவுகூர்வார்கள்.

ஒருமுறை கூறினார்கள். நூரி நாயகத்திடம் ஒரு தடவை வேறு ஒரு தரீகாவைச் சேர்ந்த ஷைகு ஒருவர் சந்திக்க வந்தார். வந்த இடத்தில் பேசிக் கொண்டிருந்த போது ''எல்லாமே அல்லாஹ் தான். அவனுக்கு ''ஃகைர்'' அவனல்லாதது எதுவும் இல்லை என்பது கிடையாது'' ஐனியத் - கைரிய்யத் என்று அந்த ஷைகு பேசினார்.

சுன்னத் வல் ஜமாஅத் கருத்துப்படி அல்லாஹ் வஸ்துக்களுக்கு عَيْن ஐன் ஆகவும் இருக்கிறான். غَيْر கைர் ஆகவும் இருக்கிறான். عَيْنِيَّةْ - غَيْرِيَّةْ இரண்டும் இருக்கிறது. உஜூதுடைய அடிப்படையில் அல்லாஹ் சிருஷ்டிகளுக்கு عَيْن ஐன் ஆகவும் தாத்துடைய அடிப்படையில் சிருஷ்டிகளுக்கு غَيْر கைர் ஆகவும் இருக்கிறான் என்று நூரி நாயகம் கூறினார்கள்.

அதற்கு அவரோ, ''அவன் ஆலிமாக இருக்கிறான். சிருஷ்டிகள் அவனுடைய சிந்தனையில் மஃலூமாக இருக்கின்றன. ஆலிமும் மஃலூமும் ஒன்றாகத் தானே இருக்க முடியும். அது எப்படி வேறு வேறாக இருக்க முடியும்? என்று கேட்டார். நூரி நாயகம் கூறினார்கள். ''சரி உங்கள் சிந்தனையில் ஒரு குரங்கை கொண்டு வாருங்கள்.''

கொண்டு வந்து விட்டேன். என்றார் அவர். ''இப்போது குரங்கு எங்கு இருக்கிறது?''

''எனது சிந்தனையில் இருக்கிறது.''

குரங்கு வெளியில் இல்லை. உங்கள் சிந்தனையில் தான் இருக்கிறது. நீங்கள் عَالِمْ ஆலிம் உங்கள் சிந்தனையில் உள்ள குரங்கு مَعْلُوم மஃலூமாக இருக்கிறது. உங்கள் கொள்கைப்படி ஆலிமும் மஃலூமும் ஒன்று. அப்படியானால் உங்கள் கொள்கைப்படி நீங்கள் இப்போது குரங்காகி விட்டீர்கள். சரி ஒரு நாயை சிந்தனையில் கொண்டு வாருங்கள்.

''வந்து விட்டது'' என்றார் அவர். ''எங்கே இருக்கிறது'' என்றார்கள்.

''என் சிந்தனையில் இருக்கிறது'' என்றார்.

அவர் ''அப்படியானால் நீங்கள் ஆலிம். உங்கள் சிந்தனையில் இருக்கும் நாய் மஃலூம். உங்கள் கொள்கைப்படி இரண்டும் வேறு வேறு அல்ல. ஒன்று தான். எனவே இப்போது நீங்கள் நாயாக ஆகிவிட்டீர்கள். சரி உங்கள் சிந்தனையில் ஒரு பன்றியைக் கொண்டு வாருங்கள்'' என்றனர்.

''வந்து விட்டது'' என்றார் அவர்.

''இப்போது அது எங்கே உள்ளது.''

"என் சிந்தனையில் தான் இருக்கிறது" நீங்கள் ஆலிம். அந்தப் பன்றி மஃலூம் ஆக இருக்கிறது. உங்கள் கருத்துப்படி ஆலிமும் மஃலூமும் ஒன்றுதான். இப்போது நீங்கள் பன்றியாகவும் ஆகி விட்டீர்கள். நாங்கள் உங்களை அப்படிச் சொல்ல வில்லை. உங்கள் கருத்துப்படியே நீங்கள் குரங்காக, நாயாக, பன்றியாக ஆகி விட்டீர்கள். எனவே நீங்கள் இந்தச் சபையிலே இருக்கவே தகுதியிழந்துவிட்டீர்கள். முரீதுகளே! இவரை வெளியே அனுப்புங்கள்! என்று கூறினார்கள்.

அவர் சர்காருடைய காலைப் பிடித்துக் கொண்டார். ஷைகு நாயகமே என்னை மன்னித்து விடுங்கள் என்றார். இன்றுதான் எனக்கு உண்மை விளங்கியது என்று கூறி தானும் தௌபா செய்ததுடன் எழு நூறு முரீதுகளையும் தௌபா செய்ய வைத்தார்.

ஷைகு அல்லாஹ்வா?

ரிவாயத் :

சர்கார் பைஜி நாயகம் கூறினார்கள். ஒருமுறை என் ஷைகு நாயகம் சென்னைக்கு வருகை தந்திருந்த போது "இங்கே ஒரு தரீகாவைச் சேர்ந்த சிலர் தங்கள் ஷைகு தான் அல்லாஹ்" என்று கூறிக் கொண்டிருப்பதைக் கேள்விப்பட்டார்கள்.

அப்போது சர்கார் நூரி நாயகம் அந்த தரீகாவைச் சார்ந்த முரீது கள் யாராவது இருந்தால் கூட்டி வாருங்கள் என்று கூறினார்கள்.

அங்குள்ளவர்கள் ஒரு முரீதைக் கூட்டி வந்தார்கள். அவரிடம் சர்கார் கேட்டார்கள். "உங்கள் ஷைகு தான் அல்லாஹ்" என்று கூறுகிறீர்களாமே!"

"ஆமாம்! எங்கள் ஷைகு தான் அல்லாஹ்" என்றார் அவர். "அல்ஹம்துலில்லாஹ்!

அல்லாஹ்வைத்தான் நாங்கள் தேடிக் கொண்டிருக்கிறோம்! உங்கள் ஷைகு தான் அல்லாஹ் என்று எங்களுக்குத் தெளிவாகி விட்டால் நாங்களும் உங்கள் ஷைகிடம் வந்து விடுகிறோம். ஆனால் எங்களுக்கு குர்ஆனில் அல்லாஹ் தனக்கு எந்த அடையாளங்களைக் கூறி இருக்கிறானோ, அந்த அடையாளங்கள் உள்ள அல்லாஹ் தான்

வேண்டும். உங்கள் ஷைகிடம் அவை இருந்தால் கூறுங்கள்!'' என்றார்கள்.

''அவை என்ன அடையாளங்கள்?'' என்றார் அவர்.

وَهُوَ يُطْعِمُ وَلاَ يُطْعَمُ

''அவன் எல்லோருக்கும் உணவளிக்கிறான். தான் சாப்பிடுவ தில்லை. உங்கள் ஷைகு எப்படி?'' என்று கேட்டார்கள்.

அதற்கவர், مرغیاں کھاتے ہیں سرکار ''அவர் முழு முழு கோழியாக சாப்பிடு கிறாரே'' என்றார்.

பிறகு கூறினார்கள் அல்லாஹ் لَا تَأْخُذُهٗ سِنَةٌ وَّلَا نَوْمٌ அவனை சிறு தூக்கமும் பிடிப்பதில்லை. பெரிய தூக்கமும் பிடிப்பதில்லை'' என்று கூறுகிறான். ''உங்கள் ஷைகு எப்படி?'' என்று கேட்டார்கள்.

خراٹے لگاتے ہیں سرکار رات میں بھی سوتے دن میں بھی سوتے

''பெரும் குறட்டை விட்டல்லவா தூங்குகிறார். இரவிலும் தூங்குகிறார். பகலிலும் தூங்குகிறார்'' என்று அவர் கூறினார். ''சரி அல்லாஹ் لَمْ يَلِدْ ۙ وَلَمْ يُوْلَدْ அவன் குழந்தைகள் பெறவும் இல்லை. பெற்றோர்களால் பெறப்படவும் இல்லை'' என்று கூறுகிறான். உங்கள் ஷைகு எப்படி? என்று கேட்டார்கள். அவரோ ڈزنوں ڈزنوں ہیں بچے ''டஜன் கணக்கில் குழந்தைகள் இருக்கிறார்கள்'' என்றார். பிறகு எப்படி உன் ஷைகு அல்லாஹ்வாக இருக்க முடியும்? என்றார்கள். அதோடு அவர் தௌபா செய்து சர்காருடைய சீடராக ஆகி விட்டார்.

யார் தைரியசாலி?

ரிவாயத் :

ஷைகு நூரி நாயகம் அவர்களுக்கு அல்லாஹ் மிக உயர்வான ஹிக்மத் எனும் ஞானத்தை வழங்கியிருந்தான். தான் சொல்ல வந்ததை அழகுடன் சொல்வதற்கும் மாற்றுக் கருத்துடையவர்களை அழகுடன் மறுப்பதற்கும் உரிய ஆற்றலை அல்லாஹ் வழங்கி யிருந்தான்.

பைஜி நாயகம் கூறினார்கள்.

ஒருமுறை என்னுடைய ஷைகு நூரி நாயகம் அவர்களிடம் கிராமத்து ஜனங்கள் கொஞ்சம் பேர் வந்திருந்தார்கள். அவர்களிடம் தீன் இல்லாமல் இருந்தது. தொழுகை நோன்பு போன்ற வணக்க வழிபாடுகளும் இல்லை. ஆனால் அவ்லியாகள் மீது அளவு கடந்த அன்புடையவர்களாக இருந்தார்கள். நூரி நாயகத்தின் மீதும் பெரும் பாசம் உடையவர்களாக இருந்தனர்.

அவர்களோடு பேசிக் கொண்டிருக்கும் போது சர்கார் அவர்களிடம் ''நாங்கள் கோழைகளாக இருக்கிறோம். ஆனால் நீங்களோ பெரும் வீரமுடையவர்களாக இருக்கிறீர்கள்'' என்று கூறினார்கள்.

இதைக் கேட்ட கிராமவாசிகள் ''இல்லை சர்கார். தாங்கள் தான் பெரியவர்கள். நாங்கள் ஒன்றும் இல்லை. நாங்கள் அற்பமானவர்கள்'' என்று அழுது கொண்டே கூறினார்கள்.

சர்கார் அவர்களிடம், ''இல்லை இல்லை நீங்கள் தான் தைரிய சாலிகள். நாங்களெல்லாம் பயந்தாங்கொல்லிகள். பாருங்கள் அல்லாஹ் நம்மைத் தொழுகச் சொன்னான். இல்லையென்றால் மறுமையில் நரகில் போடுவதாகவும், கப்ரிலும் மஹ்ஷரிலும் தண்டிப்பதாகவும் கூறுகிறான். அதைக் கேட்டு நாங்கள் பயந்து விட்டோம். அவனுக்கு அஞ்சி நடுங்கி ஒழுங்காகத் தொழுது வரு கிறோம். ஆனால் நீங்களோ அல்லாஹ் எங்களை என்ன செய்து விடுவான்? பார்த்து விடுகிறோம். நரகமோ, கப்ரோ, மஹ்ஷரோ எதற்கும் நாங்கள் பயம் கொள்ளமாட்டோம் என்று தைரியமாகத் தொழாமல் இருக்கிறீர்களே! நீங்களே சொல்லுங்கள்! யார் தைரியசாலி'' என்று கேட்டார்கள்.

இதைக்கேட்டு திடுக்குற்ற கிராமவாசிகள் அழுது கதறி சர்காரின் கையைப் பிடித்து இனிமேல் மொத்த வயதுக்கும் தொழுகையை விட மாட்டோம் என்று வாக்குறுதி செய்தனர். இன்றுவரை அவர்கள் தொழுகையை விடவில்லை.

திருத்தும் முறை

ரிவாயத் :

பைஜி நாயகமும் மக்களைத் திருத்துவதிலும், கண்டிப்பதிலும் அழகான முறையைப் பின்பற்றுவார்கள். பிறர் மனம் புண்படாமல் அழகாகத் திருத்துவதில் அவர்களின் பாணியே அலாதியானது.

ஒருமுறை சர்காரைப் பார்க்க ஒரு பெரிய ஆபீசர் வந்திருந்தார். பேசிக் கொண்டிருந்த போது அவர் கூறினார். மற்ற நேரத் தொழுகை களைத் தொழுது விடுகிறேன். லுஹர் மட்டும் ஆபீஸ் நேரமாக இருப்பதால் தொழ முடிவதில்லை என்றார்.

சர்கார் அவரிடம் ''சரி நீங்கள் ஆபீஸில் முக்கியமான வேலையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் போது வயிற்று வலி ஏற்பட்டு அவசரமாக கழிவறை செல்ல வேண்டி ஏற்பட்டால் உடனே செல்வீர்களா? அல்லது வேலை முடிந்த பின் செல்வீர்களா?'' என்றார்கள்.

அதற்கவர் ''இல்லை! இல்லை உடனே சென்று தேவையை முடித்து விட்டுதான் வேலையைத் தொடர்வேன்'' என்றார்.

''எவ்வளவு நேரமாகலாம்'' என்றார்கள்.

''எவ்வளவு நேரமானால் என்ன? கால்மணி நேரமோ அரை மணி நேரமோ ஆனாலும் அது முக்கியமான தேவையல்லவா? அதை முடித்த பின் தானே நிம்மதியாக மற்ற வேலைகள் பார்க்க முடியும்'' என்றார் அவர்.

சர்கார் அவரிடம் ''பாருங்கள் மலஜல தேவைகளுக்காக நேரம் ஒதுக்க நம்மால் முடிகிறது. ஒரு பத்து நிமிடம் இறைவன் நம்மீது கடமையாக்கிய தொழுகைக்கு ஒதுக்க முடியவில்லை என்றால் எப்படி?'' என்று கேட்டார்கள். அன்றிலிருந்து அவர் லுஹரை விடுவதேயில்லை!

ரிவாயத் :

இன்னொரு முறை சர்காரிடம் ஒருபெரிய செல்வந்தர் வந்தார். அவர் சர்காரிடம் பேசிக் கொண்டிருந்த போது ''தனக்கு தொழுக வேண்டும் என்று ஆசையாகத்தான் இருக்கிறது. எங்கே நேரம் தான் கிடைப்பதில்லை'' என்று அலுத்துக் கொண்டார்.

''ஏன்'' என்றார்கள் சர்கார். ''காலையில் இருந்து மாலை வரை ஏதாவது வேலையாக பெரிய பெரிய அதிகாரிகளும், ஆபீஸர்களும் வந்து போய்க் கொண்டே இருக்கிறார்கள். ஓய்வே இல்லை'' என்றார்.

''சரி ஒரு போலீஸ்காரரிடம் நீங்கள் பேசிக் கொண்டிருக்கும் போது இன்ஸ்பெக்டர் வந்தால் என்ன செய்வீர்கள்?'' என்றார்கள் சர்கார்.

''போலீஸ்காரரை விட்டு விட்டு இன்ஸ்பெக்டரிடம் தான் சென்று பேசுவேன்'' என்றார் அவர்.

''சரி அவரிடம் பேசிக் கொண்டிருக்கும் போது டி.எஸ்.பி. வந்தால்...'' என்று கேட்டார்கள்.

''அப்போது டி.எஸ்.பி.க்கு தான் மரியாதை செய்ய வேண்டும். அவர் தானே அந்தஸ்தில் பெரியவர்'' என்றார் அவர்.

''சரி அவரிடம் பேசிக் கொண்டிருக்கும் போது மந்திரி வந்து கூப்பிட்டால் என்ன செய்வீர்கள்?'' என்று கேட்டார்கள்.

''இவர்கள் எல்லோரையும் ஒதுக்கி விட்டு மந்திரிக்குத் தான் முக்கியத்துவம் கொடுப்பேன்'' என்றார்.

அப்போது சர்கார் அவரிடம், ''அதே போல் தான் இவரிடம் பேசிக் கொண்டிருக்கும் போது இவர்கள் எல்லோரையும் விட பெரியவனான அல்லாஹ் தன்னை சந்திக்க பள்ளிவாசலுக்கு வரும்படி உங்களை அழைக்கிறான். அப்போது இவர்கள் எல்லோரையும் ஒதுக்கி விட்டு இத்தனை பேரையும் படைத்து வளர்த்து வரும் அவனுக்கு மரியாதை கொடுப்பது தானே நல்லது'' என்று கேட்டார்கள். இது அவருடைய உள்ளத்திலே சுளீர் என்று தைத்தது. அன்றிலிருந்து தொழுகையாளியாக மாறிவிட்டார் அவர்.

கைபிய்யத் ஏன்?

ரிவாயத் :

சர்கார் பைஜி நாயகம் கூறினார்கள். ''ஒரு முறை என் ஷைகு நூரி நாயகம் மதராஸ் வந்திருந்த போது ஒரு பெரிய செல்வந்தர் அவரை சந்திக்க வந்தார். வந்தவர் கேட்டார். ''திக்ர் மஜ்லிஸ்களில் இன்னும் கவ்வாலி மஜ்லிஸ்களில் உங்கள் தரீகாவினர் கைபிய்யத் ஆகிறார்களே. கைகால்கள் எல்லாம் துடிக்கிறதே. உண்மையிலேயே அவ்வாறு துடிக்கிறதா? அது ஏன் அப்படி? என்று சற்று ஏளனமாகக் கேட்டார்.

சர்கார் அவரிடம் ''சரி அதிருக்கட்டும். நேற்று மூர் மார்கெட்டுக்கு வெளியே ஒருவர் செருப்பு தைத்துக் கொண்டிருந்தார். அவரின் சாடை உங்களிடம் இருக்கிறதே. நீங்கள் அவரின் மகனா?'' என்று கேட்டார்கள்.

அவ்வளவு தான். அவரின் இரத்தமெல்லாம் கொதித்தது! கோபத்தால் கண்கள் சிவந்து விட்டன! கைவிரல்கள் எல்லாம் நடுங்கின. மீசை துடித்தது. மனிதர் எழுந்து நின்று விட்டார். ''இதோ பாருங்கள்! நான் ஏதோ கேட்டு விட்டேன் என்பதற்காக பலர் முன்பு என்னை இப்படிக் கேவலப்படுத்துவது நன்றாக இல்லை'' என்றார் படபடப்போடு! அவர் உதடுகள் படபடத்தன!

அவரைச் சமாதானப்படுத்தி உட்கார வைத்து, ''பார்த்தீர்களா! இதற்குப் பெயர் தான் கைபிய்யத் என்கிறார்கள். உங்களை ஒரு சாதாரணமான செருப்புத் தைப்பவனோடு தொடர்புபடுத்தியதால் உங்கள் உள்ளமும் உடலும் நடுங்குகிறது. மிக உயர்ந் தவனான அல்லாஹ்வுடன் எங்களைத் தொடர்புபடுத்தி அவன் அற்பமான நம்மோடு இருக்கிறான் என்று நினைக்கும் போது எங்கள் உள்ளமும், உடலும் நடுங்குகிறது'' என்று கூறினார். அவர் சர்காரின் கால்களைப் பிடித்துக் கொண்டார். அழுது மன்னிப்பும் கேட்டுக்கொண்டார்.

<u>காதியானிகளுக்கு பதில்</u>

ரிவாயத் :

பைஜி நாயகம் கூறினார்கள். ''ஒருமுறை என்னுடைய ஷைகு நூரி நாயகத்திடம் சில காதியானிகள் தர்க்கம் செய்ய வருவதாகக் கேட்டுக் கொண்டார்கள். சர்கார் அனுமதி கொடுத்தார்கள்.

சர்காருடைய கலீபா ஒருவர் ஏற்கனவே பலமுறை காதியானி களிடம் முனாளரா - தர்க்கம் செய்து வெற்றி பெற்றிருந்தார். அவற்றையெல்லாம் தொகுத்து புத்தகங்களும் எழுதியிருந்தார். அந்த புத்தகங்களை எடுத்து வந்து, ''சர்கார் தாங்கள் இந்த புத்தகங்களை ஒரு பார்வையிட்டுக் கொண்டால் அவர்களிடம் பேச வசதியாக இருக்கும்'' என்று கேட்டுக் கொண்டார்.

அதற்கு சர்கார், ''இன்று இவர்கள் வருவார்கள். நாளை வேறு கூட்டம் வரும். இவர்கள் ஒவ்வொருவருக்காகவும் புத்தகங்கள் படித்துக் கொண்டிருக்க எங்கே நேரம் இருக்கிறது? என்னிடம் ஒரே ஒரு அல்லாஹ் இருக்கிறான். அவன் எனக்குப் போதுமானவன்'' என்று கூறி விட்டார்கள்.

காதியானிகள் தங்களிடம் பெரிய பெரிய ஆலிம்களாகக் கருதப் பட்ட சிலரோடும் நிறைய கிதாபுகளோடும் வந்து தர்க்கம் செய்ய ஆரம்பித்தனர். நிறைய கேள்விகளும் பதில்களும் தயார் செய்து கொண்டு அவர்கள் வந்திருந்தனர்.

சர்கார் அவர்களிடம் எடுத்தவுடன் ''உங்கள் தலைவரே தன்னை ''குலாம் அஹ்மத்'' - அஹ்மத் நபி (ஸல்) அவர்களுடைய குலாம் என்று கூறுகிறாரே. பின்னர் ஏன் நீங்கள் அவரை நபி என்று கூறுகிறீர்கள் என்று கேட்டார்.

அவர்களுக்கு என்ன சொல்வது என்றே தெரியவில்லை. அவர்களில் ஒருவர் சற்று சுதாரித்துக் கொண்டு ''மக்கள் அனைவரை யும் விட நபியுடைய அந்தஸ்து பெரியது தானே. எனவே அவருடைய அந்தஸ்தை பெரிதாகக் காட்டுவதற்காக நபி என்றகிறோம் என்று கூறினார்.

''அப்படியானால் எல்லோரையும் விட அந்தஸ்து பெரியவன் அல்லாஹ் தான். ஒரேயடியாக அவரையே அல்லாஹ் என்று சொல்லி விடலாமே'' என்றார்கள். அவர்கள் வாயடைத்துப் போய் திரும்பிச் சென்று விட்டார்கள்.

தர்க்கம் வேண்டாம்

ரிவாயத் :

சர்கார் நாயகம் கூறுவார்கள். ''மாற்றுக் கொள்கையுடையவர் களிடம் தர்க்கம் செய்ய விரும்பக்கூடாது. அதனால் எந்தப் பிரயோஜனமும் இல்லை. அவர்களின் இடத்தில் தேடிச் சென்று நீங்கள் தர்க்கம் செய்தால் தோல்விதான் அடைவீர்கள். ஆனால் அவர்களே உங்களைத் தேடிவந்து வாதம் செய்தால் பதில் கூறுங்கள். அல்லாஹ் உங்களுக்கு உதவி செய்வான்.

ரிவாயத் :

தாதா சர்கார் கூறுவார்கள். "கேள்வி எளிது பதில் சொல்வது சிரமம். மாற்றுக் கொள்கையுடையவர்கள் ஏதும் கேள்வி கேட்டால் திரும்பக் கேள்வியே கேளுங்கள். பதில் கூறிக் கொண்டிருந்தால் பிரயோஜனம் தராது.

ரிவாயத் :

சர்கார் நாயகம் கூறுவார்கள். "வரட்டு நிலத்துக்கு முரட்டு களப்பை" என்று மக்கள் கூறுவார்கள். வீணாக, வரட்டுத் தனமாக, பிடிவாதமாக யாரும் கேள்வி கேட்டால் அதே பாணியில் தான் பதில் சொல்ல வேண்டும். ஒருவர் சர்காரிடம், "முஸ்லிம்கள் சிறுநீர் கழிப்பதற்கு நிறைய நேரத்தை வீணாக்குகிறீர்கள். ஒரு மூலையைத் தேடிச் சென்று உட்கார்ந்து பின் தண்ணீர் ஊற்றிக் கழுவி நிறைய நேரம் செலவிடுகிறீர்கள். நாங்கள் ஒரு ஓரத்தில் நின்று சிறுநீர் பெய்து விட்டுச் சென்று விடுகிறோம்" என்றார்.

அதற்கு சர்கார் அவர்கள், "நீங்களும் தான் நேரத்தை வீணாக்குகிறீர்கள். ஒரு ஓரத்தில் நின்றாலும் அதிலும் சில நிமிடங்கள் வீணாகிறதே. அப்படியே நடந்து கொண்டே சிறுநீர் பெய்து கொண்டே செல்லலாமே. எத்தனையோ மாடுகள், எருமைகள் அப்படித்தான் பெய்கின்றன" என்று கேட்டார்கள். அப்புறம் அவர் என்ன பேசப் பேகிறார்.

சன்னியாசிக்கு பதில்

ரிவாயத் :

சர்கார் நாயகம் கூறினார்கள். என் சர்காரிடம் ஒரு சன்னியாசி வந்தார். அவர் கூறினார். "உங்கள் முஸ்லிம் மதப் பெரியவர்கள் பல பேரிடம் கேட்டு விட்டேன். யாரும் என் ஒரு கேள்விக்கு பதில் கூறவில்லை. நீங்கள் கூறமுடியுமா?" என்று கேட்டார்.

"அப்படி நான் பதில் கூறிவிட்டால் நீங்கள் முஸ்லிமாகி விட வேண்டும் சரியா?" என்று கேட்டார்கள் சர்கார். "சரி" என்று அவரும் ஒத்துக் கொண்டார்.

பிறகு கேட்டார். ''உங்கள் அல்லாஹ் எல்லா இடத்தி லும் இருப்பதாகத்தானே நீங்கள் கூறுகிறீர்கள். அப்படியானால் எங்கள் தெய்வங்களிலும், சிலைகளிலும் அல்லாஹ் இருக்கிறானல்லவா? பின்னர் ஏன் வணங்கக் கூடாது என்று தடுக்கிறீர் கள்?'' என்றார்.

சர்கார் அவரிடம், ''ஒரு மனிதன் என்றால் அவன் தலையிலிருந்து கால் வரை எல்லாமே அவனது உறுப்புகள் தானே'' என்றனர்.

''ஆமாம்!'' என்றார் அவர்.

''வெளிநாட்டு பிரதமர்கள் யாரும் நம் நாட்டுக்கு வரும் போது நமது பிரதமர் அவரைக் கையைக் குலுக்கி வரவேற்கிறார் அல்லவா?''

''ஆமாம்!''

''ஏன் அவரது இனஉறுப்பும் அவரது உறுப்புதானே! அதுவும் அவரது உடலில் தானே உள்ளது. அதைப்பிடித்துக் குலுக்கி ஏன் வரவேற்பதில்லை?'' என்று கேட்டார்கள். ஆடிப்போய் விட்டார் சன்னியாசி.

எல்லாவற்றிலும் அவன் இருந்தாலும் அவன் எதைத் தடை செய்தானோ அதை விட்டு விடுவது தானே அறிவு என்றார்கள் சர்கார்.

அவர் எதுவும் கூறாமல் சற்று நேரம் அமர்ந்து இருந்தார். பின்னர் எழுந்து கையைக் கூப்பியவாறே அப்படியே பின்னாலே சென்று முதுகைக் காட்டாமல் வெளியே சென்று விட்டார்.

இறைவன் உருவமற்றவன்

ரிவாயத் :

நமது ஷைகு பைஜி நாயகத்தைத் தேடி எத்தனையோ மாற்று மதத்தினரும் வந்து நல்லாசி வாங்கிச் சென்றனர். அவர்களை அன்புடன் வரவேற்று அமர வைத்து அவர்களின் சுக துக்கங்களை விசாரித்து அருளுரைகள் பகர்ந்து அன்பளிப்புகளும் தந்து அனுப்பி வைப்பார்கள்.

மாற்று மதத்தைச் சார்ந்த பெரிய பெரிய தொழில் அதிபர்களும், வங்கி அதிகாரிகளும், காவல் அதிகாரிகளும் பலமுறை குடும்பத்துடன் வந்து சர்கார் நாயகத்திடம் அருளாசி பெற்றுச் செல்வார்கள். அவர்

களிடத்திலும் சர்கார் நாயகம் தவ்ஹீதை எத்தி வைப்பதில் பின் வாங்கவில்லை.

ஒருமுறை ஒரு மாற்று மதத்தைச் சேர்ந்த தொழில் அதிபரிடம் பேசிக் கொண்டிருக்கும் போது ''அண்ணே! எல்லா உருவங்களிலும் அவன் தான் காட்சியளிக்கிறான். ஆனால் இந்த உருவங்கள் அவனுக்கு இல்லை. அதனால் தான் இஸ்லாம் உருவ வழிபாட்டைத் தடுக்கிறது. எங்கும் நிறைந்தவனை ஒரு குறிப்பிட்ட உருவத்தில் கட்டுப்படுத்துவது தவறல்லவா? பாருங்கள் தலைமுடியில் இருந்து கால்பாதம் வரை எல்லாமே மனிதனுடைய உறுப்புகள் தானே. எனவே உடலோடு சேர்ந்து இருக்கும் போது கண்ணும் பைஜி ஷாஹ் தான். காதும் பைஜி ஷாஹ் தான். கையும் பைஜி ஷாஹ் தான். காலும் பைஜி ஷாஹ் தான். தாலைமுடியம் பைஜி ஷாஹ் தான். தாடி முடியும் பைஜி ஷாஹ் தான். ஆனால் நான் சீவும் போது ஒரு தாடி முடி கீழே விழுந்து விட்டால் அதை எடுத்துக் கையில் வைத்துக் கொண்டு இந்த முடிதான் பைஜி ஷாஹ் என்று யாரும் சொன்னால் அது அவமதித்த தாக ஆகும் அல்லவா? ஆனால் சேர்த்துப் பார்க்கும் போது அதுவும் பைஜி ஷாஹ் தான். அதற்காக அந்த முடியை மட்டும் தனியாக்கி அது தான் பைஜி ஷாஹ் என்று கூறுவது சரியல்ல! அவ்வாறே அனைத்து உருவங்களிலும் நிறைந்திருக்கும் அவனை ஒரு குறிப்பிட்ட உருவத்தில் கட்டுப்படுத்துவதும் தவறே'' என்று விளக்கினார்.

நம்மோடு இறைவன்

ரிவாயத் :

ஒருமுறை ஒரு பெரிய போலீஸ் அதிகாரி சர்காரைப் பார்க்க வந்திருந்தார். அவரிடம் பேசிக் கொண்டிருந்த போது கேட்டார்கள். ''சரிங்க அண்ணே! தாங்கள் பார்வையிட்ட வரைக்கும் தீவிரவாதிகள், அரசியல் கைதிகள் அல்லாமல் பொதுவாக ஜெயிலில் கொலை, கொள்ளை, திருட்டு போன்ற குற்றங்களுக்காக அடைக்கப்பட்டிருக் கும் கைதிகளில் முஸ்லிம்களின் எண்ணிக்கை எவ்வளவு சதவீதம் இருக்கும்?''என்று கேட்டார்கள்.

அவரோ ''மிகவும் குறைவுதான் ஐயா. நூற்றுக்கு ஒருவர் தான் இருப்பார் என்று நினைக்கிறேன்'' என்றார்.

அதற்கு சர்கார் ''இந்திய மக்கள் தொகையில் முஸ்லிம்கள் இருபது சதவீதம் இருக்கிறார்கள். அப்படியானால் சிறையிலும் நூற்றுக்கு இருபது பேர் இருக்க வேண்டும் அல்லவா! ஆனால் மிகவும் குறைவாக இருக்கிறார்களே! என்ன காரணம் தெரியுமா?'' என்று கேட்டார்கள்.

''தெரியவில்லையே ஐயா'' என்றார் அவர்.

அதற்கு சர்கார் ''அரசாங்கம் சட்டம் இயற்றுகிறது. தவறுகள் செய்ய வேண்டாம் என்று தடுக்கிறது. ஆனால் ஒவ்வொரு நிமிடமும் மக்களை கண்காணிக்க முடியாது. ஆனால் இறைவன் இன்னது செய்யாதே என்று தடுத்து கூடவே ஒவ்வொரு வினாடியும் இருந்து கண் காணிக்கிறேன் என்கிறான். ஒவ்வொரு முஸ்லிம் சிறுவர்களுக்கும் இறைவன் நம்மோடு இருக்கிறான். நம்மைப் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்று சிறுவயது முதலே சொல்லித் தரப்படு கிறது. அந்த இறையச்சமே பெரும்பாலும் பாவங்களை விட்டும் தடுத்து விடுகிறது. எனவே தான் குற்றவாளிகள் குறைவாக இருக்கிறார்கள் என்று விளக்கம் கூறினார்கள்.

நூற்றுக்கு நூறு உண்மைதான் என்று ஒத்துக் கொண்டார் அவர்.

அனைவரையும் நேசிப்போம்

ரிவாயத் :

மாற்று மதத்தினர் பலர் சர்காரை மிகவும் மதித்து வந்தனர். غوثی شاہ கௌஸி ஷாஹ் சர்கார் அவர்கள் தங்கள் طیبات غوثی தய்யிபாத் கௌஸில் எழுதுகிறார்கள்.

کہتے مسلم مجھے کافر تمام   کہتے ہیں مسلم کہ کافر ہوگیا

எத்தனையோ காபிர்கள் ''என்னை இவர்தான் உண்மை முஸ்லிம்'' என்று கூறுகிறார்கள். ஆனால் சில முஸ்லிம் களோ என்னை ''இவர் காபிர் ஆகிவிட்டார்'' என்று கூறுகிறார்கள். அவ்லியாக்களின் சரித்திரத்திலே இத்தகைய நிகழ்ச்சிகள் நிறையக் கிடைக்கும்.

சர்கார் நாயகம் மாலை நேரங்களில் வாகிங் செல்வார்கள். சில நேரங்களில் மெயின் ரோட்டின் வழியாகச் செல்லும் போது இரு பக்கத்திலும் உள்ள கடைகளில் உட்கார்ந்திருக்கும் பிற மதத்தவர் களும் மரியாதையுடன் எழுந்து நின்று வேட்டியை மடக்கிக்

கட்டியிருந்தாலும் அதை அவிழ்த்து விட்டு தலையில் கட்டியிருக்கும் துண்டை அவிழ்த்து இடுப்பில் கட்டிக் கொண்டு கையிரண்டையும் கூப்பி மரியாதையாக நிற்பார்கள்.

அவர்கள், ''டேய்! அங்கே பார்! கடவுளே எழுந்து நடந்து வருவது போல் இருக்கிறது'' என்று தங்களுக்குள் பேசிக் கொள்வார்கள்.

நடைப்பயிற்சி

ரிவாயத் :

சர்கார் லால்பேட்டை ஹைஸ்கூல் மைதானத்திற்குத் தான் வழக்கமாக வாகிங் செல்வார்கள். ஒரு துண்டால் தலையில் தலைபாகை கட்டியிருப்பார்கள். கையில் அசா வைத்திருப்பார்கள். கூடவே ஓரிரு முரீதுகள் வருவார்கள். ஒருவர் சர்காருடைய வெந்நீர் பிளாஸ்கை கையில் எடுத்து வருவார். தஃலீம் பேசிக் கொண்டே நடந்து செல்வார்கள். மைதானத்தை இரண்டு மூன்று முறை வலம் வருவார்கள். நடக்கும் போது ''அல்லாஹு அல்லாஹ்'' என்று கூறி நடக்க வேண்டும் என்று பயிற்சி அளிப்பார்கள். அங்குள்ள ஒவ்வொரு மரங்களிலும் செடி கொடிகளிலும் எப்படி ஷுஹூது செய்வது என்று கற்றுக் கொடுப்பார்கள். அந்த மைதானம் சர்காரின் மறைவை அறிந்து கண்ணீர் விட்டு அழுததோ என்னவோ எஜமானின் இறுதித் தொழுகையும் அந்த மைதானத்திலேயே நடைபெற்றது. அப்படி ஒரு கூட்டத்தை அதற்கு முன் அந்த மைதானம் பார்த்திருக்கவில்லை. மழைத் துளிகளால் மட்டுமே நனைந்து அனுபவப்பப்பட்ட அந்தத் தரை அன்று கண்ணீர் துளிகளால் நனைந்தது.

ரிவாயத் :

சர்கார் வாகிங் சென்று திரும்பும் போது சிறு பிள்ளைகள் கை களில் தண்ணீர் பாட்டில்களை வைத்துக் கொண்டு வரிசையாக நிற்பார்கள். சர்கார் பொறுமையாக எல்லோருக்கும் ஓதி ஊதி விட்டே செல்வார்கள்.

ரிவாயத் :

லால்பேட்டையில் வாழும் சிலர் சர்காரிடம் வந்து ''சர்கார் எங்கள் தெருவில் பல வீடுகளில் குமரிப் பெண்கள் திருமணமாகாமல்

வருடக்கணக்கில் இருக்கிறார்கள். துஆச் செய்யுங்கள்'' என்று கேட்டுக் கொண்டனர். சர்கார் அந்தத் தெரு வழியாக ஓரிரு முறை வாகிங் சென்றார்கள்.

کوئی دیکھنا اسے دیکھنا کہ نظر میں اس کے ہیں کیمیاء

யாரும் பார்ப்பதாக இருந்தால் அவர்களை அல்லவா பார்க்க வேண்டும். இரும்பையும் பொன்னாக்கும் வித்தை அந்தப் பார்வையில் இருக்கிறது என்று கௌஸி ஷாஹ் (ரலி) படிக்கிறார்கள்.

ஓரிரு மாதங்களில் அந்தத் தெருவில் எல்லாப் பெண்களுக்கும் திருமணம் கூடி வந்தது. பிறகு வேறொரு தெருவாசிகளும் வேண்டிக் கொண்டனர். அவ்வழியே ஓரிரு முறை சென்று வந்தார்கள். அங்கும் அடுத்தடுத்த மாதங்களில் அனைவருக்கும் திருமணம் நடந் தேறியது. இவ்வாறே பல தெருவாசிகள் அவர்களின் அருளாசியால் மகிழ்ச்சியடைந்தனர்.

ரிவாயத் :

உடல் நலத்துக்காகவும், இபாதத்களில் உற்சாகம் ஏற்படவும் ''வாகிங்'' செல்வதும் இபாதத் தான் என்று சர்கார் நாயகம் கூறு வார்கள். தாதா சர்கார் முதிய வயதிலும் உடற்பயிற்சி செய்பவர்களாக இருந்தார்கள்.

ரிவாயத் :

சர்கார் வெளியூர்களுக்குச் சென்றாலும் தகுந்த இடம் இருந்தால் சற்று உலவி வருவதற்காக வெளியே செல்வார்கள். பொருள் வைத்த சேரியில் தங்கியிருந்தால் மாலையில் மஞ்சக் கொள்ளையின் ஏறி வரை வாகிங் செல்வார்கள். ஏறத்தாழ ஒரு மணி நேரம் நடப்பார்கள். ஒரு முறை கூறினார்கள். ''நான் வாகிங் சென்று திரும்பும் போது பொரவச்சேரி எல்லையில் இருந்த கோவில் சிலைகளைக் கண்டு மௌலாவிடம் கேட்டேன். எஜமானே இந்த சிலைகளிலும் உன் உஜூது தானே இருக்கிறது. ஒரு வணக்கம் வைக்கட்டுமா?'' என்றேன். அதற்கு எஜமான் ''இந்தச் சிலைகளிலும் என் உஜூது தான் இருக்கிறது. என்றாலும் இங்கே முளில்லு - வழி கெடுப்பவன் என்ற சிபத்திலே தஜல்லியாகி இதை வணங்குபவர்களை நரகம் கொண்டு

சேர்ப்பதற்காக இதில் இருக்கிறேன்! உங்களுக்காக பள்ளிவாசல் இருக்கிறது. அங்கும் நான் தான் இருக்கிறேன். அங்கே உங்கள் வணக்கத்தை வைத்துக் கொள்ளுங்கள்'' என்று கூறினான்.

ஷுஹூது செய்வது

ரிவாயத் :

சர்கார் நாயகம் கூறினார்கள். கோவில்களிலும், சிலைகளிலும் அவனுடைய உஜூது தான் இருக்கிறது.

فَاَيۡنَمَا تُوَلُّوۡا فَثَمَّ وَجۡهُ اللّٰهِ

''நீங்கள் எங்கு திரும்பினாலும் அங்கு அல்லாஹ்வின் திருமுகம்தான் உஜூது தான் காட்சியளிக்கிறது'' என்று அல்லாஹ் கூறுகிறான். அதற்கு பிற மதத்தினரின் கோவில்களும், சிலைகளும் விதி விலக்கல்ல. எனவே தான் அல்லாஹ் குர்ஆனில்,

وَلَوۡلَا دَفۡعُ اللّٰهِ النَّاسَ بَعۡضَهُمۡ بِبَعۡضٍ لَّهُدِّمَتۡ صَوَامِعُ
وَبِيَعٌ وَّصَلَوٰتٌ وَّمَسٰجِدُ يُذۡكَرُ فِيۡهَا اسۡمُ اللّٰهِ كَثِيۡرًا

''அல்லாஹ் மனிதர்களில் சிலரைக் கொண்டு சிலரை அடக்கி வைத்திராவிட்டால் சர்ச்களும், மடங்களும், மஸ்ஜித்களும் இடித்துத் தகர்க்கப்பட்டிருக்கும்'' என்று கூறுகிறான். எனவே அவற்றையும் அல்லாஹ்வே பாதுகாத்து வருகிறான். தனது ஒவ்வொரு சிபத்துக்கும் மஜ்ஹராக ஒவ்வொரு வஸ்துவையும் அல்லாஹ் படைத்திருக்கிறான்.

என்றாலும் ''நான் கோவில்களிலும் சிலைகளிலும் ஷுஹூது செய்கிறேன். இறைவனை தரிசிக்கிறேன்'' என்று கூறிக் கொண்டு அங்கே சென்று நிற்பது சரியல்ல. வேறு எத்தனையோ கோடி வஸ்துக்கள் ஷுஹூது செய்வதற்கு இருக்கும் போது அங்கு ஏன் தேடிச் செல்ல வேண்டும்?

ஆனால் ஒரு ஆரிப் - இறைஞானி எல்லா வஸ்துக்களிலும் حق بظاہر بصورت شی இந்த வஸ்துக்களின் தோற்றத்திலும் அவனே இருக் கிறான் என்று ஷுஹூது செய்து வரும்போது எதிரில் கோவில்களும், சிலைகளும் வந்தால் அதிலும் சேர்த்து அவர் ஷுஹூது செய்தால் தவறு இல்லை.

ரிவாயத் :

சர்கார் நாயகம் கூறினார்கள்.''ஹராமான வஸ்துக்களில் ஷுஹுது செய்வதும் ஹராமாகும்'' என்று சர்கார் நாயகம் கூறினார்கள். அன்னியப் பெண்களையும், அம்ரதாக தாடி மீசை முளைக்காத சிறுவர்களையும் இச்சையுடன் பார்ப்பது ஹராமாகும். அவர்களில் ஷுஹுது செய்வதும் ஹராமாகும். அன்னியப் பெண்களைப் பார்க்க வேண்டாம் என்று அல்லாஹ் தடுக்கிறான். அவன் அந்த அன்னியப் பெண்ணிலும் இருக்கிறான். நாம் அவளைப் பார்ப்பதையும் அவன் அறிகிறான்.

يَعْلَمُ خَآئِنَةَ الْأَعْيُنِ وَمَا تُخْفِى الصُّدُوْرُ ۝

''கண்கள் செய்யும் சதி மோசங்களையும், உள்ளம் மறைத்து வைத்திருப்பதையும் அவன் அறிகிறான்.''

ஒரு ஷைகு தன் முரீதுடன் தெருவில் நடந்து கொண்டிருந்தார். எதிரில் ஒரு அழகிய சிறுவன் வந்தான். முரீது அவனை இச்சையுடன் பார்த்தார். அதை அறிந்த ஷைகு முரீதைக் கண்டித்தார். அதற்கு அந்த முரீது, ''ஷைகு அவர்களே இந்த அழகிய தோற்றத்தையுமா அல்லாஹ் நரகில் போடுவான் என்று பார்த்து வியந்து கொண்டிருந் தேன்'' என்று கூறினார். அதற்கு ஷைகு அவர்கள் ''உமது உள்ளத்தில் உள்ளதை அல்லாஹ் நன்கு அறிவான். இதற்குரிய தண்டனையை விரைவில் பெறுவீர்'' என்று கூறினார். சிறிது நாட்களில் அவர் மனனம் செய்திருந்த குர்ஆன் முழுதும் மறந்து போய் விட்டது. அல்லாஹ் காப்பாற்றுவானாக! வெளியில் யாருக்கும் மறைத்தாலும் இறைவன் முன் எதுவும் மறைந்ததில்லை. அவனை அஞ்ச வேண்டும்.

பெண்களிடம் எச்சரிக்கை

ரிவாயத் :

ஒருமுறை கூறினார்கள். ''மூன்று வயது பெண் குழந்தையாக இருந்தாலும் அதன் தலையில் கை வைத்து ஓதிப் பார்க்கக் கூடாது'' என்று கூறினார்கள்.

ரிவாயத் :

இன்னொரு முறை தஃலீம் செய்யும் போது, ''பெண்களிடம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அதைவிட அம்ரதான சிறுவர் களிடம் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். காரணம் பெண்கள் இயற்கையாகவே வெட்கம் மிகுந்தவர்கள். அவர்கள் மற்ற ஆண்களோடு கலந்து பழகவே கூச்சப்படுவார்கள். அவர்களின் பெற்றோரும் அவர்கள் விஷயத்தில் மிகவும் எச்சரிக்கையாக இருப்பார் கள். எனவே அவர்களைக் கொண்டு தவறு ஏற்படும் சந்தர்ப்பம் மிகவும் குறைவு. ஆனால் தாடி, மீசை இல்லாத சிறுவர்கள் அப்படியல்ல. அவர்கள் சதாரணமாக எல்லா இடங்களுக்கும் செல்கிறார்கள். அவர்களுடன் ஒருவன் பழகுவதை மக்கள் தவறாக கருதுவதும் இல்லை. இதுவே தவறுகள் நடக்க பல சந்தர்ப்பங்களை ஏற்படுத்துகிறது. மேலும் பெண்களிடம் ஒரு ஷைத்தான்; பையனிடம் ஒன்பது ஷைத்தான் என்று சொல்வார்கள். பெண்ணை ஆண் இச்சை யுடன் பார்ப்பான். ஆனால் அம்ராதான பையனை ஆணும் பெண்ணும் இச்சையுடன் பார்ப்பார்கள். எனவே அம்ரதான சிறுவர்களை பெண் களுடனும், ஆண்களுடனும் சர்வ சாதாரணமாக பழக விடுவது மிகவும் தவறாகும்'' என்று கூறினார்கள்.

ரிவாயத் :

''நபி (ஸல்) அவர்கள் பிள்ளைகளுக்கு பத்து வயதானால் படுக்கையைப் பிரித்து படுக்க வைய்யுங்கள்'' என்று கூறினார்கள். எனவே பத்து வயதாகி விட்டால் அந்தப் பையனை பெண்களோடு பழக விடக் கூடாது என்று சர்கார் நாயகம் சொல்வார்கள். 12 வயது ஆகிவிட்டாலோ அவர்களை பெரிய ஆண்கள் வகையில் சேர்த்து விடவேண்டும் என்பார்கள். எனவே சர்கார் வீட்டில் 12 வயதுடைய சிறுவர்கள் யாரையும் உள்ளே அனுமதிப்பதில்லை. அதே போல் சர்காருடைய பேரன் பேத்திகளுக்கும் 12 வயதாகி விட்டால் அவர் களை ஒருவருக்கொருவர் பார்த்துக் கொள்ளவும் அனுமதிப்பதில்லை. அதே போல் கணவனுடைய அண்ணன், தம்பி முன்பு மனைவி நிற்பதையும் சர்கார் ஒரு போதும் அனுமதிக்கவில்லை. '' 'அல்ஹமு அல்மௌத்' என்று ஹதீஸில் வருகிறது. அதாவது மற்றவர்களை விட

தன் கணவனுடைய சகோதரர்களிடம் மனைவி மிகவும் எச்சரிக்கையுடன் தான் பழக வேண்டும். தனது சொந்த அண்ணன், தம்பி போல் பழகக் கூடாது'' என்பார்கள்.

''சிலரோ பால் வடியும் முகம் தானே! இந்தப் பையன் வீட்டுக்குள் வந்தால் என்ன? என்று கேட்பார்கள். ஆனால் நான் பேப்பரில் பார்த்திருக்கிறேன். பன்னிரண்டு வயது பதிமூன்று வயது சிறுவர்கள் கூட ஒரு குழந்தைக்கு தகப்பனாகி இருக்கிறார்கள். எனவே தான் ஷரீஅத் பத்து வயதிலேயே பிரிக்கச் சொல்கிறது'' என்று கூறினார்கள்.

ரிவாயத் :

ஒருமுறை ஒரு காரில் ஆண் துணையில்லாமல் சில பெண் கள் சர்காரைப் பார்க்க வந்தார்கள். சர்கார் அவர்களிடம் மிகக் கடுமையான முறையில் கோபித்துக் கொண்டார்கள். மார்க்கச் சட்டத்துக்கு புறம்பான காரியம் மட்டும் இன்றி மக்களுடைய வீண் பித்னாவுக்கும் ஆளாக நேரிடும். இனி ஒரு போதும் இது போன்று நடக்கக் கூடாது'' என்று கடும் எச்சரிக்கை செய்தார்கள்.

ரிவாயத் :

ஒருமுறை கூறினார்கள். ''எப்படி ஆண்மையில்லாத ஒருவன் திருமணம் செய்வது ஹராமோ அவ்வாறே பாசிக் (பாவம் செய்யக்கூடிய) ஷைகு பைஅத் கொடுப்பதும் ஹராமாகும்.''

ரிவாயத் :

ஒருமுறை கூறினார்கள்

یہ مسند محمدی ہے اس مسند میں اللہ کوئی اناڑی کو بٹھاتا نہیں

''மஷீகத் - மக்களுக்கு நேர்வழி காட்டுதல்'' என்பது ரசூல் (ஸல்) செய்த வேலை. அல்லாஹ் இந்த அந்தஸ்தில் ஒரு பேயனைக் கொண்டு வந்து உட்கார வைப்பதில்லை.

ரிவாயத் :

ஒருமுறை முரீதுகளைப் பார்த்து தன் தாடியைத் தொட்டுக் காண்பித்துச் சொன்னார்கள். ''அல்லாஹ்வைப் பற்றி சொல்லிச்

சொல்லியே என் தாடி நரைத்து விட்டது. என்னை நீங்கள் கேவலப்படுத்தி விடாதீர்கள். நீங்கள் தவறு செய்தால் இன்ன ஷைகுடைய முரீது தானே இவர் என்று மக்கள் என்னையும் சேர்த்துத்தான் பேசுவார்கள்.''

ஷரீஅத்தில் உறுதி

ரிவாயத் :

அன்பின் மறுவடிவமாக விளங்கிய சர்கார் நாயகம் அதே நேரத்தில் மார்க்க சட்டதிட்டத்தில் மிகவும் பேணுதலாக இருப்பார்கள். அதற்கு யாரும் மாறு செய்தால் கடும் கோபம் அடைவார்கள். அவர்களுடைய இளம் வயதிலேயே இந்தப் பழக்கம் எஜமானிடம் குடியிருந்தது. சர்காரின் சகோதரர் ஒருவர் கூறுகிறார். ''ஒருமுறை ரமலான் மாதம் பகல் நேரத்தில் வெளியே சென்றிருந்த சர்கார் வீட்டுக்குள் நுழைந்தார்கள். நேரே அடுப்பங்கரை சென்று கறி சால்னா வெந்து கொண்டிருந்த சட்டியை கீழே போட்டு உடைத்து விட்டார்கள். ''நேன்பாளிகளின் நோன்புக்கு உங்களி டம் ஒரு மதிப்பே இல்லையா? தெருவே மணக்கும்படி இப்படி சால்னா வைக்கிறீர்களே' என்று கடிந்து கொண்டார்கள்.''

வாஸ்து பார்க்கலாமா?

ரிவாயத் :

சர்காருடைய இளமைக் காலத்தில் சர்காருடைய தகப்பனார் வீடு கட்டினார். வீட்டில் கதவு வைக்கும் போது ''கதவை இங்கு வைத்தால் தான் நல்லது. பெண்கள் மீது பார்வை படாது'' என்று குறித்துக் கொடுத்தார்கள். அங்கே நிலைப்படியும் வைக்கப்பட்டது. சர்கார் வெளியே எங்கோ சென்றிருந்த போது சர்காரின் தகப்பனாரிடம் ஒரு வாஸ்து பார்ப்பவர் வந்து, ''இங்கு கதவு இருப்பது வாஸ்துப்படி சரியல்ல. அது இங்கு இருக்க வேண்டும்'' என்று இடத்தை மாற்றி வைத்தார். அதன்படி வேலை ஆரம்பமானது. வீட்டுக்கு வந்த சர்கார் அதைப் பார்த்தவுடன் கடும் கோபம் அடைந்து கதவைப் பிடுங்கி மாற்றி வைத்தார்கள். வாஸ்து பார்ப்பவரை ஓட ஓட விரட்டினார்கள்.

மஸ்ஜிதில் ஏலம்

ரிவாயத் :

லால்பேட்டை மஸ்ஜிதுக்கு சொந்தமான தென்னை மரங்களில் பறித்த தேங்காயை ஏலம் விடுவார்கள். அவ்வாறு ஒரு சிலமுறை சர்கார் ஏலம் எடுத்துள்ளார்கள். அப்போது ஒருமுறை ஜமாலீ ஷாஹ் கிப்லா அவர்கள் சர்காரைப் பார்க்க வந்திருந்த போது ''ஏலம் விடுவது, ஏலம் எடுப்பது இரண்டுமே மார்க்கப்படி அனுமதிக்கப்பட்டதாக இருந்தாலும் மஸ்ஜிதில் ஏலம் எடுப்பதை நான் விரும்பவில்லை. இங்கு முகதாட்சணைக்கு இடம் உள்ளது. ''அதாவது இன்னவர் கேட்டு விட்டார். நாம் அடுத்த விலையைக் கூறினால் அவர் வருத்தப்படலாம்'' என்பதற்காக கேட்காமல் விட்டு விடலாம். அதனால் மஸ்ஜிதுக்கு நஷ்டம் ஏற்படலாம் அல்லவா'' என்று கூறினார்கள். ''ஆம் அவ்வாறு நடக்க வாய்ப்புள்ளது'' என்று கூறிய சர்கார் பைஜி நாயகம் கடந்த வருடங்களில் எடுத்த ஏலங்களுக்குப் பகரமாக இன்னொரு மடங்குப் பணத்தை மஸ்ஜிதுக்குக் கட்டினார்கள். அதன்பின் ஏலம் எடுக்காமல் இருந்து கொண்டார்கள்.

தாடி சிரைத்தல்

ரிவாயத் :

சர்காருக்குச் சொந்தமான சில கடைகளை வாடகைக்கு விட்டிருந்தார்கள். ஒரு கடையில் முஸ்லிம் ஒருவர் முடி வெட்டும் கடையை வைத்திருந்தார். ஒருமுறை ஜமாலீ ஷாஹ் கிப்லா அவர்கள் பைஜி நாயகத்தை பார்க்க வந்திருந்த போது ''தாடியை வெட்டுவதும் சிரைப்பதும் ஹராம் என்று மார்க்கம் கூறியுள்ளது. அவ்வாறு சம்பாதித்த பணத்தில் தானே அவர் வாடகை கொடுப்பார். அது நமக்கு ஹலாலாகுமா?'' என்று கேட்டார்கள். சர்கார் உடனே அந்த முடி வெட்டுபவரை அழைத்து அவர் அதுவரை கொடுத்த வாடகைப் பணத்தையும் திரும்பக் கொடுத்து கடையை மாற்றிக் கொள்ளச் சொன்னார்கள்.

மார்க்க விளக்கம்

ரிவாயத் :

சர்கார் நாயகம் ஒருமுறை ரமலான் சில்லாவில் ''கியாமத் நெருக்கத்தில் ரொம்பப் பேர் தவ்ஹீதைப் பேசுவார்கள். ஆனால் மார்க்க சட்டத்திட்டங்களைப் பேச மாட்டார்கள்'' என்று மகான்கள் கிதாபுகளில் எழுதியுள்ளார்கள். எனவே இன்று மார்க்க சட்ட திட்டங்களைப் பேசுவோம் என்று கூறி அன்று முழுதும் ஜகாத்தின் சட்ட திட்டங்களைப் பேசினார்கள். அது சம்பந்தமாகவும் இறைஞானக் கருத்துகளைக் கூறினார்கள்.

ரிவாயத் :

ஒருமுறை ''குத்தகைக்கு வீடு பிடிக்கலாமா?'' என்று ஒருவர் சர்காரிடம் கேட்டார். சர்கார் அருகில் இருந்த ஆலிம் ஸாஹிப் ஒருவரிடம் கேட்டார்கள். அவரோ ''மொத்தமாகப் பணம் கொடுத்து விட்டு மாதமாதம் வாடகை கொடுக்காமல் இருந்தால் அதுவும் ஒரு வகையில் வட்டியில் தான் சேரும். எனவே ஹீலா மஸ்அலாவாக - தந்திரம் செய்யலாம். அதாவது மாதமாதம் ஒரு பத்து ரூபாய் வாடகையாகக் கொடுத்து விடலாம்'' என்றார். சர்கார் நாயகம் ''1000 ரூபாய் வாடகை வரும் வீட்டை பத்து ரூபாய் வாடகைக்கு விடுவது நீங்கள் மொத்தமாகக் கொடுத்த பணத் திற்குத்தானே. அப்படியானால் மீதி 990 ரூபாய் வட்டி தானே இது எப்படி சரியாகும்'' என்று கூறினார்கள்.

ரிவாயத் :

ஒருமுறை ஒரு செல்வந்தர் சர்காரைப் பார்க்க வந்திருந்தார். தான் ஒரு சில கடைகளும் ஒரு லாட்ஜும் வைத்திருப்பதாகக் கூறினார். ''லாட்ஜுகளில் கணவன் மனைவி என்று கூறிக் கொண்டு விபச்சாரம் புரிபவர்களும் வந்து தங்குகிறார்கள். இவ்வாறு பெரும் பாவங்களுக்கு நாம் உதவி செய்ததாக ஆகக் கூடாதல்லவா?'' எனவே இவை போன்ற வருமானங்களை தவிர்ந்து கொள்ள வேண்டும் என்று கூறினார்கள்.

ரிவாயத் :

ஒருமுறை ஒரு முரீது ஷைகு நாயகத்திடம் "நான் பித்ரா பணத்தை யாரிடம் கொடுப்பது?" என்று கேட்டார். "நீயே தின்று சாவு" என்று கோபத்துடன் கூறினார்கள். "அதற்குத் தான் ஆயிரக் கணக்கான உலமாக்கள் இருக்கிறார்களே! மார்க்க சட்ட திட்டங்களை அவர்களிடம் கேட்க வேண்டியது தானே!" என்றார்கள்.

ரிவாயத் :

சர்கார் பைஜி நாயகம் இறைஞானத்தின் கடலாக இருந்ததுடனே மார்க்க சட்டதிட்டங்களைத் தெளிவாக அறிந்திருந்தார்கள். இருப்பினும் எந்த மஸ்அலாவையும் ஒரு ஆலிமிடம் கேட்காமல் அவர்கள் செய்ய மாட்டார்கள். அவரை தனக்கு சனதாக ஹுஜ்ஜத்தாக ஆக்கிக் கொள்வார்கள்.

ரிவாயத் :

தங்கள் 70தாவது வயது வரை நின்றே தராவீஹ் தொழுகை களையும் தொழுவார்கள். பின்னர் நின்று தொழுக இயலாமல் ஆன போது "இன்னின்ன சிரமங்கள் உள்ளன. நான் உட்கார்ந்து தொழுலாமா?" என்று ஜமாலீ ஷாஹ் கிப்லாவிடம் கேட்டு அவர்கள் சரி என்று கூறிய பின்னரே உட்கார்ந்து தொழுதார்கள்.

ஆலிம்களுக்கு மரியாதை

ரிவாயத் :

ஆலிம்களுக்கு மிக மிக மரியாதை செய்யும் பழக்கம் சர்காரிடம் இருந்தது. அவர்கள் தான் "ஹுப்பாஜே ஷரீஅத்" - ஷரீஅத்தை பாது காப்பவர்கள் ஆரிபீன்களோ இறைக் காதலில் மூழ்கியிருப்பவர்கள். அவர்களால் ஷரீஅத் பாதுகாக்கப்படாது. ஆலிம்களை அவமரியாதை செய்வது ஷரீஅத்தை அவமரியாதை செய்வதாகும். சில முரீத்கள் தரீகத்தின் இஸ்திலாஹி பழக்க பாஷைகளில் ஒரு நான்கு வார்த்தைகளைக் கற்றுக் கொண்டு ஏழு வருடம் ஓதிய உலமாக் களுக்குக் கூட இது தெரிவதில்லை என்று பெருமை கொள்கிறார்கள். அவ்வாறு நினைப்பவர்கள் மடையர்களைத் தவிர வேறு இல்லை" என்று சர்கார் அவர்கள் கூறுவார்கள்.

ரிவாயத் :

ஒருமுறை ஒரு முரீது புதிதாக கார் வாங்கி சர்காரிடம் காட்டி துஆ வாங்குவதற்காக லால்பேட்டை கொண்டு சென்றார். சர்காரின் முரீதாக இருந்த ஒரு ஆலிமும் சர்காரைக் காண வருவதாகக் கூறவே அவரையும் அழைத்துச் சென்றார். சர்கார் அந்தக் காருக்கு துஆச் செய்தார்கள். அல்லாஹ் இந்த வண்டியை எல்லா ஆபத்துகளில் இருந்தும் பாதுகாப்பானாக! நற்காரியங்களுக்கு உதவியாக ஆக்கி வைப்பானாக! பொறாமைக்காரர்களின் தீங்கை விட்டும் கண்ணேறு படாமலும் பாதுகாப்பானாக! என்று துஆச் செய்தார்கள். பின்னர் கூறினார்கள். ''நீங்கள் ஒரு ஆலிமை அழைத்து வந்ததன் மூலம் அது வண்டிக்கு கப்பாராவாக ஆகி விட்டது. (அதாவது அல்லாஹ் வண்டியைக் கொடுத்ததற்கு நன்றி செய்ததாக ஆகி விட்டது.)

ரிவாயத் :

ஒருமுறை இந்த அடியானிடம் ''பேங்கில் நாம் வைத்திருக்கும் பணத்திற்கு வட்டி தருகிறார்கள். அதைத் தனியே வைத்துள்ளேன். என்ன செய்வது?'' என்று கேட்டார்கள். ''நன்மையை எதிர்பாராமல் ஏழைகள் யாருக்கும் தந்து விட வேண்டும். எனினும் உணவுக்காக வழங்காமல் வேறு வேலைகளுக்கு பயன்படுத்தச் செய்வது நல்லது'' என்று கூறினேன். அவ்வாறே ஒரு ஏழையை அழைத்து அவரின் கூரை வீட்டை சரிபடுத்திக் கொள்ளச் சொல்லி அந்தப் பணத்தைக் கொடுத்தார்கள். பணத்தை என் கையில் கொடுத்து நீங்களே கொடுத்து விடுங்கள் என்று கூறினார்கள்.

ரிவாயத் :

தங்கள் சபைகளில் உலமாக்களையே முன்னால் அமரச் செய்வார்கள். பின்னால் அமர்ந்தாலும் முன்னால் அமரச் சொல்லி அமர வைப்பார்கள். ஒரு ஆலிமிடம் சொல்வது 1000 பேரிடம் சொல் வதற்குச் சமம் என்பார்கள். அவர்களின் 25 கலீபாக்களில் 20 பேர் ஆலிம்கள் என்பதில் இருந்து ஆலிம்களை எந்த அளவு கண்ணியப் படுத்தினார்கள் என்பது தெரியவரும்!

நன்றிக்கு நன்றி

ரிவாயத் :

மாற்று மதச் சகோதரர்களிடமும் அன்பாகப் பழகிய சர்கார் பைஜி நாயகம் அவர்கள், அவர்கள் தரும் அன்பளிப்புகளையும் ஏற்றுக் கொள்வார்கள். மேலும் அதை விடச் சிறந்த அன்பளிப்புகளை அவருக்கு வழங்குவார்கள். "அவர்களுடைய இஹ்ஸான் (உதவி) என் பேரில் இருப்பதை நான் விரும்பவில்லை" என்று கூறுவார்கள்.

ரிவாயத் :

ஒருமுறை கூறினார்கள். "நூரி நாயகம் ஒரு முறை ஆயங்குடி வந்திருந்த போது ஒரு மாற்று மத சகோதரர் பெரிய வாழைப் பழத்தார் ஒன்றைக் கொண்டு வந்து அன்பளிப்பாக வழங்கி தனக்காகப் பிரார்த்திக்குமாறு கேட்டுக் கொண்டார். அவருக்காக என்ன பிரார்த் தனை செய்வார்கள் என்று நாங்கள் கூர்ந்து கவனித்தோம். சர்கார் தங்கள் கைகளை ஏந்தி "இறைவா இவர் பிறந்த நோக்கத்தை முழுமை யாக அடைய நீ அருள் புரிவாயாக!" என்று பிரார்த்தனை செய்தார்கள்.

கொட்டிய மழை

ரிவாயத் :

ஒருமுறை தாதா சர்கார் லால்பேட்டைக்கு வந்திருந்த போது ஊர் மக்கள் "மழையே இல்லாமல் பஞ்சமாக இருக்கிறது. தங்கள் ஷைகிடம் சொல்லி துஆச் செய்யச் சொல்லுங்கள்" என்று சர்காரிடம் கூறினார் கள். சர்கார் இந்த செய்தியை தாதா சர்காரிடம் கூறிய போது இப்போது மழை பெய்தால் கான்காவில் திறந்த பகுதி வழியாக தண்ணீர் உள்ளே வந்து விடுமே என்று கூறினார்கள். சர்கார் நாயகம் அதைச் சரி செய்து விட்டு வந்து சொன்னார்கள். கட்டிலில் படுத்திருந்த தாதா சர்கார் அப்படியே திரும்பிப் படுத்தார்கள். அவ்வளவு தான் எங்கிருந்தோ திரண்டு வந்த மேகக் கூட்டங்கள் மழையக் கொட்டோ கொட்டென்று கொட்டித் தீர்த்தன. ஊர் மக்கள் மகிழ்வடைந்தனர்.

ரிவாயத் :

ஒருமுறை கடும் மழை பொழிந்து ஊரையே வெள்ளம் சூழ்ந் திருந்தது. அப்போது மீண்டும் மேகக் கூட்டங்கள் திரண்டு மழை ஊற்றிக் கொண்டிருந்தது. சர்கார் வீட்டு வாசலில் வந்து நின்று

اَللّٰهُمَّ حَوَا اِلَيْنَا وَلاَ عَلَيْنَا

"அல்லாஹும்ம ஹவாலீயனா வலாஅலைனா" என்று வானத்தை நோக்கிக் கை நீட்டிக் கூறினார்கள். உடனே மழை நின்றது. மேகக் கூட்டங்கள் விலகிச் சென்றன.

ரிவாயத் :

ஒருமுறை வெள்ளம் வந்து லால்பேட்டை மெயின் ரோட்டைத் தாண்டி தண்ணீர் ஓடிக் கொண்டிருந்தது. சர்கார் நாயகம் சொன்னார் கள். நான் அல்லாஹ்விடம் துஆச் செய்தேன். "அதற்கு அல்லாஹ் நீங்கள் எனக்கு எதுவும் சொல்ல வேண்டாம். மக்களுக்கு சொல்லுங் கள். அவர்கள் ஒழுங்காக நடந்தால் நான் ஏன் கஷ்டப்படுத்துகிறேன் என்று கூறினான்" என்று சர்கார் நாயகம் சொன்னார்கள்.

அவனையே கண்டேன்

ரிவாயத் :

சர்கார் நாயகம் சொன்னார்கள். ஒருமுறை நான் ஹைதராபாத் சென்றிருந்த போது நூரி நாயகம் அங்கு நடந்து வந்த மதரஸாவுக்கு உதவி செய்யுமாறு மக்களிடம் பயானில் கூறினார்கள். நானோ மிகக் குறைந்த அளவுப் பணமே எடுத்துச் சென்றிருந்தேன். எனவே தரலாமா? வேண்டாமா? என்ற யோசனையில் இருந்து விட்டேன். அதன் பின்னர் ஷைகு நாயகம் பக்கத்தில் உள்ள ஊருக்குச் செல்லும் போது காரில் என்னையும் அழைத்துச் சென்றார்கள். காரை அவர்கள் தான் ஓட்டினார்கள்.

மிக வேகமாக காரை ஓட்டிச் சென்ற எஜமான் அவர்கள் வளைவுகளில் வளையும் போது

تیرے غیر کو میں کبھی دیکھا بھی نہیں تیرے غیر سے میں کبھی پوچھا بھی نہیں

''உன் அல்லாதவனை ஒரு போதும் நான் பார்த்ததும் இல்லை. உன் அல்லாதவர்களிடம் நான் எதுவும் கேட்டதும் இல்லை'' என்று கூறி ''சடால்'' என்று வளைத்தார்கள். நமது கல்பில் உள்ளதை அல்லாஹ் அவர்களுக்குக் காட்டியுள்ளான். அதைத் தான் அவர்கள் அவ்வாறு கூறுகி றார்கள் என்று அறிந்து திடுக்கிட்டேன்.

ரிவாயத் :

ஒருமுறை சர்கார் கூறினார்கள். ''பிற்காலத்தில் ஷைகு நூரி நாயகத்திற்கு கித்மத் செய்யும் பாக்கியத்தை அல்லாஹ் கொடுத்தான். சர்கார் குடும்பத்தினருக்குத் தேவையான துணிமணிகள் அனைத்தையும் இங்கிருந்து அனுப்பி வைப்பேன் تم اللہ کو بہت دیا ہے با'' ''நீ அல்லாஹ்வுக்கு ரொம்ப கொடுத்திருக்கிறாய்'' என்று சர்கார் நாயகம் கூறினார்கள்.

مَنْ ذَا الَّذِیْ یُقْرِضُ اللّٰهَ قَرْضًا حَسَنًا

நாம் நற்கருமங்களுக்காக செலவு செய்வது அல்லாஹ்வுக்குத் தருவதாகவே குர்ஆன் கூறுகிறது.

சோதனை பலவிதம்

ரிவாயத் :

சர்கார் நாயகம் கூறினார்கள். ''ஒருமுறை ஹைதராபாத் சென்றிருந்தோம். எங்கள் ஷைகு நாயகம் வளர்த்து வந்த விலையுயர்ந்த எருமை மாடு தண்ணீரில் சேற்றில் சிக்கி இறந்து விட்டது. சர்காருக்கு இவ்வளவு பெரிய நஷ்டம் ஏற்பட்டு விட்டதே என்று நாங்கள் கவலையோடு இருந்தோம். அப்போது சர்கார் நூரி நாயகம் கூறினார்கள். ''அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துங்கள்.

وَلَنَبْلُوَنَّكُمْ بِشَیْءٍ مِّنَ الْخَوْفِ وَالْجُوْعِ وَنَقْصٍ مِّنَ
الْاَمْوَالِ وَالْاَنْفُسِ وَالثَّمَرٰتِ ط

''உங்கள் பொருளை எடுத்தும், உங்கள் உயிரை எடுத்தும் சோதிப்பேன்'' என்று அல்லாஹ் கூறுகிறான். உங்கள் ஷைகுடைய உயிரை எடுக்காமல் பொருளை மட்டும் எடுத்து சோதித்தானே அதற்காக நன்றி செலுத்துங்கள் என்றார்கள்.''

ரிவாயத் :

ஒருமுறை கூறினார்கள். ''சர்கார் நூரி நாயகம் காரில் செல்லும் போது ஒருமுறை டிராபிக் கான்ஸ்டபிள் மீது கார் உரசி விட்டது. அவர் கீழே விழுந்து விட்டார். சுதாரித்து எழுந்து நின்றார். காரை விட்டு இறங்கிய சர்கார் நாயகம் உங்கள் உயிரை காப்பாற்றினானே அந்த ஆண்டவனுக்கு முதலில் நன்றி செலுத்துங்கள் என்றார்கள். இரு கையை எடுத்து கும்பிடு போட்டு ''தாங்கள் சென்று வாருங்கள்'' என்று அனுப்பி வைத்தார் அவர்.

மரியாதை

ரிவாயத் :

ஒருமுறை சர்கார் பைஜி நாயகம் சென்னையில் இருந்து காரில் லால்பேட்டை வந்து கொண்டிருந்தார்கள். வழியில் செக்கிங் போலீஸார் நிறுத்தி டிக்கியைத் திறக்கச் சொன்னார்கள். டிரைவர் அப்துல் காதிர் பாய் திறந்தார். அதில் சர்காரின் சூட்கேசும் இருந்தது. போலீசார் அதையும் திறக்கச் சொன்னார்கள். அப்துல் காதிர் பாய் திறக்க கை வைத்தார். சட்டென்று கதவைத் திறந்து வெளியே வந்த ஷைகு நாயகம் அஸாவால் அவர் கையைத் தட்டி ''என் அனுமதியில்லாமல் எப்படி நீங்கள் என் சூட்கேஸில் கை வைக்கலாம்'' என்றார்கள். சர்காரைக் கண்டவுடன் திடுக்கிட்ட போலீஸார் அனைவரும் கும்பிட்டு ''குரு உள்ளே இருக்கிறார் என்று ஏன் நீ முன்பே சொல்ல வில்லை'' என்று டிரைவரி டம் கேட்ட வண்ணமே ''ஐயா நீங்கள் ஏறுங்கள்'' என்றார்கள். சர்கார் காரில் ஏற முனைந்த போது ஒரு போலீஸ்காரர் கதவைத் திறந்து விட்டார். இன்னொருவரோ காலை எடுத்து உள்ளே வைக்க உதவி செய்தார். கார் நகர்ந்தது. வழியில் சர்கார் பின் சீட்டில் அமர்ந்திருந்த ரஹ்மத்துல்லா சஜ்ஜாதாவிடம், ''உங்கள் ஷைகுடைய கல்பில் இருக்கும் இல்மை வாங்கிக் கொள்ளுங் கள். இதே மரியாதையை அல்லாஹ் உங்களுக்கும் தருவான்'' என்று கூறினார்கள்.

எங்கும் அவனே

ரிவாயத் :

ஒருமுறை பைஜி நாயகம் கூறினார்கள். ''எனது ஷைகு நூரி நாயகம் சென்னை வந்திருந்த போது ஒரு முரீதைப் பற்றி அவரின்

குடும்பத்தினர் வந்து முறையிட்டனர். அவர் சர்கார் நூரி நாயகத்திடம் பைஅத் வாங்கிய பின் இரவில் வீட்டில் மனைவியுடன் படுப்பதை நிறுத்திக் கொண்டார். மஸ்ஜித்களில் படுத்துக் கொள்கிறார் என்று கூறினார்கள். அவரைக் கூப்பிட்டு சர்கார் விசாரித்தார்கள். அதற்கு அவர், ''சர்கார் எங்கு திரும்பினாலும் அல்லாஹ்வின் திருமுகமே காட்சியளிப்பதாக அல்லாஹ் கூறுகிறான். என் மனைவியிலும் அவன் தானே இருக்கிறான். அவ்வாறு இருக்க நான் எவ்வாறு அவளோடு படுப்பது? அது மரியாதையில்லையே? அங்கும் அவனல்லவா இருக்கிறான்?'' என்றார். விஷயத்தை அவருக்கு தெளிவான விளக்க வைக்க விரும்பிய சர்கார் அவர்கள் அங்கிருந்த குர்ஆனைக் காட்டி ''அதன் மீது அந்த நியூஸ் பேப்பரை எடுத்து வைய்யுங்கள்'' என்று அவரிடம் கூறினார்கள். அதற்கு அவர் ''குர்ஆனின் மீது வேறு புத்தகங் களை வைப்பது மரியாதைக் குறைவாகுமே சர்கார்'' என்றார். இன்னொரு குர்ஆனை அவர் கையில் கொடுத்து ''அதை அந்தக் குர்ஆனின் மீது வைய்யுங்கள்'' என்று கூறினார்கள். அவர் உடனே வைத்து விட்டார் . ''இதை மட்டும் எப்படி வைத்தீர்கள்'' என்று கேட்டனர். ''இதுவும் குர்ஆன் தானே. குர்ஆனின் மீது குர்ஆனை வைப்பது தவறில்லையே'' என்றார். ''அது போல் மனைவியில் அல்லாஹ் இருக்கிறான் என்றால் உங்களிலும் அல்லாஹ் இருக்கிறான் தானே'' என்றார்கள். அப்போது தான் அவருக்கு விளங்கியது! ஒழுங்காக வீட்டிற்குச் செல்ல ஆரம்பித்தார்.

ஸஹாபாக்கள் கூட அல்லாஹ் நம்முடன் இருக்கிறான் என்ற உணர்வு மிகைத்த போது மல ஜலம் செல்லவும், மனைவியிடம் செல்லவும் வெட்கப்பட்டார்கள்! அப்போது அல்லாஹ் ''நீங்கள் ஆடைகள் கொண்டு மறைத்திருந்த போதிலும் நீங்கள் வெளிப் படுத்தியது, மறைத்தது அனைத்தையும் அல்லாஹ் அறிகிறான்'' என்று ஆயத் இறக்கி வைத்தான். அதன் பின்பே அவர்கள் விளக்கம் பெற்றார்கள். (புகாரி - 4682)

أَلَآ إِنَّهُمْ يَثْنُونَ صُدُورَهُمْ لِيَسْتَخْفُوا۟ مِنْهُ ۚ أَلَا حِينَ يَسْتَغْشُونَ ثِيَابَهُمْ
يَعْلَمُ مَا يُسِرُّونَ وَمَا يُعْلِنُونَ ۚ إِنَّهُۥ عَلِيمٌۢ بِذَاتِ ٱلصُّدُورِ ۝

தந்தைக்கு உதவி.

ரிவாயத் :

சர்காருடைய தகப்பனார் வாத நோயால் பாதிக்கப்பட்டு மூன்று வருடங்கள் இருந்த போது அவருக்கு மலம், ஜலம் சுத்தம் செய்வது உட்பட எல்லா வேலையும் சர்கார் தங்கள் கைகளாலே செய்து வந்தார்கள்.

எல்லாம் அவனா?

ரிவாயத் :

உளூத் ஏக் தாத் தோ = உளூது ஒன்று தான். ஆனால் தாத் இரண்டாகும் என்பது தான் சுன்னத் வல் ஜமாஅத்தைச் சேர்ந்த இறைஞானிகளின் நேரான கொள்கையாகும். சிருஷ்டிகளின் தோற்றத்தில் அல்லாஹ் இருக்கிறான். ஆனால் சிருஷ்டிகள் அல்லாஹ் வாகவோ அல்லாஹ் சிருஷ்டிகளாகவோ ஆகவில்லை என்பதே ஹகீகத் ஆகும். ஆனால் சிலரோ ''எல்லாம் அவனே! எல்லாம் அவன் செயலே'' என்று கூறி சிருஷ்டிகளின் நிலையை மறுக்கிறார்கள். அது தவறான வழியாகும்.

சிதம்பரத்தை அடுத்துள்ள பரங்கிப்பேட்டை எனும் ஊரில் இத்தகைய கொள்கை உடைய சிலர் இருந்து வந்தனர். அந்த ஊருக்கு மூன்று நாள் பயான் செய்ய அழைக்கப்பட்டு மூன்று நாள் முடிந்து சர்கார் ஊர் கிளம்ப இருந்த போது ஒரு கடிதம் வந்தது. ''எல்லாம் அவனே! எல்லாம் அவன் செயலே என்பது தான் உண்மையாகும். இதற்கு மாற்றமாக உண்மை இருந்தால் அதை நிரூபித்து விட்டுச் செல்லவும்'' என்று எழுதியிருந்தது.

அந்த ஊர் இமாமோ ''தாங்களே இருந்து நாளை ஜும்ஆவில் பதில் கூறுங்கள்'' என்று வேண்டிக் கொண்டார். ஜும்ஆவில் சர்கார் பயான் செய்தார்கள். அந்தக் கொள்கை உடையவர்கள் எல்லாம் ''என்ன பதில் சொல்லப் போகிறார்கள் பார்க்கலாம்'' என்று முன்னால் வந்து உட்கார்ந்திருந்தார்கள்.

சர்கார் பயானில் ''எல்லாம் அவனே! எல்லாம் அவன் செயலே! என்ற கொள்கை குர்ஆன் ஹதீஸுக்கு மாற்றமானதாக இருப்பதுடன்

வாழ்க்கை நடைமுறைக்கும் ஒத்து வராததாகும்! அந்தக் கொள்கை யில் நாம் உறுதியாக இருந்தால் இவ்வுலகில் வாழ்வதே சிரமமாகி விடும்!'' என்றார்கள்.

அவர்களோ சர்காரை ஏளனமாகப் பார்த்தார்கள். நமது உயர்ந்த கொள்கை மற்றவர்களுக்கெல்லாம் எங்கே விளங்கப் போகிறது? என்று சிரித்துக் கொண்டார்கள்.

சர்கார் பயானைத் தொடர்ந்தார்கள். ''பாருங்கள் நீங்கள் சிரமப் பட்டு விவசாயம் செய்கிறீர்கள். நிலத்தை உழுது, விதை விதைத்து, நாற்று நட்டு, களை எடுத்து, வேலி அமைத்து, மருந்து தெளித்து, உரமிட்டு பாதுகாத்து பயிர் நன்கு விளைந்து கதிர் முற்றிய சமயம் வேறு எவனோ வந்து உங்கள் நிலத்தில் அறுவடை செய்ய ஆரம்பிப் பான். நீங்கள் கேட்டால், "எல்லாம் அவனே! எல்லாம் அவன் செயலே'' என்று கூறுவான். நீங்கள் பதில் பேச முடியாது'' என்று கூறினார்கள்.

முன்னாலிருந்தவர்களோ ஏளனமாகச் சிரித்தர்கள். சர்கார் கூறினார்கள். ''இன்னொரு உதாரணம் கூறுகிறேன். நீங்கள் சிரமப்பட்டு ஒரு கடையை பிடித்து முதல் போட்டு சரக்குகள் வாங்கி ஆட்களை வைத்து வியாபாரம் செய்கிறீர்கள். உங்கள் கடையில் ஒருவன் வந்து சாமான்களை எடுத்துக் கொண்டு பணம் கொடுக்காமல் செல்லுவான். கேட்டால் எல்லாம் ''அவனே! எல்லாம் அவன் செயலே என்று கூறுவான்.'' நீங்கள் பதில் கூற முடியாது!''

இதைக் கேட்டு அவர்கள் இன்னும் சற்று அதிகமாகச் சிரித்துக் கொண்டார்கள்.

இவர்களுக்கு ரோஷம் வரும்படி சொன்னால் தான் புரியும் என்று நினைத்த சர்கார், ''சரி! இன்னொரு உதாரணத்தையும் கேட்டுக் கொள்ளுங்கள். நீங்கள் திருமணம் பேசி, பத்திரிக்கை அடித்து, ஊரே அழைத்து சாப்பாடு போட்டு, பணம் செலவு செய்து, சிரமம் மேற்கொண்டு, திருமணத்தை நடத்தி முடித்து உங்கள் மனைவியை வீட்டுக்கு அழைத்துக் கொண்டு வருகிறீர்கள். அப்போது நான்கு தடியர்கள் வீட்டுக்குள் வந்து உங்கள் மனைவியோடு அவர்கள் தொடர்பு கொண்டார்கள். நீங்கள் கேட்டதற்கு, "எல்லாம் அவனே!

எல்லாம் அவன் செயலே என்று கூறுவார்கள். அப்போது உன் கொள்கைப்படி நீ சும்மா இருந்து கொள்வாயா?'' என்று கேட்டார்கள்.

அவ்வளவு தான்! முன்னால் இருந்தவர்கள் யாரிடமும் சிரிப்பே எழவில்லை! தலையைக் கவிழ்ந்து உட்கார்ந்து கொண்டார்கள்!

அதற்குப்பின் குர்ஆன் ஹதீஸ் அடிப்படையில் சர்கார் அக்கருத்தின் உண்மை நிலை என்ன என்பதை விளக்கிப் பேசினார்கள்.

நபி நம்மைப் போன்ற மனிதரா?

ரிவாயத் :

ஒருமுறை சர்கார் பைஜி நாயகத்திடம் ஒருவர் வந்து

إِنَّمَا الْمُؤْمِنُوْنَ اِخْوَةٌ

''அல்லாஹ் 'முஃமீன்கள் எல்லோரும் சகோதரர்கள்' என்று தானே கூறுகிறான். அப்படியானால் ரசூல் (ஸல்) அவர்களும் நமக்குப் بڑا بھائی பெரிய அண்ணன் ஆகிறார்கள். வேறு என்ன தனி அந்தஸ்து தர வேண்டும்?'' என்று கேட்டார்.

அதற்கு சர்கார் அவர்கள் அதன்படி பார்த்தால் அல்லாஹ்வும் முஃமின் தானே! அவன் அஸ்மாவுல் ஹுஸ்னாவில் முஃமின் என்றும் ஒரு பெயர் இருக்கிறதே! அப்படியானால் அல்லாஹ்வையும் بڑا بھائی பெரிய அண்ணன் என்று கூறுவீர்களா? என்று கேட்டார்கள் அதோடு வாய் மூடிக் கொண்டார்.

பணிவின் சிகரம்

ரிவாயத் :

சர்காரின் பணிவு تَوَاضُعْ மிகவும் ஆச்சரியமானது. உலமாக்களையும், பெரியவர்களையும் அவர்கள் கண்ணியம் செய்வது ஒருபுறமிருக்க சிறுவர்களையும், குழந்தைகளையும், பாமரர்களையும் அவர்கள் கண்ணியம் செய்வார்கள். எல்லோரையும் நீங்கள் வாருங்கள், செல்லுங்கள் என்று தான் பேசுவார்கள். யாரையும் நீ, வா, போ என்று பேசியதில்லை.

ஒருமுறை சொன்னார்கள். ''எனக்கு நீ, வா, போ என்று பேசுவதற்கு நாவு கூசுகிறது. சிலருக்கோ வாங்க, போங்க என்று பேசுவதற்கு நாவு கூசுகிறதே'' என்றார்கள். தங்கள் பேரப் பிள்ளைகளைக் கூட சர்கார் திட்டுவதில்லை. மனம் புண்படும்படி பேசுவதில்லை. சின்னப் பிள்ளைகள் குறும்பு செய்தால் ''ஆஹா! வாட் டீஸ் தெட் வயித்தெறிச்சல்'' என்று புன்முறுவலோடு கூறுவார்கள். சிலசமயம் ''அந்தப் பயலே இந்தப் பயலே சொந்தக்காரப் பயலே'' என்று நகைச்சுவையோடு கூறி முறைப்பார்கள்.

பிற்காலத்தில் அவர்கள் கால் வீக்கம் ஏற்பட்டு தொடர்ந்து சிரமப்பட்ட போது நாற்காலியில் பல மணிநேரம் தொடர்ந்து அமர்ந்தால் கால் பெரிதாக வீங்கி விடுவதால் முன்னால் இரண்டு மூன்று தலையணைகள் போட்டு அதில் காலை வைத்துக் கொள்வார் கள். ஒவ்வொரு நாளும் அதில் வைப்பதற்கு முன் ''என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். கால் மிகவும் வலிக்கிறது. தாங்கள் அனுமதி கொடுத்தால் சற்று உயர்த்தி வைத்துக் கொள்கிறேன் என்று முன்னால் இருக்கும் முரீதுகளிடம் அனுமதி வாங்கிக் கொண்டு தான் கால் வைப்பார்கள். யாரும் தங்கள் குழந்தைகளுடன் வந்தால் வாருங்கள் இளவரசரே! என்று தான் அழைப்பார்கள்.

ரிவாயத் :

சர்கார் பைஜி நாயகம் தங்கள் ஷைகிடம் நடந்து கொள்ளும் பணிவு யாராலும் செய்ய முடியாததாகும். இதை கராமத் என்றே கூறலாம். ஷைகின் முன்னால் அமரும் போது அத்தஹிய்யாத்தில் தான் அமர்வார்கள். இடது காலின் மேல் அமர்ந்து வலது காலை நட்டு வைத்து அமரும் அவர்கள் இரு கைகளையும் நெஞ்சிலே கட்டி தலை குனிந்து அமர்வார்கள். நிமிர்ந்து நேருக்கு நேர் பார்ப்பதில்லை. இந்நிலையில் சபை முடியும் வரை 4, 5 மணி நேரம் ஆனாலும் காலை மாற்றிப் போட மாட்டார்கள். அல்லாஹு அக்பர் பார்ப்பவர்கள் எல்லாம் ஆச்சரியத்தால் கண்களை விரிப் பார்கள்.

ஒரு சில நேரங்களில் சபை முடிந்ததும் எழுந்து நிற்க முயன்றால் முடியாது கால்கள் இரத்த ஓட்டம் இன்றி வீங்கிப் போயிருக்கும். சிலர் அப்படியே தூக்கிச் சென்று ஒரு ஓரத்தில் படுக்க வைத்து கால்களை சற்று நேரம் தடவிய பின்தான் உணர்ச்சி வரும்!

பைஜி நாயகம் இவ்வளவு பணிவு செய்கிறார்களே என்று தாதா சர்காரிடம் ஒரு முரீது குறிப்பிட்ட போது فیضی کے پاس تصنع نہیں ہے 'பைஜி யிடம் நடிப்பு கிடையாது. அது உண்மையாக பணிவு தான்' என்று தாதா சர்கார் குறிப்பிட்டார்கள்.

ஷைகுக்கு வரவேற்பு

ரிவாயத் :

தாதா சர்கார் 27 முறை லால்பேட்டைக்கு விஜயம் செய்துள் ளார்கள். அவர்கள் வருகிறார்கள் என்று தெரிந்தவுடன் பல நாட்களுக்கு முன்பே சர்காரை வரவேற்க ஏற்பாடு செய்வார்கள். அரசரை வரவேற்பது போல் வரவேற்பார்கள். தங்கள் பீர்பாய்கள் அனைவருக்கும் தபால் போடுவார்கள். பிரமாண்ட ஏற்பாடுகள் செய்வார்கள். தெருவில் பெரிய கம்பம் நட்டு கொடி வைப்பார்கள். வீடும் கான்காவும் பெயிண்ட் அடிக்கப்படும். வழி எங்கும் வரவேற்புத் தோரணங்கள் கட்டுவார்கள். தாதா சர்கார் படுப்பதற்கென அலங்காரமான மரக்கட்டில், நாற்காலிகள் செய்வார்கள். ஷைகு சென்றவுடன் அந்த கட்டில்களையும், நாற்காலிகளையும் பிறர் பயன்படுத்துவது மரியாதைக் குறைவு என்று அதை அப்படியே பார்சல் செய்து ஹைதராபாத் அனுப்பி விடுவார்கள். அடுத்தமுறை வரும் போது மீண்டும் புதிதாகச் செய்வார்கள்.

தாதா சர்கார் வந்து தங்கியிருக்கும் நாட்கள் முழுதும் அவர்களைக் காண வரும் ஆயிரக்கணக்கான சீடர்களுக்கும் பைஜி நாயகம் தான் உணவு ஏற்பாடு செய்வார்கள். எந்நேரம் பார்த்தாலும் அடுப்பில் சட்டி இருக்கும். உணவு பரிமாரப்பட்டுக் கொண்டே இருக்கும், பார்ப்பவர் கள் எல்லாம் இது எப்படி சாத்தியம் என்று வியப்படைந்து பேசுவார்கள்.

இது பற்றி சர்காருடைய பீர்பாய் ஒருவர் தாதா சர்காரிடம் "இவ்வளவு தடபுடலாக செலவு செய்கிறார்களே" என்று கூறிய போது தாதா சர்கார், فیضی کا ہاتھ اللہ کے جیب میں ہے "பைஜியுடைய கை அல்லாஹ் வின் ஜோப்பில் இருக்கிறது" என்று கூறினார்கள்.

இது பற்றி சர்கார் நாயகம் குறிப்பிட்ட போது "தாதா சர்கார் வருகிறார்கள் என்று தபால் வந்தவுடன் முதலில் நான் இருக்கும்

காசுக்கு விறகு வாங்கிப் போட்டு விடுவேன். பின்னர் யா அல்லாஹ்! இந்த விறகின் தேவையைப் பூர்த்தி செய்பவன் உன்னைத் தவிர யாரும் இல்லை என்று துஆச் செய்ய ஆரம்பித்து விடுவேன்.

சமையல் பொறுப்பாளிகளிடம் கடைகளில் கடனாக பொருட்கள் வாங்கி செலவு செய்யும்படி கூறி விடுவேன். கடைசியில் ஒவ்வொரு கடனாக அல்லாஹ் அடைத்து விடுவான்.

இன்னொரு முறை தாதா சர்கார் வந்த போது தங்கள் பெயரில் இருந்த நிலத்தில் பாதியை விற்று செலவு செய்தார்கள். அந்த மீதிப் பாதியில் தான் பிற்காலத்தில் கான்காஹ் கட்டினார்கள். இந்த செலவுகளில் யாரையும் பங்கெடுத்துக் கொள்ளும்படி சர்கார் கூறியதும் இல்லை. பங்கு சேர்த்துக் கொள்வதும் இல்லை. யாரும் தாமாக விரும்பி எதுவும் கொடுத்தால் மறுக்காமல் வாங்கிக் கொள்வார்கள்.

ரிவாயத் :

தாதா சர்கார் வந்து விட்டால் சில நேரங்களில் மூன்று நான்கு நாட்கள் சில நேரங்களில் ஒரு வாரம் கூட தங்குவார்கள். அது வரை அவர்களுக்குத் தேவையான எல்லா பணிவிடைகளையும் சர்கார் தாங்களாகவே நேரடியாகத் தான் செய்வார்கள். தங்களின் முரீதுகள் நூற்றுக் கணக்கில் இருந்தாலும் யாரையும் ஏவ மாட்டார்கள். மற்றவர்கள் அந்த வேலையை தாங்கள் செய்வதாக விரும்பிக் கேட்டாலும் அனுமதிக்க மாட்டார்கள். தாங்கள் உணவு சாப்பிடுவது, மருந்து சாப்பிடுவது, தூங்குவது, குளிப்பது, உடை மாற்றுவது போன்றவைகளைக் கூட பொருட்படுத்த மாட்டார்கள். ஷைகு நாயகத்தை கவனிப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருப்பார்கள். தாதா சர்கார் தூங்கும் வரை அவர்களுக்கு பணிவிடை செய்து விட்டு அவர்கள் படுத்தவுடன் அவர்களின் வாசல்படியிலேயே கையை தலைக்கு வைத்து படுத்துக் கொள்வார்கள். அவர்கள் இரவில் எந்நேரம் விழித்தெழுந்தாலும் உடனே சென்று பணிவிடை செய்வார்கள்.

ஒருநாள் தாதா சர்கார் இரவில் விழித்தெழுந்து சத்தமின்றி வெளியே வந்த போது பைஜி நாயகம் வாசல்படியில் கூனி குறுகி

படுத்திருந்த நிலையைப் பார்த்து கண்ணீர் சிந்தி கையேந்தி அல்லாஹ்விடம் ''யா அல்லாஹ் இவர்களை ஆபாதாக வை'' என்று துஆச் செய்தார்கள்.

தாதா சர்கார் வரும் போது மற்ற கலீபாக்கள் எல்லாம் தும்பை பூ போல் வெண்ணிற ஆடை அணிந்து நறுமணம்பூசி ஷைகின் முன் அமர்ந்திருக்க பைஜி நாயகமோ இரவு பகல் ஓய்வின்றி வேலை செய்து கசங்கிய ஆடையுடன் தான் காட்சி தருவார்கள். தன் ஷைகின் உணவுகளை மட்டும் தனியாக தங்கள் வீட்டில் தான் சமைக்கச் சொல்லுவார்கள்.

தாதா சர்கார் விடை பெற்று ஊர் திரும்பி விட்டால் தங்கள் உயிரே போனது போல் தேம்பித் தேம்பி பல நாட்கள் அழுது கொண்டிருப்பார்கள். யாரிடமும் சில நாட்கள் அதிகம் பேச மாட்டார்கள். அந்த அளவுக்கு அளவு கடந்த நேசம் வைத்திருந் தார்கள்.

இறையச்சம்

ரிவாயத் :

மிகவும் தாழ்மை, பணிவின் வடிவமாக இருந்த எஜமான் பைஜி நாயகம் ஒருமுறை பயானில் ஆயிரக் கணக்கான மக்கள் முன் கூறினார்கள். ''உலக மக்கள் பாவங்களை ஒரு தட்டிலும் என் பாவங்களை ஒரு தட்டிலும் வைத்தாலும் என் பாவங்கள் தான் மிகைக்கும்'' என்றார்கள்.

இன்னொரு முறை பயானில் நாகப்பட்டினம் மஸ்ஜித் மிம்பரில் ''அல்லாஹ்வின் மீது ஆணையாக நான் சொல்லுகிறேன். உங்கள் அனைவரையும் விட நான் மோசமான பாவியாக இருக்கிறேன்'' என்றார்கள்.

இன்னொரு முறை லைலத்துல் கத்ர் பயானில் நூற்றுக் கணக்கான மக்கள் மத்தியில் ''என்னை அல்லாஹ் மன்னிப்பானா?'' என்று கண்ணீர் மல்கக் கேட்டார்கள். மக்கள் மௌன மாக இருந்தனர். அல்லாஹ் என்னை மன்னிப்பான் என்று நீங்கள் கருதினால் நிச்சயமாக உங்கள் அனைவரையும் அல்லாஹ் மன்னிப்பான். என்னைப் போல் பெரும் பாவியை மன்னித்தால் நிச்சயம் உங்களுக்கெல்லாம் மன்னிப்புக் கிடைக்கும்.

தாய் வயிற்றிலேயே இறை நேசராக விளங்கிய பைஜி நாயகம் سَعِيْد اَزلی நிரந்தரமான சீதேவி என்று அவர்கள் ஷைகால் புகழப்பட்ட பைஜி நாயகம் இவ்வாறு சொல்வது நமக்கு ஆச்சரியமாக இருக்கலாம்.

உண்மையில் அப்பழுக்கற்ற அன்பியாக்களும், அவ்லியாக்களும் இவ்வாறு தான் அழுது கொண்டிருந்தார்கள். நபி (ஸல்) அவர்கள் நுபுவ்வத்திற்கு முன்னும் பின்னும் சிறு பாவமோ பெரும் பாவமோ என்றென்றும் செய்ததில்லை. எனினும் ஒரு நாளைக்கு 70 முறை பாவமன்னிப்புக் கேட்டார்கள்.

رَبِّىْ اِنِّىْ ظَلَمْتُ نَفْسِىْ ظُلْمًا كَثِيْرًا فَاغْفِرْلِىْ

''ரப்பி இன்னீ ளலம்து நப்ஸீ ளுல்மன் கஸீரா பஃஃபிர்லீ'' என்று துஆச் செய்தார்கள். அபூபக்கர் (ரலி), உமர் (ரலி) இருவரும் என் தாய் என்னை பெற்றெடுக்காமல் இருந்திருக்கக் கூடாதா? நான் ஒரு கல்லாக, ஒரு புல்லாக, அல்லது ஒரு முஃஃமினுடைய ரோமமாக இருந்திருக்கக் கூடாதா?'' என்று அழுதார்கள். உஸ்மான் (ரலி) கப்ரைக் கண்டு விட்டால் வெகு நேரம் தேம்பித் தேம்பி அழுவார்கள். அலி (ரலி) அவர்களோ

اِلـــٰهِى عَبْدُكَ الْعَاصِىْ اَتَاكَا – مُقِرًّا بِالذُّنُوْبِ وَقَدْ دَعَاكَ

وَاِنْ تَغْفِرْ فَاَنْتَ لِذَاكَ اَهْلٌ – وَاِنْ تَطْرُدْ فَمَنْ يَرْحَمْ سِوَاكَ

என்று கண்ணீர் வடிப்பார்கள்.

ஹஜ்ரத் ஆமிர் கலீமீ ஷாஹ் கிப்லா அவர்கள் இடி இடித்தால் குழந்தைகளை மடியில் தூக்கி வைத்துக் கொண்டு யா அல்லாஹ்! இந்த ஊரிலேயே என்னைப் போல் பாவி யாரும் இல்லை. இடி விழுந்தால் அது என் தலையில் தான் விழ வேண்டும். எனினும் இறைவா இந்தக் குழந்தைக்காக என்னை விட்டு விடு! என்று கண்ணீர் வடிப்பார்களாம்!

ஆனால் நாமோ பாவ மூட்டைகளாகவே வாழ்ந்து கொண்டு தைரியமாக இருக்கிறோம் என்றால் நமது தக்வாவின் நிலையை என்னவென்று சொல்வது!

தர்பியத்

ரிவாயத் :

ஒருமுறை சர்கார் லால்பேட்டையில் இருந்து சென்னைக்கு காரில் புறப்பட்டார்கள். பின் சீட்டில் சர்காரும், இன்னொரு முரீதும், அவருடைய சிறுவயதுப் பையனும் அமர்ந்திருந்தார்கள். முன்சீட்டில் சர்காருடைய திருமணமாகாத கலீபா ஒருவர் இருந்தார். சர்கார் இடையில் இறங்கிய போது சர்கார் கொஞ்சம் வசதியாக அமரட்டுமே என்று அந்த சிறு பையனை தன் மடியில் அந்த கலீபா உட்கார வைத்துக் கொண்டார். திரும்பி வந்த சர்கார் அந்தப் பையனை பின்னால் வரச் சொல்லி விட்டு கலீபாவிடம் மிகவும் கடுமையாகக் கோபித்துக் கொண்டார்கள்.

ஒரு சிறு பையனை மடியில் உட்கார வைத்தால் கார் செல்லும் போது ஏற்படும் அசைவில் உங்கள் மனதில் தீய எண்ணங்களும், உணர்ச்சிகளும் ஏற்படலாம் அல்லவா? என் அனுமதியின்றி எப்படி உட்கார வைத்தீர்கள். அப்படி தீய உணர்ச்சிகள் ஏற்பட்டால் அது ஹராமான உணர்ச்சியல்லவா? என்று கேட்டது மட்டுமின்றி சென்னை வரை அவரிடம் இது பற்றி குர்ஆன் ஹதீஸுடைய எச்சரிக்கைகளை நினைபடுத்திக் கொண்டே வந்தார்கள்.

اَلْفِطَانَةُ سُوْءُ الظَّنِّ

என்று ஹஜ்ரத் அலி (ரலி) கூறியுள்ளார்கள். அதாவது தன் மனைவி, மக்கள், மாணவர்கள் இப்படி இப்படியெல்லாம் தவறு செய்ய வாய்ப்பு ஏற்படுமா என்று தோண்டித் துருவி ஆராய்ந்து அவற்றை நெருங்கவிடாமல் தடுப்பது தான் கூர்ந்த அறிவு பெற்றவர்களின் வேலையாகும்.

ரிவாயத் :

இன்னொரு முறை சர்காரின் வீட்டில் தாவாரத்தில் ஒரு வாலிப முரீது பகல் நேரத்தில் மல்லார்ந்து படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தார். சர்கார் வரும் ஓசை கேட்டதும் அவர் உடனே எழுந்து விட்டார். எனினும் மூன்று நாட்கள் அவரிடம் சர்கார் பேசவே இல்லை. அவரோ

அழுது கண்ணீர் வடித்துக் கொண்டி ருந்தார். சர்கார் நாயகம் அதற்குப் பின் பேசினார்கள். பெண்கள் வந்து போகும் இடம் இது. இவ்வாறு படுத்தால் ஆடைகள் விலகலாம். அல்லது ஆடைகள் இருக்கவே உடல் பகுதிகள் வெளிப்படலாம். அதனால் மற்றவர்கள் மனம் தீய எண்ணம் கொள்ளலாம். இனிமேல் இவ்வாறு செய்யாதீர்கள் என்று அறிவுறுத்தினார்கள். மேலும் சைக்கிளில் ஓட்டுபவருக்கு முன் கம்பியில் அமர்வதையும் பைக்கில் ஓட்டுபவருக்கு பின் புறமும் கால் போட்டு அமர்வதையும் தடை செய்வார்கள்.

வள்ளாண்மை

ரிவாயத் :

பைஜி என்றாலே தாராளமாக அள்ளித் தரும் வள்ளல் என்று தான் பொருள். பெயருக்கு ஏற்ப சர்கார் நாயகம் வாரி வழங்கும் வள்ளலாக வாழ்ந்தார்கள். அவர்களைத் தேடி வந்த முரீதுகளுக்கு எதுவும் அன்பளிப்புக் கொடுக்காமல் திருப்பி அனுப்பியதில்லை. வசதி யானவர்கள் வந்தால் 10 ரூபாய் பயணக் காசு என்று கூறி கொடுப்பார்கள். வசதி குறைந்தவர்களும் ஆலிம் உலமாக்களும் வந்தால் அவர்களின் போக்குவரத்துக்குரிய செலவும் மேல் மிச்சமாக 100, 200, 1000 ரூபாய் என்று பணம் கொடுத்துத்தான் அனுப்பு வார்கள். இறைஞானமும் தந்து வயிறு நிறைய உணவும் அளித்து செலவுக்குப் பணமும் தந்து அரவணைக்கும் மகானாக விளங்கி னார்கள். நாற்பது வருடங்களுக்கும் மேலாக தினமும் அவர்கள் வீட்டில் விருந்தினர் இல்லாத நேரமே இருக்காது. குறைந்தது இரண்டு, மூன்று நபர்களுக்கு அதிகபட்சமாக 20, 30 நபர்களுக்கு மூன்று வேளையும் பீராணியம்மா உணவு சமைப்பார்கள். தங்கள் கையாலேயே எல்லா வேலைகளும் செய்து அவ்வளவு பேருக்கும் சமைத்துப் போடுவார்கள்.

ரிவாயத் :

ஒருமுறை பீராணியம்மா உடல் நிலை குறை ஏற்பட்ட போது சர்கார் நாயகம் ''யா அல்லாஹ் பல்லாயிரக்கணக்கான உன் நேசர் களுக்கு தன் கைகளால் உணவு சமைத்துப் போட்டிருக்கிறார்கள்.

அதன் பரக்கத்தால் அவர்களுக்கு நீ ஷிபாவைக் கொடு'' என்று கேட்டார்கள். அல்லாஹ் ஷிபாவைக் கொடுத்தான்.

ரிவாயத் :

வரக்கூடிய விருந்தாளிகளுக்கு உணவு பரிமாறி அவர்கள் உண்ட பின் தான் மீதியை வீட்டில் உள்ளவர்கள் சாப்பிடுவார்கள். பிற் காலத்தில் இரவு ஒரு நேரம் மட்டும் ஹோட்டலில் சாப்பிட ஏற்பாடு செய்து மீதி இரண்டு வேலையும் சர்கார் வீட்டிலேயே சமைத்துப் போட்டார்கள்.

கடைசி ஓரிரு வருடங்கள் முரீதுகள் அதிகரித்த போது கான்காவிலேயே மூன்று நேரமும் உணவு தயார் செய்து வழங்கப்பட்டது.

ரிவாயத் :

இறைக் காதலர்களாகத் தன்னை தேடி வரக்கூடிய முரீதுகள் சாப்பிட்டது போகத்தான் மற்றது தன் பிள்ளைகள் பேரர்களுக்கு பங்கு வைப்பார்கள். சர்காரின் முரீதுகள் யாரும் தங்கள் வீட்டுத் திருமண விழாவில் சர்கார் வீட்டுக்காக விருந்துணவை பெரிய சட்டியில் போட்டு அனுப்பி வைத்தால் அதை முதலில் முரீதுகள் அனைவருக் கும் பங்கிட்டு இறைச்சிகள் பெரும்பாலும் காலியான பின் மீதியை வீட்டுக்குள் அனுப்பி வைப்பார்கள். விருந்தினரோடு தங்கள் பேரப் பிள்ளைகள் வந்து சாப்பிட அமர்ந்தாலும் சர்கார் கூப்பிட்டுக் கொள் வார்கள். விருந்தாளிகள் சாப்பிட்ட பின் நாம் சாப்பிடுவோம் என்பார்கள்.

ரிவாயத் :

சர்காரின் ஆரம்ப காலத்தில் வறுமையில் வாழ்ந்த போதும் விருந்தோம்பும் உயர் குணத்தை சர்கார் மறக்கவில்லை. தங்கள் வீட்டுப் பொருட்களை விற்று உணவளிப்பார்கள். ஆரம்ப கால முரீது ஒருவர் கூறுகிறார். ''நாங்கள் சில பேர் வந்திருந்தோம். வீட்டில் உணவில்லை. சர்கார் எங்களுக்கு மணிக்கணக்கில் தஃலீம் செய்து விட்டு பின் லுஹர் தொழுது வரும்படி எங்களை பள்ளிக்கு அனுப்பி

விட்டு வீட்டில் இருந்த தண்ணீர் அண்டாவை விற்று அரிசியும் சாமான்களும் வாங்கி உணவு சமைத்து வைத்திருந்தார்கள்.

ரிவாயத் :

இன்னொரு சீடர் கூறுகிறார். நாங்கள் ஒரு சிலர் ஷைகைப் பார்க்க வந்திருந்தோம். மணிக்கணக்கில் இறை ஞானங்களை வழங்கினார்கள். பிறகு வீட்டில் இருந்த உணவுப் பொருளை வழங்கி வழியனுப்பினார்கள். நாங்கள் வாசல் வரை செல்லும் போது தபால்காரர் மணியார்டர் கொண்டு வந்தார். உடனே ஷைகு நாயகம் எங்களை இருக்கச் சொல்லி நீங்கள் இருக்கும் போதே இந்தப் பணம் வந்ததால் இது உங்களுக்கு தான் சொந்தம். உங்களுக்காகத்தான் அல்லாஹ் அனுப்பியுள்ளான் என்று கூறி இருக்க வைத்தார்கள். அப்பணத்தில் உணவு தயாரிக்கச் செய்து உண்ட பின் அனுப்பி வைத்தார்கள்.

ரிவாயத் :

சர்காரின் கலீபாக்களில் ஒருவர் கூறினார்கள். "ஆரம்ப காலத்தில் சர்காருக்கு ஒருவர் உயர்தரமான சட்டை ஒன்றை அன்பளிப்புச் செய்தார். அதை சர்காருடைய மகனார் ஒருவர் தனக்குத் தரும்படி கேட்டார். சர்கார் தரவில்லை. எடுத்து வைத்து விட்டார்கள். நான் ஊருக்குப் போகும் போது அதைக் கொண்டு வந்து என் பையில் வைத்து தெரியாமல் கொண்டு போய் விடும்படி கூறினார்கள். இன்னொரு முறை சர்காரின் மகனார் தன் கைலி கிழிந்திருப்பதாகவும் வேறு கைலி வேண்டும் என்று கேட்ட போது கையில் எட்டணா காசு கொடுத்து கடையில் தைத்துக் கொள்ளும்படி கூறி அனுப்பி விட்டார்கள். பிறகு உள்ளிருந்து இரண்டு புதிய கைலிகளைக் கொண்டு வந்து எனக்கும் இன்னொரு முரீதுக்கும் கொடுத்து அனுப்பினார்கள்.

நபி (ஸல்) அவர்கள் தங்கள் மகள் அடிமைப் பெண் வேண்டும் என்று கேட்ட போது தஸ்பீஹ் ஓதச் சொல்லி விட்டு மற்றவர்களுக்கு அடிமைகளை பங்கிட்டுக் கொடுத்தார்கள். வீட்டில் அடுப்பெறிந்து மூன்று நாட்கள் ஆனாலும் வரக்கூடிய பணம் மற்றும் பொருட்களை மற்றவர்களுக்குத் தான் கொடுப்பார்கள். ஸஹாபாக்கள் வாழ்க்கையும் அவ்வாறு தான் இருந்தது. ஆயிஷா (ரலி) தனக்கு வந்த ஒரு மூட்டை

தங்க நாணயங்களை வாரி வழங்கி விட்டு நோன்பு திறக்கக் கூட தனக்கு இன்றி சும்மா இருந்தார்கள். அந்த புனித வாழ்க்கை சர்காரிடம் அப்படியே பிரதிபலித்தது.

ரிவாயத் :

சர்கார் தங்களுடைய பிற்காலங்களில் அல்லாஹ் செல்வ வளங்களை வாரி வழங்கிய போது தாங்களும் அளவின்றி தர்மங்கள் செய்தார்கள். லால்பேட்டை கள்ளந்தோப்பில் ஒரு பள்ளியைக் கட்டிக் கொடுத்தார்கள் மேலும் லால்பேட்டையிலும் சுற்று வட்டாரங்களிலும் உள்ள பல பள்ளிவாயில்களின் கட்டிடப் பணிகளுக்கு சர்காரிடம் வந்து கேட்டால் பள்ளியின் மேற்கூரை போடும்போது தேவைப்படும் கம்பி, சிமெண்ட் போன்றவைகளைத் தருவதாகக் கூறுவார்கள். சுவர் எழுப்பி மேற்கூரைப் பணிகள் தொடங்கும் போது அதற்குத் தேவையானவற்றை இலட்சக் கணக்கான தொகைக்கு வாங்கிக் கொடுப்பார்கள். தொழுகையாளிகளுக்கு நிழல் கொடுத்தற்காக அல்லாஹ் என்னை மன்னித்து அர்ஷின் கீழ் நிழல் தருவான்! என்ற ஆதரவில் அவ்வாறு செய்வதாகக் கூறினார்கள்.

ரிவாயத் :

லால்பேட்டை மதரஸாவுக்கு நிதி உதவி என்று கேட்ட போது சர்கார் பல்லாயிரம் ரூபாய் பணம் கொடுத்தார்கள். சர்காரைப் பல காலமாக எதிர்த்து வந்த ஒரு ஆலிம் தான் நடத்திய மதரஸாவுக்கு பண நெருக்கடி ஏற்பட்டு சர்காரிடம் வந்த போது அவரை கண்ணியம் செய்து 20,000 ரூபாய் மொத்தமாகக் கொடுத்து அனுப்பினார்கள்.

ரிவாயத் :

கடனாளிகள், பிள்ளைக்கு திருமண ஏற்பாடு செய்தவர்கள், விதவைகள், யதீம்கள், வறுமையில் வாடும் உலமாக்கள் என நூற்றுக் கணக்கான நபர்களுக்கு ஆயிரக் கணக்கில் இலட்சக் கணக்கில் உதவி செய்து வந்தார்கள்.

ரிவாயத் :

தங்கள் ஷைகு நாயகத்திற்கு தாங்கள் செய்து வந்த பணி விடைகளை அவர்களின் மரணத்திற்குப் பின்பும் தொடர்ந்தார்கள்.

ஒவ்வொரு மாதமும் ஹைதராபாத்துக்கு தங்கள் 4 சஜ்ஜாதாக்கள் மற்றும் பீராணியம்மா பெயரிலும் தனித்தனியாக டிராப்ட் எடுத்து அனுப்பி வைப்பார்கள். அல்லாமா ஆரிப் பில்லாஹ் கலீமீ ஷாஹ் சர்கார் கிப்லா அவர்களுக்கும் ஒவ்வொரு மாதமும் ஹதியா அனுப்பி வைப்பார்கள். இன்னும் பல விதவைகள், யதீம்களுக்கு சர்கார் ஒவ்வொரு மாதமும் மணியார்டர்கள் மூலமும் டிராப்ட் மூலமும் பணம் அனுப்பி வைத்தார்கள்.

ரிவாயத் :

நபி (ஸல்) அவர்கள் ரமலானில் தங்கள் கொடைகளை பல மடங்கு அதிகமாக்கிக் கொள்வார்கள். அதுபோல் அந்த சுன்னத்தைப் பின்பற்றி சர்கார் நாயகமும் ரமலானில் தங்கள் கொடைகளை மிகவும் அதிகப்படுத்துவார்கள். 50 ஆடுகளுக்கு மேல் அறுத்து சில்லாவில் தங்குயிருக்கும் சீடர்களுக்கு உணவளிப்பார்கள். ஏறத்தாழ 1000 கைலிகளுக்கு மேல் வரவழைத்து வந்தோர் அனைவருக்கும் வழங்குவார்கள். நோன்பு திறக்க அனைத்து வகையான பழங்கள், பண்டங்கள் ஏற்பாடு செய்வார்கள். வரக்கூடிய உலமாக்களுக்கு வழங்கும் ஹதியாக்கள் லட்சங்களைத் தாண்டும்!

لِلْمُتَّقِيْنَ ۝ الَّذِيْنَ يُنْفِقُوْنَ فِى السَّرَّآءِ وَالضَّرَّآءِ

தக்வா உள்ளவர்களின் அடையாளம் அவர்கள் தங்கள் பொருட்களை இன்பத்திலும் துன்பத்திலும் செழுமையிலும் வறுமையிலும் செலவு செய்வார்கள் என்று அல்லாஹ் கூறுகிறான்.

தாடியும், ஜிப்பாவும், தொப்பியும், மிஸ்வாக்கும், தஸ்பீஹ் மணியும் பெரிதாக இருந்தால் அதுதான் தக்வா! 10 பைசா அடுத்தவருக்கு தர வேண்டியதில்லை என்று எண்ணுகிற நம்மவர்கள் சிந்திக்க வேண்டித்தான் இவைகளை இங்கு எழுதுகிறோம்.

தங்கள் சீடர்கள் தரும் காசு பணங்களை ஆசையுடன் சேர்த்து வைத்து மாட மாளிகைகள் கட்டி சொகுசு வாழ்க்கை வாழ நினைத்தால் வாழ்ந்திருக்கலாம். ஆனால் சிமெண்ட் இன்றி மண்ணால் கட்டப்பட்ட அந்த நெருக்கடியான வீட்டிலேயே கடைசி வரை வாழ்ந்து வல்லோன் வழங்கியதெல்லாம் வாரிச் சுருட்ட அல்ல! வழங்கி மகிழத்தான் என்று

வாரி வழங்கிய ஷைகு நாயகம் அவர்களின் வாழ்க்கை நமக்கொரு படிப்பினை யாகும். அல்லாஹ் தான் நம் தேவைகளை நிறைவேற்றும் இலாஹ் என்று விளங்கிய பின் இந்த பணம் காசுகளை நம்பி நம் வாழ்க்கையில்லை என்று சர்கார் நிரூபித்துக் கொடுத்தார்கள்.

ரிவாயத் :

அதே நேரத்தில் ''தங்கள் பிள்ளைகளை ஏழைகளாக பிறரிடம் கையேந்தும் நிலையில் விட்டுச் செல்லாதீர்கள்'' என்று நபி (ஸல்) அவர்கள் கூறியதற்கேற்ப தங்கள் பிள்ளைகளுக்கு குடியிருக்க இல்லமும், நெல்லுக்கு விளை நிலங்களும், சம்பாதிக்க கடைகளும் கொடுத்தார்கள். செல்வங்களில் மிகப் பெரும் செல்வமான ''கலிமாவையும்'' கொடுத்தார்கள். ஆகவே அவர்களின் பிள்ளைகள் இன்று வரை அல்லாஹ்வை இலாஹ் ஆக்கி அடுத்தவர் தயவின்றி மகிழ்வுடன் தீன் வேலை செய்து வருகிறார்கள்.

வீண்விரயம் கூடாது

ரிவாயத் :

وَالَّذِيْنَ اِذَآ اَنْفَقُوْا لَمْ يُسْرِفُوْا وَلَمْ يَقْتُرُوْا وَكَانَ
بَيْنَ ذٰلِكَ قَوَامًا ○

நல்லடியார்கள் செலவு செய்தால் வீண் விரயமும் செய்ய மாட்டார்கள். கஞ்சத் தனமும் செய்ய மாட்டார்கள். இரண்டுக்கும் இடையில் நடுத்தரமாக நடப்பார்கள் என்று அல்லாஹ் கூறுகிறான். அதுபோலவே சர்கார் நாயகம் பொருட்களை வீணாக்கக் கூடாது என்பதிலே மிகவும் கண்டிப்பாக இருப்பார்கள். அரிசி அளக்கும் போது, மூட்டைகளை அடுக்கும் போது சிதறிய அரிசிகளை ஒன்று விடாமல் பொறுக்குவார்கள். தரையின் சந்து பொந்திலே மாட்டிக் கொண்டால் குச்சி விட்டு நோண்டி எடுப்பார்கள்.

ரிவாயத் :

ஒருமுறை நெல் அரைத்து வரும் போது வீட்டு வாசலில் கொஞ்சம் அரிசி சிந்தி விட்டது. சர்கார் நாயகம் அடியேனையும்

முயீனுத்தீன் பைஜியையும் அவற்றைப் பொறுக்கி எடுக்கச் சொன்னார்கள். நாங்கள் ஓரளவு பொறுக்கி எடுத்து விட்டு மீதி மண்ணோடு கலந்து கிடந்ததை விட்டு விட்டோம். சர்கார் உள்ளிருந்து ஒரு முறம் எடுத்து வந்து தாங்களே அமர்ந்து மண்ணோடு சேர்த்து அள்ளினார்கள். ஏறத்தாழ 2 கிலோ மண்ணில் 50 கிராம் அரிசி இருக்கும். ''சர்கார் நாங்கள் பொறுக்கி எடுக்கிறோம்'' என்றோம். ''நீங்கள் செய்ய மாட்டீர்கள் நான் ஸலவாத் ஓதிக் கொண்டே பொறுமையாக பொறுக்கி எடுத்து விடுகிறேன். ஒவ்வொரு அரிசியிலும் அல்லாஹ்வின் உஜூது தான் இருக்கிறது. ரிஜ்கை காலில் படும்படி விடக் கூடாது'' என்று கூறி உள்ளே சென்று விட்டார்கள்.

ரிவாயத் :

ஒருமுறை சர்கார் கட்டிலில் அமர்ந்து கொண்டு கொண்டைக் கடலை சாப்பிட்டுக் கொண்டிருந்த போது ஒரு கடலை கை தவறி கீழே விழுந்து விட்டது. சர்கார் அது யார் காலிலும் மிதிபட்டு விடக் கூடாதே என்பதற்காக கீழிறங்கி பூனை போல் தவழ்ந்து ஒவ்வொரு இடமாகத் தேடினார்கள். கட்டிலுக்கு அடியில் எல்லாம் புகுந்து ஒவ்வொரு சாமானாக எடுத்து வைத்துத் தேடினார்கள். கடைசியாக கண்டுபிடித்த பின் தான் நிம்மதி அடைந்தார்கள்.

ரிவாயத் :

ஒருமுறை சர்கார் வீட்டில் முரீதுகளுக்கு உணவளிக்கப்பட்ட போது சில முரீதுகள் எலும்பில் ஒட்டியிருக்கும் இறைச்சிகளை முழுமையாக சுத்தம் செய்து சாப்பிடாது கீழே போட்டிருப்பதைப் பார்த்தார்கள். பலரும் அவ்வாறு செய்திருப்பது கண்டு வேதனைப் பட்டார்கள். எப்படி சொல்வது என்று வெட்கமும் அடைந்தார்கள். உடனே சர்கார் நாயகம் தாங்கள் வந்து உட்கார்ந்து எதுவும் பேசாமல் விரிப்பில் கிடந்த அந்த எலும்புகளை எடுத்து கடித்து சுத்தம் செய்ய ஆரம்பித்தார்கள். பதறிப் போன முரீதுகள் தங்கள் தங்கள் எலும்புகளை எடுத்து சுத்தமாக சாப்பிட்டு விட்டார்கள். அல்லாஹ் தன் நேசர்களுக்கு கற்றுக் கொடுக்கும் முறையையும் கற்றுக் தருகிறான்.

ரிவாயத் :

சர்கார் கல்யாண விருந்து போன்ற பெரிய உணவு ஏற்பாடுகளிலும் உணவுப் பொருட்களை வீணாக்காமல் தாங்களே நேரிடையாக நின்று கவனித்துக் கொள்வார்கள். பெரிய விருந்துகளில் ஆயிரக்கணக்கான பேருக்கு சாப்பாடு ஆக்கும் போது கூட தாங்கள் அறிந்து ஒரு பருக்கையும் வீணாக விட மாட்டார்கள். சமையல்காரரிடமும் இதை எச்சரிப்பார்கள். அரிசி கழுவும் போது, சட்டியில் இருந்து சோறு எடுத்துக் கொட்டும் போது, பரிமாறும் போது கவனிக்கச் சொல்வார்கள். கடைசியாக சட்டியை கழுவிய தண்ணீரில் உணவு பருக்கை கிடந்தாலும் பொறுக்கி எடுத்து உண்ணச் செய்வார்கள். இக்காலத்தில் இதை விடப் பெரிய கராமத் வேறு எது இருக்க முடியும்! நன்மையான காரியங்களுக்கு எவ்வளவு வேண்டுமானாலும் செலவு செய்யலாம். எனினும் இஸ்ராப் செய்யக் கூடாது.

لاَ اِسْرَافَ فِي الْخَيْرِ وَلاَ خَيْرَ فِي الاِسْرَافِ

வீண்விரயம் செய்வதில் எந்த நன்மையும் கிடையாது. நன்மையான காரியங்களில் செலவு செய்வது வீண்விரயம் ஆகாது என்று ஸஹாபாக்கள் கூறியதை நினைவுறுத்துவார்கள்.

தனக்காக வாழா தகைமை

ரிவாயத் :

சர்கார் அவர்களுக்கு அல்லாஹ் சிறந்த நாவன்மையைக் கொடுத்திருந்தான். இரவு பகலாக பேசுவார்கள். கேட்பவர்கள் மெய் மறந்து சடைவு ஏற்படாமல் பசி மறந்து கேட்டுக் கொண்டி ருப்பார்கள். இறைஞானப் பாடங்களை தினமும் மணிக்கணக்கில் பேசினாலும் ஒவ்வொரு நாளும் புதிதாகத் தான் இருக்கும். தங்கள் இளமைக் காலங்களில் பகல் முழுதும் பேசி பின்னர் இரவும் 2 மணி 3 மணி வரை பேசிக் கொண்டிருப்பார்கள். முன்னால் இருப்பவர்கள் மாறிக் கொண்டிருப்பார்கள். சிலர் காலையில் சிலர் மாலையில் சிலர் இரவில் வருவார்கள். கேட்பவர்கள் ஓய்வு எடுத்தாலும் சர்கார் ஓய்வெடுத்ததில்லை. பொருள் வைத்த சேரி மீலாது விழாவில் இஷாவுக்குப் பின்

ஆரம்பித்தால் பஜ்ருக்குத்தான் முடிப்பார்கள். இவ்வாறு பல ஊர்களிலும் பல நாட்களிலும் சர்கார் பேசுவார்கள்.

தங்கள் 77வது வயதில் உடல் நலம் பாதிப்படையும் வரையிலும் இரவு வெகுநேரம் வரை பேசிக் கொண்டுதான் இருப்பார்கள். இஷா தொழுதவுடன் வந்தால் 2 மணி வரையிலும் பயான் செய்வார்கள்.

ரிவாயத் :

சர்கார் மிகவும் தளர்ந்து நடக்கவே சிரமப்பட்ட காலத்திலும் தினமும் அவர்களைத் தேடி வரும் முரீதுகளுக்காக இஷாவுக்குப் பின் வெளியே வந்து பயான் செய்வார்கள். அல்லது ஏதாவது கிதாபுகளைப் படிக்கச் சொல்லி விளக்கம் கூறுவார்கள்.

کتاب الخزائن معرفۃ الہیۃ، قرآن اور تصوف ، فصوص الحکم،

போன்ற நூற்களை அதிகம் படிக்கச் சொல்லி கேட்பார்கள். சில நேரங்களில் அதில் ஒரு வரி படிக்கப்படும். அதற்கு விளக்கம் கூற ஆரம்பித்தால் பல மணி நேரங்கள் செல்லும். சில்சிலாவுடைய தஃலீம் மனனம் செய்தீர்களா? என்று கேட்டு அதைக் கூறச் சொல்லி அதற்கு விளக்கம் கூறுவார்கள். தங்கள் இறுதி காலம் வரை இவ்வழக்கம் தொடர்ந்தது.

சர்கார் தங்கள் 77வது வயதில் உடல் நலம் பாதிக்கப்பட்டு பேச்சு நிற்கும் நிலை ஏற்படுவதற்கு சில மணி நேரங்களுக்கு முன் வரை தஃலீம் தான் செய்து கொண்டிருந்தார்கள். அதற்கு முதல் நாள் இரவில் اقتضاء இக்திளாஃ வுடைய மஸ்அலாவை ஒரு மணி நேரம் விளக்கிப் பேசினார்கள். الشیخ محمد اسمعیل مدراسی ஷைகு முஹம்மது இஸ்மாயீல் மதராஸி அவர்கள் எழுதிய கிதாபுல் கஸாயின் எனும் நூலில் வந்துள்ள ஒரு வாசகத்திற்கு (''லா தஹாஃபூனீ வஹாஃபூ களாஇ'') விளக்கம் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

ரிவாயத் :

درد سینے میں جو رکھتے ہیں وہ کیا دکھلائیں —تو سنو یا نہ سنو ہم ہیں سنانے کے لئے (محو تجو د)

எங்கள் இதயங்களில் இறைக்காதல் எனும் வலி இருப்பதால் நாங்கள் அவனைப் பற்றி பேசிக் கொண்டு தான் இருப்போம். நீங்கள் கேளுங்கள்; கேட்காது போங்கள். நாங்கள் பேசத்தான் இருக்கிறோம்

என்று அல்லாமா ஆமிர் கலீமீ ஷாஹ் கிப்லா தாமத் பரகாத்துஹு அவர்கள் கூறுகிறார்கள்.

அதுபோல் சர்கார் நாயகம் ஒரு மனிதர் வந்தாலும் அவரிடமும் பலமணி நேரம் ஞானங்கள் பேசுவார்கள். ஐனீ ஷாஹ் பைஜி ஹள்ரத் கிப்லா கூறினார்கள். 1985ல் ரமலானில் நான் ஒருவன் மட்டுமே இருக்க தராவீஹுக்குப் பின் ஆரம்பித்து ஸஹர் வரை பேசுவார்கள். இதே போல் பலரும் கூறியுள்ளார்கள். ஜமாலீ ஷாஹ் நூரி கிப்லா, சுபூரி ஷாஹ் பைஜி, நூருஸ்ஸலாம் ஹஜ்ரத், ஷேக் அப்துல் காதிர் நூரி ஹஜ்ரத் மற்றும் பலரும் தங்கள் ஒருவருக்காக நாட்கணக்கில் சர்கார் இறை ஞானம் பேசியதை நினைவு கூர்ந்தார்கள்!

சில நேரங்களில் முன்னால் இருப்பவர் தூங்கி விழுந்தால் டீ அல்லது மற்ற தின்பண்டங்கள் கொடுத்து தூக்கத்தை களைத்து பேச ஆரம்பிப்பார்கள்! சில நேரங்களில் நகைச்சுவையாகவும் பேசி கலகலப்பு உண்டாக்குவார்கள்.

ரிவாயத் :

ஒருநாள் இஷாவுக்குப் பின் நாங்கள் சர்கார் வீட்டு வாசலில் காத்திருந்தோம். மிகவும் பலஹீனமான நிலையில் எஜமான் மெதுவாக நடந்து வெளியே வந்தார்கள். நாற்காலியில் அமர்ந்து சொன்னார்கள். ''இன்று மிகவும் சிரமமாக இருந்தது. ஓய்வு எடுத்துக் கொள்ளலாமா? என்று நினைத்தேன். ஆனால் இதுதான் என் வாழ்வில் கடைசி நாளாகவும் இருக்கலாம். மற்ற இரவெல்லாம் திக்ரில் கழித்து கடைசி இரவை தூங்கிக் கழித்த துர்பாக்கியசாலியாக ஏன் ஆக வேண்டும்? என்று எழுந்து வந்து விட்டேன்'' என்று சொல்லி விட்டு சொன்னார்கள். ''இவ்வாறு தான் நான் ஒவ்வொரு நாளும் வருகிறேன்!''

ரிவாயத் :

சஜ்ஜாதாக்களும், முரீதுகளும் சர்காரை ஓய்வு எடுத்துக் கொள்ளும் படி கூறினாலும் ஓய்வெடுக்கமாட்டார்கள்.

حشر تک سوتے رہیں گے خاک کے نیچے تلک

மண்ணுக்குக் கீழே மஹ்ஷர் வரை ஓய்வு தானே எடுக்கப் போகிறோம் என்பார்கள். சர்கார் தங்கள் கடைசி ஓரிரண்டு ஆண்டுகள் கடும் தலைவலியால் கஷ்டப்பட்டார்கள். அடிக்கடி தலைவலி வரும். வந்தால் அதன் சிரமம் எனக்கும், என் ரப்புக்கும் தான் தெரியும்! என்பார்கள். அந்நிலையிலும் பல மணி நேரம் இறைஞான போதம் செய்வார்கள். அப்துஸ்ஸமத் டாக்டர் வருவார். B.P. மற்றும் E.C.G. செக்கப் எல்லாம் செய்து, இதயம் பலவீனமாக இருக்கிறது. மூன்று நாட்கள் நன்றாக ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள் என்று மருந்துகள் எழுதி கொடுத்துச் செல்வார். அவர் போனவுடன், ''டாக்டர் கார் புறப்பட்டு விட்டதா?'' என்று சஜ்ஜாதாக்களிடம் கேட்பார்கள். போனது தெரிந்தவுடன் வெளியே வந்து பைத்துன்னூரில் அமர்ந்து விடுவார்கள். பல மணி நேரம் தஃலீம் செய்வார்கள்.

ரிவாயத் :

ஒருமுறை சர்காருக்கு நெஞ்சு வலி அதிகமாகி சென்னை இசபெல்லாவில் சேர்த்திருந்தார்கள். E.C.G. ஓடிக் கொண்டிருந்தது. அருகில் இருந்த முரீதுகளுக்கு சர்கார் தஃலீம் செய்து கொண்டிருந் தார்கள். டாக்டர்களோ தயவு செய்து பேசாதீர்கள் என்று கூற, ''நான் பேசிக் கொண்டே இருப்பவன் சார் எனக்கு எதுவும் ஆகாது'' என்றார்கள்.

ரிவாயத் :

ஒருநாள் துபையில் இருந்து அபுதாபிக்கு கிளம்பிக் கொண்டி ருந்தார்கள். அப்போது துபையில் உள்ள சிலர் சர்காரிடம் வந்து இன்று மீலாது விழா ஏற்பாடு செய்துள்ளோம். தாங்களும் கலந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். சர்கார் உடனே சென்றார்கள். நோட்டீஸில் தங்கள் பெயர் இல்லை என்றெல்லாம் பார்க்கவில்லை. கடைசியாக சர்கார் பேச ஆரம்பித்தார்கள். பேச்சு தொடர்ந்து கொண்டே இருந்தது. உற்சாகத்தோடு கூட்டம் கேட்டுக் கொண்டிருந்தது. பஜ்ர் பாங்கு சொல்லும் போது முடித்தார்கள். ஏறத்தாழ ஆறு மணி நேரம் பேசியிருந்தார்கள். கடைசியாக

சொன்னார்கள். நான் இந்த பயானுக்கு தங்களிடம் கூலி வாங்க வில்லை. தாங்கள் கொடுத்தாலும் நான் வாங்கப் போவதில்லை. பேச வைத்ததையே பெரிய பாக்கிமாகக் கருதுகிறேன். யா அல்லாஹ்! இந்த பாவியான அடியானுக்கு உன் ஹபீப் நாயகத்தைப் பற்றிப் பேச தவ்பீக் செய்தாயே என்று அல்லாஹ்வுக்கு நான் ஷுக்ர் செய்கிறேன் என்றார்கள்.

ஆஸாரை மதித்தது

ரிவாயத் :

ஒருநாள் சர்கார் இரவு வெகு நேரம் வரை பேசிக் கொண்டிருந் தார்கள். கேட்டோர்கள் அனைவரும் இறைஞானக் கடலில் நீந்தி உணர்ச்சிப் பெருக்கோடு இருந்தார்கள். இறுதியில் சர்கார் விடைபெற்று வீட்டுக்குச் செல்லும் முன் தங்கள் தலைபாகையை அவிழ்த்துக் காண்பித்தார்கள். அதற்குள் ஒரு சிறு துணி இருந்தது. நாகூர் பாதுஷா நாயகம் அவர்களின் புனித ரவ்ளாவில் போடப்பட்ட துணியின் ஒரு பகுதி இது. இதன் பரக்கத்தினால் தான் அல்லாஹ் இப்படி பைஜானை வெளியாக்கினான் என்று கூறினார்கள். நபி (ஸல்) அவர்களின் ஆஸார்களை ஸஹாபாக்கள் பயன்படுத்தியதையும், அதை வஸீலாவாக்கி துஆ செய்தததையும், போர்களில் வெற்றி பெற்றதையும் நாம் வரலாறுகளில் நிறைய காணலாம்.

ஞான ஊற்று

ரிவாயத் :

சர்கார் நாயகம் கூறுவார்கள். யாராவது ஒருவரை வைத்துக் கொண்டு தீனை பேச ஆரம்பித்து விட வேண்டும். குழந்தைக்கு கொடுக்கக் கொடுக்கத் தான் தாய்க்கு பால் சுரக்கும். கொடுப்பதை நிறுத்தி விட்டால் சுரப்பதும் நின்று விடும்.

ரிவாயத் :

சர்கார் தினமும் தங்கள் உபன்யாசங்களை துவங்குவதற்கு தலையங்கமாக சில வேளை யாரையாவது பேசச் சொல்லுவார்கள். அதைத் தெடர்ந்தே சர்கார் உரை நிகழ்த்துவார்கள். சில வேளை இன்று குர்ஆன் ஓதும் போது இந்த ஆயத் வந்தது என்று கூறி அதன்

தொடராக உரை நிகழ்த்துவார்கள். அல்லது ஏதாவது ஒரு ஞான நூலைப் படிக்கச் செய்து அதற்கு விளக்கம் கூறுவார்கள். சில நேரங்களில் வந்து அமர்ந்து சில்சிலாவுடைய தஃலீமில் ஒரு பாடத்தை தங்களே ஆரம்பித்து அதிலிருந்து அப்படியே தொடர் வார்கள். வந்திருப்பவர்கள் யாராவது தங்கள் பிரச்சனைகளை சொல்லும் போது அதற்கு தெளிவு சொல்லும் விதமாக உரையை ஆரம்பிப்பார்கள்.

ரிவாயத் :

ஒரு சில நாட்கள் மார்க்க சட்டதிட்டங்களை விளக்குவார்கள். "கியாமத் நெருக்கத்தில் பலரும் இறை ஞானம் பேசுவார்கள். ஆனால் ஷரீஅத் சட்டங்களை பேச மாட்டார்கள்" என்று கிதாபுகளில் பார்த்திருக்கிறேன். எனவே நாம் ஷரீஅத் சட்டங்களையும் பேச வேண்டும். கடைபிடிக்க வேண்டும் ஷரீஅத் இல்லாமல் தரீகத் கிடையாது என்பார்கள்.

ரிவாயத் :

எஜமான் பைஜி நாயகம் பேசும் போது நூற்றுக் கணக்கான ஆயத்களும் ஹதீஸ்களும் அரபி மூலத்துடன் சரமாரியாக வந்து கொண்டே இருக்கும். அவர்கள் ஹாபிஜுல் குர்ஆனும் அல்ல. இது என் ஷைகுடைய பைஜான் தான் என்று கூறுவார்கள். நாம் தெரிந்த ஆயத்கள் ஹதீஸ்களுக்கு சர்கார் புது வகையில் விளக்கம் கொடுக்கும் போது பெரும் பெரும் உலமாக்களும் திகைப்படைந்து "இப்போது தான் இந்த ஆயத் இறங்குவது போல் தெரிகிறது" என்று கூறியிருக்கிறார்கள்.

இனிய எளிய நடை

ரிவாயத் :

சர்காருடைய இனிய தமிழை பாமர மக்களும், உலமாக்களும், படித்த அறிஞர்களும் ரசித்துக் கேட்பார்கள். வார்த்தைகள் எழுத்து நடையில் இல்லாமல் சாதாரண பேச்சுத் தமிழ் நடையில் தான்

இருக்கும். அதே போல் அவர்களின் தெளிவான உருது மொழியிலும் மணிக்கணக்கில் பேசுவார்கள். ஆங்கிலத்திலும் உரை நிகழ்த்து வார்கள். இலக்கணப் பிழையின்றி அழகான ஆங்கிலம் பேசுவார்கள். ஆனால் நகைச்சுவையாகச் சொல்லுவார்கள். ''என் ஆங்கிலம் பட்லர் இங்லீஷ் என்பார்களே அது மாதிரி தான். அதாவது ஆங்கில துரை ஒருவரிடம் நம் தமிழ் நாட்டுக்காரர் வேலை செய்தார். ஒரு நாள் பூனை பாலை குடித்து விட்டது. அதை எப்படி சொல்வது என்று தெரிய வில்லை. எனவே 'சார் சார் நாலு கால் சார். ஒரு வால் சார். மியாவ் மியாவ் சார். மில்க் டிரிங்க் சார்' என்றாராம். துரை அதை விளங்கிக் கொண்டார். இப்படித்தான் என் ஆங்கிலம்'' என்பார்கள்.

ரிவாயத் :

இன்டர் நெட்டில் சர்காருடைய சில பயான்களை ஒரு முரீது பதிவு செய்திருந்தார். அதைப் பார்த்து விட்டு ஒரு ஜெர்மன் நாட்டுக்காரர் அட்ரஸ்ஸை தேடிக் கண்டு பிடித்து லால்பேட்டைக்கு சர்காரைப் பார்க்க வந்து விட்டார். அவரை அன்பாக வரவேற்று சிறிது நேரம் ஆங்கிலத்தில் உரையாற்றினார்கள். பின்னர் அங்கு வந்திருந்த முரீதுகளில் நன்கு ஆங்கிலம் பயின்ற இஞ்சினியர் மற்றும் ஒருவரிடம் தன் கருத்துக்களை நல்ல ஆங்கிலத்தில் கூறும்படி கேட்டுக் கொண்டார்கள். அவர்களும் சொன்னார்கள். அந்த ஜெர்மனியர் சொன்னார். ''மகான் அவர்களே! இவர்கள் பேசும் ஆங்கிலம் எனக்கு விளங்கவில்லை. தாங்கள் பேசுவது தான் எனக்கு நன்றாக விளங்குகிறது. தாங்களே சொல்லுங்கள்'' என்றார். இறைஞானிகளின் கல்பில் இருந்து வரும் பேச்சு பாஷைகளைக் கடந்ததாகும்.

ஆழ்ந்த அறிவாற்றல்

ரிவாயத் :

کسی کو کیا پتہ تیرا نہ دے خود علم تو جب تک

جو اپنی ذات کا جاہل ہو کہاں ہو رازدان تیرا (طیبات غوثی)

இறைவா! உன்னைப் பற்றி நீ சொல்லித்தராத வரை யார் உன்னை அறிய முடியும்? தன்னையே அறியாத மனிதன் உன்னை எப்படி அறிவான் என்று கௌஸி நாயகம் கேட்கிறார் கள்.

''ஆரிபீன்கள் தாங்கள் எதுவும் அறிய முடியாதவர்கள். ஜஹ்லுக்கு சொந்தக்காரர்கள். அவனது இல்மின் சுடர் நம்மில் வீசுவதால் நாம் அறிகிறோம்'' என்ற உணர்வில் எப்போதும் இருக்கிறார்கள். அதனால் அல்லாஹ் அவர்களுக்கு பசீரத் எனப்படும் ஆழ்ந்த அறிவாற்றலை வழங்கியிருக்கிறான். ஒவ்வொரு வஸ்துவின் உண்மை நிலையை அவர்கள் அறியச் செய்கிறான். Master of all என்று அவர்களைச் சொல்லலாம்!

சர்கார் பைஜி நாயகம் எந்தத் துறையைப் பற்றி பேசினாலும் அந்தத் துறையில் உள்ளவர்களே ஆச்சரியப்படும் வகையில் விளக்குவார்கள். அரசியல், பொருளாதாரம், போலீஸ் துறை, பேங்க், மருத்துவம், கட்டிடக் கலை, பிக்ஹ், அறிவியல், சரித்திரம், இலக்கனம், தப்ஸீர், ஹதீஸ், விலங்குகள், தாவரங்கள், வானவியல் என அனைத்தி லும் நன்கு ஆராய்ச்சி செய்தவர்கள் போல் அவர்கள் பேச்சுகள் இருக்கும். எத்தனையோ டாக்டர்களும், இஞ்சினியர்களும், பேங்க் அதிகாரிகளும், அரசியல்வாதிகளும், போலீஸ் அதிகாரிகளும், மார்க்க அறிஞர்களும், கம்ப்யூட்டர் இஞ்னியர்களும், விவசாய அக்ரிகல்ச்சர் டிகிரி வாங்கியவர்களும் சர்காரிடம் வருவார்கள். இவர்களில் முரீது களும் முரீது அல்லாதவர்களும் இருந்தார்கள். ஆனால் அவர்களும் ஆச்சரியப்பட்டுதான் போவார்கள். எனினும் சர்கார் அந்தந்த துறையில் உள்ளவர்களுக்கு மிகவும் மரியாதை கொடுத்து வந்தார்கள். இவர்கள் அனைவருமே உலூஹிய்யத்துடைய மஜ்ஹராக இருக்கிறார்கள். எனவே அவர்களுக்குரிய கண்ணியம் கட்டாயம் தர வேண்டும். டாக்டர்களிடம் கேட்காமல் எந்த மருந்தும் உட்கொள்ளக் கூடாது. இஞ்சினியர் ஆலோசனை இல்லாமல் கட்டிடம் கட்டக் கூடாது. உலமாப் பெருமக்களிடம் கேட்காமல் சுயமாக மார்க்கத்தை முடிவு செய்யக் கூடாது என்று கூறுவார்கள்.

தவக்குல் என்றால் என்ன?

ரிவாயத் :

சர்காரின் பீர்பாய் சேலம் ஷேக் அப்துல் காதிர் நூரி ஹஜ்ரத் கிப்லா அவர்கள் ஒருமுறை சர்காரைப் பார்க்க வந்திருந்த போது, ''கொஞ்ச

நாட்களாக நெஞ்சு வலிப்பதாகவும் டாக்டர் இன்ன இன்ன டெஸ்டெல்லாம் செய்யும்படியும் கூறியுள்ளார்கள். தங்கள் துஆவை ஆதரவு வைக்கிறேன்'' என்று கேட்டுக் கொண்டார்கள். அதற்கு பைஜி நாயகம், ''டாக்டர் செய்யும் டெஸ்டெல்லாம் ஒன்று விடாமல் செய்யுங்கள். இன்ஷா அல்லாஹ் அவை ஒன்றுமில்லாமல் அல்லாஹ் ஆக்கி விடுவான். நானும் துஆச் செய்கிறேன்'' என்று கூறியது மட்டுமின்றி பத்தாயிரம் ரூபாய் பணமும் கொடுத்து இதை மருத்துவ செலவுக்கு வைத்துக் கொள்ளுங்கள் என்றும் கூறினார்கள். சர்கார் சொன்னது போலவே ரிசல்ட்கள் நார்மலாகவே இருந்தன! நெஞ்சில் புண் இருப்பதாகக் கூறி அதற்கு மட்டும் சில மாத்திரைகள் கொடுத்தார்கள். அதோடு சரியாகி விட்டது.

''சிலர் அல்லாஹ்வின் மீது தவக்குல் வைக்கிறேன். துஆ செய்து கொண்டிருக்கிறேன். எனவே டாக்டரிடம் காட்டத் தேவையில்லை என்பார்கள்.'' இது சுன்னத்துக்கு மாற்றமானதாகும். நபிமார்கள் அனைவருமே அஸ்பாபுகளை உலகக் காரணிகளைப் பயன் படுத்தினார்கள். அல்லாஹ்வின் மீதும் தவக்குல் வைத்தார்கள். ஒரு ஸஹாபி ஒட்டகத்தை அவிழ்த்து விட்டு நான் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைத்துள்ளேன் என்று கூறிய போது நபி (ஸல்) அவர்கள் ஒட்டகத்தையும் கட்டி வைய்யுங்கள். அல்லாஹ்வின் மீதும் நம்பிக்கை வைய்யுங்கள் என்றார்கள். இந்த அனைத்து அஸ்பாபுகள் மூலமும் அவன் தான் நம் தேவைகளைப் பூர்த்தி செய்கிறான்.

ரிவாயத் :

கடைய நல்லூர் அப்துல் காதிர் ஐனீ ஷாஹ் ஹஜ்ரத் கிப்லா பொருள்வை பைஜுல் ஹஸனாத் மதரஸாவில் உஸ்தாதாக இருந்த போது கடுமையான நெஞ்சு வலியால் பாதிக்கப்பட்டார்கள். திருச்சியில் டாக்டர்கள் செக்கப் செய்து, பைபாஸ் சர்ஜரி செய்ய வேண்டும். இரண்டு இலட்சத்திற்கு மேல் செலவாகும் என்று கூறினார்கள். உடனே லால்பேட்டைக்கு ஷைகு நாயகத்தைக் காண வந்தார்கள். பைஜி நாயகம் விசாரித்து விட்டு, ''இன்ஷா அல்லாஹ் தங்களுக்கு பெரிய வியாதி இல்லை. சென்னையில் சென்று சிகிச்சை

செய்து கொள்ளுங்கள்'' என்று கூறி, பத்தாயிரம் பணம் கொடுத்து ''இன்ஷா அல்லாஹ் இந்தப் பணத்திற்கு மேல் தங்களுக்கு செலவாகாது. வியாதி சரியானவுடன் தாங்கள் மீண்டும் பொரவச்சேரி மதரஸாவிற்கு வந்து ஓதிக் கொடுப்பீர்கள்'' என்று கூறினார்கள். என்ன ஆச்சரியம்! பெரியோர்களின் வாய் வார்த்தைகள் வீணாவதில்லை. சென்னையில் வைத்தியம் செய்யப்பட்டது. இரத்த சிவப்பு அணுக்கள் குறைவால் தான் நெஞ்சு வலி என்று கண்டறியப்பட்டது. மாத்திரை கள் தரப்பட்டு முழுமையான குணம் ஏற்பட்டது. பத்தாயிரம் ரூபாய்க்கு மேல் செலவு ஏற்படவில்லை. மீண்டும் மதரஸாவிற்கு வந்து ஓதிக் கொடுத்தார்கள்.

<u>மருத்துவச் செலவும் சதகா</u>

ரிவாயத் :

ஒருமுறை சர்காரின் பீர்பாய் ரபீகீ ஷாஹ் நூரி அவர்கள் தங்கள் வியாதியைப் பற்றி முறையிட்டு இதுவரை டெஸ்ட்டுக்கு மட்டும் பத்தாயிரத்துக்கு மேல் செலவு ஏற்பட்டு விட்டது என்று கூறினார்கள். அதற்கு பைஜி நாயகம், ''அதற்காகக் கவலைப்படாதீர்கள். அதுவும் சதகாவாகத்தான் எழுதப்படுகிறது. இந்த மாதம் பத்தாயிரம் சதகா செய்யுங்கள் என்று சொன்னால் தாங்கள் செய்வீர்களா? அதுதான் அல்லாஹ் இப்படி பல வகையில் நம்மிடமிருந்து எடுத்துக் கொள் கிறான். தாங்கள் கொடுத்த அந்த பணத்தை எத்தனை பேர்களுக்கு அல்லாஹ் பங்கு வைத்திருக்கிறான் பாருங்கள். டாக்டர், நர்ஸ், மெடிக்கல்காரர், மருந்து தயாரிப்பாளர், ஆஸ்பத்திரி சுத்தம் செய்பவர், அங்கு மிஷின்களை இயக்குபவர், கணக்கு எழுதுபவர், டிரைவர் இப்படியே பார்த்தால் பல நூறு பேர்கள் அதில் பங்குதாரர்களாக இருக்கின்றனர். உலூஹிய்யத்தை அல்லாஹ் இப்படித்தான் செயல்படவைக்கிறான். நாம் இந்த சங்கிலித் தொடரை நிறுத்த முடியாது. நீங்கள் அல்லாஹ்வுக்கு ஷுக்ர் செய்யுங்கள். வியாதியைக் கொடுத்த அல்லாஹ் அதற்கு மருத்துவம் செய்ய பணத்தையும் கொடுத்தானே என்று நினைத்து நன்றி செய்யுங்கள்'' என்று கூறினார்கள்.

வியாதியும் அதம்

ரிவாயத் :

சர்காரிடம் ஒருவர் வந்து தனக்கு புதிதாக ஏற்பட்டுள்ள ஒரு வியாதி பற்றி மிகவும் கவலையுடன் விளக்கமாகச் சொன்னார். கேட்டுக் கொண்டே இருந்து விட்டு சர்கார் கூறினார்கள். ''தாங்கள் சொல்லும் இந்தக் கஷ்டம் எனக்கு 10 வருடமாக இருக்கிறது. அத்துடனே 20 வருடங்களுக்கு மேலாக B.P. யும், 30 வருடங்களாக ஷுகரும் இருக்கிறது. மூல வியாதியும் அதிகமாக இருக்கிறது. அல்சரால் தொடர்ந்து சிரமம் ஏற்படுகிறது. அத்துடனே நெஞ்சு வலியும் பல வருடங்களாக இருக்கிறது. கிட்னியில் கல்லும் இருக்கிறது. கழுத்து வலியால் அவதிப்பட்டு தினமும் பட்டை அணிந்து கொள்கிறேன். முதுகு வலியும் அதிகமாக இருக்கிறது. தலை சுற்றலும், மயக்கமும் எப்போதும் இருக்கிறது. அத்துடனே தலைவலியும் மிகவும் அதிகமாக இருக்கிறது. இதோ பாருங்கள் கால்கள் பிரட் மாதிரி வீங்கியிருக் கின்றன. இரவெல்லாம் உயரமான தலையணையின் மீது கால் வைத்திருந்தால் காலையில் சற்று வற்றியிருக்கும். தூக்கமின்மைக்காக தினமும் தூக்க மாத்திரை சாப்பிடுகிறேன். இரத்தக் குறைவும் உள்ளது. செரிமானக் கோளாறும் உள்ளது. மூட்டு வலியும் ரொம்ப காலமாக இருக்கிறது. கொஞ்ச காலமாக கை கால் நடுக்கமும் ஏற்பட்டுள்ளது. சில நேரங்களில் சிறுநீரைக் கட்டுப்படுத்த முடியாமல் கைலி யெல்லாம் சில சொட்டுகள் ஆகிவிடுகின்றன. ஒரு நாளைக்கு பல தடவைகள் கைலி மாற்ற வேண்டி ஏற்படுகிறது. பல் வலி ஏற்பட்டு சமீபத்தில் தான் சில பற்களை எடுக்கும்படி ஆகி விட்டது. கண்ணுக்கும் அவ்வப் போது செக்கப் செய்து கண்ணாடி மாற்ற வேண்டியுள்ளது. தொண்டை வலியும், நாக்கு வறட்சியும் இருப்பதால் அடிக்கடி ''ஸ்டெப்சில்ஸ்'' சாப்பிட்டுக் கொள்கிறேன். சளி, இருமல் இருந்து கொண்டே இருக்கிறது. சில நேரங்களில் வரட்டுப் புகைச்சல் ஏற்பட்டால் தொடர்ந்து இருந்து கொண்டே இருக்கிறது. எனவே வெந்நீர் பிளாஸ்கை எப்போதும் அருகிலேயே வைத்துக் கொள்கிறேன். இவையெல்லாம் இருந்தாலும் இந்த வியாதிகள் அனைத்தும் மக்லூக் தான். இவைகளும் அதம் தான். அதமுக்கு எந்த

வஜ்னும் இல்லை. அல்லாஹ் நாடாமல் இவைகள் நமக்கு ஏந்தத் தீமையும் செய்ய முடியாது என்ற மகிழ்வுடன் தங்களை வந்து சந்திக்கிறேன். அல்லாஹ்வின் பேரருளால் பல மணி நேரம் பேசுகிறேன்'' என்றார்கள்.

வந்தவருக்கோ தலை சுற்றி கீழே விழாத குறைதான். இவ்வளவு நோய்களையும் வைத்துக் கொண்டு உலகில் மகிழ்வுடன் வாழும் நபர் இருக்க முடியுமா? இவர்களோடு ஒப்பிடுகையில் எனக்கு ஏற்பட்டது ஒரு வியாதியா? என்றார். அத்தோடு அவரின் கவலைகள் பறந்து போய் விட்டன.

''மக்கள் அனைவரிலும் அதிகமாக சோதிக்கப்படுபவர்கள் நபிமார்கள். அதன்பின் அடுத்த அந்தஸ்தில் உள்ளவர்கள். அதன் பின் அதற்கு அடுத்த அந்தஸ்தில் உள்ளவர்கள்'' என்று நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

ரிவாயத் :

சர்கார் மாத்திரைகளுக்கென்று தனி பெட்டியே வைத்திருப் பார்கள். வீட்டிலும், பயணத்திலும் அதை கூடவே வைத்திருப்பார்கள். ஒவ்வொரு நேரமும் பத்துக்கு மேற்பட்ட மாத்திரைகள் சாப்பிடுவார் கள். முதலில் ஒவ்வொரு மாத்திரையாக பிரித்து எடுத்து ஒன்று சேர்த்து வைத்துக் கொள்வார்கள். ''ஹஜ்ரத் எல்லா கலர் மாத்திரையும் இருக்கிறதா? பாருங்கள்'' என்று நகைச்சுவையாகக் கேட்பார்கள். மாத்திரையைக் கையில் வைத்துக் கொண்டு, ''ஏ! மாத்திர! நீ எங்கள ஏமாத்தர!! நீ சுயமாக நன்மை தீமை செய்ய முடியாது! அல்லாஹ் தான் ஷாபியாக நிவாரணம் தருபவனாக இருக்கிறான். நிஸ்பத் தான் உன் னுடையது.

وَإِذَا مَرِضْتُ فَهُوَ يَشْفِينِ ۝

''நான் வியாதி அடைந்தால் அவன் தான் நிவாரணம் தருபவன்'' என்று கூறி ஒவ்வொன்றாக சாப்பிடுவார்கள்.

ரிவாயத் :

சர்காரின் பீர்பாய் ஒருவர் சர்காரிடம், ''தாங்கள் இவ்வளவு அதிகமான மாத்திரை சாப்பிடுகிறீர்களே! இதுவே தங்களுக்கு ஸைட்

எபெக்ட் செய்தும் தொந்தரவு கொடுக்குமே!'' என்றார். சர்கார் உடனடியாகச் சொன்னார்கள். ''எப்படி மாத்திரை சுயமான நன்மை செய்யாதோ அதே போல் அது சுயமாக தீமையும் செய்யாது என்பது என் அகீதாவாகும்'' என்றார்கள்.

ரிவாயத் :

தாதா சர்கார் நூரி நாயகம் ஒருமுறை பைஜி நாயகத்தைப் பற்றி குறிப்பிடும் போது,

اگر فیض کسی بیمار پر تھوکے تو وہ شفا ہو جائے گا مگر وہ خود بیمار ہے یہ ان کے اور ان کے خدا کے بیچ میں راز ہے

''பைஜி ஏதாவது வியாதியஸ்தரின் மீது துப்பினால் கூட அவர் நிவாரணம் ஆகிவிடுவார். ஆனால் அவர் தானே வியாதியாளராக இருக்கிறார். அது அவருக்கும் அவருடைய ரப்புக்கும் மத்தியில் உள்ள ரகசியம் ஆகும்'' என்று கூறினார்கள்.

ரிவாயத் :

சர்கார் நாயகம் தங்களுக்கு அல்லது வீட்டில் மற்றவர்களுக்கு ஏதாவது சிரமம் வந்தால் உடனே அதிகமாக தான தர்மம் செய்வார்கள். ''உங்கள் வியாதியஸ்தர்களுக்கு தர்மத்தைக் கொண்டு மருத்துவம் செய்யுங்கள்'' என்று ஹதீஸில் வருவதை சுட்டிக் காட்டுவார்கள். ஒருமுறை பீராணியம்மாவுக்கு சுகக் குறைவு ஏற்பட்ட போது வெளியே வந்து அங்கிருந்த ஆலிம்கள் அனைவருக்கும் தலா 500 ரூபாய் கொடுத்தார்கள். இவ்வாறு பல முறை செய்திருக்கிறார்கள்.

செலவு செய்யுங்கள்

ரிவாயத் :

''ஆலிம்களிடத்திலும், ஸாஹிப்மார்கள். (நபிமார்கள், வலிமார்களின் வாரிசுகள்) இடத்திலும் நாம் காசு வாங்கக் கூடாது. முடிந்த அளவு அவர்களுக்கு நாம் தான் கித்மத் செய்ய வேண்டும்'' என்று குறிப்பிடுவார்கள். அதே போல் ஆலிம்கள் எதுவும் ஹதியா கொடுத்தால் மகிழ்வுடன் வாங்கிக் கொள்வார் கள். அவர்கள் திரும்பச் செல்லும் போது அதை விட இரண்டு மடங்கு திருப்பித் தந்து விடுவார்கள்!

ரிவாயத் :

''பீர்பாய்களுக்கு நாம் தாராளமாக செலவு செய்ய வேண்டும். 'கருவாடு கரைந்தால் சட்டிக்குள் தான்' என்று சொல்வார்கள். நாம் அவர்களுக்காக என்ன செலவு செய்கிறோமோ அதை விட பல மடங்கு அல்லாஹ் நமக்கு திரும்பத் தந்து விடுகிறான்'' என்று கூறினார்கள்.

ரிவாயத் :

ஒரு சமயம் பைஜி நாயகம் கூறினார்கள். ''இப்போதெல்லாம் நான் என்ன தர்மம் செய்கிறேனோ அவற்றை அல்லாஹ் உடனுக்குடன் திருப்பிக் கொடுத்து விடுகிறான். என் அடியார்களுக்கு நீ என்ன கொடுப்பது. நானே கொடுக்கிறேன் என்று அல்லாஹ் சொல்கிறானோ என்று நான் பயப்படுகிறேன்!''

ரிவாயத் :

சர்காருடைய பீர்பாய் ''பொதிபாய்'' என்றொருவர் லால் பேட்டையில் இருந்தார். அடிக்கடி சர்காரிடம் வந்து போவார். சர்கார் அவரை மிகவும் நேசிப்பார்கள். ஒருநாள் சர்காரிடம் வந்து தன் பணக் கஷ்டத்தைத் தெரிவித்தார். சர்கார் ''நீங்கள் கையில் இருப்பதை தர்மம் செய்யுங்கள். அல்லாஹ் ஒன்றுக்கு பத்தாக தருவான்'' என்று கூறினார்கள். உடனே அவர் 10 ரூபாய் தர்மம் செய்தார். சற்று நேரத்தில் சர்காருடைய கலீபா ஒருவர் வெளிநாட்டிலிருந்து சர்காரைப் பார்க்க வந்திருந்தார். சர்கார் அவரிடம், ''உங்களை அல்லாஹ் வெளிநாட்டிலிருந்து சலாமத்தாக கூட்டி வந்ததற்கு நன்றியாக ஏதாவது தர்மம் செய்யுங்கள். இதோ நமது பொதிபாய் இருக்கிறார்'' என்றார்கள். அவர் உடனே நூறு ரூபாய் எடுத்துக் கொடுத்தார். ''பார்த்தீர்களா! ஒன்றுக்குப் பத்தாக அல்லாஹ் தருவான் என்று கூறினேனே! அல்லாஹ் கொடுத்து விட்டான் அல்லவா?'' என்று சர்கார் பொதிபாயிடம் சொன்னார்கள். அதற்கு அவர், ''அப்படியானால் நான் இந்நூறு ரூபாயையும் தர்மம் செய்து விடுகிறேன். அல்லாஹ் 1000 ரூபாய் தருவான் அல்லவா?'' என்றார். சர்கார் சிரித்து விட்டார்கள். பிறகு சொன்னார்கள். ''அல்லாஹ் நிச்சயம் தருகிறேன் என்கிறான்.

ஆனால் எப்போது தருவேன் எப்படித் தருவேன் என்று கூற வில்லை. எனவே சில நாட்களும் ஆகலாம். சில மாதங்களும் ஆகலாம். சில வருடங்களும் ஆகலாம். அல்லது உங்களுக்கு ஏற்பட இருந்த செலவை இல்லாமல் செய்து விடலாம். உதாரணமாக நோய் ஏற்பட்டு ஆயிரம் ரூபாய் செலவு செய்ய வேண்டும் என்று தக்தீரில் இருக்கும். நீங்கள் தர்மம் செய்த பரக்கத்தால் அந்த நோயே வராமல் அல்லாஹ் தடுத்து விடலாம்'' என்று கூறினார்கள். அவரோ நூறு ரூபாயை பத்திரமாக சட்டைக்குள் வைத்துக் கொண்டார்.

விரும்பியதைத் தருகிறான்

ரிவாயத் :

அல்லாஹ் தன் நல்லடியார்களுக்கு அவர்கள் மனதில் விரும்பியதையும் தருவதாகக் கூறுகிறான்.

وَلَكُمْ فِيهَا مَا تَشْتَهِىٓ أَنفُسُكُمْ وَلَكُمْ فِيهَا مَا تَدَّعُونَ ۝

சர்கார் வாழ்வில் அதுபோல் எண்ணற்ற நிகழ்ச்சிகளைக் கூறலாம். ஒருநாள் கூறினார்கள். ''என்னிடமிருந்த பழைய பயான் கேசட்டுகளை பதிவு செய்து கொண்டு தருவதாக சில பீர்பாய்களும் முரீதுகளும் கேட்டனர். நம்மிடமே பதிவு செய்யும் வசதி கொண்ட டேப்ரிகார்டர் (டபுள்டோர்) இருந்தால் அவர்கள் பதிவு செய்ய எளிதாக இருக்குமே என்று நேற்று காலையில் ஒரு சிந்தனை வந்தது. சற்று நேரத்தில் உறவுக்கார பெண்மணி ஒருவர் அதே போன்ற அழகான புதிய டேப்ரிகார்டரை தூக்கி வந்து ''இதை வெளிநாட்டில் இருந்து ஏழாயிரம் ரூபாய்க்கு கணவர் வாங்கி வந்தார். இங்கு நல்ல விலைக்குப் போகவில்லை. தாங்களாவது இதை எடுத்துக் கொண்டு உதவி செய்யுங்களேன்'' என்று கேட்டுக் கொண்டார். இன்ஷா அல்லாஹ் பணம் வந்தால் தருகிறேன் என்று கூறினேன்.

சற்று நேரத்தில் அங்கு வந்த ஒரு சீடர் சில டாலர்களை அன்பளிப்புச் செய்தார். அதை வாத்தியாரிடம் கொடுத்து மாற்றி வரச் சொன்னால் சரியாக ஏழாயிரத்து இருநூறு ரூபாய் இருந்தது. ஏழாயிரத்தை அந்தப் பெண்மணியிடமும், இருநூறை வாத்தி யாரிடமும் கொடுத்தேன். இவ்வாறு சற்று நேரத்தில் அல்லாஹ் என்

தேவையை வாய் திறந்து சொல்லாமலேயே பூர்த்தி செய்தான்'' என்று கூறினார்கள்.

ரிவாயத் :

ஒருமுறை தாதா சர்கார் கூறும் போது, ''பைஜி ஷாஹ் ஒரு ஜாஹித் - துறவியாக இருக்கிறார். அவருடைய உள்ளத்தில் துன்யா இல்லை. ஏதோ ஒரு வீட்டின் வெளித் திண்ணையில் திரை கட்டி வாழ்ந்து சென்று விடுவார். இருந்தாலும் அல்லாஹ் பால் பொங்குவது போல் செல்வங்களைப் பொங்கச் செய்வான். அது அவருக்காக அல்ல. அவருடைய குடும்பத்தினர், நண்பர்கள் கவலையில்லாமல் இருப்பதற்காக அல்லாஹ் தருகிறான்'' என்று கூறினார்கள்.

பேணுதல்

ரிவாயத் :

சர்கார் நாயகம் ஒரு மதரஸாவில் ''சபீர்'' ஆக வசூல் செய்யும் பணியில் ஆரம்ப காலங்களில் இருந்தார்கள். அப்போது ஒவ்வொரு ஊராகச் சென்று மதரஸாவுக்காக வசூல் செய்வார்கள். சிலர் இன்ன தொகை மதரஸாவுக்கு இது தங்களுக்கு அன்பளிப்பு என்று கொடுப்பார்கள். சர்கார் அவர்கள் இவ்வாறு பிரயாணத்தில் அன்பளிப்பாக வரும் பணம், துண்டு, ஜுப்பா, கைலி, அத்தர் பாட்டில் எதுவானாலும் அதை மதரஸாவில் சேர்த்து விடுவார்கள். மதரஸாவின் செலவில் பிரயாணம் செல்லும் போது தனிப்பட்ட முறையில் யார் எது கொடுத்தாலும் அது மதரஸாவுக்குத்தான் சொந்தம். இதுவே மார்க்க சட்டம் என்று கூறுவார்கள். ஆனால் அதே மதரஸாவில் பணியாற்றும் வேறு சில உலமாக்களும் வசூலுக்குச் செல்வார்கள். அவர்கள் அவ்வாறு செய்ய மாட்டார்கள். தங்களுக்கென்று கொடுக்கப்பட்டதை தாங்களே வைத்துக் கொள்வார்கள். இது பற்றி நிர்வாகிகள், ஊர்மக்களிடையே சர்ச்சை ஏற்பட்டது. அதற்கு அந்த அந்த ஆலிம்கள் ''எங்களை விட அவருக்கு மார்க்கம் அதிகம் தெரியுமோ? நாங்கள் என்ன ஹராமையா தின்கிறோம்?'' என்று கேட்க ஆரம்பித்து விட்டார் கள். வீண் சர்ச்சைகளும், பிளவுகளும் ஏற்படுவதை விரும்பாத சர்கார் நாயகம் உடனே ராஜினாமா செய்து விட்டார்கள்.

ரிவாயத் :

மதரஸா வசூல் செய்த காலத்திலேயே ஊருக்கு திரும்பி வந்தால் இரவு எத்தனை மணியானாலும் மதரஸா பொறுப்பாளிகளிடம் சென்று அந்த பணத்தை ஒப்படைக்காமல் வீடு திரும்ப மாட்டார்கள். பள்ளி, மதரஸா சொத்துக்கள் வீட்டுக்குள் வந்தால் வீடு வாழாது என்பார்கள்.

அல்லாஹ்வின் வலி

ரிவாயத் :

ஒருமுறை தாதா சர்கார் லால்பேட்டை வந்திருந்த போது காட்டு மான்னார்குடி பெட்ரோல் பங்க் மஸ்ஜிதில் ஜும்ஆ பயான் செய்தார்கள். பயானில் சொன்னார்கள்.

یہاں سے پانچ کلومیٹر میں اللہ کے ولی ہیں ان کے پاس جا کر اللہ کا اتہ پتہ جان لو

இங்கிருந்து 5 கிலோ மீட்டரில் அல்லாஹ்வுடைய வலி நேசர் இருக்கிறார். அவரிடம் சென்று அல்லாஹ்வுடைய அட்ரஸ், அடையாளங்களை அறிந்து கொள்ளுங்கள். பிறகு மீண்டும் அதே பயானில் திரும்பச் சொன்னார்கள். இங்கிருந்து 5 கிலோ மீட்டரில் லால்பேட்டை இருக்கிறது. அங்கே அல்லாஹ்வின் வலி (நேசர்) ஒருவர் இருக்கிறார். அவர் பெயர் பைஜி ஷாஹ்வாக இருக்கிறது. அவருக்கோ வயதாகி விட்டது. அவரிடம் விரைந்து சென்று அல்லாஹ்வுடைய முகவரியைத் தெரிந்து கொள்ளுங்கள் என்று கூறினார் கள்.

பயான் முடிந்து லால்பேட்டைக்கு சர்கார் வந்ததும் பைஜி நாயகம் தனது ஷைகுடைய காலை பற்றிய வண்ணம் ''சர்கார்! என்னை வலி என்று கூறி விட்டீர்களே'' என்று கூறினார்கள். அதற்கு தாதா சர்கார்,

آپ تو ازل میں ہی ولی ہیں آج اعلان کرنے کا حکم ہوا ہے۔

''தாங்களோ அஜலிலேயே ஆதியிலேயே வலியாகத்தான் இருக்கிறீர்கள். இன்று அறிவிப்புச் செய்யும்படி உத்தரவு வந்தது'' என்று கூறினார்கள்.

இல்மின் கடல்

ரிவாயத் :

தாதா சர்கார் ஒருமுறை லால்பேட்டையில் பொதுமேடையில் பேசும் போது பைஜி நாயகம் தர்ஜுமா செய்தார்கள். அப்போது தாதா சர்கார் பயானில் ஊர் மக்களைப் பார்த்து,

میں اتنے دور آیا ہوں تمہارے پاس وصول کرنے نہیں آیا ہوں۔ اللہ تو مجھے اتنی دولت دیا ہے

کہ تم کیا تمہارے باپ کو بھی میں لے سکتا ہوں۔

என்றார்கள். இதை மொழி பெயர்க்கும் போது பைஜி நாயகம் தங்கள் கனிவான உள்ளத்தின் காரணமாக சற்று மென்மையான முறையிலே சொன்னார்கள். ''நான் இவ்வளவு தூரம் வந்திருக்கிறேன்! தங்களிடம் வசூல் செய்ய வரவில்லை! தங்களின் இதயங்களை ஈமானால் நிரப்ப வந்திருக்கிறேன்! அல்லாஹ் எனக்கு நிறைய செல்வங்களை வழங்கியிருக்கிறான். நான் யாரிடமும் கேட்க வேண்டிய அவசியம் இல்லை!'' என்றார்கள்.

உடனே தாதா சர்கார் பைஜி சர்காரைப் பார்த்து ஒரு கடுமையான வார்த்தையைக் கூறி (அறிவாளி என்பதற்கு மாற்றமாக வார்த்தை) நான் சொன்னதை ஏன் மாற்றுகிறீர்கள்? அதை அப்படியே கூறுங்கள் மியான்'' என்றார்கள். உடனே சர்கார் பைஜி நாயகம், ''எனக்கு அல்லாஹ் இவ்வளவு செல்வம் கொடுத்திருக்கிறான். உன்னை என்ன உங்கப்பனையும் வாங்க முடியும்'' என்று காரசாரமாக மொழி பெயர்த்தார்கள்.

பயான் முடிந்தது தாதா சர்கார் வீட்டுக்கு வந்தார்கள். ஆனால் பைஜி நாயகம் பயான் முடிந்ததிலிருந்து அழுது கொண்டே இருந்தார்கள். அழுது அழுது கண்களெல்லாம் சிவந்து விட்டன. தாதா சர்கார் சாப்பிட தயாரான போது அவர்கள் கை கழுவ பைஜி நாயகம் தண்ணீர் ஊற்றினார்கள். கண்ணீரும் ஊற்றிக் கொண்டிருந்தது. அதை கவனித்து விட்ட தாதா சர்கார், ''என்ன ஆனது? ஏன் அழுகிறீர்கள்?'' என்று பரிவுடன் கேட்டார்கள். ''எஜமான் அந்த வார்த்தையைச் சொல்லி விட்டீர்களே! நான் அப்படியே ஆகி விடுவேனோ என்று அஞ்சுகிறேன்'' என்று அழுத வண்ணம் கூறினார்கள்.

وہ چھوڑ دو میاں۔ تجلی کو تکرار نہیں تمھیں تو میں اتنا علم دیا ہوں کہ پورا تمل ناڈو اور کیرلا میں کسی کو بھی نہیں دیا۔

''அந்தக் கவலையை விடுங்கள். தஜல்லிக்கு தக்ரார் கிடையாது. உங்களுக்கு நான் இவ்வளவு இல்ம் கொடுத்திருக்கிறேன். முழு தமிழ்நாடு, கேரளாவில் யாருக்கும் நான் அவ்வளவு கொடுக்க வில்லை'' என்றார்கள். அதன் பின் தான் சர்காரின் அழுகை நின்றது.

ஷைகுடைய வாயில் இருந்து வந்த கடும் வார்த்தையை மீண்டும் ஷைகே மாற்றி நல்ல வார்த்தை சொல்லாதவரை உண்மை சீடரின் மனம் நிம்மதி அடைவதில்லை.

فیصلہ میری قسمت کا ہوگا وہی　　جو تمہاری زبان سے نکل جائے گا

ஒரு ஸஹாபி நபி (ஸல்) அவர்களின் மனம் வருந்தும்படி நடந்து கொண்டதற்காக பள்ளிவாசல் தூணில் தன்னை கட்டி வைத்துக் கொண்டார்கள். ''நபி (ஸல்) அவர்களே வந்து அவிழ்த்தால் தான் வருவேன்'' என்று ஊண், உறக்கம் இன்றி நின்று கொண்டிருந் தார்கள். அவர்களின் காதலை நாம் அளவிட முடியாது.

மஃரிபத்தே ஷைத்தான்

ரிவாயத் :

பைஜி நாயகம் சொன்னார்கள். ''ஒருமுறை என் ஷைகு நாயகம் என்னைப் பார்த்து 'பைஜி இதுவரை ரஹ்மானுடைய மஃரிபத்தை அறிந்து கொண்டீர்கள். இப்போது மஃரிபத்துஷ் ஷைத்தானும் கொஞ்சம் அறிந்து கொள்ளுங்கள்' என்று கூறினார்கள். ஏனெனில் எத்தனையோ உயர்ந்த அந்தஸ்துகளை அடைந்த அவ்லியாக்களை அவன் கவிழ்த்து விட்டான். அவனிடம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்'' என்றார்கள்.

நம்பிக்கை

ரிவாயத் :

ஒருமுறை பைஜி நாயகம் சொன்னார்கள்.''நான் ஹஜ்ஜுக்குப் போக கிளம்பிக் கொண்டிருந்தேன். அங்கேயே சென்று மௌத்தாகி விடுவேன் என்று தான் நம்பினேன். திரும்பி வருவேன் என்ற

நம்பிக்கை சிறிதும் இல்லை. எல்லோரிடமும் வஸிய்யத்தும் செய்து விட்டேன். எனது ஷைகு நாயகத்திடம் விடை பெறுவதற்காக சென்றிருந்த போது அவர்கள் சொன்னார் கள். 'பைஜி ஷாஹ்! திரும்பி வரும் போது பாம்பேயில் இருந்து சென்னைக்கு விமானத்திலேயே வந்து விடுங்கள். டிரெயின் வேண்டாம்.'' சர்கார் இப்படிச் சொன்னதும் அப்படியானால் நாம் நிச்சயமாக ஹயாத்தாக திரும்பி வருவோம் என்று எனக்கு உறுதியாகி விட்டது!''

அழகிய கடன்

ரிவாயத் :

பைஜி நாயகம் வறுமையில் இருந்த காலங்களில் தாதா சர்கார் போக்குவரத்து செலவு உட்பட அனைத்தையும் கொடுத்து தஃலீம் செய்வார்கள். பின்னாளில் அல்லாஹ் வளங்களை அருளிய போது,

متاع زیست خادم دریار پرلٹادے

காதிமே! இந்த உலக செல்வங்கள் அனைத்தையும் நேசனின் வாயிற்படியில் கொட்டி விடு. உனக்கு நேசன் கிடைத்தால் போதும் என்ற அடிப்படையில் தனக்கு கிடைத்ததெல்லாம் ஷைகிடம் சமர்ப்பித்து விடுவார்கள். ஷைகுடைய வீட்டினருக்கு வருடம் முழுவதும் தேவையான துணிமணிகளை சர்கார் பெரிய பெரிய சூட்கேசுகளில் அனுப்பிக் கொண்டே இருப்பார்கள். ஒரு நாள் தாதா சர்கார் பைஜி நாயகத்திடம் சொன்னார்கள்.

فیضی تم اللہ کو بہت دے ہیں

''பைஜி! நீங்கள் அல்லாஹ்வுக்கு ரொம்ப கொடுத்திருக்கிறீர்கள்'' என்றார்கள்.

مَنْ ذَا الَّذِىْ يُقْرِضُ اللّٰهَ قَرْضًا حَسَنًا فَيُضٰعِفَهٗ لَهٗ

''யார் அல்லாஹ்வுக்கு அழகிய கடனாகக் கொடுக்கிறார்களோ அல்லாஹ் அவர்களுக்கு பல மடங்கு அதிகமாக்கித் தருகிறான்'' என்பதைத்தான் இவ்வாறு குறிப்பிட்டார்கள்.

ரிவாயத் :

ஒருமுறை தாதா சர்கார் கூறினார்கள்.

فیضی کتاب نہیں پڑھے بلکہ پیر کے پاؤں پڑے اس واسطے اسے اللہ مل گیا

பைஜி கிதாப் படிக்கவில்லை. ஷைகுடைய கால்களில் கிடந்தார். எனவே அவருக்கு அல்லாஹ் கிடைத்தான் என்றார்கள்.

ரிவாயத் :

ஒருமுறை தாதா சர்கார் நூரி நாயகம் தரீகத்தின் முக்கிய பாடங்களில் ஒன்றான ''இக்திழா'' பாடத்தை கலீபாக்கள் மற்றும் முரீதுகளுக்கு விளக்கிக் கொண்டிருந்தார்கள். அந்நேரத்தில் தாதா சர்காரின் கடைசி மகனார் சிறு பிள்ளை அழுது கொண்டே தாதா சர்காருக்கு அருகில் வந்தார். அந்த சப்தம் தஃலீமுக்கு இடையூறாக இருக்கவே தாதா சர்காரின் முகம் மாறியது. உடனே பைஜி நாயகம் பாய்ந்து சென்று குழந்தையை வாரி அணைத்துக் கொண்டு வெளியில் சென்றார்கள். கடைத் தெருவுக்கு தூக்கிச் சென்று மிட்டாய்களும், பொம்மைகளும் வாங்கித் தந்து அழுகையை சமாதானப்படுத்தி சிரிப்புண்டாக்கி மீண்டும் அழைத்து வந்தார்கள். அதற்குள் தஃலீம் முடிந்து விட்டது. தாதா சர்கார் சொன்னார்கள். ''நீங்கள் என் முன்னால் அமர்ந்திருந்தீர்கள். பைஜியோ தூரத்தில் இருந்தார். ஆனால் அந்த இக்திழாவுடைய பாடத்தை நான் அவருக்கு கொடுத்து விட்டேன்'' என்றார்கள்.

ஷைகுமார்கள் முரீதுகளுக்கு பல வகையில் போதனை செய்வார்கள். வாயால் சொல்வதற்கு தஃலீம் என்றும், உள்ளத்தி லிருந்து உள்ளத்திற்கு அனுப்புவதற்கு தல்கீன் என்றும், ரூஹி லிருந்து ரூஹிற்கு அனு ப்புவது ''இல்கா'' என்றும் கூறப்படும். அதற்கு அடுத்து தவஜ்ஜுஹ், தஸர்ருப், துஆ எனும் மூன்று நிலைகளும் இருக்கின்றன.

குருவின் தனி அன்பு

ரிவாயத் :

பைஜி நாயகத்தின் மீது தனிப்பட்ட அன்பு வைத்திருந்த தாதா சர்கார் சில நேரங்களில் சபைகளில் ஏதாவது மெஞ்ஞானம்

சம்பந்தப்பட்ட கேள்விகள் கேட்பார்கள். யாருக்கும் பதில் தெரியாது! நன்றாக யோசித்து அடுத்தசபையில் சொல்லும்படி அனுப்பி விடுவார்கள். இடையில் பைஜி நாயகத்தைக் கூப்பிட்டு அதற்கான விடையை சொல்லித் தந்து கேட்கும் போது சொல்லும்படி கூறிவிடுவார்கள். அடுத்த மஜ்லிஸிலே கேட்பார்கள். யாருக்கும் சரியான பதில் தெரியாது. கடைசியாக பைஜி நாயகத்திடம் கேட்பார்கள். அவர்கள் சொன்னவுடன், ''சபாஷ்! சரியான பதில்! அல்லாஹ் உங்களுக்கு நல்லருள் புரிவானாக! என்று அதிகமாக துஆ செய்வார்கள். இதைப் பிற்காலத்தில் பைஜி நாயகம் சொல்லிக் காண்பித்தார்கள்.

அல்லாஹுதஆலா மலக்குக்குத் தெரியாமல் ஆதம் நபி (அலை) அவர்களுக்கு மட்டும் பெயர்களை சொல்லிக் கொடுத்து விட்டு, எல்லோர் முன்னிலையிலும் கேட்டான். மலக்குகளுக்குத் தெரிய வில்லை! ஆதம் (அலை) சொன்னார்கள். உடனே அல்லாஹ் ''பார்த்தீர்களா? அதற்குத்தான் ஆதமைப் படைத்தேன்'' என்று பெருமைப்பட்டுக் கொண்டான். அவனின் கருணையை என்ன வென்று சொல்ல?

அன்பின் அடிமை

ரிவாயத் :

தாதா சர்கார் ஹைதராபாத்திலிருந்து வரும் போது நிறைய பெட்டிகளும், சில நேரங்களில் மெத்தை படுக்கையும் எடுத்து வருவார்கள். சென்னையில் இரயிலில் இருந்து இறங்கியதும் பைஜி நாயகம் பெரிய பார்சலாக எடுத்து தங்கள் தலையில் வைத்துக் கொள்வார்கள். பிறகு இரண்டு கைகளிலும் இரண்டு பெட்டியைத் தூக்கிக் கொள்வார்கள். பைஜி நாயகத்தின் முரீதுகள் கேட்டாலும் தர மாட்டார்கள். தாதா சர்கார் இறங்கியதும் வேகமாக நடக்க ஆரம்பித்து விடுவார்கள். பின்னால் திரும்பிப் பார்த்து, ''பைஜி! ஏன் சுமைகளை ஏதாவது கூலி ஆட்களிடம் கொடுக்கலாமே'' என்று கேட்பார்கள். சர்கார் அப்போதும் தாங்களே தலையில் தூக்கி வருவார்கள். ஒருமுறை அவ்வாறு தூக்கி வரும்போது தாதா சர்கார் டிக்கெட் கவுண்டர் அருகில் சென்று திரும்பிப் பார்த்தார்கள். பாரமான சுமைகளை சுமந்து

கொண்டு கூலியாளைப் போல வந்து கொண்டிருந்த பைஜி நாயகத்தைப் பார்த்து,

ایسے مرید آٹھ سو سال کے پہلے تھے

"இப்படிப்பட்ட முரீதுகள் 800 வருடத்திற்கு முன் இருந்தார்கள்" என்று கூறினார்கள்.

வலிமார்களின் நிலைகள் மாறுபடும்

ரிவாயத் :

பைஜி நாயகம் கூறினார்கள். "ஜுஹ்து எனும் துறவு நிலையை என் ஷைகு நூரி நாயகத்திடம் தான் பார்த்தேன். ரயிலில் இருந்து இறங்குவார்கள். தங்கள் சாமான்கள் இறங்கியதா? யார் அதற்குப் பொறுப்பு? வேறு யாரும் அன்னியர்கள் அதை தூக்கிச் சென்று விடுவார்களா? சாமான்கள் எதையும் விட்டு விடுவார்களா? என்றெல்லாம் எதையும் பொருட்படுத்தாமல் விறு விறு என்று நேராக நடக்க ஆரம்பித்து விடுவார்கள். போய் காரில் அமர்ந்து கொள்வார்கள். அல்லாஹ்வின் மீது முழு நம்பிக்கை தவக்குல் வைத்திருந்தார்கள். சாமான்கள் எல்லாம் சரியாக வந்து சேர்ந்து விடும்" என்று கூறினார்கள்.

ஆனால் நமது ஷைகு பைஜி நாயகத்தின் நடைமுறையோ இதற்கு நேர் மாற்றமாக இருந்தது.

مَذَاقُ الاَوْلِيَاءِ مُخْتَلِفٌ

அவ்லியாக்களின் தன்மைகளை பல வேறுபட்டதாக இருக்கும்.

பைஜி நாயகம் எங்கும் செல்வதாக இருந்தால் ஓரிரு நாட்களுக்கு முன்னதாகவே சாமான்களை தயார் செய்ய ஆரம்பித்து விடுவார்கள். புறப்படும் சமயம் மிகவும் உஷாராக இருப்பார்கள். அவர்களின் பெட்டிகளை யாரும் கை வைக்க விட மாட்டார்கள். குறிப்பிட்ட ஒரு முரீது மட்டுமே ஒவ்வொன்றாக எடுத்துச் சென்று டிக்கியில் வைத்து விடுவார்கள். எதை எதை எங்கே வைக்க வேண்டும்? என்பதையும் துல்லியமாகச் சொல்லி கூடவே வந்து வைப்பார்கள். எல்லா சாமான்களும் சரியாக வந்து சேர்ந்ததா? என்று தாங்களே ஒரு முறைக்கு பல முறை நேரில் பார்வையிடுவார்கள். அதே போல் வந்து சேர்ந்ததும் முதலில் சாமான்களை எங்கு வைப்பது? எப்படி

பாதுகாப்பது? யார் பொறுப்பாளி? என்பதை ஏற்பாடு செய்து கூடவே இருந்து கவனித்து அறையைப் பூட்டி சாவியை கையில் வைத்துக் கொண்ட பின்பு தான் மற்ற வேலைகளை கவனிப்பார்கள். வெளி நாட்டுப் பிரயாணங்களில் தங்கள் அறைப் பாதுகாப்புக்கு ஒரு நம்பிக் கையானவரை வைத்து விட்டுத் தான் பயான் செய்யச் செல்வார்கள். சர்கார் திரும்பி வரும் வரை அவர் அறையை விட்டு நகரக் கூடாது.

தற்கால சூழ்நிலையில் ஒரு முஃமின் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்? எப்படி தன்னையும், தன் பொருட்களையும் பாதுகாக்க வேண்டும்? என்பதற்கு சர்கார் முன்மாதிரியாகத் திகழ்ந்தார்கள். நமது அலட்சியத்தால் ஏதேனும் பொருள் காணாமல் ஆகி விட்டால் அதனால் பெரும் கஷ்டங்கள் நேரலாம். பயணமே தடைபட்டுப் போகலாம். அல்லது தாமதம் ஆகலாம். அல்லது வீணாக எல்லோரையும் சந்தேகிக்க வேண்டி ஏற்படலாம். அதனால் சிலர் மீது மனக் கசப்பு ஏற்படலாம். இதையெல்லாம் நாம் நமது அனுபவத்தில் பார்க்கவே செய்கி றோம். எனவே இது விஷயத்தில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று சர்கார் நமக்குக் கற்றுக் கொடுத்தார்கள்.

தாதா சர்கார் அப்படி நடந்து கொண்டார்களே என்றால் பைஜி நாயகம் போன்ற முரீதுகள் அவர்களுக்கு இருந்தார்கள். ஷைகுடைய சாமான்களில் ஒரு துரும்பைக் கூட விட்டுவிட மாட்டார்கள் என்று அவர்களுக்குத் தெரியும். எனவே அப்படி நடந்தார்கள்.

ஹஜ்ரத் அலி (ரலி) அவர்களிடம் ஒருவர் கேட்டார். "அபூபக்கர் (ரலி), உமர் (ரலி) அவர்களின் ஆட்சி காலத்தில் எந்த அளவு கிலாபத் சீராக இருந்ததோ அப்படி உஸ்மான் (ரலி) காலத்திலும், தங்கள் காலத்திலும் இல்லையே. எங்கு பார்த்தாலும் பித்னாக்கள் தலைதூக்கி உள்ளதே" என்று கேட்டார். அதற்கு அலி (ரலி) கூறினார்கள். அவர்கள் இருவருக்கும் உஸ்மானைப் போலவும், என்னைப் போலவும் ஆலோசகர்கள் இருந்தார்கள். எங்களுக்கு அப்படி இல்லையே! உங்களைப் போன்றவர்கள் அல்லவா இருக்கிறார்கள்" என்றார்கள்.

முரீதில் ஷைகு தான் இருப்பார்

ரிவாயத் :

ஒருமுறை தாதா சர்கார் நாகூர் ஷரீப் வந்திருந்த போது கவ்வாலி மஜ்லிஸ் நடைபெற்றது. அதில் ஒரு வரி படித்தார்கள்.

سارے جہاں کو کیا خبر نوری میں کون ہے جلوہ گر

நூரி நாயகத்தில் யார் தஜல்லியாக இருப்பது என்று முழு உலகத்தாருக்கு என்ன தெரியும்? என்று படித்தார். தாதா சர்கார் ஹைதராபாத் சென்ற பின்பும் பைஜி ஷாஹ் சர்கார் இந்த இரண்டு வரிகளையே திரும்பத் திரும்பக் கூறிக் கொண்டு பரவச நிலையில் வெகு நாட்களாக இருந்தார்கள். அப்போது சர்காரின் அருமை மகனார் நூருல்லாஹ் சஜ்ஜாதா (நூரானீஷாஹ் பைஜி) அவர்கள் ஹைதராபாத் சென்றனர். அவர்களிடம் சர்காரின் ஹாலத்துகளைப் பற்றி தாதா சர்கார் விசாரித்தார்கள். அதற்கு இந்த இரண்டு வரிகளையே திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டிருந்தார்கள் என்று கூறினர். தாதா சர்கார் ''நீங்கள் திரும்பிச் சென்றால் உங்கள் தந்தையிடம்,

سارے جہاں کو کیا خبر فیضی میں نوری ہے جلوہ گر

''(பைஜியிலே நூரி தான் காட்சியளிக்கிறார்கள் என்பது முழு உலகத்தாருக்கு என்ன தெரியும்) என்பதைக் கூறுங்கள்'' என்று கூறி அனுப்பினார்கள்.

ஏன் செய்ய வைத்தான்?

ரிவாயத் :

ஒருமுறை தாதா சர்கார் பயான் செய்து கொண்டிருந்தார்கள். நிஸ்பத் குவ்வத் பாடம் நடந்து கொண்டிருந்தது. சபையில் பைஜி நாயகத்திற்கு அருகில் அமர்ந்திருந்த ஒரு பீர்பாய் பைஜி நாயகத்தின் காதில் மெதுவாகக் கேட்டார், ''அல்லாஹ் நினைத்தால் நாம் பாவம் செய்யாமல் தடுக்க முடியுமே. அப்புறம் ஏன் செய்ய வைக்கிறான்'' என்று கேட்டார். பைஜி நாயகமோ மெல்லிய குரலில் ''அதை அப்புறம் பேசிக்கலாம் பயானை கவனியுங்கள்'' என்றார்கள். அவர் மீண்டும் கேட்டார். சர்கார் சும்மா இருக்கும்படி சாடை செய்தார்கள். இதை தாதா சர்கார் கவனித்து விட்டார்கள். ''அவர் ஏதோ கேட்கிறார். அவர் என்னுடைய முரீது. நானல்லவா அவருக்கு விளக்கம் சொல்ல வேண்டும். நீங்கள் ஏன் சும்மா இருக்கச் சொல்கிறீர்கள்? என்ன

சந்தேகம் என்பதைச் சொல்லுங்கள்'' என்று கேட்டார்கள். சர்கார் அதைச் சொன்னார்கள்.

ان کو جوتیاں کھلانے کے واسطے ایسا کراتے ہیں

''அவருக்கு செருப்படி விழ வைப்பதற்காகத்தான் அல்லாஹ் அவரை செய்ய வைக்கிறான்'' என்றார்கள்.

(அதாவது அவன் தானே பாவம் செய்ய வைத்தான் என்று நாம் தப்பித்துக் கொள்ள முடியாது. காரணம் பின்னர் தண்டனையும் அவனே கொடுப்பான். ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். செயலை செய்யும் போது நமக்கு இஷ்டம் கொடுக்கிறான். அந்த இஷ்டத்துடன் தான் அந்த செயலைச் செய்கிறோம். அதற்குத்தான் கூலி-தண்டனை இரண்டும் தரப்படுகிறது. இதன் விரிவான விளக்கங்களை தன் ஷைகிடம் கேட்டுத் தெரிந்து கொள்க.)

கலிமா விளக்கம்

ரிவாயத் :

ஒருமுறை பைஜி நாயகம் கூறினார்கள். ''நான் கலிமாவில் ஊறி ஊறி ஊறுகாய் ஆகி விட்டேன். என்னிடம் எத்தனை நாள் தங்கியிருந்தாலும் அதைத்தான் கேட்கலாம். நீங்கள் யாரும் கலிமாவைப் பேசுங்கள். எப்படி அல்லாஹ் தேவையைப் பூர்த்தி செய்கிறான் என்று பேசுங்கள். விடிய விடிய கேட்டுக் கொண்டிருக்கிறேன்'' என்றார்கள்.

ரிவாயத் :

ஒருமுறை சென்னையைச் சேர்ந்த ஒரு சீடர் முஹம்மத் அலி பைஜி என்பவரை பேசச் சொன்னார்கள். அவர் சர்கார் பேசிய லாயிலாஹ இல்லல்லாஹ்வின் விளக்கங்களை டேப்ரிகார்டரில் கேட்டுக் கேட்டு மனனம் செய்து சர்கார் கூறிய அதே வார்த்தைகள் பிசகாமல் கூறினார். மிகவும் ரசித்துக் கேட்டனர். அடுத்த நாள் சர்கார் அவரிடம் ''அடுத்த கேஸட்டைப் போடுங்கள்'' என்று கூறினார். அவரோ அடுத்த பயானை அடிபிறழாமல் பேசினார். மூன்றாவது நான் அவரிடம் ''நீங்கள் முதல் நாள் போட்ட கேஸட்டைப் போடுங்கள்.

மிகவும் இன்பமாக இருக்கிறது'' என்றார்கள். அவர் பேச ஆரம்பித்த வுடன், ''என் வாழ்நாளெல்லாம் இதையே கேட்டுக் கொண்டிருக்க வேண்டும் என்று நான் ஆசைப்படுகிறேன். யாருக்கும் போரடித்தால் இதோ பக்கத்து வீடு இருக்கிறது. சாவி இதோ ஜன்னலில் தான் இருக்கிறது. போய் நன்றாக ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள்'' என்றார்கள்.

ரிவாயத் :

''அல்லாஹ் தான் தேவையை பூர்த்தி செய்கிறான் என்பதைப் பற்றி யாரிடமும் பேசலாம். எல்லோரும் ரசிப்பார்கள். முஸ்லிம், காபிர் என்ற வித்தியாசம் இன்றி, எந்தக் கொள்கை உடையவர் என்ற வித்தியாசம் இன்றி எல்லோரும் விரும்பிக் கேட்பார்கள். பிளவுபட்ட மக்கள் ஒன்று சேர்வார்கள்.

تَعَالَوْا إِلَىٰ كَلِمَةٍ سَوَاءٍ بَيْنَنَا وَبَيْنَكُمْ أَلَّا نَعْبُدَ إِلَّا اللَّهَ

எனவே சர்கார் நாயகம் கலிமாவின் விளக்கத்தைத்தான் எல்லோரிடமும் பேசுவார்கள்.

சபையில் யாரும் மாற்றுக் கருத்துடையவர்கள் இருந்தால் அவர்கள் மனம் புண்படும்படி பேச மாட்டார்கள். அவர்களே ஏற்றுக் கொள்ளும் முறையில் அழகுடன் உரைப்பார்கள். இந்த நற்குணத்தால் அவர் மீண்டும் மீண்டும் சர்காரின் சபைக்கு வருவார். அதனால் அவரின் உள்ளம் மாறி நல்வழிக்கு வந்து விடுவார். அப்படி எத்தனையோ பேர்கள் திருந்தியுள்ளார்கள்.

நபி(ஸல்) முனாபிக்களிடத்திலும் அன்புடன் பாசத்துடன் நடந்து கொண்ட நிலையைப் பார்த்து எத்தனையோ முனாபிக்கள் மனம் திருந்தியிருக்கிறார்கள்.

இறை நேசர்கள் தங்கள் எதிரியின் மனதையும் புண்படுத் தியதில்லை. நாமோ நமது நண்பர்களிடத்திலும் சண்டையும் சச்சரவுமாக இருக்கிறோம்.

குறை கூறாதீர்

ரிவாயத் :

மாற்று மதத்தவர் யாரும் சபையில் இருந்தால் அப்போது அவர்களின் விக்ரஹங்களை குறை சொல்லித் தாங்களும் பேச

மாட்டார்கள். மற்றவர்கள் பேசவும் அனுமதிக்க மாட்டார்கள். ஒரு முறை ஒரு கலீபா பேசிக் கொண்டிருந்தபோது சபையில் மாற்று மதத்தவரும் அமர்ந்திருந்தனர். அவரோ விக்ரஹங்களைப் பற்றி பேச்சு எடுத்தார். உடனே அவரை உட்காரச் சொல்லி விட்டார்கள். சர்கார் தவ்ஹீதைப் பற்றிப் பேசினார்கள். அங்கிருந்த பிற மதத்தினரும் கண்ணீர் வடிய கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

ரிவாயத் :

ஒரு முறை ஒருவர் சர்காரிடம் வந்து ''நான் இன்ன ஊருக்கு பயானுக்குச் செல்கிறேன். அவ்வூரில் மாற்றுக் கருத்துடைய முஸ்லிம் நண்பர்கள் நிறைய உள்ளனர். அவர்கள் என்னிடம் எதுவும் கேட்டால் நான் எப்படி நடந்து கொள்வது ?'' என்று கேட்டார்.

சர்கார் நாயகம் கூறினார்கள். நீங்கள் உலூஹிய்யத்தைப் பற்றியே பேசுங்கள். அவர்களாக எழுந்து போய் விடுவார்கள். ''இன்ன விஷயத்தில் உங்கள் கருத்து என்ன?'' என்று கேட்டால் நீங்கள், ''கரும்புச் செடிக்கு நாம் தண்ணீர் ஊற்றும் போது சர்க்கரை கலந்து ஊற்றுவதில்லை. ஆனால் அந்தக் கரும்புக்கு இனிப்பை அல்லாஹ் எப்படிக் கொடுத்தான் பாருங்கள்!'' என்று ஆரம்பித்து விடுங்கள். ''இன்ன சர்ச்சையில் உங்கள் முடிவு என்ன?'' என்று கேட்பார்கள். உடனே, ''பச்சை மிளகாய் செடிக்கு மிளகாய் தூள் கலந்து தண்ணீர் ஊற்றுவதில்லை. ஆனால் உரைப்பு எங்கிருந்து அல்லாஹ் தந்தான்? அவன் இல்மில் இருந்ததை நம் தேவைக்காக அல்லாஹ் ஜுஹூரில் கொண்டு வருகிறான்!'' என்று ஆரம்பித்து விடுங்கள். சற்று நேரத்தில் அவராக எழுந்து சென்று விடுவார்'' என்று கூறினார்கள்.

ரிவாயத் :

''வீண் பேச்சும், புறம், கோள்களும் பேசி நம்மை பாவத்தில் ஈடுபடச் செய்யும் நபர்கள் வந்தால் அவர்களிடம் மாட்டிக் கொள்ளக் கூடாது. இன்றைக்கு ஓத வேண்டிய சலவாத் கொஞ்சம் பாக்கி இருக்கிறது. முடித்துக் கொள்கிறேன்! என்று கூறி ஆரம்பித்து விட வேண்டும். முடிந்தால் அவரிடமும் ஒரு தஸ்பீஹ் மணி கையில்

கொடுத்து ஓதச் சொல்ல வேண்டும். சற்று நேரத்தில் சொல்லாமல் கொள்ளாமல் இடத்தை காலி செய்து விடுவார்'' என்று சர்கார் நாயகம் ஒருமுறை கூறினார்கள்.

பாஸ் அன்பாஸ்

ரிவாயத் :

அல்லாஹு அல்லாஹ் எனும் پاس انفاس பாஸ் அன்பாஸ் திக்ருக்கு மிகவும் முக்கியத்துவம் கொடுக்கும் சர்கார் அவர்கள் எப்போதும் அந்த நினைவிலேயே இருந்தார்கள். மூச்சில் அல்லாஹு அல்லாஹ்வை இணைத்து விட்டால் பின்பு அல்லாஹ்வின் திக்ர் 24 மணி நேரமும் ஓடிக் கொண்டிருக்கும் என்று கூறுவார்கள். ஆரம்பத்தில் அதிகம் பயிற்சி செய்ய வேண்டும். Practice makes a man Perfect என்று கூறுவார்கள்.

ஆரம்பத்தில் சிரமப்பட்டு சைக்கிளைப் பழகிக் கொள்பவர்கள் பின்னாளில் கையை விட்டு விட்டே ஓட்டுகிறார்கள் அல்லவா? அப்படித் தான் பயிற்சி இன்றி எதுவும் வராது என்பார்கள்.

சர்கார் பைஜி நாயகம் ஒருமுறை கூறினார்கள். ''என்னுடைய வாத்தியார் ஒருவர் கூறினார். அவர் ஒரு நாள் பஸ்ஸில் வந்து கொண்டிருந்த போது வழியில் ஒரு பொதுக் கூட்ட மேடையில் ஒரு அறிஞர் பேசிக் கொண்டிருந்தாராம். அவர் பேச்சுக்கிடையில் ''காற்றுள்ள போதே தூற்றிக் கொள்'' என்று ஒரு பழமொழி உண்டு. காற்று வேகமாக அடிக்கும் போதே நெல்லை தூற்றி சுத்தம் செய்து கொள் என்று தான் பலரும் அர்த்தம் சொல்கிறார்கள். அதன் உண்மைப் பொருள் என்னவென்றால்..... என்று அவர் பேசிக் கொண்டிருந்த போதே பஸ் அங்கிருந்து நகர்ந்தது. உடனே அதைக் கேட்கும் ஆர்வத்தில் காசு போனால் போகட்டும் என்று வாத்தியார் கீழே இறங்கி விட்டார். பேச்சாளர் சொன்னார். ''நமது மூச்சுக் காற்று இருக்கும் போதே இந்த வாழ்க்கையைப் பயன்படுத்திக் கொள் என்பது தான் இதன் உண்மைப் பொருள்.''

சர்கார் நாயகம் கூறினார்கள். இந்த செய்தி எனக்கு மிகவும் படிப்பினை ஆகி விட்டது. ஒரு மூச்சைக் கூட வீணாக்காது மூச்சு திக்ரில் ஈடபட வேண்டும் என்று உறுதி கொண்டேன்.''

ரிவாயத் :

ஒருமுறை சர்கார் கூறினார்கள். ''நான் டைலர்களைப் பார்த்து ஒரு விஷயம் கற்றுக் கொண்டேன். அவர்களைச் சுற்றி நான்கு ஐந்து பேர் உட்கார்ந்து உலக விஷயங்களையே பேசிக் கொண்டிருப்பார்கள். அவர்கள் எல்லோருக்கும் பதில் கூறிக் கொண்டு இவரும் பேசிக் கொண்டே இருப்பார். ஆனால் தையல் வேலை நடந்து கொண்டு தான் இருக்கும். கண், கை, கால் என்று அது அது தன் தன் வேலையை செய்து கொண்டே இருக்கும்.

நாமும் அது போல் தான் இருக்க வேண்டும். நம்மைச் சுற்றி துன்யாவில் என்ன நடந்தாலும் நம் மனம் அல்லாஹ்வின் திக்ரில் லயித்திருக்க வேண்டும் என்றும் دست بکار دل بیار என்றும் சொல்வார்கள்.

لگ جسم سے دل سے ہوا لگ ورنہ دغا ہے

என்று ஆமிர் சர்கார் அவர்களும் இதைத்தான் கூறுகிறார்கள்.

ரிவாயத் :

சர்கார் நாயகம் தங்கள் முரீது வாங்கியதில் இருந்து தங்கள் கடைசி காலம் வரை திக்ருடைய முராக்கபாவை விடாமல் செய்து வந்தார்கள். தினமும் மணிக்கணக்கில் கண்களை மூடி தவம் இருப்பார்கள். மூச்சு சப்தம் மட்டும் கேட்கும். தலை லேசாக ஆடிக் கொண்டிருக்கும். தங்கள் வெளிநாடு பயணங்களிலும் இதை விட்டதில்லை. குறைந்தது ஒன்றரை மணி நேரமாகிலும் இவ்வாறு மூச்சு திக்ர் செய்வார்கள். சிறு பிள்ளைகளிடம் யாரும் சர்கார் என்ன செய்கிறார் என்று கேட்டால் ''தலையை ஆட்டிக் கொண்டு உட்கார்ந் திருக்கிறார்கள்'' என்று பதில் கூறுவார்கள்.

ரிவாயத் :

ஆயங்குடி ஜமாலீ ஷாஹ் கிப்லா அவர்கள் சர்காரின் நெருங் கிய நண்பராக பல வருடங்கள் பழகியுள்ளார்கள். அவர்கள் ஒருமுறை

கூறினார்கள். ''பைஜி சர்காருடன் பல பிரயாணங்களில் உடன் இருந்துள்ளேன். அவர்கள் இரவில் தூங்கும் போது கவனிப்பேன். மூச்சில் அல்லாஹ் அல்லாஹ் என்ற சப்தம் கேட்டுக் கொண்டிருக்கும். அவர்களோ நன்றாகத் தூங்கிக் கொண்டிருப்பார்கள். ஆனால் மூச்சில் தெளிவான அல்லாஹு அல்லாஹ் என்ற ஓசை கேட்கும். எத்தனையோ தடவை இதைக் கேட்டுள்ளேன்.''

ரிவாயத் :

ஒருமுறை சர்கார் பாண்டிச்சேரியில் மருத்துவ பரிசோதனைக்கு சென்றிருந்த போது அவர்களின் இதயத் துடிப்பை பரிசோதித்த டாக்டர் இளங்கோவன் அதில் அல்லாஹ் அல்லாஹ் என்று சப்தம் வருவதைக் கேட்டு ஆச்சரியப்பட்டு பக்கத்தில் இருந்த மற்றவரையும் கூப்பிட்டு கேட்கச் சொன்னார். எல்லோரும் அதைக் கேட்டார்கள். அனைவரும் ஆச்சரியத்தில் மூழ்கிப் போனார்கள். அல்லாஹ் நாடினால் கல்லில் இருந்தும் அந்த ஓசையை கேட்கச் செய்வான். இறைக் காதலர்கள் கல்பில் இருந்து கேட்பது ஆச்சரியம் இல்லை. ஆனால் நமது கல்லாய் போன இதயங்கள் அல்லாஹ்வை மறந்து துடித்துக் கொண்டுள்ளனவே என்று கவலைப்பட வேண்டியுள்ளது.

ரிவாயத் :

சர்காரின் ஒரு முரீது கூறுகிறார். ''ஒருமுறை சர்காருடைய E.C.G. ரிப்போர்ட்டை நான் பார்த்தேன். அதில் தெளிவாக அரபியில் அல்லாஹு அல்லாஹ் என்று எழுதப்பட்டிருந்ததைப் பார்த்து வியந்தேன்.

இது உண்மையிலேயே வலிமார்களின் கராமத்தாக இவ்வாறு நிகழ்ந்திருக்கலாம். அல்லது எதேச்சையாக அவ்வாறு தோன்றி யிருக்கலாம். அல்லது முரீதுடைய கண்களுக்கு அவ்வாறு தெரிந் திருக்கலாம். எனினும் வலிமார்களுக்கு இது ஒன்றும் புதிதில்லை. மன்சூர் ஹல்லாஜ் (ரலி) அவர்கள் வெட்டப்பட்ட போது அவர் களின் இரத்தம் அல்லாஹு அல்லாஹ் என்று எழுதியதாக வரலாறு கூறுகிறது.

குர்ஆன் திலாவத்

ரிவாயத் :

ஜமாலீ ஷாஹ் கிப்லா ஒருமுறை கூறினார்கள். "நான் பைஜி ஷாஹ் சர்கார் அவர்கள் குர்ஆன் ஓதும் போது பார்த்திருக்கிறேன். முன்னால் குர்ஆன் இருக்கும். தலை நன்றாக மறைத்தபடி துண்டு அணிந்திருப்பார்கள். கண்களில் கண்ணீர் ஊற்றிக் கொண்டிருக்கும். தாடி நனைந்து சட்டை நனைந்து விடும். மணிக்கணக்கில் அமர்ந்து குர்ஆனைப் பார்த்துக் கொண்டிருப்பார்கள். ஒரு பக்கமோ அல்லது இரண்டு பக்கமோ தான் புரட்டிக் கொண்டிருப்பார்கள். அதே போல் இரவு காலங்களில் தப்சீர் பார்ப்பார்கள். இந்தப் பக்கம் பிளாஸ்கில் டீ இருக்கும். அந்தப் பக்கம் மூக்குப் பொடி டப்பா இருக்கும். விடிய விடிய தப்சீர் படித்துக் கொண்டிருப்பார்கள். அது போல் மணிக்கணக்கில் நம்மால் அமரவும் முடியாது. பார்க்கவும் முடியாது.

வாழ்க்கைத் துணை

ரிவாயத் :

சர்காரின் அன்புத் துணைவியர் முரீதுகளின் தாயார் பீராணியம்மா அவர்களும் இறைநேசச் செல்வியாகவே வாழ்கிறார்கள். அவர்கள் வந்த பரகத் தான் அல்லாஹ் எனக்கு எல்லா நிஃமத்களும் கொடுத்தான் என்று சர்கார் கூறுவார்கள். ஒருமுறை கூறினார்கள். "பீராணியம்மா என்னிடம் சமையலுக்கு எண்ணெய் வேண்டும். வாங்கித் தாருங்கள்" என்று கேட்பார்கள். நானோ, "நான் மௌத்தாகி விட்டால் யாரிடம் கேட்பீர்கள்?" என்று கேட்டேன். "அல்லாஹ்விடம்" என்பார்கள். "அந்த அல்லாஹ்விடமே இப்போதும் கேளுங்களேன்" என்பேன். பேசாமல் இருந்து கொள்வார்கள். பிற்காலத்தில் இறைஞானப் பாடங்களை கற்றுக் கொண்ட பின் "மளிகை சாமான்கள் வேண்டும் வாங்கித் தாருங்கள்" என்றார்கள். "நான் மௌத்தானால் அல்லாஹ் விடம் தானே கேட்பாய். இப்போதும் அவனிடமே கேட்டுக் கொள்ளுங் கள்" என்றேன். "இப்போதும் அவனிடம் தானே கேட்கிறேன்! அவனல்லாதவனிடம் கேட்கவே முடியாதே! அவை வெறும் அதம் தானே" என்றார்கள். "சபாஷ்" என்று கூறினேன்.

பீராணியம்மா அவர்கள் ஒரு வக்து தொழுகையும் களாவாக விட மாட்டார்கள். ஆரம்பத்தில் பிள்ளைகள் எல்லாம் சிறு பிள்ளைகளாக இருந்த போது தொழும் நேரம் வந்தால் அவர்களைப் பார்த்துக் கொள்ள ஆள் இல்லாததால் இடுப்புக் கயிற்றில் சணலைக் கோர்த்து ஆளுக்கொரு ஜன்னலில் கட்டிப் போட்டு விட்டுத் தொழுவார்களாம்.

ஒருமுறை சர்கார் நாயகம் வெளியூர் சென்றிருந்த நேரத்தில் சர்காரின் குழந்தை வீட்டில் உடல்நிலை மோசமாகி இறந்து விட்டது. உறவினர்கள் எல்லாம் வீட்டிற்கு வந்திருந்தார்கள். அப்போது பஜ்ர் பாங்கு சொல்லப்பட்டதும் பீராணியம்மா மடியிலிருந்த குழந்தையை கீழே போட்டு விட்டு பஜ்ர் தொழ சென்று விட்டார்கள். உறவினர்கள் சிலர் குறைபட்டுக் கொண்டார்கள். ''இவ்வளவு கல் நெஞ்சமா? குழந்தை மௌத்தாகி கிடக்கிறது. அதை கீழே வைத்து விட்டு தொழுகப் போய் விட்டதே இந்தப் பொண்ணு'' என்று பேசிக் கொண்டார்கள். சர்கார் வந்ததும் சர்காரிடமும் சொன்னார்கள். உடனே சர்கார் அவர்கள் முன்னாலேயே ''ஏன் அப்படிச் செய்தீர்கள்?'' என்று கேட்டார்கள். அதற்கு பீராணியம்மா, ''அல்லாஹ்வின் நாட்டப்படி குழந்தை தான் மௌத்தாகி விட்டது. அதற்காக அறிந்து தெரிந்து ஒரு தொழுகையை மௌத்தாக்க நான் விரும்பவில்லை'' என்று கூறினார்கள். ''சரிதான்'' என்றார்கள் ஷைகு நாயகம்.

நேசர்களை சீண்டாதே

ரிவாயத் :

ஆரம்ப காலத்தில் சர்கார் சென்னையில் குடியிருந்த போது இரண்டு மூன்று வீடுகளுக்குச் சேர்த்து ஒரு பொது கழிவறை இருந்தது. பக்கத்து வீட்டில் இருந்த ஒரு மனிதர் வேண்டுமென்றே சர்காருக்கு தொந்தரவு கொடுக்க வேண்டுமென்பதற்காகவே தன் வீட்டுவாசலில் வந்து உட்கார்ந்து கொள்வார். அதனால் சர்கார் வீட்டுப் பெண்கள் பாத்ரூமுக்குச் செல்ல முடியாமல் சிரமப்படுவார்கள். இரவு வெகுநேரம் சென்ற பின் தான் அவர்கள் செல்ல முடியும். இந்த தொல்லையை வெகுநாட்களாக சர்கார் பொறுமையுடன் சகித்துக் கொண்டார்கள். ஒரு நாள் சர்கார் வெளியில் போய் விட்டு திரும்பிய

போது வீட்டில் மனைவி அழுது கொண்டிருப்பதைப் பார்த்து காரணம் கேட்டார்கள். நெடுநேரமாக மலஜலத் தேவையை அடக்கி வயிற்று வலியால் துடிப்பதாகவும், அந்த மனிதர் அங்கே உட்கார்ந்திருப்பதால் செல்ல முடியவில்லை என்பதாகவும் தெரிவித்தார்கள். ''யா அல்லாஹ் இந்த சிரமத்திற்கு நீ நல்ல தீர்வைக் கொடு அல்லாஹ்'' என்று சர்கார் துஆச் செய்தார்கள். சற்று நேரத்தில் அந்த மனிதர் எங்கோ வெளியில் சென்றார். சென்றவர் சாலை விபத்தில் சிக்கி மரணமடைந்து பிணமாக வீடு திரும்பினார். இறை நேசர்களை வருத்தப்படுத்தினால் அல்லாஹ் கடும் கோபமடைகிறான்.

காஜா நிஜாமுத்தீன் மஹ்பூபே இலாஹி (ரஹ்) அவர்களின் முரீதாக இருந்த ஒருவரின் வீட்டுப் பெண்மணிகளுக்கு இவ்வாறே ஒரு மனிதன் தொல்லை கொடுத்து வந்தான். தன் வீட்டு மாடியில் ஏறி நின்று அவர்கள் வீட்டுக் கொல்லைப் புறத்தைப் பார்த்துக் கொண்டிருப்பான். அதனால் பெண்கள் யாரும் தேவைகளுக்காக செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. இதை அந்த முரீது காஜா நிஜாமுத்தீன் அவ்லியாவிடம் கூறிய போது, ''நீங்கள் என் முரீது என்று தெரிந்துமா அவன் இவ்வாறு செய்கிறான்?'' என்று கேட்டார்கள். ''ஆம்!'' என்றார் அவர். ''அவன் இன்னும் கழுத்து முறிந்து சாகவில்லையா?'' என்றார்கள் அவ்லியா. அதே நேரத்தில் மாடிக்கு ஏறிய அவன் வழுக்கி விழுந்து கழுத்து முறிந்து செத்துப் போனான்.

ஞானப் பயிற்சிகள்

ரிவாயத் :

சர்கார் நாயகம் சொன்னார்கள். ''முரீதுகள் வந்துள்ள நேரத்தில் நான் அவர்களோடு பேசுகிறேன். அவர்கள் இல்லாத நேரத்தில் என்னைச் சுற்றியுள்ள எல்லா வஸ்துக்களுடனும் பேசிக் கொண்டிருக்கிறேன். கதவு, ஜன்னல், கம்பி, பேன், டியூப்லைட், சுவர், சுவிட்ச் பாக்ஸ், கடிகாரம் அனைத்துடனும் பேசிக் கொண்டிருக்கிறேன். நீங்கள் தாத்திலே அதம். வெறும் மஃலூம்கள். ஞானப் பூங்காவில் இருந்த தோற்றங்கள். ஹக்குடைய உஜூதைக் கொண்டு தான் நீங்கள் காட்சியளிக்கிறீர்கள் என்று பேசுவேன். அவைகளும் என்னிடம்

''ஆம்! ஆம்! நாங்கள் சுயமாக உங்கள் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாது. அவன் தான் எங்கள் சூரத்தில் தேவையைப் பூர்த்தி செய்கிறான்'' என்று பேசுகின்றன! என்றார்கள்.

ரிவாயத் :

பைஜி நாயகம் தங்கள் தாதா சர்கார் கௌஸி ஷாஹ் சர்காரைப் பற்றி குறிப்பிடும் போது சொன்னார்கள். ''அவர்கள் ஞானப் பயிற்சிகள் அதிகம் செய்வார்கள். காலையில் காட்டுக்குச் சென்று பல மரங்களில் இருந்தும் விதவிதமான இலைதழைகளைப் பறித்து வந்து நடுவீட்டில் குவித்து வைத்துக் கொண்டு ஒவ்வொன்றாக எடுத்து,

حَقْ ظَاهِرْ بَصُوْرَت شَيْء   حَقْ ظَاهِرْ بَصُوْرَت شَيْء

''இந்த உருவத்திலும் ஹக்கு தான் காட்சியளிக்கிறது'' என்று கூறி கூறி எடுத்து ரசித்து அடுத்த பக்கம் வைத்து விடுவார்கள். இவ்வாறு பகலெல்லாம் செய்வார்கள். அவர்களின் ஷைகு மச்லீவாலே கமாலுல்லாஹ் ஷாஹ் அவர்கள் இவ்வாறே தெருவில் உள்ள கல் கரடுகளைப் பொறுக்கி வந்து காலையிலிருந்து மாலை வரை ஒவ்வொன்றாக எடுத்து எடுத்து ஒவ்வொரு உருவத்திலும் ஹக்தான் காட்சியளிக்கிறது என்று கூறிக் கொண்டிருப்பார்கள். இவ்வாறு ஞானப் பயிற்சியிலும், இறை தியானத்திலும் அவர்கள் சடைவடையாமல் செய்து வந்ததால் இந்த உயர்ந்த நிலையை அடைந்தார்கள்.

(وَلَا تَنِيَا فِي ذِكْرِى என் திக்ரில் சடைவடையாதீர்கள் என்று அல்லாஹ் கூறுகிறான்)

ரிவாயத் :

ஒருமுறை சர்கார் நாயகம் ஒரு முரீதை பயான் பேசச் சொன்னார்கள். அவர் கலிமாவின் விளக்கத்தை கூறிவரும் போது ''சிருஷ்டிகள் தேவையைப் பூர்த்தி செய்வதாகச் சொன்னால் அவையும் இபாதத்திலே பங்கு கேட்கும். உதாரணமாக இந்த பேன் (FAN) சொல்லும், ''நான் தானே காற்றை அசைத்துக் கொடுத்தேன். இந்த ஒரு தேவை என் மூலம் தானே பூர்த்தியானது. எனவே ஒரு நாளைக்கு 23 மணி 59 நிமிடம் அல்லாஹ்வை வணங்கினாலும் ஒரு நிமிடம் என்னை வணங்கு'' என்று சொல்லும்'' என்று பயான் செய்தார். சர்கார்

கூறினார்கள். ''வேறு பேன்கள் வேண்டுமானாலும் அவ்வாறு சொல்லலாம். இந்த பைத்துன்னூரில் பேன் அப்படிச் சொல்லாது. காரணம் வருடக் கணக்கில் நான் அதைப் பார்த்து பேசிப்பேசி தஃலீம் செய்திருக்கிறேன். அது ஹக்கைத் தான் காட்டுமேயன்றி தன்னைக் காட்டாது'' என்றார்கள்.

ரிவாயத் :

சர்காரின் வீட்டு நடு ஹாலில் இரண்டு கட்டில்கள் போடப் பட்டிருக்கும். ஒன்றில் சர்காரும் மற்றதில் பீராணியம்மாவும் படுத்துக் கொள்வார்கள். முன்னால் உள்ள தஃலீம் கானாவில் தான் தஃலீம் நடக்கும். பிற்காலத்தில் சர்கார் பலஹீனமாக ஆன போது முரீதுகளை வீட்டுக்குள்ளேயே அழைத்து தஃலீம் செய்வார்கள். நடுவில் திரை போட்டு ஹால் இரண்டாக பிரிக்கப்பட்டிருக்கும். சர்கார் கட்டிலைச் சுற்றி பிரிட்ஜ் மற்றும் வீட்டு சாமான்கள் எல்லாம் அடுக்கி வைக்கப் பட்டிருக்கும். ஒரு முரீது சர்காரிடம், ''சர்கார் இந்த சாமான்களை எல்லாம் இடம் மாற்றி வேறு இடத்தில் வைத்து விட்டால் முரீதுகள் இன்னும் அதிகமாக உட்காரலாம்'' என்றார். அதற்கு சர்கார் உடனடியாக ''இல்லை இல்லை! நீங்கள் எல்லாம் என்னோடு இரண்டு மூன்று மணி நேரம் இருந்து விட்டு சென்று விடுகிறீர்கள். மற்ற நேரங்கள் எல்லாம் இவைகள் தான் என் நண்பர்களாக இருக்கின்றன. என்னோடு பேசிக் கொண்டிருக்கின்றன. என் நண்பர்களை எப்படி நான் பிரிவது?'' என்றார்கள்.

<u>வற்றாத ஞானஊற்று</u>

ரிவாயத் :

ஒருமுறை பீராணியம்மாவுக்கு இரண்டு மூன்று நாட்களாக வயிற்றுப் போக்கு ஏற்பட்டு மிகவும் பலஹீனமாகி விட்டார்கள். பெண் டாக்டரை வீட்டிற்கே அழைத்து வந்து வீட்டிலேயே குளுக்கோஸ் ஏற்றினார்கள். திரைக்கு அந்தப் பக்கம் குளுக்காஸ் ஏறிக் கொண்டுள்ளது. இந்தப் பக்கம் சர்கார் பலமணி நேரம் முரீதுகளுக்கு தஃலீம் செய்து கொண்டிருந்தார்கள்.

எத்தனையோ சிரமங்களும், ஆபத்துகளும் சூழ்ந்த நிலையிலும் அதற்குரிய நடவடிக்கைகள் ஒருபுறம் செய்து முடித்தாலும் இன்னொரு புறம் தீனுடைய சேவையை விடாது செய்து கொண் டிருந்தார்கள். சர்காரின் பேரப்பிள்ளை ஒருவர் புதிதாகக் கட்டப்பட்டுக் கொண்டிருந்த ஒரு மாடிக் காட்டிடத்தின் மேல் பகுதியில் விளையாடிக் கொண்டிருந்த போது தெரியாமல் மின்சாரக் கம்பத்தில் இருந்து வந்த மெயின் லைனில் கைபட்டு விட்டது. 22 ஆயிரம் வாட்ஸ் மின்சாரம் பாயும் அந்தக் கம்பி கையை பிடித்துக் கொண்டது. உடனே அங்கிருந்த மேஸ்திரி ஒருவர் ஒரு கட்டை யை எடுத்து கையை ஓங்கி அடித்தார். உடன் சிறுவர் கீழே விழுந்து விட்டார். ஆனால் அதற்குள் உடல் முழுவதும் பலத்த தீக்காயம் ஏற்பட்டு முதுகு முழுதும் வெந்து போய் விட்டது. தலையிலும், கால் பாதத்திலும் ஓட்டை ஏற்பட்டு புகை வந்து கொண்டிருந்தது. அவசரமாக டாக்டரிடம் எடுத்துச் செல்லப்பட்ட போது உயிர் பிழைப்பது மிகவும் சிரமம். சென்னைக்கு அழைத்துச் செல்லுங்கள் என்று கூறி விட்டார்கள். சர்கார் அவர்களோ வைத்தியம் செய்யுங்கள், அல்லாஹ் காப்பாற்றுவான் என்று கூறினார்கள். ஏறத்தாழ மூன்று மாதம் ஆஸ்பத்திரியில் வைத் திருந்தார்கள். பெரிய பெரிய டாக்டர்கள் வரவழைக்கப்பட்டு ஏழு ஆபரேஷன்கள் செய்யப்பட்டது. பூரண குணமடைந்து வெளியே வந்தார். இவ்வளவு அதிகமாக மின்சாரம் தாக்கி பிழைத்த வரை எங்கள் வாழ்நாளில் கேள்விப்பட்டதில்லை என்று மின்சார ஊழியர்களும், டாக்டர்களும் பேராச்சரியம் அடைந்தார்கள்.

அந்த பரபரப்பான சூழ்நிலையிலும் மருத்துவமும், துஆவும் நடைபெற்றுக் கொண்டிருக்கவே சர்கார் தஃலீமையும் நிறுத்த வில்லை. ஒவ்வொரு நாளும் பலமணி நேரம் முரீதுகளிடம் பேசிக் கொண்டே இருந்தார்கள்.

சர்காரின் பேத்தியின் கணவர் துபாயில் ஒரு விபத்தில் மரண மடைந்த போது வீடே சோக மயமாக இருந்தது. சர்காரின் கண்கள் கண்ணீரைக் கொட்டிக் கொண்டே இருந்தது. தகப்பனை இழந்த மூன்று சிறு குழந்தைகளைப் பார்க்கும் போதெல்லாம் சர்கார் கண்ணீர் வடிப்பார்கள். அந்த சூழ்நிலையிலும் சர்கார் வீட்டில் முரீதுகளும்,

விருந்தாளிகளும் வந்து கொண்டிருந்தார்கள். இறைஞான போதம் நடைபெற்றுக் கொண்டு தான் இருந்தது.

பெருமானார் (ஸல்) அவர்களின் அருமை மகளார் ஜைனப் (ரலி) அவர்களின் குழந்தை மரண தருவாயில் இருந்தது. பெருமானாரிடம் சொல்லி அனுப்பினார்கள். நபி (ஸல்) அவர்கள் ஸஹாபாக்களுக்கு தஃலீம் செய்து கொண்டிருந்தார்கள். சப்ர் செய்யும்படியும், அல்லாஹ் நற்கூலி தருவான் என்றும் பதில் கூறி அனுப்பி விட்டு தஃலீமைத் தொடர்ந்தார்கள். (குடும்பத்தில் ஒரு பிரச்சனை என்றால் திக்ருகள், பயான்கள் என்ன? தொழுகையைக் கூட விட்டுவிடக் கூடிய நம்மவர்களின் நிலையை சற்று யோசித்துப் பார்க்க வேண்டும்) அதற்குப் பின் ஜைனப் (ரலி) மீண்டும் வற்புறுத்தி அல்லாஹ்வின் மீது ஆணையாக தாங்கள் வரவேண்டும் என்று கூறி அனுப்பிய போது ரசூல் (ஸல்) அவர்கள் ஸஹாபாக்களுடன் வந்தார்கள். குழந்தையைக் கையில் ஏந்தினார்கள். பெருமானாரின் திருக்கரங்களிலேயே குழந்தை யின் உயிர் பிரிந்தது. நபியவர்கள் கண்கள் கண்ணீரைக் கொட்டிக் கொண்டிருந்தன. ''யா ரசூலல்லாஹ்! தாங்களுமா அழுகிறீர்கள்?'' என்று அருகிலிருந்த ஒரு தோழர் கேட்டார். ''ஆம்! கண்கள் அழுகிறது. உள்ளமோ அல்லாஹ்வைப் பொருந்தியிருக்கிறது. ஒரு முஃமி னுடைய உயிர் அவனது இரு விலாக்களுக்கு மத்தியில் இருந்து வெளியேறும் நேரத்திலும் அவனது நாவு அல்லாஹ்வைப் புகழ்ந்து கொண்டிருக்கும்'' என்று கூறினார்கள். இவ்வாறான பல நிகழ்ச்சிகளை சர்கார் பைஜி நாயகத்தின் வாழ்க்கையில் காணலாம்.

திக்ரில் அழுகை

ரிவாயத் :

வாரவாரம் வியாழக்கிழமை மஃரிபில் இருந்து இஷா வரை சர்கார் வீட்டில் திக்ர் நடக்கும். சர்கார் வெளியூர்களுக்குச் சென்றாலும் வியாழக்கிழமை திக்ர் மஜ்லிஸ் நடத்துவார்கள். திக்ர் ஆரம்பித்த உடனே சர்கார் அழ ஆரம்பித்து விடுவார்கள். ஒவ்வொரு திக்ரிலும் அழுகை அதிகமாகிக் கொண்டே செல்லும். கடைசியாக முஹம்மத் (ஸல்) திக்ர் செய்யும் போது மிகவும் அதிகமாக தேம்பித் தேம்பி

அழுவார்கள். ஸலாம் பைத்திலும் அழுவார்கள். துஆவிலும் அழுவார்கள்.

ஒருமுறை கூறினார்கள். ''என் போன்ற பாவிக்கும் அல்லாஹ் திக்ர் செய்யும் பாக்கியத்தைக் கொடுத்தானே என்று நினைத்தால் எனக்கு அழுகை வந்து விடுகிறது'' என்றார்கள். முஹம்மத் (ஸல்) திக்ரை வெகு நேரம் செய்வார்கள். மற்ற திக்ருகளை விட அது தான் நீளமாக இருக்கும். சில நேரம் 300 எண்ணிக்கையையும் தாண்டி விடும். அவ்வளவு நேரமும் அழுது கொண்டு தான் இருப்பார்கள்.

ரிவாயத் :

சர்கார் அழுவதைப் பார்த்து முரீதுகளும் அழுவார்கள்.

رونے سے دل دھلایا جاتا ہے

''அழுவதால் உள்ளம் கழுவப்படுகிறது'' என்று சர்கார் கூறுவார்கள்.

எல்லாப் புகழும் இறைவனுக்கே!

ரிவாயத் :

ஒருமுறை மஜ்லிஸில் பிற மத சகோதரர்களும் அமர்ந்திருந் தார்கள். சர்கார் ஒரு கலீபாவைப் பேசச் சொன்னார்கள். அவரோ பயானை ஆரம்பிக்கும் முன் ''நம்மையெல்லாம் முஸ்லிம்களாகப் படைத்தானே அந்த அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்'' என்றார். சர்கார் உடனே, ''ஏன் நம்மையெல்லாம் மனிதனாகப் படைத்தானே அந்த அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும் என்று கூறக் கூடாதா?'' என்று கூறினார்கள். அதாவது பிற மத சகோதரர்களும் இருக்கும் போது அவர்களுக்கு மனவருத்தம் தரும்படி பேசக் கூடாது என்று அறிவுறுத்தினார்கள்.

ரிவாயத் :

ஒருமுறை மிஸ்கீன் பயானை ஆரம்பிக்கும் போது ''நம்மை யெல்லாம் முஸ்லிம்களாகப் பிறக்கச் செய்தானே அந்த அல்லாஹ் வுக்கே எல்லாப் புகழும்'' என்று கூறினேன். உடன் சர்கார் நாயகம்

''செத்தவன் கையில் வெத்தலை பாக்கு கொடுத்த மாதிரி'' என்று மக்கள் கூறுவார்களே அப்படி இருக்கிறது உங்கள் பேச்சு. கொஞ்சம் கூட உணர்ச்சியின்றி சடங்காகப் பேசுகிறீர்கள். உண்மையிலேயே அல்லாஹ் உங்களை முஸ்லிமாக ஆக்கியதை நினைத்து நினைத்து பேரானந்தப்பட்டால் இப்படியா பேசுவீர் கள்? ஸஹாபாக்கள் அல்லாஹ் தங்களை இஸ்லாத்தில் சேர்த்ததை எண்ணி எண்ணி பேரானந்தம் அடைந்து கண்ணீர் வடிப்பார்கள். நமக்கு அதன் அருமை தெரிய வில்லை. ஏனெனில் நமக்கு இலவசமாக தகப்பன் வழி சொத்தாக கிடைத்து விட்டது. அதற்காக நாம் எந்த முயற்சியும் செய்து பெற வில்லை. எந்த காசு பணமும் செலவழிக்கவில்லை. நரகத்தில் இருந்து அணுவளவு ஈமான் கொண்டவர்களையும் வெளியேற்றி சுவனம் கொண்டு செல்லும்படி அல்லாஹ் உத்தரவிடுவான். அப்போது காபிர்கள் கவலைப்படுவார்கள். தாங்களும் முஸ்லிமாக இருந்திருக்க வேண்டுமே என்று ஏங்குவார்கள். அப்போது தெரியும் இஸ்லாத்தின் அருமை''

رُبَمَا يَوَدُّ الَّذِيْنَ كَفَرُوْا لَوْ كَانُوْا مُسْلِمِيْنَ ۝

என்று கூறினார்கள்.

உணர்வுடன் பேசுங்கள்

ரிவாயத் :

ஒருமுறை ஒரு முரீது பேசிய போது சர்கார் கூறினார்கள். ''நாமே உணர்வில்லாமல் பேசினால் அதனால் அடுத்தவர்களுக்கு எந்த உணர்வும் ஏற்படாது. லாஜிம் ஆகாமல் முதஅத்தி ஆக முடியாது. எப்படி இஷ்கே மஜாஜியில் உணர்ச்சியில்லாமல் ஈடுபடுவது தவறோ அது போல் இஷ்கே ஹகீகியிலும் உணர்ச்சியில்லாவிட்டால் ''வ ஆகிர் தஃவானா'' என்ற கூறி முடித்து விட வேண்டும். சும்மாமாவது இழுத்துக் கொண்டிருக்கக் கூடாது'' என்றார்கள்.

ரிவாயத் :

இன்னொரு முறை ஒரு முரீது ஆக்ரோஷமாக வீராவேசமாகப் பேசிக் கொண்டிருந்தார். சர்கார் கூறினார்கள்.

(ஜோஷ் பிலா ஹோஷ் கூடாது) ''உணர்வும் வேண்டும்; கவனமும் வேண்டும். சூழ்நிலை என்ன? அங்கு முன்னால் உள்ளவர்களின் தரம் என்ன? என்பதை அறிந்து அதற்கேற்ப பேச வேண்டும்

كَلِّمُوا النَّاسَ عَلٰى قَدْرِ عُقُوْلِهِمْ

''மக்களிடம் அவரவர்களின் அறிவுக்குத் தக்கவாறு பேசுங்கள்.''

اَنْزِلُوا النَّاسَ مَنَازِلَهُمْ

''அவரவர்களை அந்தந்த தரத்தில் அமைக்க வேண்டும்'' என்பது ஹதீஸ்.

நம்முடைய உணர்ச்சியில் மற்றவர்களையும் சேர்த்து அழைத்துச் செல்ல வேண்டும். மற்றவர்கள் வெறுமனே இருக்க, தான் மட்டும் உணர்ச்சியில் பொங்குவது சரியல்ல. அது இஷ்கே மஜாஜியாக இருப்பினும் இஷ்கே ஹகீகியாக இருப்பினும் சரியே!'' என்றார்கள்.

கவிதைகள்

ரிவாயத் :

ஒருமுறை அடிமை பேசிய போது சர்கார் நாயகம் கூறினார்கள். நீங்கள் இடையிடையே பல கவிஞர்களின் கவிதையைப் படிக்கிறீர்கள். அவற்றில் சிலவற்றை விளங்க முடியவில்லை. அதனால் உங்கள் பயானின் وزن மதிப்பு குறைந்து விடுகிறது. வேண்டுமானால் எனது தாதா சர்கார் கௌஸி நாயகம் எழுதிய தய்யிபாத் கௌஸியைப் படியுங்கள். அதில் ஒவ்வொரு வரியும் உண்மையான தவ்ஹீது நிரம்பியதாக உள்ளது. இறைக்காதல் பொங்குவதாக உள்ளது. வழிகேட்டை விட்டும் பாதுகாப்பதாக உள்ளது. அதை முழுதும் மனப்பாடம் செய்யுங்கள் என்று கூறினார்கள்.

குர்ஆன் விளக்கங்கள்

ரிவாயத் :

சர்கார் நாயகம் உரையில் எண்ணற்ற குர்ஆன் வசனங்கள் பொங்கி வரும். அவர்கள் ஹாபிஜுல் குர்ஆனோ என்று கேட்பவர்கள் ஆச்சரியப்படுவர். அந்த ஆயத்துகளுக்கு அவர்கள் கூறும் விளக்கமோ

இன்னும் ஆச்சரியம் தரக்கூடியதாக இருக்கும். நாம் பலமுறை கேட்ட திருவசனங்களுக்கே சர்கார் நாயகம் விளக்கம் கூறும்போது புதுமையாக இருக்கும். முரீதுகள் பயான் செய்யும் போது திருமறை வசனங்களைக் கூறி விளக்கம் கூறினால் மிகவும் மகிழ்வார்கள். ஒருமுறை கூறினார்கள். ''நீங்களெல்லாம் பயானில் எல்லாக் கதைகளையும் கூறுகிறீர்கள். குர்ஆனுடைய ஆயத்களைக் கூறி விளக்கம் கூறுவதில்லை. ஆயத்களைக் கூறினால் தான் பயானுக்கு மதிப்பும், மரியாதையும் உண்டாகும்'' என்று கூறினார்கள்.

ரிவாயத் :

ஒருமுறை என்னிடம் கூறினார்கள். ''உங்களுக்கு கவ்வாலி கேட்டால் கைபியத்து வருகிறது. குர்ஆனைக் கேட்டால் எந்த கைபியத்தும் வருவதில்லையே''

ரிவாயத் :

சர்கார் தொழுகையில் இமாமுக்குப் பின் நிற்கும் போது குர்ஆனைக் கேட்டு அதிகமாகக் கண்ணீர் வடித்தவர்களாக நிற்பார்கள். சில நேரங்களில் அவர்களையும் அறியாமல் ''ஹூம்'' என்று சப்தம் வெளிவரும்.

துஆயே யூனுஸ்

ரிவாயத் :

சர்காருடைய வீட்டில் பிற்காலங்களில் மஃரிபில் இருந்து இஷா வரை பீர்பாய்கள், உள்ளூர்வாசிகள் வந்து அமர்ந்து துஆயே யூனுஸ்

لَآ اِلٰهَ اِلَّآ اَنْتَ سُبْحٰنَكَ ۖ اِنِّيْ كُنْتُ مِنَ الظّٰلِمِيْنَ ○

''லா இலாஹ இல்லா அந்த சுப்ஹானக இன்னீ குன்து மினள் ளாலிமீன்'' என்று ஓதுவார்கள். இஷா பாங்கு சொன்னவுடன் சர்கார் வெளியே வந்து ஓதியவர்கள் அனை வருக்கும் 10 ரூபாய் கொடுப்பார்கள். ஏறத்தாழ இருபது முப்பது பேர்கள் இருப்பார்கள். இந்த எண்ணிக்கை கூடும் குறையும். வயது முதிர்ந்த உழைக்க முடியாத முதியவர்களுக்கு இந்த 10 ரூபாய் மூன்று நேர உணவிற்கு

போதுமானதாக இருந்தது. (அப்போது ரொட்டி ஒரு ரூபாய் தான்) இதில் சர்காருடைய கராமத்தை பல நேரம் பார்த்திருக்கிறோம். அவர்கள் உள்ளிருந்து எத்தனை நோட்டுகள் எடுத்து வருகிறார்களோ அது அங்குள்ளவர்களின் எண்ணிக்கைக்கு சரியாக இருக்கும். ஏதோ ஒன்றிரண்டு சந்தர்ப்பங்களில் மட்டுமே சில தாள்கள் மிச்சமாக இருக்கும். அல்லது பற்றாமல் போகும்.

ரிவாயத் :

சர்கார் நாயகம் கூறுவார்கள். "யூனுஸ் (அலை) இந்த துஆவை ஓதிய காரணத்தினால் மிகப் பெரும் சிரமத்திலிருந்து அவர்களை நாம் காப்பாற்றினோம்" என்று அல்லாஹ் கூறுகிறான். இருளுக்கு மேல் இருள் சூழ்ந்த மீன் வயிற்றில் இருந்து அவர்களை அல்லாஹ் வெளி யேற்றினான். இதை ஓதாமல் இருந்திருந்தால் மீன் வயிற்றிலேயே மஹ்ஷர் வரை உலகம் அழிந்து மீண்டும் எழுப்பப்படும் நாள்வரை இருந்திருப்பார்கள் என்றும் கூறுகிறான். அத்துடன் அல்லாஹ் நிறுத்தவில்லை.

وَكَذٰلِكَ نُـۨجِى الْمُؤْمِنِيْنَ ۝

இவ்வாறு தான் முஃமின்களை காப்பாற்றுவேன் என்று கூறுகிறான். எனவே இந்த துஆவே யூனுஸை அதிகம் ஓதக் கூடியவர்களின் சிரமங்களை அல்லாஹ் நீக்குவான். ஒரு குறிப்பிட்ட சிரமம் நீங்குமாறு நிய்யத் வைத்து 1¼ லட்சம் தடவை ஓதுவது பெரியோர்களின் பழக்கமாக இருந்தது என்று கூறுவார்கள். ரமலானிலும் தராவீஹுக்குப் பின் ஒருமணி நேரம் குர்ஆன் ஓதுவார்கள். பின்னர் துஆயே யூனுஸ் அரைமணி நேரம் ஓதுவார்கள். அதன் பின் தஃலீம் ஸஹர் வரை நடைபெறும்.

ரிவாயத் :

ஒருமுறை மஃரிபுக்குப் பின் நாங்கள் அமர்ந்து துஆயே யூனுஸ் ஓதிக் கொண்டிருந்தோம். சர்கார் நாயகம் வீட்டிற்குள் இருந்து தஃலீம் கானாவிற்கு வந்து நின்று பார்த்தார்கள். "நீங்கள் வெறும் சடங்காக ஓதுகிறீர்கள். இப்படியா யூனுஸ் (அலை) ஓதியிருப்பார்கள்?

إِذْ نَادٰى وَهُوَ مَكْظُوْمٌ ۝

அவர்கள் நடு நடுங்கி உள்ளம் உடைந்து அல்லாஹ்வை அழைத்தார்கள்'' என்று அல்லாஹ் கூறுகிறான். அப்படி அழைப்பவர் களுக்குத்தான் அல்லாஹ் உடன் உதவி செய்வான் என்று கூறி விட்டு சென்று விட்டார்கள்.

பாவ மன்னிப்பு

ரிவாயத் :

ஒருநாள் தஃலீமில் முரீதுகளை மிகவும் கண்டித்த சர்கார் நாயகம்

وَمَا كَانَ اللّٰهُ لِيُعَذِّبَهُمْ وَاَنْتَ فِيْهِمْ ۚ

''நபியே! நீங்கள் இந்த மக்களுக்கு மத்தியில் இருக்கும் வரை அல்லாஹ் அவர்களை வேதனை செய்ய மாட்டான்'' என்று அல்லாஹ் கூறுகிறான். நபியின் முகத்துக்காக, நபியின் மனம் வருத்தப்படுமே என்பதற்காக அல்லாஹ் அந்த பாவம் செய்யும் மக்களையும் விட்டு வைக்கிறான். நபி போன பின்னால் அல்லாஹ் தண்டிப்பான். இதுபோன்று தான் ஷைகு இருக்கும் வரையில் அவர்கள் பொருட்டு அவர்களின் சில முரீதுகளுக்கு வரும் சில தண்டனைகளை அல்லாஹ் நிறுத்தி வைக்கிறான் என்று பெரியோர்கள் கூறுகிறார்கள். ஷைகு கண்ணை மூடியவுடன் அல்லாஹ் தண்டிப்பான். எனவே எச்சரிக்கை யாக இருங்கள் என்று கூறிவிட்டு உள்ளே சென்று விட்டார்கள். நாங்கள் புறப்படத் தயாரான போது சர்கார் நாயகம் திடீரென மீண்டும் வந்தார்கள். ''நான் உள்ளே சென்றதும் அந்த ஆயத்தின் தொடர் ஞாபகம் வந்தது. அதைச் சொல்லாவிட்டால் நீங்கள் பிற்காலத் தில் கைசேதப்படுவீர்கள் என்று அவசரமாக வந்தேன். அதன் தொடரில் அல்லாஹ் கூறுகிறான்.

وَمَا كَانَ اللّٰهُ مُعَذِّبَهُمْ وَهُمْ يَسْتَغْفِرُوْنَ ۝

அவர்கள் பாவமன்னிப்புக் கேட்கும் காலமெல்லாம் அல்லாஹ் அவர்களை தண்டிக்க மாட்டான். நபியின் மறைவுக்குப் பின்பும்

பாவமன்னிப்புக் கேட்டால் அல்லாஹ் தண்டிப்பதில்லை. அதே போல் ஷைகுடைய மறைவுக்குப் பின்னும் மன்னிப்புக் கேட்கும் தன்மை உடைய வரை அல்லாஹ் மன்னித்து விடுகிறான்.

குர்ஆனில் சிந்தனை

ரிவாயத் :

சர்கார் நாயகம் உள்ளூரில் இருந்தாலும், வெளியூர் சென்றாலும் தினமும் குர்ஆன் ஓதும் பழக்கத்தை விட மாட்டார்கள். குறைந்தது ஒன்றரை மணி நேரம் ஓதுவார்கள். தங்கள் வாழ்நாள் இறுதி வரை சர்கார் இந்த பழக்கத்தை விடவில்லை. ரமலான் காலங்களில் பகலிலும் இரவிலும் ஓதுவார்கள். மற்ற காலங்களை விட இரு மடங்கு நேரம் ஓதுவார்கள். ஒரு பக்கம் தர்ஜுமா எழுதப்பட்ட குர்ஆனை அழகான சில்வர் பெட்டியில் வைத் திருப்பார்கள். ரமலான் இரவுகளில் மக்களோடு அமர்ந்து சர்கார் ஓதும் போது சில நேரங்களில் ஒரே ஜுஸ்ஸை பல நாட்கள் ஓதுவார்கள். ஒரு தடவை சூரா யூனுஸையே பதினைந்து இருபது நாட்கள் ஓதிக் கொண்டிருந்தார்கள். ஹஜ்ரத் உமர் (ரலி) அவர்கள் சூரா பகராவை முடிக்க ஆறு மாதம் ஆனதாக ரிவாயத் செய்யப்பட்டுள்ளது. ''கண் கண்டார் கண்ணே கண்டார்'' என்பது போல் காதலனின் ஒரு அங்க அழகை ரசித்தவர்கள் அடுத்ததை ரசிக்க நேரம் கிடைப்பதில்லை.

ரிவாயத் :

பெரும்பாலும் தஃலீமில் இன்று குர்ஆன் திலாவத்தில் இன்ன திருவசனம் வந்தது என்று கூறி அதன் விளக்கங்களை கூறுவார்கள். ஒரு நாள் கூறினார்கள். ''இன்று காலையில் ஒரு ஆயத் ஓதினேன். இதுவரை அழுது கொண்டு இருக்கிறேன். அல்லாஹ் தன் நபியைப் பார்த்துக் கூறுகிறான்.

وَلَئِنْ شِئْنَا لَنَذْهَبَنَّ بِالَّذِيٓ اَوْحَيْنَآ اِلَيْكَ

'நபியே! நாம் நாடினால் தங்களுக்கு அறிவித்தவற்றையெல்லாம் எடுத்து விடுவோம்' என்று கூறுகிறான். அல்லாஹ்வின் ஜலாலீ தஜல்லியின் முன் நபியையும் அல்லாஹ் பயப்படச் செய்கிறான்.

அனைத்து சிருஷ்டிகளை விடவும் அல்லாஹ்வுக்கு பிரியமான அருமை நபி (ஸல்) அவர்களுக்கே அல்லாஹ் இப்படிக் கூறினால் நம்மைப் போன்ற பெரும்பாவிகளுக்கு என்ன நிலைமை ஏற்படும்? அல்லாஹ் நம்மை பாதுகாக்க வேண்டும். எந்த நிஃமத்தும் நம்மிடம் வந்து மாட்டிக் கொள்ளவில்லை. அல்லாஹ் நாடினால் எந்த நிஃமத்தையும் எந்த வினாடியும் எடுத்துக் கொள்வான்'' என்றார்கள்.

ரிவாயத் :

ஒருமுறை சொன்னார்கள். அல்லாஹ் கூறுகிறான்.

وَمَنْ يُّوْقَ شُحَّ نَفْسِهٖ فَاُولٰٓئِكَ هُمُ الْمُفْلِحُوْنَ ○

''தனது நப்ஸின் கஞ்சத்தனத்தை விட்டும் யார் பாதுகாக்கப் பட்டார்களோ அவர்கள் தான் வெற்றியாளர்கள்'' என்று அல்லாஹ் கூறுகிறான். கஞ்சத் தனத்தை விட்டும் நாமாக நம்மை பாதுகாக்க முடியாது. நாமாக கொடை வள்ளலாக முடியாது. அவன் தான் அவ்வாறு ஆக்க வேண்டும். எனவே தான் ''யூக'' என்று ''மஜ்ஹுலா''ன ''பிஅலா''க அல்லாஹ் கூறுகிறான்'' என்றார்கள்.

ரிவாயத் :

ஒருமுறை கூறினார்கள். ''இன்று ஓதிக் கொண்டிருந்தேன்.

وَاتْرُكِ الْبَحْرَ رَهْوًا

என்ற ஆயத் வந்தது. என் உடல் சிலிர்த்து விட்டது. மூஸா (அலை) அவர்களுக்கு அல்லாஹ் கடலை பிளந்து வழி ஏற்படுத்தினான். அவர்கள் கடந்து சென்ற பின் நபியைப் பார்த்து அல்லாஹ் கூறுகிறான். ''நபியே! கடலைக் கொஞ்சம் பிளந்த நிலையி லேயே விட்டு வையுங்கள்! இன்னும் பிர்அவ்னை மூழ்கடிக்க வேண்டியுள்ளது'' என்கிறான். அல்லாஹ் தன் நேசர்களுக்கு எவ்வளவு அதிகாரங்களையும், உரிமைகளையும் அளித்திருக்கிறான்'' என்றார்கள்.

ரிவாயத் :

ஒருமுறை கூறினார்கள். அல்லாஹ் குர்ஆனில்,

وَسَارِعُوْٓا اِلٰى مَغْفِرَةٍ مِّنْ رَّبِّكُمْ وَجَنَّةٍ عَرْضُهَا السَّمٰوٰتُ وَالْاَرْضُ ۙ اُعِدَّتْ لِلْمُتَّقِيْنَ ۝

''உங்களின் ரப்புடைய மன்னிப்பின் பக்கம் விரையுங்கள். இன்னும் வானம் பூமியளவு விசாலமான சொர்க்கத்தின் பக்கம் விரையுங்கள் என்று கூறி அந்த சொர்க்கம் முத்தகீன்கள் தக்வா உடையவர்களுக்காக தயார் செய்து வைக்கப்பட்டுள்ளது'' என்கிறான். இந்த ஆயத்தைப் பார்த்தவுடன் எனக்கு பயம் வந்து விட்டது. அப்படியானால் நம்மைப் போன்ற பாவிகளுக்கு சொர்க்கம் கிடைக்காதா? என்று எண்ணினேன். பிறகு இதே போன்று இன்னொரு ஆயத்தைப் பார்த்தேன்.

سَابِقُوْٓا اِلٰى مَغْفِرَةٍ مِّنْ رَّبِّكُمْ وَجَنَّةٍ عَرْضُهَا كَعَرْضِ السَّمَآءِ وَالْاَرْضِ ۙ اُعِدَّتْ لِلَّذِيْنَ اٰمَنُوْا بِاللّٰهِ وَرُسُلِهٖ ؕ

இதைப் பார்த்தவுடன் கல்பில் பெருமகிழ்ச்சி உண்டானது. அல்ஹம்துலில்லாஹ்! நமது கல்பில் அல்லாஹ்வைப் பற்றியும், மறுமையைப் பற்றியும் ஈமான் இருக்கிறதே அப்படியானால் நமக்கும் சொர்க்கத்தில் பங்கு இருக்கிறது இன்ஷா அல்லாஹ்! என்று கூறினார்கள்.

ரிவாயத் :

ஒருமுறை கூறினார்கள். அவ்லியாக்கள் எல்லாம்,

وَلَسَوْفَ يُعْطِيْكَ رَبُّكَ فَتَرْضٰى ۝

என்ற ஆயத்தில் தான் மனம் ஆறுதல் அடைகிறார்கள். ஏனெனில் இந்த ஆயத் இறங்கியதும் நபி (ஸல்) அவர்கள்

اِذَنْ لَا اَرْضٰى وَوَاحِدٌ مِّنْ اُمَّتِى فِى النَّارِ

"என் உம்மத்திலே ஒரு மனிதர் நரகில் இருக்கும் வரை நான் பொருந்திக் கொள்ள மாட்டேன்" என்றார்கள். எனவே நம்மையும் பெருமானார் (ஸல்) அவர்கள் கைவிட மாட்டார்கள் என்று ஆதரவு வைக்கிறார்கள்.

ரிவாயத் :

உர்து மொழியில் நன்கு தேர்ச்சி பெற்றிருந்த சர்கார் நாயகம் உர்து மொழியின் இறை ஞானப்பாடல்களை மிகவும் விரும்பிக் கேட்பார்கள். நாகூர் ஷரீபில் உருஸ் நடக்கும் நேரம் சர்கார் நாயகம் 10 நாட்கள் அங்கே தங்கியிருப்பார்கள். பகலில் பயானும், இரவில் கவ்வாலி ஸமாஃ மஜ்லிஸும் நடைபெறும்.

❀❀❀❀❀❀❀❀❀❀

பைஜி நாயகத்தின் ஞானவழித் தொடர்

	காதிரிய்யா சில்சிலா	மறைந்த வருடம் ஹிஜ்ரி	மாதம்–தேதி	அடக்கஸ்தலம்
1.	**இருலோக ரட்சகர் ரஹ்மத்துல்லில்ஆலமீன் முஹம்மது நபி (ஸல்)**	11	ரபீவுல் அவ்வல் 12 திங்கள்கிழமை	மதீனா முனவ்வரா
2.	பாபுல் இல்ம் சையிதுனா அலி கர்ரமல்லாஹு வஜ்ஹஹு	40	ரமலான் 21	நஜப்
3.	ஹஜ்ரத் காஜா ஹஸன் பஸரீ (ரஹ்)	111	முஹர்ரம்–4 செவ்வாய்	பஸரா
4.	ஹஜ்ரத் ஷைகு ஹபீப் அஜமீ (ரஹ்)	120	ரமலான் 9	பஸரா
5.	ஹஜ்ரத் அபூ சுலைமான் தாவூத் இப்னு நஸீர் தாயீ (ரஹ்)	162	ரமலான் 9	பக்தாத்
6.	ஹஜ்ரத் அபூ மஹ்பூஜ் மஃரூப் இப்னு பைரோஸ் கர்கீ (ரஹ்)	200	முஹர்ரம் 2 ஞாயிறு	பக்தாத்
7.	ஹஜ்ரத் அபுல் ஹஸன் சிர்ரீ இப்னு முஃப்லிஸ் ஸிக்தீ (ரஹ்)	250	ரமலான் 3 செவ்வாய்	பக்தாத்
8.	(அவர்களின் சகோதரியின் மகன்) ஹஜ்ரத் அபுல்காசிம் ஜுனைத் இப்னு முஹம்மத் சுஜாஜ் பக்தாதி (ரஹ்)	297	ரஜப் 27 சனிக்கிழமை	பக்தாத்
9.	ஹஜ்ரத் அபூபக்கர் ஷிப்லி (ரஹ்)	334	துல்ஹஜ் 27 ஜும்ஆ	பக்தாத்
10.	ஹஜ்ரத் அப்துல் அஜீஸ் ஸுஹைல் யமனீ (ரஹ்)	336	துல்ஹஜ் 11 வியாழன்	யமன்
11.	ஹஜ்ரத் அபுல் பள்ல் அப்துல் வாஹித் யமனீ (ரஹ்)	425	ஜமாதுஸ்ஸானீ 9 ஜும்ஆ	பக்தாத்(இமாம் ஹன்பல் அவர் களின் மக்பரா)
12.	ஹஜ்ரத் அபுல் ஃபரஹ் யூசுப் தர்தூஸி (ரஹ்)	447	முஹர்ரம் 5 சனி	தர்தூஸி
13.	ஹஜ்ரத் அபுல் ஹஸன் அலிய்யுல் குரஷிய்யுல் ஹன்காரீ (ரஹ்)	486	-------- --------	ஹன்கார்
14.	ஹஜ்ரத் அபூ சயீத் இப்னு முபாரக் மக்ஸூமீ (ரஹ்)	513	ரபீவுஸ்ஸானீ 11 திங்கள்	பக்தாது (வாசிதா)
15.	ஹஜ்ரத் குத்புல் அக்தாப் ஷைகு முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்)	561	ரபீவுஸ்ஸானி 11	பக்தாத்
16.	(அவர்களின் மகன்) ஹஜ்ரத் ஷைகு அப்துர்ரஜ்ஜாக் (ரஹ்)	595	ஷவ்வால் 6	பக்தாத் (பாபுல் ஹரப்)
17.	(அவர்களின் சகோதரர்) ஹஜ்ரத் சையித் அபூநசீர் பீர் (ரஹ்)	618	ஜமாதுஸ்ஸானி1	திமிஷ்க்
18.	ஹஜ்ரத் சையித் அபூசாலிஹ் இப்னு அப்துர் ரஜ்ஜாக் (ரஹ்)	699	ஷஃபான் 18	மதீனா முனவ்வரா

	காதிரிய்யா சில்சிலா	மறைந்த வருடம் ஹிஜ்ரி	மாதம்–தேதி	அடக்கஸ்தலம்
19.	ஹஜ்ரத் சையத் ஷைகு அஹ்மத் (ரஹ்)	----------	----------	மதீனா முனவ்வரா
20.	ஹஜ்ரத் சையித் முஹம்மத் இப்னு அஹ்மத் (ரஹ்)	______	----------	மதீனா முனவ்வரா
21.	ஹஜ்ரத் சைய்யித் நசீருத்தீன் (ரஹ்)	----------	----------	----------
22.	ஹஜ்ரத் சைய்யித் நூருத்தீன் (ரஹ்)	851	----------	----------
23.	ஹஜ்ரத் சைய்யித் ஷாஹ் இனாயத்துல்லாஹ் (ரஹ்)	----------	----------	----------
24.	ஹஜ்ரத் சைய்யித் ஷுஜாஃ (ரஹ்)	----------	----------	----------
25.	ஹஜ்ரத் ஹாஜி சைய்யித் இஸ்ஹாக் சிஷ்தி பாபா ஷாஹ் காதிரி (ரஹ்)	982	----------	காலகீ (குல்பர்கா)
26.	ஹஜ்ரத் ராஜி முஹம்மத் ஹுஸைனி கட்டா நவாஜ் (ரஹ்)	1090	ஜமாதுல்ஆகிர்3	நாகூர் (குல்பர்கா)
27.	ஹஜ்ரத் ஜுனைதே ஸானி ஆஷிகே ரப்பானி ஹுஸைனி ஷுஹரவர்தீ தபகாதீ (ரஹ்)	985	----------	பீஜப்பூர்
28.	ஹஜ்ரத் ஷாஹ் ஹிதாயத்துல்லாஹ் அய்னீ (ரஹ்)	1018	----------	ஜஹ்ராபூர்
29.	ஹஜ்ரத் சைய்யித் கமாலுத்தீன் (அவ்வல்) புகாரீ (ரஹ்)	----------	----------	தாலாப்குரம் குண்டா சித்தூர்
30.	(அவர்களின் மகன்) ஹஜ்ரத் சைய்யித் ஜமாலுத்தீன் (ரஹ்)	1162	----------	ஜமால் யக்கா (ராய் சுட்டி)
31.	(அவர்களின் மகன்) ஹஜ்ரத் சைய்யித் முஹம்மத் ஹுஸைனி ஷாஹ்மீர் (ரஹ்)	1186	ஜமாதுல்ஆகிர்1	கத்ரீ (அனந்தப்பூர்)
32.	(அவர்களின் சகோதரர்) சைய்யித் ஷாஹ் கமாலுத்தீன் (ஸானீ) ஷம்ஃ கான் தானே சிஷ்த், ஷாஹ் கமால் (ரஹ்)	1224	ஸபர் 11	தாலாப்–குரம் குண்டா
33.	ஹஜ்ரத் சைய்யித் அலாவுத்தீன் (ரஹ்)	1251	----------	டிரங்ரோடு ராய்சுட்டி (கடப்பா)
34.	(அவர்களின் மகனார்) ஹஜ்ரத் சைய்யித் புர்ஹானுத்தீன் ஹக்கானி ஹக்நுமா (ரஹ்) (ஷாஹ் கமால் (ரஹ்) அவர்களின் மருமகன்)	1290	ரமலான் 29	டிரங்ரோடு ராய்சுட்டி
35.	ஹஜ்ரத் சைய்யித் சுல்தான் மஹ்மூதுல்லாஹ் ஷாஹ் ஷாஹ் ஜீ நக்ஷ பந்தீ	1311	துல்ஹஜ் 7	ஹைதராபாத் அப்ஜல் கன்ஜ் (தவாகானா உஸ்மானிய்யா பின்புறம்)

	காதிரிய்யா சில்சிலா	மறைந்த வருடம் ஹிஜ்ரி	மாதம்–தேதி	அடக்கஸ்தலம்
36.	ஹஜ்ரத் கமாலுல்லாஹ் ஷாஹ் மச்லீவாலே ஷாஹ் (ரஹ்)	1351	ரபீவுஸ்ஸானி 29 வியாழன்	ஹைதராபாத் காசீகோடா
37.	ஹஜ்ரத் கன்சுல் இர்பான் பீர் கௌஸி ஷாஹ் அக்பரி (ரஹ்)	1373	ஷவ்வால் 4 ஞாயிறு	மஸ்ஜிதே கரீமுல்லாஷாஹ் பேகம் பஜார் ஹைதராபாத்
38.	ஹஜ்ரத் நூருல் மஷாயிக் அஹ்மத் முஹ்யித்தீன் சைய்யித் நூரி ஷாஹ் (ரஹ்)	(பிறப்பு ஹிஜ்ரி 1322 துல்கஅதா 28) 1411	ரபீவுல் ஆகிர்14 சனிக்கிழமை	ஹைதராபாத்
39.	**ஹஜ்ரத் ஷம்சுல் ஆரிபீன் ஷைகுல் அரபி வல் அஜம் அப்துல் பஷீர் பைஜி ஷாஹ் நூரி வஸிஅத் பைஜானுஹு (ரஹ்)**	(பிறப்பு 26.6.1926) 1426	(ஹிஜ்ரி 1344 துல்ஹஜ் 16 திருப்பந்துருத்தி) ரஜப் 21 வெள்ளி 26.8.2005	லால்பேட்டை

குறிப்பு : 6 எண்ணில் உள்ள சையிதினா மஃரூப் கர்கீ (ரஹ்) அவர்களுக்கு பெருமானாரிடமிருந்து இன்னொரு முறையிலும் சில்சிலா ஆன்மீகத் தொடர் இருக்கிறது. அதுவாகிறது :

நபி முஹம்மத் (ஸல்) – சையிதினா அலீ (ரலி) – இமாம் ஹுஸைன் (ரலி)– இமாம் ஜைனுல் ஆபிதீன் (ரலி) – இமாம் முஹம்மத் பாகிர் (ரலி) – இமாம் ஜஃபர் சாதிக் (ரலி) – இமாம் மூஸா காழிம் (ரலி) – இமாம் அலி மூஸா ரிழா (ரலி) – ஷைகு மஃரூபுல் கர்கீ (ரலி) இவ்வாறு தொடர் வருகிறது.


	சிஷ்திய்யா சில்சிலா	மறைந்த வருடம் ஹிஜ்ரி	மாதம்–தேதி	அடக்கஸ்தலம்
1.	இருலோக ரட்சகர் ஸைய்யதுல் முர்ஸலீன் முஹம்மத் நபி (ஸல்)	11	ரபீவுல் அவ்வல் 12 திங்கள்கிழமை	மதீனா முனவ்வரா
2.	ஸையிதுனா அலீ கர்ரமல்லாஹு வஜ்ஹஹு	40	ரமலான் 21	நஜப் ஷரீப்
3.	ஸையிதுனா காஜா ஹஸன் பஸரீ (ரலி)	111	முஹர்ரம்–4 செவ்வாய்	பஸரா
4.	ஹஜ்ரத் அப்துல் வாஹித் இப்னு ஜைது (ரஹ்)	177	ஸபர் 27 புதன்	பஸரா
5.	ஹஜ்ரத் அபூஅலி புளைல் இப்னு இயாழ் (ரஹ்)	187	ரபீவுல் அவ்வல் 3, ஜும்ஆ	மக்கா முகர்ரமா
6.	ஹஜ்ரத் சுல்தான் இப்றாஹீம் இப்னு அத்ஹம் பல்கீ (ரஹ்)	261	ஜமாதுல்அவ்வல் 28, ஜும்ஆ	மர்அஷ் கோஹே ஷாம்
7.	ஹஜ்ரத் சதீதுத்தீன் ஹுதைபதுல் மர்அஷிய்யி (ரஹ்)	277	ஷவ்வால் 24 ஞாயிறு	மர்அஷ் (ஷாம்)
8.	ஹஜ்ரத் காஜா அமீனுத்தீன் அபூஹுபைரா பஸரீ (ரஹ்)	277	ஷவ்வால் 7	பஸரா
9.	ஹஜ்ரத் மிம்ஷாத் அலி தைனூரி (ரஹ்)	298	முஹர்ரம் 14 புதன்	தைனூர்
10.	காஜா இப்றாஹீம் அபூ இஸ்ஹாக் ஷாமீ (ரஹ்)	329	ரபீவுஸ்ஸானீ 14	அக்கா (ஷாம்)
11.	ஹஜ்ரத் குத்வதுத்தீன் அபீ அஹ்மத் (ரஹ்)	355	ஜமாதுஸ்ஸானீ 1 திங்கள்	சிஷ்த் (குராசான்)
12.	(அவர்களின் மகனார்) ஹஜ்ரத் காஜா அபூ முஹம்மத் (ரஹ்)	411	ரஜப் 1 செவ்வாய்	சிஷ்த்
13.	(அவர்களின் சகோதரரின் மகன்) ஹஜ்ரத் நாசிருத்தீன் அபூ யூசுப் (ரஹ்)	459	ரஜப் 3 திங்கள்	சிஷ்த்
14.	(அவர்களின் மகன்) ஹஜ்ரத் காஜா குதுபுத்தீன் மவ்தூத் (ரஹ்)	527	ரஜப் 1 ஜும்ஆ	சிஷ்த்
15.	ஹஜ்ரத் ஹாஜீ ஷரீஃப் சிந்தனீ (ரஹ்)	612	ரஜப் 10 புதன்	புகாரா
16.	ஹஜ்ரத் காஜா உஸ்மான் ஹாரூனீ (ரலி)	617	ஷவ்வால் 5 திங்கள்	கஃபாவுக்கு எதிரில்
17.	பானியே சில்சிலா ஹஜ்ரத் குதுபுல் ஹிந்த் காஜா முயீனுத்தீன் ஹஸன் ஸன்ஜரீ அஜ்மீரீ (ரஹ்)	627	ரஜப் 6 திங்கள்	அஜ்மீர்
18.	ஹஜ்ரத் குத்புத்தீன் பக்தியார் காகீ (ரஹ்)	633	ரபீவுல் அவ்வல் 14, திங்கள்	டில்லி
19.	ஹஜ்ரத் பரீதுத்தீன் கன்ஜஷகர் (ரஹ்)	664	முஹர்ரம் 5 செவ்வாய்	பாக்பட்டன்

	சிஷ்திய்யா சில்சிலா	மறைந்த வருடம் ஹிஜ்ரி	மாதம்–தேதி	அடக்கஸ்தலம்
20.	ஹஜ்ரத் நிஜாமுத்தீன் மஹ்பூப் இலாஹி (ரஹ்)	725	ரபீவுஸ்ஸானீ 18	டில்லி
21.	ஹஜ்ரத் நசீருத்தீன் மஹ்மூத் சிராஹ் தஹ்லவி (ரஹ்)	757	ரமலான் 18	டில்லி
22.	ஹஜ்ரத் சையத் மஹ்மூத் பந்தே நவாஜ் கேசுதராஸி (ரஹ்)	825	துல்கஃதா 18	குல்பர்கா
23.	ஹஜ்ரத் சையத் ஜமாலுல்லாஹ் ஷாஹ் மக்ரிபீ (ரஹ்)	827	ரஜப் 10 ஜும்ஆ	குல்பர்கா
24.	ஹஜ்ரத் கமாலுத்தீன் வாஹிதுல் அஸ்ரார் பயாபானீ (ரஹ்)	867	----------	குல்பர்கா
25.	ஹஜ்ரத் சையத் மீரான்ஜீ ஷம்சுல் உஷ்ஷாக் (ரஹ்)	904	ஷவ்வால் 25	பீஜப்பூர்
26.	ஹஜ்ரத் சையத் புர்ஹானுத்தீன் ஜானம் (ரஹ்)	992	ஜமாதுல் ஆகிர் 15	பீஜப்பூர்
27.	ஹஜ்ரத் ஹாஜி சையத் இஸ்ஹாக் சிஷ்தி (ரஹ்)	982	----------	காலகீ குல்பர்கா
28.	ஹஜ்ரத் ராஜி முஹம்மத் ஹுஸைனி கட்டா நவாஜ் (ரஹ்)	1090	ஜமாதுல் ஆகிர் 3	நாகூர் குல்பர்கா
29.	ஹஜ்ரத் ஜுனைதே ஸானி ஆஷிகே ரப்பானி ஹுஸைனி ஷுஹரவர்தீ தபகாதீ (ரஹ்)	985	---------	பீஜப்பூர்
30.	ஹஜ்ரத் ஷாஹ் ஹிதாயத்துல்லாஹ் அய்னீ (ரஹ்)	1018	--------	ஜஹ்ராபூர்
31.	ஹஜ்ரத் சைய்யித் கமாலுத்தீன் (அவ்வல்) புகாரீ (ரஹ்)	-------------	--------	தாலாப்குரம் குண்டா சித்தூர்
32.	(அவர்களின் மகன்) ஹஜ்ரத் சைய்யித் ஜமாலுத்தீன் (ரஹ்)	1162	--------	ஜமால் யக்கா (ராய் சுட்டி)
33.	(அவர்களின் மகன்) ஹஜ்ரத் சைய்யித் முஹம்மத் ஹுஸைனி ஷாஹ்மீர் (ரஹ்)	1186	ஜமாதுல்ஆகிர் 1	கத்ரீ (அனந்தப்பூர்)
34.	(அவர்களின் சகோதரர்) சைய்யித் ஷாஹ் கமாலுத்தீன் (ஸானீ) ஷம்ஃ கான் தானே சிஷ்த், ஷாஹ் கமால் (ரஹ்)	1224	ஸபர் 11	தாலாப்–குரம் குண்டா
35.	ஹஜ்ரத் சைய்யித் அலாவுத்தீன் (ரஹ்)	1251	--------	டிரங்ரோடு ராய்சுட்டி (கடப்பா)

	சிஷ்திய்யா சில்சிலா	மறைந்த வருடம் ஹிஜ்ரி	மாதம்–தேதி	அடக்கஸ்தலம்
36.	(அவர்களின் மகனார்) ஹஜ்ரத் சைய்யித் புர்ஹானுத்தீன் ஹக்கானி ஹக்நுமா (ரஹ்) (ஷாஹ் கமால் (ரஹ்) அவர்களின் மருமகன்)	1290	ரமலான் 29	டிரங்ரோடு ராய்சுட்டி
37.	ஹஜ்ரத் சைய்யித் சுல்தான் மஹ்மூதுல்லாஹ் ஷாஹ் ஷாஹ் ஜீ நக்ஷ பந்தீ	1311	துல்ஹஜ் 7	ஹைதராபாத் அப்ஜல் கன்ஜ் (தவாகானா உஸ்மானிய்யா பின்புறம்)
38.	ஹஜ்ரத் கமாலுல்லாஹ் ஷாஹ் மச்லீவாலே ஷாஹ் (ரஹ்)	1351	ரபீவுஸ்ஸானி 29 வியாழன்	ஹைதராபாத் காசீகோடா
39.	ஹஜ்ரத் கன்சுல் இர்பான் பீர் கௌஸி ஷாஹ் அக்பரி (ரஹ்)	1373	ஷவ்வால் 4 ஞாயிறு	மஸ்ஜிதே கரீ முல்லாஷாஹ் பேகம் பஜார் ஹைதராபாத்
40.	ஹஜ்ரத் நூருல் மஷாயிக் அஹ்மத் முஹ்யித்தீன் சைய்யித் நூரி ஷாஹ் (ரஹ்)	(பிறப்பு ஹிஜ்ரி 1322 துல்கஅதா 28) 1411	ரபீவுல் ஆகிர்14 சனிக்கிழமை	ஹைதராபாத்
41.	**ஹஜ்ரத் ஷம்சுல் ஆரிபீன் ஷைகுல் அரபி வல் அஜம் அப்துல் பஷீர் பைஜி ஷாஹ் நூரி வஸிஅத் பைஜானுஹு (ரஹ்)**	(பிறப்பு 26.6.1926) 1426	(ஹிஜ்ரி 1344 துல்ஹஜ் 16 திருப்பந்துருத்தி) ரஜப் 21 வெள்ளி 26.8.2005	லால்பேட்டை

குறிப்பு : 27 எண் ஹாஜி சையத் இஸ்ஹாக் சிஷ்தி (ரஹ்) அவர்கள் சிஷ்திய்யா தரீக்காவில் சையத் புர்ஹானுத்தீன் (ரஹ்) அவர்களிடமும் காதிரிய்யா தரீக்காவில் ஹஜ்ரத் சைய்யத் ஷுஜாஃ அவர்களிடமும் கிலாபத் பெற்றிருந்தார்கள்.

விற்பனையில் உள்ள நமது பிற வெளியீடுகள்



குர்ஆன் ஹதீஸ் ஒளியில்

அல்லாஹ் நம்முடன்

ஆசிரியர் :

மௌலவி A.A. ஷைக் அப்துல் காதிர் மன்பஈ

(இர்பானீ ஷாஹ் நூரி)

தலைசிறந்த உலமாக்களின் பாராட்டுதல்களையும் பொது மக்களின் அமோக வரவேற்பையும் பெற்று இரண்டாம் பதிப்பு விற்பனையில் உள்ளது.

விலை ரூ. 40/-



ஷஜரா

மெய்ஞ்ஞான வழித்தொடர்

ஸில்ஸிலயே பைஜிய்யா

தொகுப்பு :


மௌலவி A.S. ஜுபைர் அஹ்மத் பாகவி

(ஷுஹூதீஷாஹ் பைஜி)

காதிரிய்யா, சிஷ்திய்யா தரீகாவில் கண்மணி நாயகம் (ஸல்) முதல் நமது ஷைகு நாயகம் வரை உள்ள ஷைகுமார்களின் சங்கிலித் தொடர்–

மறைந்த வருடம், அடக்கஸ்தலம் போன்ற அரிய குறிப்புகள் மற்றும் அழகிய படங்களுடன்.

விலை ரூ. 25/-



நூருன்னூர்

இறைஞானப் பாடநூல்


தமிழில் : மௌலவி

A.A. ஷைக் அப்துல் காதிர் மன்பஈ

(இர்பானீஷாஹ் நூரி)

கன்ஜுல் இர்பான் கௌஸிஷாஹ் சிஷ்தி காதிரி அவர்களால் எழுதப்பட்டு சென்ற நூற்றாண்டில் வெளியாகி உலகளாவிய அளவில் உலமாக்களால் போற்றப்பட்ட ஞானப் பொக்கிஷம்.

விலை ரூ. 60/-




மனித வாழ்வின் இலட்சியங்கள்

ஆசிரியர் :
நூருல் மஷாயிக்
ஸையத் நூரி ஷாஹ் கிப்லா
தமிழில் : மௌலவி
A.A. ஷைக் அப்துல்
காதிர் மன்பஈ
(இர்பானீஷாஹ் நூரி)
விலை ரூ. 15/-



பைஅத் ஏன்? எதற்கு? எப்படி?

ஆசிரியர் :
கன்ஜுல் இர்பான்
கௌஸிஷாஹ் கிப்லா
தமிழில் : மௌலவி
A.A. ஷைக் அப்துல் காதிர் மன்பஈ
(இர்பானீஷாஹ் நூரி)
விலை ரூ. 20/-



தரீகத்தின் அவசியம்

ஆசிரியர் :
நூருல் மஷாயிக்
ஸையத் நூரி ஷாஹ் கிப்லா
தமிழில் : மௌலவி
A.A. ஷைக் அப்துல்
காதிர் மன்பஈ
(இர்பானீஷாஹ் நூரி)
விலை ரூ. 15/-